ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்

இயற்றியவர்

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை-639 115
திருச்சி ஜில்லா
1985

தபோவனத் தொடர் 66

		பிரதிகள்
ஒன்று முதல் ஆறு பதிப்புகள்		28 000
ஏழாம் பதிப்பு		5 000

திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
காரியதரிசியால் பிரசுரிக்கப்பட்டது.

விலை ரூ. 8-00

தபோவன அச்சுப்பள்ளி, திருப்பராய்த்துறை.

பொருளடக்கம்



சுவாமி விவேகானந்தர்

ஸ்ரீ தம்பையா

ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்

1. தவம் புரிந்து பெற்ற பிள்ளை

பரத கண்டத்திலே கங்காதீரத்திலே காளிகாதேவியின் திருக்கோயில் ஒன்றுண்டு. முன்னாளில் காளிகட்டம் என்று அழைக்கப்பட்ட அவ்வூரானது ஆங்கில ஏகாதிபத்தியத்துக்குத் தலைமைப்பட்டணமாகிய பின்பு, புதிய மேம்பாடுகள் பல அடைந்து, கூடகோபுர மாளிகையழகிற் சிறந்தோங்கிய, கல்கத்தா என்ற திரிவுபட்ட நாமகரணம் பெறலாயிற்று. அந்நகரிலே சென்ற நூற்றாண்டிலே விசுவநாத தத்தர் என்ற க்ஷத்திரிய வமிசத்துதித்த பெரியார் ஒருவர் வசித்து வந்தார். உத்தம குலத்துக்கேற்ற உயர் குணங்களும் இராஜகம்பீரமும் அவர் ஒருங்கே வாய்க்கப்பெற்றவர். இயல்பாகவே அவர்படைத்திருந்த பேரறிவை அவர் பயின்ற கல்வியானது மேலும் ஓங்குவித்தது. அவருடன் உறவாட விரும்பாத அறிஞர் அக்காலத்தில் யாருமிலர் எனலாம். கல்கத்தா நீதிமன்றத்திலே அத்தகைய தத்தர்பெருமான்ஒரு நியாயவாதியாயமர்ந்து செல்வம் மிகச் சம்பாதித்து, வருங் காலத்தைப்பற்றிய எண்ணமே சிறிதுமில்லாதவராய் ஈட்டிய பொருளை அப்போதைக்கப்போது நல்வழியில் செலவிட்டு வந்தார். வறியோர் வேண்டி யாசித்ததை இல்லையெனாது ஈதல் இப்பெரியாரது வழக்கம். பாத்திரமறிந்து பிச்சையிட வேண்டுமெனும் கொள்கையில் இவருக்கு நம்பிக்கை கிடையாது. யாரானாலும் வேண்டியதை இவர் அக்கணமே கொடுத்துவிடுவார். கற்றவர்களும் மற்றவர்களும் செல்வர்களும் வறியவர்களும் புடைசூழ, சீரும் சிறப்புமாய் இவர் வாழ்ந்து வந்தார். கல்கத்தாவிலே இவர்

மாளிகையிலே விருந்தோம்புதலும், நோன்பு நோற்றலும், திருவிழாக்கள் கொண்டாடுதலுமாகிய வைபவங்கள் நடைபெற்ற வண்ணமாயிருந்தன.

புவனேசுவரி மாதா என்ற அம்மையார் விசுவநாத தத்தருக்கு வாழ்க்கைத் துணைவியாக அமைந்து இல்லறம் நடாத்தி வந்தார். சாந்தம், அடக்கம், அமைதி, நிறைகாப்பு முதலிய பெண்மைக் குணங்கள் இவருக்கு அணிகலமாக இலங்கியிருந்தது போலவே, தலைமை, அஞ்சாமை முதலிய பேராற்றல்களும் மாண்புடைய இம்மாதரசியிடம் மிளிர்ந்திருந்தன; மெல்லியலார்களுள் இவர் மேன்மையுற்று விளங்கினர். இவரது முன்னிலையிலே யாருக்கும் அடக்க ஒடுக்கம் இயல்பாகவே வந்துவிடும். மெய்ப்பொருளாகிய இறைவனிடத்தில் இவர் மாருத பக்திபூண்டு ஒழுகிவந்தார். சதுர் வேதங்களுக்குச் சமனய் விளங்குகின்ற இராமாயணம், மஹாபாரதம் என்னும் இவ்விரண்டு இதிகாசங்களையும் புவனேசுவரி மாதா காவிய ரூபமாக மனப்பாடம் பண்ணியிருந்தார். அவ்வுலகை அடைதற்கேற்ற அருளையும், இவ்வுலகில் இன்பம் துய்ப்பதற்கேற்ற பொருளையும் இவ்வம்மையார் சாலப்பெற்று சீலத்துடன் வாழ்ந்து வந்தார். இல்வாழ்பவர் பெறும் பேறுகளிற் பெரியதாகிய மக்கட்பேறும் இவர் படைத்திருந்தார். புதல்விமார் இருவரை ஈன்றெடுத்து அன்புடன் அவர்களை ஆதரித்து வளர்த்து வந்ததற்கிடையிலே தாம் ஒருவிதத்தில் தௌர்ப்பாக்கியவதியாய்விட்டதாக எண்ணி, இவர் சிறிது வாட்ட முற்றிருந்தார். மக்கட்பேற்றிலும் ஆண்மகவையன்றோ இல்லறத்தார் பெரிதும் விரும்புவது! அப்பெரும் பேறுபெருத குறையொன்றே அம்மையாரின் உள்ளத்தை உடற்றி வந்தது. சத்புத்திர பாக்கியம் தமக்குக் கிடைக்கவேண்டுமென்று அவர் அல்லும் பகலும் அஞ்சலி

ஹஸ்தராய்த் தாம் வணங்கும் கடவுளாகிய காசிவிசுவநாதர் பால் குறையிரந்து வேண்டி வந்தார். இல்லத்துக் காரியங்கள் அனைத்தையும் அவர் இனிது கவனித்து வந்தாரெனினும் அவரது கருத்திற் பெரும்பகுதி காசிநாதரது சந்நிதியைச் சார்ந்திருந்தது. தமது தீராக்குறையை எண்ணியெண்ணி, "சிவ சிவ" என்று அவர் இடையிடையே பெருமூச்செறிவார். உண்ணும்போதும் உறங்கப்போம்போதும் இந்த ஓர் எண்ணமே இடையறுது அவரது உள்ளத்தில் ஊடாடிக் கொண்டிருந்தது. பிள்ளை வரம் வேண்டிய புவனேசுவரி மாதா நள்ளிரவிலே எழுந்திருந்து கண்ணீரும் கம்பலையுமாய்க் கடவுளை வழுத்திய வண்ணமாய் இருப்பார்.

வேண்டுவார் வேண்டியவெல்லாம் வகுத்தளிக்கவல்ல பரம தயாநிதியல்லவோ பரமேசுவரன்! அவனைத் தொண்டர்க்குத் தொண்டனென்று பெரியோர்கள் அழைத்தது வெறும் உபசாரமன்று. விண்ணப்பிக்கும் வகையறிந்து முறையாகக் கேட்பவருக்கு அவன் கற்பகவிருட்சம். 'இம்மையிலும் மறுமையிலும் தமக்கு இன்பம் துய்ப்பிக்கவல்ல ஆண் மகவு ஒன்றைத் தந்தருளும்படி இப்புனிதவதி செய்த பிரார்த்தனைக்கு இரங்கிய இறைவன், தபோநிதியாகிய இந்தத் தாயின் சேயைக்கொண்டு உலகனைத்தையுமே உய்விக்க எண்ணியருளினன் போலும். அவனது அருளினல் புவனேசுவரி மாதா கர்ப்பவதி ஆனர். சதா சிவனையே சிந்தித்து வந்தமையால் அத்தாயினது உள்ளமே பெருங்கோயிலாக மாறிவிட்டது. வீடெங்கும் புதிய அருள் ஒன்று பரந்து நிறைந்திருந்ததை வீட்டார் அனைவரும் அறியலானர்கள். இறைவனை வழுத்திவந்த நாட்களைக் கதிரவன் கணக்கிட்டுக் கொண்டே போக, அன்னையின் வயிற்றில் வளர்ந்துவந்த சிசு பூமியில் ஜனிக்கும் காலம் வந்தது. கி. பி. 1863வது

ஆண்டில் ஜனவரி மாதம் பன்னிரண்டாம் தேதி, தை முதல் நாளாகிய சங்கராந்தியன்று, பூமகள் பெருமிதமாக ஈந்த தானியங்களைப் பெற்று மக்கள் இன்புற்றிருந்தபோது, வேதாந்த கேசரியென உலகெங்கும் கீர்த்தி பெறுதற்கிருந்த மகா புருஷர், வேந்தனைய விசுவநாத தத்தருக்கும் அவருடைய தூய வாழ்க்கைத் துணைவி புவனேசுவரி மாதாவுக்கும் பிள்ளையாகப் பிறந்தார்.

உடலமைப்பிலே சிசுக்களாகத் தோன்றும் ஜீவன்கள் உண்மையிலே சிசுக்களல்ல; எண்ணிறந்தபிறவிகளில் தேடிய அறிவு, ஆற்றல், அனுபவங்களால் ஏற்பட்ட சுபாவங்கள் குழந்தை என்கிற உறையிலே அடங்கி ஒடுங்கிக் கிடக்கின்றன. காலாந்தரத்தில் இவ்வுறையைக் கழற்றிக்கொண்டு அந்தந்த சுபாவங்கள் பெருமைகளாகவும் சிறுமைகளாகவும் விரிகின்றன. ஒன்றும் அறியாத பச்சைக் குழந்தைகளாய்ப் பெற்றவர்களின் கரங்களில் கிடக்கும் ஜீவர்கள், பருவம் வரும்போது விண்ணவர்களுடன் ஒப்பிடத்தக்க மேன்மக்களாகவோ அல்லது வையகமே அஞ்சி நடுங்கும்படியான பாதகர்களாகவோ ஆகப்போகிறவர்களன்றோ? ஆனால் இந்த மர்மங்கள் யாவும் காலம் என்கின்ற காரிருளில் மறைந்து கிடக்கின்றன. எனினும், மேன்மக்கள் மண்ணதனில் பிறவியெய்துதலிலே தனிப்பெருமையொன்று உண்டு என்பது பெரியோர்களது துணிபு. அதாவது அவர்கள் அறநெறியில் நிலைநிற்கின்ற செல்வர்கள் வீட்டிலோ அல்லது அறிவாளிகளாகிய உத்தமர் குலத்திலோ உதிக்கின்றார்களாம். புவனேசுவரி மாதாவின் மடியில் தோய்ந்திருந்த பிள்ளை இவ்விதியின்படி இகலோகத்தில் பிறந்திருந்ததையும் பூலோகத்தின் கதியையே வருங்காலத்தில் மாற்றவல்ல அறிவும் ஆற்றலும் தபோபலமும் அதனிடத்துப் புதைந்து கிடந்ததையும் யார் அறிந்தார் அக்காலத்தில்!

புதிதாகப் பிறந்திருந்த பிள்ளையின் வடிவைப் பார்க்கப் பார்க்க வீட்டார் அனைவருக்கும் பெருவியப்புண்டாயிற்று. அதன் அங்க அமைப்பு நெடுநாளைக்கு முன்பு லௌகிக் வாழ்வை நீத்துத் துறவறம் பூண்டு வெளியேகிய பாட்டனார் துர்க்காசரண தத்தரது திருமேனியை முற்றும் ஒத்திருந்தது. ஒருவேளை அப்பெரியாரே பழைய உடலை நீத்து மறுபடியும் இப்பிள்ளையாக அவதரித்து விட்டாரோ என்று நினைத்தனர்.

பிள்ளை பிறந்து சில மாதங்களாயின. அது நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகையிலே அதற்கு நாமகரணம் சூட்டும் பருவமும் வந்தது. என்ன பெயரிட்டு அழைப்பது என்பதைப் பற்றிப் பெரியோர்கள் பலவாறாக எண்ணினார்கள். பாட்டனாரின் பெயரையே வைத்து விடலாமா என்ற எண்ணம் வந்தது; அல்லது சிவபெருமானது வரப்பிரசாதத்திலே வந்த பிள்ளையாதலால் அவனுடைய ஆயிரம் திருநாமங்களில் ஒன்றாகிய வீரேசுவரன் என்னும் பெயரை இதற்கு வழங்கி விடலாமா என்ற எண்ணமும் தோன்றியது. கடைசியாக இம்மகவு பிறந்த நாளுக்கும் நட்சத்திரத்துக்கும் ஒப்ப நரேந்திரநாதன் என்ற நாமம் சூட்டினார்கள்.

இப்பாலகன் மூன்று வயதுப் பிள்ளையாயிருந்த போதே இவன் செய்யத்தொடங்கிய சேஷ்டைகளுக்கு ஓரளவில்லை. நினைத்த மாத்திரத்தில் குடும்பத்தில் பெருங்குழப்பத்தை விளைவித்துவிடுவதுமல்லாமல் வீட்டார் அனைவரும் இவனை முன்னிட்டுக் கவலையுறும்படியும் செய்து விடுவான். தாய் தந்தையர்கள் இவனை எவ்வளவுக்கெவ்வளவு மிரட்டினார்களோ அவ்வளவுக்கவ்வளவு இவனுடைய துடுக்கும் துணிவும் அதிகரித்தன. தண்டனைக்கு இவன் சிறிதேனும் அஞ்சினவ

னல்லன். துஷ்டத்தனம் நிறைந்த நரேந்திரனை வசப்படுத்து வதற்கு வழி ஒன்றே ஒன்றுதானிருந்தது. அதாவது இவன் மூர்க்கத்தனமாய் நடந்தபோதெல்லாம் அன்னையார் இவனை நீர்க்குழாய்க்கடியில் நிறுத்திவிட்டுத் தண்ணீர் இவன் தலை மீது சதா விழ்ந்து கொண்டிருக்கும்படி செய்து விடுவார். பொழியும் புனலின் கீழ்மட்டும் இவன் நெடுநேரம் சாந்தமாகச் சும்மா இருப்பான். சிறுவனுடைய மூர்க்கத்தனத்தையும் பிடி வாதத்தையும் பார்க்கச் சகியாத தாய், "பிள்ளைவரம் வேண்டிச் சிவபிரானிடம் தவமிருந்த எனக்கு அவன் தன் பூத கணங்களில் ஒன்றை அனுப்பியிருக்கிறான்; என் செய்வேன்?" என்று தனது மனச்சலிப்பை வெளியிடுவார். தன் தமக்கை மார் இருவரையும் நரேந்திரன் அலைக்கழித்தது இவ்வள வென்று சொல்லித் தொலையாது. அவன் விளைவித்த தொந் தரவைத் தாங்க முடியாத அச்சிறுமிகள் அவனைப் புடைக்க ஓடி வந்தால் அவன் விரைந்தோடிச் சாக்கடையில் நின்று கொண்டு, "என்னை வந்து அடியுங்கள்" என்று எரிச்ச லூட்டுவான். அசுசியான சாக்கடைக்கு அப்பெண்கள் எப்படிச் செல்வார்கள்? ஆனால் துடுக்கே வடிவெடுத்து வந்த அச்சிறுவனுக்கு மட்டும் சுசி என்பதும் அசுசி என்பதும் இம்மியளவும் இல்லை.

வறியோர்களிடத்திலும் சாதுக்களிடத்திலும் நரேந் திரன் காட்டிய அனுதாபத்துக்கும் அன்புக்கும் ஓரளவில்லை. அவர்கள் தன் வீட்டு வாயிலுக்கு வந்து விட்டால் கைக்குக் கிடைத்தவைகளை யெல்லாம் எடுத்து அவன் அவர்களுக்கு வழங்கி விடுவான். இரந்தார்க்கு இல்லை யெனாது ஈதல் தத்தர் குடும்பத்தில் ஒரு தனிப்பெருமை எனினும், நரேந் திரன் போன போக்கில் அவனை விட்டிருந்தால் வீடு ஒரே நாளில் வெறும் பொட்டல் காடாய் மாறியிருந்திருக்கு

மன்றோ? ஆதலால் யாசகர்கள் வந்தபோதெல்லாம் வீட்டார் அனைவரும் பையனைப்பற்றி மிக எச்சரிக்கையாயிருந்தார்கள். ஆனால் ஈதல் என்னும் பேரறம் எக்காரணத்தை முன்னிட்டாவது நரேந்திரனிடமிருந்து பிரிந்தது கிடையாது. வறுமை நோய்வாய்ப்பட்டு அவன் வருந்தியிருந்த நாட்களிலும் தன்னிடமிருந்தது எதுவாயினும் அதைத் தஞ்சமடைந்தவர்களுக்குக் கரவாது கொடுத்து வந்தான். கொடையொன்றே அவனது வாழ்வின் முக்கிய நோக்கமெனலாம். சின்னஞ் சிறுவனாயிருந்தபோது அவன் தன் கைக்கு அகப்பட்ட பொருள்களையெல்லாம் எடுத்து அவைகளை வேண்டுகின்ற வறிஞர்களுக்கு வழங்குவானாயினன். பிற்காலத்தில் அவன் ஒரு பரமாசாரியன் ஆனபிறகு அருளை அள்ளி வையகமெங்கும் வழங்கலாயினன். வையகத்து அவன் வழங்கியவாறு வேறு யார்தான் அருளை வழங்கியிருக்கிறார்கள்!

2. விளையும் பயிர் முளையிலே

தாய் சொல் மிக்க வாசகமில்லை. சேய் ஒன்றுக்குத் தாயிடம் பக்தி விசுவாசம் இயல்பாகவே உண்டாகிறது. அவள் புகட்டுவதெல்லாம் பிள்ளையின் உள்ளத்தில் வேத வாக்கியமென ஊடுருவிப் பாய்கின்றது. ஆகையால் அவள் எத்தகைய பாலூட்டி அறிவூட்டி வளர்க்கின்ருளோ அத்தகையது ஆகின்றது பிள்ளை. பெரியோர்கள் பெற்றிருந்த பெருமையில் பெரும்பகுதி அவர்கள் தம் தம் அன்னையாரிடமிருந்து பெற்றதன்ரே! புவனேசுவரி மாதா புகட்டிய கல்வியும், அதை நரேந்திரன் கிரகித்த விதமுமே அவன் தனது வாழ்வில் அடைந்த மேன்மைக்கு முக்கிய காரணமாயிற்று எனலாம். பிள்ளையை மடியிலமர்த்திக் கொண்டு இராமாயணக் கதையைத் தாய் எடுத்துச் சொல்லுவாள். கற்பனசக்தி மிக வாய்க்கப்பெற்றிருந்த அம்மையார் இராமபிரானது ஆண்மையையும் சீதாபிராட்டியாரின் தூய்மையையும் எடுத்து வருணித்தது பிள்ளையின் உள்ளத்தை அடியோடு கவர்ந்து விட்டது. இரகுநாதன் மற்றுமொருமுறை பூலோகத்தில் வந்தவதரித்துத்தமது லீலா விசித்திரங்களையெல்லாம் நடத்திக்காட்டினுற்போல பாலகன் அவரது வரலாற்றைக் கேட்டுணர்ந்து வந்தான். இதன் பயனுகவே நரேந்திரன் சீதாராமனைத் தன் உபாசன மூர்த்தியாகக் கொண்டு பக்தி பூண்டொழுகி வந்தான். இராம பக்தியிலே நரேந்திரனுக்கு ஒப்பானவர் யாருமில்லையென்ருல், அந்தப் பக்தியைக் குழவிப் பருவத்திலேயே அவனுக்கு ஊட்டியவர் அவனை ஈன்றெடுத்த அன்னையாரேயாவர்.

சீதாராமனது விக்ரகம் ஒன்றை விலைக்கு வாங்கி வந்து அதன் மூலம் நரேந்திரன் கடவுளை வழிபடத் தொடங்கினுன்.

இவ்வழிபாட்டில் தனக்குக் கூட்டாளியாகப் பிராமணப் பிள்ளையொருவனையும் சேர்த்துக்கொண்டான். ஒருநாள் வீட்டின் மேல்மாடியில் சந்தடியில்லாத ஓர் அறைக்குட் சென்று இருவருமாகக் கதவைத் தாழிட்டுக் கொண்டார்கள். அங்கே சிறந்ததோர் ஆசனத்தில் ஸ்ரீ ராமனை வீற்றிருக்கப்பண்ணி நெடுநேரம் அலங்காரம், பூஜை முதலியவை செய்துவிட்டுச் சிறுவர்கள் இருவரும் மூர்த்தியினெதிரே தியானம் பண்ண அமர்ந்து விட்டார்கள். பிள்ளைகளைக் காணுமையால் இரு வீட்டார்களும் எங்கெங்கேயோ தேடி விட்டுக் கடைசியாக மேல் மாடியில் பார்க்க வந்தார்கள். கதவோ அடைபட்டிருந்தது; கூச்சலிட்டு அழைத்தும் உள்ளிருந்து மறுமொழியொன்றும் வரவில்லை. பெற்றோர்கள் திகைத்துக் கதவைப் பலவந்தமாக உதைத்துத் தள்ளினர்கள். இந்த ஆரவாரத்தைக் கேட்டு மிரண்டு நிஷ்டை கலைந்தெழுந்த பிராமணப்பிள்ளை மீண்டும் அங்கிருந்தால் தண்டனைக்கு ஆளாகவேண்டிவரும் என்று நிச்சயித்துத் தன் வீட்டுக்கு ஓட்டம் பிடித்துவிட்டான். ஆனல் இந்த இரைச்சலொன்றும் நரேந்திரன் காதில் விழவில்லை! பேச்சற்று மூச்சற்று அவன் நிஷ்டையிலே அமர்ந்திருந்தது பார்த்தோருக்குப் பெருவியப்பை யூட்டியது.

இங்ஙனம் காலச்சக்கரம் இனிது சுழன்று வருகையில் விபரீதமாக, நரேந்திரனது இராமபக்திக்குத் தாற்காலிகமாகப் பங்கமொன்று நேரலாயிற்று. ஆனல் இந்நிகழ்ச்சியும் அவனது மனப்போக்கையே தெற்றெனத் தெரிவிப்பதாயிற்று. நரேந்திரன் நினைத்தபோதெல்லாம் அவர்களுடைய வீட்டு வண்டிக்காரனிடம் உறவாட ஓடிவிடுவான். வண்டியோட்டுகிறவனுக்கு நிகரானவன் உலகில் யாருமில்லையென்பது அச்சிறுவனது எண்ணம். வண்டி வைத்திருப்பவனது

தயவு தாட்சண்யம் ஊரார் அனைவருக்கும் வேண்டும். ஆத லால் தானும் பெரியவனாகும் போது ஒரு வண்டிக்காரனாக வேண்டுமென்று நினைத்திருந்தான். ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா பார்த்தனுக்குத் தேர் ஓட்டி. ஆனால் பார்த்தசாரதியாகிய அவர் உயிர்கள் அனைத்துக்கும் உள்ளத்தினுள் வீற்றிருந்து சாரதியாயிருக்கிறார். நரேந்திரன் தன்போக்கில் உயிர் களுக்குச் சாரதியானான். ஒருநாள் வழக்கம்போல வண்டி யோட்டுபவனோடு நரேந்திரன் பேசிக்கொண்டிருந்தபோது எத்தனையோ விஷயங்களுக்கிடையே விவாகத்தைப்பற்றிய பேச்சும் எழலாயிற்று. என்ன காரணத்தாலோ விவாகம் என்பது வண்டிக்காரனுக்குச் சிறிதேனும் பிடிக்கவில்லை. அவன் அதை அறவே இழித்துப் பேச ஆரம்பித்து விட் டான். "மணம் புரிதல்தான் எல்லாத் துன்பங்களுக்கும் காரணம். அது ஒரு மனிதனை அடியோடு கட்டுப்படுத்திப் பெரும் பந்தங்களுக்கு ஆளாக்கிவிடுகிறது. சம்சாரியானவன் சுயேச்சையை ஒருமிக்க இழந்துவிட்டுக் குறுகிய நோக்க முடையவனாகின்றான். பணம், பெண்டிர், பிள்ளைகளைத் தவிர வேறு எதிலும் அவன் புத்தி செல்லாது. ஒரு கருமத்தில் துணிதற்கு முன்பு, அது தனக்காவது தன் குடும்பத்துக்கா வது எவ்விதத்திலாவது பயன்படுகிறதாவென்று அவன் முதலில் யோசித்துப் பார்ப்பான். பயன்படாவிடின், அது எத்தகைய நற்கருமமாயினும் சிறிதேனும் அவன் அதைப் பராமரிக்கின்றானில்லை. குடும்பி ஒருவனுக்கு இன்பம் இம்மி யளவும் துன்பம் மலையளவுமாம்"—இவ்வாறெல்லாம் வண் டிக்காரன் விவாகத்தை வெறுத்துப் பேசியது பாலன் நரேந் திரனது உள்ளத்தில் பசுமரத்தாணி போலப் பதிந்தது. சுய நல துன்பவாழ்வுக்கு ஏதுவாகிய விவாகத்தைத் தான் கனவிலும் கருதுகிறதில்லையென்று அப்போதே அவன் தீர்மானித்துவிட்டான். அம்மட்டுமோ?

பெரும் சந்தேகம் ஒன்று அவனது அறிவைக் கலக்கி உள்ளத்தை உருக்கி வாட்டியது. "சீதையும் இராமனும் மணம் புரிந்திருந்தார்களல்லவா? விவாகத்தின் பயனுக அவர்களுக்கு நேர்ந்த விபத்துக்களெத்தனை! துயரங்களெத்தனை! சம்சார பந்தத்தில் கட்டுண்டிருந்தவர்களைக் கடவுளாக வணங்கலாமா?" இவ்வாறு எண்ணிய இளைஞன் ஆருத் துயரத்தில் அழுந்தி அன்னையிடம் ஓடி நின்றுகொண்டு தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தான். பிள்ளையின் துயரத்தைப் பார்க்கச் சகியாத தாயார் அவனை வாரியெடுத்துக் கட்டியணைத்து, மடிமேல்வைத்து, உச்சிமோந்து, "என் கண்ணே! நீ கவலையுறுவானேன்? உனக்குற்ற துயரம் யாது?" என வினவினுர். விம்மி விம்மி மொழி குளறினவனய் நரேந்திரன் நடந்த வரலாற்றையெல்லாம் தாயினிடம் தெரிவித்து, தான் வணங்குதற்கேற்ற வேறு தெய்வம் இல்லையேயென்று துயரத்துடன் கூறினன். சமயோசித புத்தியுடைய புவனேசுவரி மாதா சேயின் மனப்பாங்கை ஊகித்து அறிந்துகொண்டார். "நமது குலதெய்வமாகிய துறவிவேந்தன் காசி விசுவநாதனிருக்க நீ விசனப்படுவானேன்?" என்று அவர் அவனுக்கு ஆறுதலளித்தார். அன்னையின் இன்சொல்லைக் கேட்ட பிள்ளைக்கு இப்போது உள்ளம் குளிர்ந்து அது ஒருவாறு தேறியது. அவன் உடனே மேல்மாடிக்கு விரைந்தோடி சீதாராமனது விக்கிரகத்தைப் பற்றியெடுத்து வீதியிலே விட்டெறிய அது அங்கு வீழ்ந்து சுக்கலாயிற்று. மறுநாட்காலையிலே சிறுவன் கடைக்குச் சென்று தியானமூர்த்தியாகிய சிவபெருமானது விக்கிரகம் ஒன்றை விலைக்கு வாங்கிவந்து காலியாயிருந்த வழிபாட்டுக்குரிய இடத்திலே அதை அமர்ந்திருக்கச் செய்துகொண்டான்.

புதிதாக ஸ்தாபித்த சிவ வடிவத்திற்கெதிரே அமர்ந்திருந்து நிஷ்டை புரிவதில் நரேந்திரனுக்கு அத்தியந்தப்

பிரியம் உண்டாயிற்று. அவ்வாறு அடிக்கடி தியானத்திலிருந்து விடுவது அவனது வழக்கம். அச்சமயங்களில் தன்னெதிரேயிருந்த சிலைபோன்றே அவனும் மற்றோர் அசைவற்ற மூர்த்தியாகத் தென்பட்டான். அவனது சித்தம் சிவசேதனத்தில் புதைந்து சிவமயமாய் மாறிவிட்டது போலும்! ஜீவகோடிகளனைத்தும் கடவுளினின்று வந்தவைகளாதலால், அவை யாவும் பிரபஞ்சம் என்னும் கடலைக் கடந்து திரும்பவும் அவனையே அடைய முயன்று கொண்டிருக்கின்றன. ஆனால் அவ்வாறு முயல்பவர்களுக்குள்ளேயும் வாயுவேகம் மனோவேகமென விரைந்து செல்கின்றவர்கள் ஒரு சிலர் இருக்கின்றனர். சிறு பிள்ளையாயினும் நரேந்திரன் அத்தகைய உயர்நிலை எய்தியிருந்தது வியப்புக்குரியதாம். தியானம் பண்ணுவது அவனுக்கு விளையாட்டாயிருந்தது. ஆனால் இந்தப் பாலயோகி விளையாட்டாகச் செய்ததை வாஸ்தவமாகப்பெற எந்தத் தபஸ்விதான் விரும்பமாட்டான்!

சந்தியா வேளைகளாகிய காலையிலும் மாலையிலும் வையகம் முழுதும் ஒருவித அமைதி பெறுகிறது. சாந்தம் குடிகொண்ட அத்தருணத்தில் செவி, கண் முதலிய புலன்களையடக்கி உள்முக நோக்கமாயிருந்து தியானம் பண்ணுவது பரதகண்டத்தின் புராதனப் பழக்கம். பண்டைக்காலத்துக் கல்வி முறையின்படி மாணவர்களுக்கு முதன்முதல் கற்பிக்கப்பட்டவை எண்ணும் எழுத்தும் அல்ல; புலனடக்கம் என்னும் தற்காப்பும், தியானம் என்னும் மனத்தெளிவும் ஆகிய இவ் இரண்டையுமே அவர்கள் துவக்கத்தில் பயின்று வந்தார்கள். பிரம்மச்சரியம் என்று சொல்லப்படுவதும் இதுவேயாம். சின்னபின்னப்படும் தேக சக்தியானது புலனடக்கம் பயிலுதலால் ஒருமைப்பட்டு மனோசக்தியாக மாறுகிறது. தியானப் பழக்கத்தில் இச்சக்தி மனக்கண்ணாக மாறுகிறது.

ஊனக்கண்ணால் பார்க்கப்படுபவைகளைப் பொருள்படுத்தித் தெற்றென விளங்கும்படி செய்யவல்லது மனக்கண்: ஆதலாலேதான் மனக்கண்ணுடையாரே புத்திமான்களெனப் படுகின்றனர். அவர்களுக்கு ஞாபகசக்தி அதிகரிக்கிறது; கல்வி விரைவில் படிகின்றது. எனவே கல்வி கற்பதற்கும் மேன்மையுறுதற்கும் தியானமே சிறந்த உபாயமாகின்றது. இந்திய இளைஞன் ஒவ்வொருவனுக்கும் தியானம் அல்லது நிஷ்டையென்றால் இன்னதென்று இயல்பாகவே தெரியும். அதை அவன் நாள்தோறும் காலையிலும் மாலையிலும் பழக்கத்துக்குக் கொண்டு வருவானாகில் தேகபலம், ஆரோக்கியம், மனவுறுதி, தெளிவு, ஞாபகசக்தி, நுண்ணறிவு, சாந்தம், ஆனந்தம் ஆகிய இவையாவற்றையும் பெறுவான். தியானப் பயிற்சியாலேதான் நரேந்திரனும் இத்தகைய மாண்புகளையெல்லாம் அதிவேகமாகப் பெற்று வந்தான்.

தூங்கும்போது தேகமும் மனமும் ஓய்வு பெறுகின்றன. அதுபோழ்து காரிருளில் அறிவும் ஒடுங்கிவிடுவதுதான் பொதுவாக எல்லாருடைய உறக்கத்தின் அனுபவம். ஆனால் நரேந்திரனின் நித்திரை ஏனையவர்களுடையது போன்றதன்று. அவன் படுக்கையில் சயனித்துச் சோர்வுறுந் தருணத்திலே உருண்டை வடிவான ஜோதியொன்று தன்னை நோக்கி நகர்ந்து வருவதைக் காண்பான். அப்பேரொளியில் கலந்து மெய்மறந்து விடுவதுதான் அவனது துயில். இந்த யோக நித்திரையானது அவனது மூன்றும் பிராயத்திலிருந்து ஆயுள்பரியந்தம் அவனுடன் நீடித்திருந்தது. துயிலுறுகின்ற ஒவ்வொருவனும் தன்னைப் போலவே ஜோதியில் லயமாகின்றானென்று இச்சிறுவன் நெடுநாளாக எண்ணி வந்தான். பிறகு இதைப்பற்றிப் பள்ளிக்கூடப் பிள்ளையொருவனுடன் பேசிக் கொண்டிருந்த போதுதான் அது தனது

தனியனுபவமென்று நரேந்திரன் அறியலானன். பிற்காலத்தில் அவனை ஆட்கொண்ட குருநாதர் ஒருவர் மட்டும் அவனுடைய இந்த அனுபவத்தை ஞான திருஷ்டியால் முன்னதாக அறிந்து, இதைப்பற்றி அவனுடன் உரையாடினர்.

நரேந்திரனுக்குப் பிராயம் ஐந்து அல்லது ஆருயிருந்த போது அவன் கலைமகளின் தொண்டனுக்கப்பட்டான். வித்யா ஆரம்பம் என்பது ஒரு சிறுவனுடைய வாழ்க்கையில் மிக முக்கியமானது. அந்த சம்ஸ்காரம் அவனுக்கு முறையாகச் செய்து வைக்கப்பட்டது. அட்சராப்பியாசம் ஆன பிறகு அவன் புராதன முறைப்படி கையில் ஏடும், உட்காருதற்குத் தடுக்கு ஒன்றும் எடுத்துக்கொண்டு தினந்தோறும் ஒரு திண்ணைப் பள்ளிக்கூடத்துக்குப் போய் வருவது வழக்கம். அப்படிப் போகையில் ஆங்கு அவன் தீய சேர்க்கையின் பயனுக எவ்வாரே பகரவொணுத புன்சொற்கள் பல கற்கத் தொடங்கிவிட்டான். அவ் இழிச்சொற்களைச் செவிமடுக்கச் சகியாத குடும்பத்தார் அது முதல் அவனைப் பாடசாலைக்குப் போகவொட்டாது தடுத்துவிட்டார்கள். வீட்டிலேயே நியமிக்கப்பட்ட ஓர் உபாத்தியாயரிடம், குறிப்பிட்ட சில பிள்ளைகளுடன் அவன் பாடம் பயின்று வந்தான். நரேந்திரன் படைத்திருந்த ஞாபக சக்தி எத்தகையதென்பதை அப்போது ஆசிரியர் அறிந்திலர். அவர் பாடம் புகட்டிய போதெல்லாம் கண்ணைச் சிறிது மூடிக்கொண்டு தியானுவஸ்தையிலிருந்து அதைக் கேட்டுக் கிரகித்து வருவது இவனது வழக்கம். ஆனல் உபாத்தியாயர் இவனை மந்தனென்றும், தூங்குமூஞ்சிப் பயலென்றும் கருதிவந்தார். தூங்குகிறவன் போலக் காணப்பட்ட இப்பிள்ளையை ஒரு தடவை உபாத்தியாயர் கோபாவேசத்துடன் தட்டி யெழுப்பினர். விழித்துப் பார்த்த நரேந்திரன் அவரது முகத்திலே சினக்

குறியிருந்ததைக் கண்டு வியப்புற்றான். தான் தூங்கவில்லை என்பதை நிரூபித்தற்பொருட்டுச் சென்ற ஒரு மணிநேரம் அவர் சொல்லி வந்ததை யெல்லாம் அப்படியே ஒப்பித்தான். இதுபோன்ற ஞாபக சக்தி ஒருவனிடம் இருக்கக்கூடுமென் பதை அந்த உபாத்தியாயர் இதற்குமுன் கனவிலும் கருதிய தில்லை. அது முதல் நரேந்திரன்மாட்டு அவர் அன்பும் மரியா தையும் வைக்கலானார் என்று சொல்லவும் வேண்டுமோ? ஓராண்டுக்குள்ளாக இப்பிள்ளை சம்ஸ்கிருத நிகண்டாகிய அமரகோசத்தை மனப்பாடம் பண்ணிவிட்டான். தேவ பாஷையெனப் பகரப்படும் சம்ஸ்கிருதத்தில் அவனுக்கிருந்த பற்றுதல் அளவிடவொண்ணாதது.

விசுவநாத தத்தர் ஒரு வக்கீலானபடியால் அவரைக் காண நானா ஜாதியார்கள் வந்து கொண்டிருந்தார்கள். உண் பதிலும், மற்ற விஷயங்களிலும் பற்பல இடங்களில் அந்தந்த ஜாதிக்கேற்ற உபசாரம் பண்ணப்பட்டது. ஆனால் ஜாதி யென்றால் இன்னதென்று குமாரன் நரேந்திரனுக்கு மட்டும் விளங்கவில்லை. ஒருவன் மற்றொருவனோடு இருந்து ஏன் உண்ணலாகாது? அவ்வாறு சாப்பிட்டால் என்னதான் சம்ப விக்கும்? வீடு அடியோடு விழுந்துவிடுமா? அல்லது அவன் அக்கணமே 'மாண்டுபோய் விடுவானா? இவ்வாறெல்லாம் அவன் சிந்திக்கலானான். எல்லா ஜாதியார்களிடமிருந்தும் நரேந்திரன் தயங்காது தின்பண்டங்களை ஏற்றுக்கொள்வது வழக்கம். "இவ்வாறு செய்தமையால் எனக்குச் சாவும் வர வில்லையே! உலகமும் அழிந்து போகவில்லையே! எல்லாம் இருந்தபடிதானே இருக்கின்றன! அப்படியிருக்க ஜாதியைப் பற்றி இவ்வளவு தடபுடல் எதற்காக?" என்பதுதான் இந் தச் சிறுவனது தீராத ஐயம். பிற்காலத்தில் சுவாமி விவே கானந்தர் உலகுக்கே ஓர் ஆசாரியராக எழுந்தருளியபோது

உத்தம ஜாதியானது குணத்தையும் சீலத்தையும் சார்ந்ததே யொழிய, ஒளிந்திருந்து உண்பதையும், அர்த்தமில்லாத வெளி வேஷத்தையும் சார்ந்ததல்ல என்று விளக்கிக் காட்டினரன்றே?

ஒரு பிள்ளையின் மனப்பாங்கு எத்தகையதென்பது அவனது விளையாட்டிலிருந்தே நன்கு விளங்கிவிடும். நரேந்திரனேவெனில், தன்னேடு விளையாடிய பிள்ளைகளுக்கிடையே யாண்டும் தலைமை வகித்து வந்தான். தன்னை ஒரு ராஜாவென்று அவன் சொல்லிக்கொள்வான். எப்பிள்ளையும் இவனது ஆக்ஞையை மீறி ஒருபோதும் நடப்பதில்லை. ஒருநாள் நரேந்திரன் சில சிறுவர்களோடு மேல்மாடியில் குதித்தோடி விளையாடிக்கொண்டிருக்கையிலே, படிக்கட்டியின்று அடிதவறித் தலைகீழாக உருண்டு தரையிலே வீழ்ந்து மூர்ச்சையடைந்துவிட்டான். பையன்களெல்லாரும் பயந்து அலறி ஓலமிடவே, வீட்டாரனைவரும் மற்றும் அங்குவந்திருந்தவர்களும் பெரும் கும்பலாகக் கூடிவிட்டார்கள். உயிருக்கே அபாயம் வந்துவிட்டதோ வென்று மருண்டு போன அவர்கள், அக்கணமே மருத்துவன் ஒருவனை அழைத்து வந்து வேண்டிய சிகிச்சைகளைக் கையாண்டார்கள். கொஞ்ச நேரத்தில் நரேந்திரன் மூர்ச்சை தெளிந்தெழ, பெற்ரேர்கள் கவலையினின்று சிறிது தேறினர்கள். ஆனல் இந்த விபத்தின் பயனுக இவனது வலது புருவத்தில் பெரிய தழும்பொன்று காணப்பட்டு வந்தது. "இந்த ஆபத்தின் வாயிலாக இவனது சக்தியிற் பெரும்பகுதிக்குப் பங்கம் வாராதிருந்திருக்குமாயின், இவன் இவ்வுலகையே அருட்சக்தியால் கலக்கிவிட்டிருப்பான்!" என்று பிற்காலத்தில் இவனை ஆட்கொண்ட பெரியார் பகர்ந்தருளினர். எனினும் அவன் உலகை ஓர் ஆட்டு ஆட்டித்தான் வைத்தான் என்பது வெளிப்படை.

சங்கீதம் கேட்பதில் நரேந்திரனுக்கு அத்தியந்தப் பிரியம். பண் இசையுடன் அவனும் உருக்கமாகப் பாட வல்லவனுயிருந்தான். சில சமயங்களில் உயர்ந்த கருத்துக்கள் அடங்கிய பாடல்களைப் பாடிக்கொண்டு பிச்சைக்காரர்கள் வீதியிலே செல்லுவார்கள். பெரும்பாலும் இவர்களால் மேலான பயிற்சியும் ஈசுவர உணர்ச்சியும் வீடு வீடாக எடுத்துச் செல்லப்படுகின்றன. அவை போன்ற சீரிய சொற்களைக் கேட்டு எவ்வளவுக்கெவ்வளவு பிள்ளை ஒருவன் பாரமார்த்திகக் கல்வியில் பயிற்சியடைகின்ருனே அவ்வளவுக்கவ்வளவு அவன் புருஷார்த்தத்தைப் பெறுகின்ருன். இதை நன்கு அறிந்திருந்த அன்னை புவனேசுவரி, அப்பாடல்களைக் கேட்பதில் பிரீதி படைத்திருந்த தன் இளங்குமாரனுக்கு அவன் விரும்பியபடியே உற்சாகம் ஊட்டி வந்தார். ஆதலாலே அவனும் அதிசுலபமாகப் பாடல்கள் பல கற்று வந்தான். ஆஞ்சநேயரது பராக்கிரமத்தையும் பக்திப் பிரபாவத்தையும் கீர்த்தனங்கள் வாயிலாகவும், அகவல்கள் வாயிலாகவும் கேட்கும் போதெல்லாம் அவன் பரவசமடைந்து விடுவான். ஆஞ்சநேயர் போலவே தானும் ஒரு மகாவீரனுக இருக்க வேண்டுமென்பது அவனது பேரவா. ஆஞ்சநேயர் ஒரு சிரஞ்சீவியென்றும், எங்கெல்லாம் வாழைத்தோட்டம் இருக்கிறதோ அங்கெல்லாம் அவர் மறைந்திருக்கிருர் என்றும் நரேந்திரன் கேள்விப்பட்டிருக்கிருன். ஆதலால் வாழைத் தோட்டத்தைப் பார்த்தபோதெல்லாம் தனக்கு ஆஞ்சநேயர் தரிசனம் கிட்டுமா என்ற எண்ணம் அவனுக்கு வருவதுண்டு.

---

3. பள்ளியில் கலை பயிலுதல்

உயர்தரப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பப்பட்டபோது அங்கும் பிள்ளைகள் அனைவருக்குமிடையே நரேந்திரன் மிகுந்த சுறுசுறுப்புள்ளவனயிருந்தான். சிறிது நேரமாவது நாற்காலியின்மீது சாந்தமாக உட்கார்ந்திருப்பது அவனுக்கு இயலாத காரியம். பாதி நேரம் அமர்ந்திருப்பதும் பாதி நேரம் நாற்காலியின்மீது சாய்ந்து நின்றுகொண்டிருப்பதும் அவனது வழக்கம். பரபரப்பு மிகுதியால் ஒரு நாளைக்கு ஒரு சட்டை அல்லது வேட்டியைக் கிழித்துவிடுவான்; எந்த விளையாட்டானலும் அதிக உக்கிரத்துடன் அவன் விளையாடுவான்; எதற்கும் அஞ்சாப் பிசாசு என்று அவனைச் சொல்லுவார்கள். ஆனல் பிள்ளைகள் ஒருவரோடு ஒருவர் போராடுவது அவனுக்குச் சிறிதேனும் பிடிக்காது. சச்சரவு மிகுந்து அவர்கள் கைகலக்க ஆரம்பித்து விட்டால் தன்மீது அடி விழ்வதையும் பொருட்படுத்தாது அவர்களுக்கிடையே பாய்ந்து நரேந்திரன் அவர்களைச் சமாதானப்படுத்துவான். ஆபத்துக் காலத்தில் தனது உயிரையும் வழங்கி ஒருவனைக் காப்பாற்றுதற்கான உதாரகுணம் அவன் படைத்திருந்தான்.

பள்ளிக்கூடத்தில் மேல் வகுப்புக்குப் போனபோது நரேந்திரன் ஆங்கிலம் கற்கவேண்டியது அவசியமாயிற்று. ஆனல் அது அன்னிய நாட்டு மொழியென்று அவன் அதைப் படிக்க அறவே மறுத்துவிட்டான். யார் என்ன சொல்லியும் அவன் அதற்குச் செவிசாய்க்கவில்லை; அழுதுகொண்டு தாய் தந்தையரிடம் போய் முறையிட்டான். ஆங்கிலம் படிக்க வேண்டியதன் அவசியத்தை அவர்களும் அவனுக்கு எடுத்தோதினர்கள். ஆனல் அவர்கள் பேச்சும் நரேந்திரனுக்குச் சமாதானமூட்டவில்லை. வேற்றூர் மொழியைக் கற்கமாட்டே

னென்று அவன் பிடிவாதம் பண்ணிவந்தான். எனினும் சில மாதங்களுக்குள்ளாக அப்பாஷையைப் பயிலவேண்டிய அவசியத்தை அவன் தானாக உணர்ந்துகொண்டான். நாடிய கருமம் எதுவாயினும் அதை அரைகுறையாகச் செய்வது அவனுடைய போக்கன்று. ‘செய்வன திருந்தச் செய்’ என்பது அவனிடம் அமைந்திருந்த பேரியல்பாம். ஆதலால் இப்போது முழுமனதுடன் ஆங்கிலம் படிக்க அவன் ஆரம்பித்துவிட்டான். அவன் அப்பயிற்சி பெற்றது பின்னால் மேல்நாட்டுக்கும் இந்தியாவின் பல மாகாணங்களுக்கும் எவ்வாறு பயன்பட்டதென்பதை இங்கே விவரிக்க வேண்டியதில்லை. சுவாமி விவேகானந்தர் உலகனைத்துக்கும் உவந்தளித்த அருட்செய்தி ஆங்கிலம் வாயிலாகவல்லவோ வழங்கப்பட்டடது? அதுமட்டுமல்ல. தாம் சுவானுபூதியில் பெற்றிருந்த பாரமார்த்திகப் பேருண்மைகளை அம்மொழியிலே பொருத்திவைத்ததன் மூலம் அதற்குப் புதியதொரு புனிதத்தையும் வழங்குவாராயினர்.

தத்தர் குடும்பத்தைச் சேர்ந்த வயோதிகர் ஒருவருக்கு அந்தியகாலம் அணுகியபோது அவர் மகாபாரதம் பாராயணம் செய்யக் கேட்டுவிட்டு உயிர் துறக்க வேண்டுமென்று விரும்பினர். ஆனால் இத்தகைய நெருக்கடியில் வாசிக்கத் தயங்குதல் என்னும் குற்றத்துக்கு ஆளானவர்களாய் யாருமே இவ்விருப்பத்துக்கியைந்து பாராயணம் செய்ய முன்வரவில்லை. இதையறிந்த நரேந்திரன் பெரிய பாரத புத்தகம் ஒன்றையெடுத்து வந்து மடிமீது வைத்துக்கொண்டு படிக்கலானன். பக்கம் பக்கமாகப் புரட்டி, பாரதக் கதையில் வரும் வீரர்களின் வரலாற்றை உரத்த இனிய குரலிலே தெளிவுற அவன் வாசித்துக்கொண்டு போனன். அதைக் கேட்டுத் திருப்தியடைந்த விருத்தாப்பியர், உயிர்நாடி

களெல்லாம் ஒடுங்கப்போம் தருணத்திலே, பிள்ளையை அருகில் அழைத்து அமர்ந்திருக்கப்பண்ணி நிறைந்த உள்ளத்துடனே "பிள்ளாய், வருங்காலத்தில் நீ மகோன்னத பதவியைப் பெறுவாய்" என்று பகர்ந்துவிட்டு உடல் நீத்தார். அக்கிழவனர் சாகும்போது கூறிய வாக்குப் பலித்ததென்பதை யார் அறியார்? நரேந்திரன் தான் மகோன்னத பதவியைப் பெற்றதோடன்றி, அருட் செல்வமாகிய பெரும் பேற்றைப் பாரனைத்துக்குமே அளித்தான் அன்றோ?

நரேந்திரன் தன் தோழன் ஒருவனது வீட்டுக்கு அடிக்கடி விளையாடப் போவது வழக்கம். அங்கிருந்த ஒரு சம்பக மரத்தின் மீதேறிக் கால்களிரண்டையும் அதன் கிளைகளிலே மாட்டிக்கொண்டு தலைகீழாகத் தொங்கி விளையாடுவதில் அவனுக்கு அத்தியந்தப்பிரியம். ஒருநாள் அவன் வழக்கம் போல் மரத்தின்மீது ஏறப்போனதும், அவ்வீட்டிலிருந்த விருத்தர் ஒருவர் வந்து அந்தச் சம்பக மரத்தின்மீது மட்டும் ஏறக்கூடாதென்று அவனுக்கு எச்சரிக்கை செய்தார். அதற்குக் காரணம் யாதோவென்று நரேந்திரன் வினவ, அவ்விருட்சத்தில் ஒரு பிரம்மராக்ஷசன் அண்டியிருந்ததாகவும், அவன் நள்ளிரவிலே வெள்ளை வஸ்திரம் தரித்துக்கொண்டு இங்குமங்கும் உலாவினதாகவும், அம்மரத்தின்மீது ஏறினவர்களின் கழுத்தை ஒடித்துவிட அவன் துணிந்திருந்ததாகவும் அப்பெரியவர் விளக்கிக் கூறினர். வாலிபர்கள் இருவரும் வாய் புதைந்து அவரது வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஆதலால் அவர் இவர்களை மருட்டிவிட்டதாக எண்ணிக்கொண்டு அப்புறம் சென்றார். சிறிது நேரத்திற்குள் நரேந்திரன் மீண்டும் மரத்தின்மீது ஏற எத்தனித்தான். அப்போது உண்மையாகவே மருண்டு போயிருந்த அவனுடைய தோழன்பிசாசைப்பற்றி அவனுக்கு ஞாபகமூட்டி

ஏறவொட்டாது தடுத்தான். ஆனல் இந்த இளம்வீரன் கொல்லென்று நகைத்து, "என்ன அறிவீனம்! ஒருவர் சொல்லுவதையெல்லாம் யோசித்துப் பாராது மெய்யென்று நம்பிவிடலாமா? இக்கிழவனுரின் கூற்று உண்மையெனின் நெடுநாளைக்கு முன்பே எனது கழுத்து ஒடிந்து துண்டாகி யிருக்கவேண்டுமன்ளுே?" என்ருன். சில சமயங்களில் பிள்ளைகள் விளையாட்டாகப் பகர்வதிலும் மேலான தத்து வங்கள் புதைந்து கிடக்கின்றன. ஊகித்தறியாது கேட்டதை யெல்லாம் நம்பிக்கொள்பவனது அறிவு வளர்கிறதில்லை யென்றும், அத்தகையவனுல் அரும்பெரும் காரியம் ஒன்றும் சாதிக்க இயலாதென்றும் ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் பிற்காலத்தில் தம் சிஷ்யர்களுக்குப் புகட்டியதற்கும், விளை யாட்டுப் பிள்ளையாயிருந்தபோது பேசியதற்கும் உள்ள பொருத்தம் உய்த்துணர்தற்கு உரியதாம்.

பிள்ளைகள் அறிந்தோ, அறியாமலோ செய்கின்ற சிறு குற்றம் ஒவ்வொன்றுக்கும் அவர்களைப் பிரம்பால் அடித்துத் தண்டிக்கும் துர்ப்பழக்கம் உபாத்தியாயர்கள் சிலரிடமுண்டு. இளைஞர்களை மட்டுக்கு மிஞ்சி அடித்து வாட்டுகின்ற பாதகர் களும் சிலர் இருக்கிருர்கள். அறிவும் ஆற்றலும் மிகப் படைத்திருந்த நரேந்திரன், கொடிய சுபாவம் படைத்திருந்த உபாத்தியாயர்களிடம் இரண்டொரு தடவை பேரின்ன லுக்கு ஆளானுன். ஒரு நாள் பூகோள பாடத்தில் இவன் தப்பிதம் ஒன்று செய்துவிட்டானென்று எண்ணிய உபாத் தியாயர் இவனை மிகத் தண்டித்தார். அவர் அடித்த அடி களை யெல்லாம் சாந்தமாகப் பொறுத்துக்கொண்டு தான் இறுத்த விடையையே இச்சிறுவன் திரும்பத் திரும்பச் சாதித்தது, அவரது சினத்தை மேன்மேலும் வளர்த்துக் கொண்டே போயிற்று. கடைசியாகத் தப்பிதம் தன்பால்

இருந்ததை உணர்ந்த உபாத்தியாயர் வாளாவிருந்து விட்டார். சிறுபிள்ளை யெனினும் இது போன்ற சந்தர்ப்பங்களில் நரேந்திரன் மனேவுறுதியும் அஞ்சாமையும் மிகப் படைத்திருந்தான். தனக்கு மெய்யென்று தோன்றியதிலிருந்து எக்காரணத்தைக் கொண்டாவது அவன் அணுவளவேனும் பிறழவேமாட்டான். உயிரைக்கொடுத்தாவது எடுத்துக் கொண்ட காரியத்தைச் செய்தே முடிக்கவேண்டுமென்பது அவன் இயற்கைக் குணம்.

யாண்டும் பெருந்தன்மை படைத்திருக்க வேண்டுமென்பதும், பிறர் கருதுவதையும் உணர்வதையும் அனுதாபத்துடன் ஆராயவேண்டுமென்பதும், பிறரது சுயேச்சைக்கு ஒரு போதும் இடுக்கண் விளைவிக்கலாகாதென்பதும் புவனேசுவரி மாதா தமது புத்திரனுக்குப் புகட்டிய புத்திமதிகளில் முக்கியமானவைகளெனலாம். மைந்தனும் அதன்படியே தன் வாழ்வு முழுவதிலும் பரந்த நோக்கத்தையே அணிகலமாகப் பூண்டிருந்தான். வயதில் முதிர்ந்தவர்களோடு சில சமயங்களில் ஆழ்ந்த கருத்துக்களைப்பற்றி அவன் விவாதம் செய்வான். அவர்களிற் சிலர் இவனது நுண்ணறிவைப்போற்றி மகிழ்வார்கள்; வேறு சிலர் இவன் போன்ற சிறுவன் ஒருவன்பால் இத்தகைய முன்னீடும், முறுக்கும் இருக்கலாகாதென்று குறை கூறுவார்கள். ஆனல் உண்மையை ஆராய்தற்கும், மூப்பு அல்லது இளமைக்கும் யாது சம்பந்தமுள்ளது என்று நரேந்திரன் திகைத்து நிற்பான். உவந்த மனம், மலர்ந்த முகம், உள்ளன்பு, உற்சாகமுடைமை, அறிவு வளர்ச்சியில் ஆர்வம், சங்கீதப்பிரியம், நூதன விஷயங்களை ஆராய்தலில் ஊக்கம், இடர்களை வெல்லும் வன்மை முதலிய மேலாம் பண்புகள் இப்பிள்ளையாண்டான்பால் பொலிவனவாயின.

நரேந்திரன் உயர்தரப் பள்ளிக்கூடத்தில் வாசித்துக் கொண்டிருந்தபோது தத்தர் குடும்பமானது மத்தியமாகாணத்திலுள்ள ரெய்ப்பூருக்குக் கொஞ்சகாலம் போகவேண்டி நேர்ந்தது. வீட்டாரோடு அவனும் வெளியூருக்குப் போக வேண்டியிருந்தமையால் அவனது படிப்புக்குச் சிறிது பங்கமேற்பட்டது. ஆயினும் அவ் இடையீடானது நீண்டதோர் ஓய்வாக மாறி மற்றொரு விதத்தில் அவனுக்குப் பெரும்பயன் அளித்து வந்தது. தன் தகப்பனாருடன் நெருங்கிப் பழகிப் பரந்த நோக்கங்களைப்பற்றியும், அரும்பெரும் விஷயங்களைப் பற்றியும் ஆலோசனை செய்ய அவனுக்குப் போதிய அவகாசம் அங்கே கிடைத்தது. ஆழ்ந்த கருத்தடங்கிய விஷயங்கள் பலவற்றை அவன் கேள்வி முயற்சியால் தெளிவுறக் கற்றுணர்ந்து கொண்டான். வயதுக்கு மிஞ்சிய மனோ முதிர்ச்சியும் அறிவு வளர்ச்சியும் அவன் பெறத் தொடங்கியது இக்காலத்தில்தான் எனலாம். மகனது மேன்மையான மனப்போக்கைக் காணலுற்ற பிதாவும் அதுபற்றி அகமகிழ்ந்திருந்தார்.

ரெய்ப்பூரில் இங்ஙனம் ஆண்டுகள் இரண்டு கழிந்தன. பள்ளிக்கூடத்தில் முறையாகப் பயிலவேண்டிய படிப்புக்குப் பெருந்தடை விளைந்திருந்தமையால், கல்கத்தா திரும்பிய போது நரேந்திரனைக் கல்லூரிப் பிரவேசப் பரீட்சையில் சேர்த்துக்கொள்ளுதற்கு ஆட்சேபம் மிக உண்டாயிற்று. எனினும் அவனுடைய பொது அறிவையும் ஆற்றலையும் காரணமாகக்கொண்டு, கல்வி இலாகா நிபந்தனைகளினின்று அவனுக்கு விலக்குச் செய்தது. அவன் அவ் வகுப்பிலே முடிவாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டான். மூன்று வருஷங்களில் பயிலவேண்டிய பாடங்களையெல்லாம் ஒரே வருஷத்தில் அவன் கற்கவேண்டியிருந்தது. தன்னம்பிக்கை மிகப்

படைத்திருந்த இளைஞன் தன்மீது சுமத்தப்பட்டிருந்த இப் பொறுப்பைக் கண்டு மருண்டு மனந்தளரவில்லை. அல்லும் பகலும் அதிசிரத்தையுடனே படித்துப் பரீட்சையில் முதல் ஸ்தானம் வகித்துத் தேர்ந்ததுமல்லாமல் தனது பாட சாலைக்கே அவ்வாண்டு தனிப்பெருமையைத் தேடிவைத்தான்.

கல்லூரிப் படிப்பிலே பிரவேசித்ததும் நரேந்திரனது மனப்பாங்கு அறவே மாறிவிட்டது. பிள்ளைப் பருவத்தில் பெரும்பாலும் வேடிக்கை விநோதங்களில் காலங்கழித்தது போன்று இப்போதும் கழிக்க அவனுக்கு அவகாசமில்லை. பாடப் புத்தகங்களைத் தவிர மெய்யறிவூட்டும் வேறு சில புத்தகங்களையும் அவன் படிக்கத்தொடங்கினான். வங்காளம், சம்ஸ்கிருதம், ஆங்கிலம், தத்துவஞானம், தர்க்கம், தேச சரித்திரம் முதலியவைகளில் அவன் எய்தியிருந்த மேம்பாட் டைக் காணலுற்ற கல்லூரியாசிரியர்கள் மிக வியப்படைந் தார்கள். மாணக்கனாயிருந்தபோதே அவன் படைத்திருந்த வாக்குத் திறமையை அக்காலத்தில் நாவன்மையில் இணை யற்றவரெனப் பிரசித்திபெற்றிருந்த சுரேந்திரநாத பானர்ஜி கண்டறிந்து அவனைப் பெரிதும் புகழ்ந்து பேசியுள்ளார். விஷயங்களை உள்ளவாறு ஊகித்தறிதலிலும், கேட்டோர் மறுத்து உரையாடாவண்ணம் சாமர்த்தியமாகச் சம்பாஷணை புரிதலிலும் நரேந்திரன் திறமை மிகப் பெற்று வந்தான். வாலிபர்களிடம் இன்றியமையாது இருக்கவேண்டிய குதூ கலமும், வேடிக்கை விநோதங்களில் பற்றும் நரேந்திரனி டத்து வேண்டியவாறு அமைந்திருந்தன. சந்தர்ப்பத்துக் கேற்ற நகைச்சுவைப் பொலியும் சொற்களைச் சொரிந்து, கேட் போர் விலாப்புடைக்கச் சிரிக்கும்படி அவன் செய்து விடு வான். ஆதலால் மாணவர்களது கூட்டமொன்று எப்போதும் இவனைச் சூழ்ந்து கொண்டேயிருக்கும். அழகுக்காக உடை

தரிக்கும் சளுக்கர்களை அவன் கடிந்து வெறுப்பான். சிறுமை யைக் கண்டவிடத்தே அதைத் தாக்குவது அவனது சீரிய சுபாவம். இவ்வாறு தலைமாணுக்கன் ஒருவனுக்கு அணிகல மாக இலங்குவதான நானுவித மாண்புகளையும் நரேந்திரன் பெற்றிருந்தான். லலித கலைஞானங்களில் சிறந்ததொன்ரு கிய சங்கீதத்தில் அவன் தேர்ச்சி மிகப்பெற்று வந்தான். கலாசாலையில் ஒருநாள் சுமார் இறுநூறுமாணவர்கள் அடங்கி யிருந்த வகுப்புக்கு அதன் ஆசிரியர் வரச் சிறிது காலதாமத மாய்விட்டது. அப்போது நரேந்திரன் ஒரு பாட்டுப்பாடி மாணுக்கர்களை மகிழ்விக்க வேண்டுமென்று அனைவரும் வேண்டினர்கள். அவனும் அக்கணமே இனிய கம்பீரமான குரலிலே பாடினதை எல்லாரும் மனம் குவிந்து நிசப்தமாய்க் கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஆசிரியரும் பாட்டு முடியும்பரி யந்தம் வெளியிலிருந்து கேட்டனுபவித்து விட்டு, மலர்ந்த முகக் குறியுடன் கூடத்தினுள் பிரவேசித்தார். பாடத்தைப் போதிக்கத்துவக்குவதற்கு முன் அவர் கான ரசத்தை மிகவும் போற்றினர். இனி, ஆண்டுதோறும் பரீட்சைக் காலம் அணு கும்போதுதான் நரேந்திரன் தனது முழுமனதையும் பாடப் புத்தகங்களில் செலுத்துவான். அது போழ்து சந்தடியில் லாத ஓரில்லத்தில் அமர்ந்துகொண்டு புதியனவும் பழைய னவுமான பாடங்களை அவன் செவ்வனே கற்று வந்தான். அதன் பயனுக நரேந்திரன் பரீட்சைகளில் சிறப்புடன் தேர்ந்து பி. ஏ. பட்டதாரியும் ஆனன். பின்பு அவன் சட்டக் கலாசாலையில் வழக்கறிஞர் உத்தியோகத்துக்குப் படித்துக் கொண்டிருந்தான். ஆனல், பி. எல். பட்டம் பெறுதற்கு முன்பே ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரால் ஆட்கொள்ளப்பட்டமை யால் சட்டப் படிப்பை அவன் பூர்த்தி பண்ணவில்லை.

4. உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா

ஆசைக்கு ஓர் அளவில்லையன்றோ? அதிலும் யௌவனத்தில் கல்வி கற்று வரும் மாணவர்கள் எதிர்காலத்தில் தாங்கள் எய்தவிருக்கும் உன்னத நிலைமைகளைப் பற்றி எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி வேட்கையுறுவது சாதாரணம். அவர்கள் கொள்ளும் மனக்கோட்டைகளிலும் இச்சைகளிலும் விந்தையொன்றுமில்லை. ஏனெனின், இகவாழ்வின் இன்பத்துக்குச் சாதகமாயிருக்கும் ஆயுள், அறிவு, ஆரோக்கியம், ஐசுவரியம் இவை யாவும் தங்கள் கைவசமிருப்பதாகவே அவர்கள் கருதுகின்றனர். நரேந்திரனும் சமூகத்தில் தான் அடையப்போகும் மேலான அந்தஸ்துக்களையெல்லாம் பற்றிப் பலவாறு மனோராஜ்யம் பண்ணி வந்தான். ஆனால் அவன் கொண்டிருந்த ஆசையிலே தனிப் பெருமையொன்று உண்டு. விரும்பிய யாவற்றையும் பெறுதற்கேற்ற ஆற்றலும் அறிவும் அவன்பால் இருந்ததெனினும் பேர், புகழ், பொருள் இவை போன்றவைகளை அவனது மனம் நாடவில்லை. "இத்தகையவைகளைத் தேடுவதால் ஆவதுதான் என்ன? கற்ற கல்வியினாலுந்தான் வரும் பயன் என்ன?" என்னும் ஐயங்கள் இடையிடையே அவனது உள்ளத்தில் எழுந்து கொண்டிருந்தன. "மரணத்தோடு இவையாவும் அழிகின்றன. அழியாத ஒன்றைப் பெறுவதன்றோ ஆண்மைக்கு அழகு?" என இவ்வாறெல்லாம் அவன் பி. ஏ. பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருந்தபோதே சிந்திக்கலானான். "துருவி ஆராய்ந்து பார்க்குங்கால் துறவி யொருவனே மெய்யான வீரன்; வேந்தனையும் துரும்பெனக் கருதுபவனும், மரணத்தை வென்று அதற்கு

அப்பாலிருக்கும் மெய்ப்பொருளை அறிபவனும் சந்நியாசி ஒருவனே" என்று ஒருநாள் நரேந்திரன் தோழன் ஒருவனிடம் பகர்ந்தான். இதைக் கேட்டுத் திகைத்த நண்பன், "நரேந்திரா! நீ வாய் வேதாந்தம் பேசி வகைகெட்டுப் போகாதே. யாரோ பைத்தியக்காரப் புரோகிதர் ஒருவர் பகர்கின்ற வீண்வார்த்தைகளைக் கேட்டு விட்டுத் தலைபுரண்டு திரிகின்ருய், சோம்பேறி சந்நியாசிகள் தங்களுக்காவது உலகத்துக்காவது பயன்படுகின்ருர்களா? சமூகத்தில் நீ அடைதற்கிருக்கும் ஒப்பற்ற செல்வாக்கையும் சம்பத்தையும் சிந்தித்துப் படிப்பிலே மனதை நாட்டு" என்று புத்தி புகட்டினுன். ஆயினும் நரேந்திரனது மனேபாவனை அடியோடு மாறியமைந்து வந்ததை யாருமறிந்திலர்.

வார விடுமுறை நாட்களில் தனது நண்பர்களின் வீடுகளுக்குச் சென்று வருவது நரேந்திரனது வழக்கம். சில வேளைகளில் ஆங்கு அவன் இரண்டொரு நாள் தங்குவதும் உண்டு. அவ்விதமே ஓரிரவு தனதில்லத்திலிருந்து சுமார் இரண்டு மைல் தூரத்திலிருந்த தோழன் ஒருவனது வீட்டிலே தங்கியிருந்தான். அங்குக் குழுமியிருந்த கூட்டாளிகள் சிலருடன் உல்லாசமாய்க் காலங்கழிக்கும்போது எதிர்பாராத செய்தியொன்று திடீரென்று அவன் காதுக்கு எட்டியது. நரேந்திரனது வீட்டினின்றும் வேலைக்காரன் ஒருவன் ஓடோடி வந்து மூச்செறிந்து பிரலாபித்துக் கொண்டு நின்ருன். நிகழ்ந்தது யாதென்று இளைஞன் ஆவலுடன் வினவ, "தகப்பனர் காலமாய்விட்டார்" என்று கூறி, வந்தவன் அழுதான்! தன்மீது இடிவிழுந்தாற்போலானுன் நரேந்திரன். நம்பவொண்ணுத அச்செய்தியைக் கேட்டு இளைஞன் வீட்டுக்கு விரைந்தோடினுன். தான் கேள்வியுற்றது மெய்தான். மாரடைப்பால் தந்தை மாண்டு போனுர் என அறிந்தான்! சற்று

நேரத்துக்கு முன்பு தன் பிதாவாயிருந்தவர் இப்போது பிணமாய்க் கிடப்பதை அவன் கண்கூடாகக் காணலுற்ருன்! அன்னையும் உடன் பிறந்தவர்களும் அலறிப் பதறிக்கொண்டிருக்கையில் தான் மட்டும் துயரத்தால் பிரமித்துப் போய்ப் பேசவும் அழவும் இயலாதவனுய் அசைவற்று நின்று கொண்டிருந்தான். பிறகு ஆண் மக்களிலே முதலானவனுகிய நரேந்திரனுல் தகனக்கிரியை முதலானவை முறையே செய்து முடிக்கப்பட்டன.

குடும்ப பாரம் இப்போது இளம் நரேந்திரன் மீது வீழ்ந்து விட்டது. ஆருத் துயரத்தில் அழுந்திக் கிடந்த அன்னைக்கும் தமக்கைமார் இருவருக்கும் தம்பிமார் இருவருக்கும் வேண்டிய ஆறுதல்கள் சொல்லி வந்தான். காலமாகிவிட்ட விசுவநாத தத்தர் தம் குடும்பத்திற்கு ஆஸ்தி எதுவும் தேடிவைத்து விட்டுப் போகவில்லை. வறுமைதான் இப்போது தம் குடும்பத்தின் கதியென்று எண்ணியபோது அச்சமும், மூத்தப்பிள்ளையை நினைத்தபோது சிறிது தேறுதலும் புவனேசுவரிமாதாவின் மனதிலே மாறி மாறித் தோன்றின. அவனைத்தான் இனி முகாமையாக வைத்துக்கொண்டு அக்குடும்பம் புதிதாக வாழ்வைத் துவக்கவேண்டியிருந்தது. அப்போது அவன் சட்டக்கலாசாலையில் படித்துக்கொண்டிருந்தான்; அன்றன்றைக்கு வேண்டிய சாப்பாட்டுக்குங்கூட வகையில்லாதவாறு வறுமைநோய் அவர்கள்பால் வந்து விட்டது. எப்படித்தான் காலக்ஷேபம் பண்ணினுர்களோ என்பதைப்பற்றிய மர்மத்தைத் தாயும் பிள்ளையும் தவிர வேறு யாரும் அறிந்திலர்.

கலாசாலைக்கு வண்டி வைத்துக்கொண்டு போவதை நரேந்திரன் அறவே நிறுத்திவிட்டான். நெடுந்தூரம் கால் நலிய நடந்து செல்ல வேண்டியிருந்தது. தரிக்கும் உடையும்

நாளடைவில் பழுதுபட்டதாயும் எளியதாயும் மாறிவிட்டது. குடை, பாதரட்சை போன்றவை அவனுக்குக் கிட்டாத பெரு மிதங்களாயின. ஆனால் அவைகளுக்காக அவன் கவலையுற்றானில்லை. அன்ன ஆகாரம் சிறிதேனுமின்றி அவன் கழித்த நாட்கள் எத்தனையெத்தனையோ! பசியால் வாடி, அங்கம் தளர்ந்து சோர்வுற்ற நாட்களும் பலவுண்டு. சிநேகிதர்கள் விருந்துக்கு அழைத்தால் வீட்டிலிருப்பவர்களது பரிதாப நிலைமையை நினைத்து ஏதேனுமொரு சாக்குச் சொல்லி அவர்களது வேண்டுதலுக்கிணங்கப் பணிவுடன் மறுத்துவிடுவான். போதுமான போஜனம் வீட்டிலில்லாதபோது, தன் சகோதர சகோதரிகள் வயிறார உண்ணவேண்டுமென்று கருதி, தான் அதிக ஆகாரம் ஏற்கமாட்டான். வேறு சில சமயங்களிலே, நண்பர்கள் வீட்டில் விருந்து சாப்பிட்டுவிட்டு வந்ததாக அன்னையாரிடம் சொல்லிவிட்டு அவன் உணவு உண்ணாமலேயே இருந்துவிடுவான்.

இவ்வாறெல்லாம் படாத இன்னல்களுக்கு ஆளாகி அவன் காலங்கழித்து வருகையிலே, 'தனித்து வாராது துயரம்' என்னும் பழமொழிக்கிணங்க, மற்றுமொரு அல்லல் வந்து அவனை அலைக்கழித்தது. அவர்கள் வசித்து வந்த வீட்டின் பெரும்பகுதி தங்களுக்கு உரியதென்று ஏதோ காரணம் எடுத்துக்காட்டி, அவனுடைய தாயாதிகள் நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்துவிட்டார்கள். மறைந்து கிடந்த இவர்களது எளிமையை அது வெளிப்படுத்திவிட்டது. போதாதற்கு அவ்வழக்கானது நெடுநாளாகத் தொடர்ந்து நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்து வந்தது. ஆனால் நரேந்திரன் இவைகளைக்கண்டு மருண்டு மயங்கிவிடவில்லை. இடுக்கண் அதிகரிக்க அதிகரிக்க அவனது மனவலிமை பெருகிக்கொண்டே போயிற்று. பிதாவைப் போன்றே

தோல்வி எதற்கும் அவன் இடம் கொடுக்காதவனானான். அவனது வீரத்தைக் காணலுற்ற அன்னையாரும் ஒருவாறு அகமகிழ்ந்திருந்தார். நியாயஸ்தலத்தில் அவன் கொடுத்த வாக்குமூலத்தின் தெளிவையும், சாதுரியத்தையும் கவனித்த வழக்கறிஞர்கள் அவன் ஒரு தேர்ந்த நியாயவாதியாவானென்று மிக மெச்சிப் பேசினார்கள். கடைசியாக, வழக்கும் அவனுக்கு அநுகூலமாகவே முடிந்தது. புவனேசுவரி மாதாவுக்கு அது எத்தகைய ஆறுதல் அளித்தது என்பதைக்கூறவும் வேண்டுமோ? அதன் பிறகு நரேந்திரனது பெருமுயற்சியால் தத்தர் குடும்பமானது வறுமைப் பிணியினின்று ஒருவாறு மீளலாயிற்று.

வயதில் சிறியராய் இருப்பவர்கள் அறிவிலும் சிறியராய் இருக்கவேண்டுமென்பது அவசியமன்று. ஏனெனில் அறிவில் தெளிவும் மந்தமும் ஜன்மாந்தர அநுபவத்தை அனுசரித்திருக்கின்றன. நரேந்திரனது மனோவளர்ச்சியே இக்கூற்றுக்குப் போதிய சான்றாகும். பிறவியிலேயே அவன்பால் புதைந்து கிடந்த பேரறிவு அவனது பதினெட்டாவது பிராயத்திலிருந்து இருபத்துநான்காவது ஆண்டு பரியந்தம் அதிவேகமாய் வளர்ந்து விசாலமடைந்து வந்தது. கலைஞானம் பயிலுதலில் அவ்விளைஞன் ஆர்வம் மிகப்படைத்திருந்தான். பூரண அறிவும் பயிற்சியும் பெறுவதற்குக் கல்லூரியில் நியமித்திருந்த புத்தகங்களை மட்டும் படித்துப் பரீட்சையில் தேறுதல் போதாதென்பதை அவன் தெற்றென உணர்ந்திருந்தான். "எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்னும் முதுமொழிக்கிணங்க, பொருள்களை விசாரித்து உள்ளவாறு அறிந்துகொள்ள வல்லவனாதலே கல்வியின் முடிவான நோக்கம் என்பது அவனது கருத்து. இக்கருத்தையே குறிக்

கோளாக வைத்துக்கொண்டு அக்காலத்துப் பெரியார்களுடையகொள்கைகளையும், அப்போதைக்கப்போது பத்திரிகை வாயிலாக வெளியாகி வந்துகொண்டிருந்த நூதன விஷயங்களையும் அவன் ஆராய்ந்து வரலானான்.

ஹெர்பட் ஸ்பென்ஸர் என்ற மேல்நாட்டு மேதாவி அக்காலத்தில் ஒரு பெரிய தத்துவ ஞானியாகத் திகழ்ந்து வந்தார். அவருடைய கொள்கைகளை ஆப்த வாக்கியமென அறிஞர் பலர் யாண்டும் ஏற்று வருவாராயினர். ஆனால் அவரது நூலில் வெளிவந்திருந்த சில விஷயங்களை நரேந்திரன் ஆமோதிக்கவில்லை. ஆதலால் அவன் தனது அபிப்பிராய பேதத்தை விரிவாக எழுதி அத்தத்துவஞானிக்கு ஒரு கடிதம் விடுத்தான். அப்பெரியாரும் இவனது நுண்ணறிவைப்போற்றிப் புகழ்ந்தது மல்லாமல் தமது நூலை மற்றுமொருமுறை அச்சியற்றும்போது நரேந்திரனது ஆராய்ச்சியை அனுசரித்தே எழுதுவதாகவும் தெரிவித்தார். நரேந்திரனது கல்லூரித் தலைமை ஆசிரியர் ஹேஸ்டீ என்பவர் இவனது அறிவைப் புகழ்ந்துபேசியதாவது:—"நரேந்திரநாத தத்தன் ஒருபேரறிவாளி. நான் உலகெங்கும் பிரயாணம் செய்திருக்கிறேன். ஆனால் அறிவு ஆற்றல் இவைகளில் இவனுக்கு ஒப்பானவர்களை ஜெர்மனி நாட்டு சர்வகலாசாலைகளில் இருக்கும்தத்துவ நூல் ஆராய்ச்சி மாணவர்களிடையிலும் நான் கண்டதில்லை. வாழ்விலே இவன்பெரும்பேறு எய்துவான் என்பது உறுதி."

ஒரு நாட்டின் நாகரிகம் பல துறைகளின் வாயிலாகத் திகழ்கின்றது. அத்துறைகளுள் நாடகமும் ஒன்று. நாடு சீர்பெறும்போது நாடகமும் உயர்வுறுகிறது. வங்க நாட்டில் அதுகாலை நாடகக்கலை சிறப்புற்று ஓங்கி இருந்தது. கல்லூரிகளிலும் நாடகங்கள் நடிக்கப்பட்டன. இக்கலை ஞானத்திலே மாணவர்களுள் நரேந்திரன் எத்தகைய மேம்பாடு

பெற்றிருந்தான் என்பதை அவனது நடிப்பைக் கண்டவர்கள்தான் அறிதல் கூடும். சங்கீத ஞானத்திலே இவன் எய்தியிருந்த மேன்மை முன்னமே கூறப்பட்டிருக்கிறது. இவ்வித்தையைக் கசடறக் கற்றுக் கொள்ளுதற் பொருட்டு சங்கீத வித்வான்கள் இருவரது உதவியைக்கொண்டு வீணை, மிருதங்கம் முதலிய கருவிகள் வாசிக்கவும் ராகங்கள் பாடவும் பயின்று வந்தான். தேகப் பயிற்சிகளுள் சிலம்பம் சிறந்ததோர் வித்தை. சமர்த்தனுகிற சிலம்பக்காரன் ஒருவனை ஏககாலத்தில் ஐம்பது பேர் வந்து தாக்கினபோதிலும் அவர்களனைவரையும் சிலம்பத்தடியால் நிராகரிக்க அவனுல் இயலும். நானுவித தேகப்பயிற்சிகளிலும் பந்து விளையாட்டுக்களிலும் நரேந்திரன் தேர்ச்சி பெற்றிருந்தது போலவே சிலம்ப வித்தையிலும் தேர்ந்திருந்தான். தேக வலிமையிலே சிறந்தவர்களையும் கூட இவ்வித்தையினுல் தோற்கடிக்க வல்ல சில மர்மங்களை அவன் கற்றிருந்தான். ஒருநாள் ஒரு சிலம்பப்பந்தயத்தில், வயது முதிர்ந்தவனும் வித்தையில் வல்லவனுமான ஒருவனுடன் போட்டி போட்டு விளையாட நரேந்திரன் முன்வந்தான். பார்க்க வந்தவர்கள் சிறியவனுகிய இவனுக்குச் சிலம்பப் போர் விளையாட்டில் என்ன விபத்து நேரிடுமோ என்று பயந்தனர். ஆனுல் வீரம் ததும்பிய இவ்விளைஞன் பேர்பெற்ற அம்மல்லனுடன் நெடு நேரம் எதிர்த்து விளையாடியதுமல்லாமல் முடிவில் எதிரியின் சிலம்பத்தடி சின்னபின்னமாக உடைந்து விழச் செய்தது பார்த்தோர்க்குப் பெருவியப்பூட்டியது.

வாலிபர்கள் கெட்டுப் போவதற்கு வழிகள் எத்தனையெத்தனையோ இருக்கின்றன. வேகம் நிறைந்த அவர்களது மனம் கட்டுக்கு அடங்காதது. அதி உக்கிரமாகவும் பலாத்காரமாகவும் சிற்றின்பங்களில் பாயும் தன்மையுடை

யது. மூர்க்கம் ததும்பிய இம்மனதைக் கட்டி நல்வழியில் செலுத்த விரும்புகிற வாலிபர்கள் மிக மிகச் சிலரேயாவர். அச்சிறு கூட்டத்தில் ஒருவனுகத் திகழ்ந்தவன் நரேந்திரன். விளையாட்டுகள் பலவற்றில் நரேந்திரன் பேருக்கம் படைத் திருந்தான் எனினும் சன்மார்க்கத்துக்கு மாருன செயல்களை யெல்லாம் அவன் வெறுத்து ஒதுக்கி வைத்து வந்தான். தீயதைத் தவிர்ப்பது மட்டும் ஒருவனுக்குப் போதாது. நல் வழியில் ஆர்வத்துடன் பிரவேசிப்பதுதான் புருஷார்த்தம் என்றும், வாழ்வின் செயல்கள் அனைத்திலும் ஒருவன் தூய வனுய் இருக்கவேண்டும் என்றும் இவ்வாலிபன் தெள்ளத் தெளிய உணர்ந்திருந்தான். பலவீனத்தாலே சன்மார்க்கம் கைகூடாது என்றும், செயல்புரியத் தெரியாது சும்மா இருப் பவன் சாந்த புருஷன் ஆகமாட்டானென்றும், வலிமை படைத்த வீரர்களால்தான் நன்மை கடைப்பிடிக்க முடியு மென்றும் அவன் தெள்ளத் தெளிய ஓர்ந்திருந்தான். விரதங் களுள் பெரியதாகிய பிரம்மசரிய விரதம் ஒன்றே மாணுக்கன் ஒருவனது குறிக்கோளாய் இருக்கவேண்டும். ஆற்றல், அன்பு, அறிவு இவையாவையும் அது ஒருங்கே அளிக்கின் றது. "உரன் என்னும் தோட்டியான் ஓரைந்துங் காப்பான், வரன் என்னும் வைப்பிற்கோர் வித்து" என்னும் பொய்யா மொழிக்கு அணிகலமாக இலங்கினுன் தத்தர் குலக் கொழுந் தாகிய இக்குமரன்.

நரேந்திரன் படைத்திருந்த ஞாபகசக்தி அளப்பரியது. அவன் பூண்டொழுகிய பிரம்மசரிய விரதமே இதற்குக் காரணமாயிற்று எனலாம். பிரம்மசரிய விரதத்தைப் பன்னி ரண்டு ஆண்டு பூண்டு ஒழுகுபவன் ஒருவனுக்கு முற்பிறப்பு களைப் பற்றிய ஞாபகம் வருகிறதென்று யோக சாஸ்திரம் கூறுகிறது. கலைகள் யாவையும் தூய பிரம்மசாரி ஒரு

வன் எளிதில் கற்க வல்லவனுகின்ருன். நமது பாலயோகி ஏதேனுமொன்றை ஒருமுறை ஆழ்ந்து ஆராய்ந்து விட்டால் ஆயுள்பரியந்தம் அது அவனது ஞாபகத்தில் பதிந்துவிடும். சம்ஸ்கிருதக் காவியங்கள், சூத்திரங்கள், சுலோகங்கள், எண்ணிறந்தவைகளுக்கு அவனது வாலறிவு உறைகளமாயிருந்தது போலவே, ஷேக்ஸ்பியர், மில்டன் முதலியோரின் ஆங்கில நாடகங்களும் காவியங்களும் அவனுக்கு மனப்பாடமாயிருந்தன. சுருங்கச் சொல்லின் நமது கதாநாயகனுனவன் தேக வலிவிலே ஒரு வீரனுகவும், மனே உறுதியிலே ஒரு மன்னனுகவும், கல்வியிலே ஒரு பண்டிதனுகவும், சங்கீதத்திலே ஒரு வித்வானுகவும், வாழ்வின் இலட்சியத்திலே ஒரு தீர்க்கதரிசியாகவும் திகழ்ந்து வருவானுயினன்.

பிரம்ம சமாஜம் என்பது வங்க நாட்டிலே காணப்பட்டுள்ள ஒரு பெரிய லௌகிக வைதிக சீர்திருத்த மகாசங்கம். இதை முதன் முதல் ஸ்தாபித்தவர் இராஜாராம் மோகன் ராய் என்னும் பெரியார். நம் நாட்டின் சமுதாயத்திலும் மதத்திலும் இருக்கிற ஊழல்கள் பலவற்றைப் போக்கடிக்க இச் சமாஜம் முயன்று வந்தது. அத்துடன் மேல் நாட்டிலிருந்து படையெடுத்து வந்த கிறிஸ்தவ மதத்துக்கு முதன்முதல் முட்டுக்கட்டை போட்டது இச்சங்கந்தான். இன்றைக்கும் இக் கழகமானது நாடெங்கும் ஒருவாறு பரவியிருக்கிறது. எனினும், இது சீரும் சிறப்பும் மிக எய்தியிருந்தது நரேந்திர நாதரது யௌவன காலத்தேயாம். கேசவ சந்திரசேனர் என்னும் புனிதர் ஒருவர் அதுபோழ்து இதற்குத் தலைமை வகித்து வந்தார். வாக்குத் திறமையிலும், வாழ்வு முறையிலும் மாணவர்களுக்கிடையே அவர் ஓர் ஆதர்ச புருஷராக விளங்கினர். அவருடைய பரந்த கல்விப்பயிற்சியையும், சர்வ மத சமரசக் கொள்கைகளையும் காணலுற்ற மேல்நாட்டு அறி

ஞர் அவரைப் பெரிதும் போற்றி வந்தனர். கேசவசந்திரருக்கு ஒப்பான வேறு பல பெரியாரும் அந்த சமாஜத்தில் மேலான பதவி வகித்து வந்தனர். அவர்களது மாண்பு நரேந்திரரது உள்ளத்தைக் கவர்ந்தது. ஆதலால் பிரம்ம சமாஜத்தில் அவருக்குப் பெரும் பற்றுதல் உண்டாயிற்று. தாமும் அச்சங்கத்தில் ஓர் அங்கத்தினரானர். கேசவசந்திரசேனர் போன்று தாமும் சமுதாயத்தில் ஒரு மகோன்னத பதவியை அடைய வேண்டுமென்று தத்தர் குலத்துத் தவமணி அவாவுற்றது இயல்பேயன்றே? அவர் ஒரு மாணவரே எனினும் அவரிடத்திருந்த பாடும் திறமையையும் புத்திக்கூர்மையையும் முன்னிட்டுப் பெரியார் பலர் அவரை மிகவும் பாராட்டி வந்தனர். சமாஜ அங்கத்தினரான மேதாவிகளுடன் ஒட்டி உறவாடுதல், கற்ருருடன் கலந்திருத்தல், அரும்பெரும் விஷயங்களை அவர்களோடிருந்து ஆராய்தல், அவை நடுவே நின்று சொற்பொழிவுகள் செய்தல் ஆகிய இவை யாவும் இவரது மனப்போக்குக்கு முற்றிலும் இயைந்தவைகளாகவேயிருந்தன.

பிரம்ம சமாஜத்தின் அமைப்பும் நடைமுறையும் இவ்வாறு இனிதாயிருந்த போதிலும் நரேந்திரருக்கு அத்திருக்கூட்டம் நிரந்தர சமாதானத்தை நல்கவில்லை. கடவுளைக் காணுவிடின் கற்பதாலும் கற்றவர்களோடு உறவாடுவதாலும் ஆகும் பயன்தான் என்ன? ஆத்ம ஞானம் இல்லாதவிடத்துச் சங்கங்களின் ஆரவாரத்தால் ஆவதென்ன? இத்தகைய வினுக்கள் இப்போது இவரது உள்ளத்து எழா நின்றன. உள்ளங்கை நெல்லிக்கனியெனக் கடவுளது காட்சியைப் பெற்றவர் எவரேனும் இவ்வையகத்து உளரோ? அத்தகையவர் யாருமே உலகில் இல்லையெனின் மக்களால் கண்டிராததும், காண்பதற்கு இயலாததுமான ஏதோ ஒரு கற்பனைப் பொருளுக்குக் கடவுள் என்னும் பெயர் வைத்துக்கொண்டு

அதை தத்தம் மதங்களிலேதான் அமைந்திருப்பதாகச் சமய வாதிகள் அரற்றி மலேந்திடுவானேன்? தாம் சந்தித்த ஒவ்வொரு பெரியாரிடத்திலும் அவர் இதே கேள்வியைத்தான் கேட்டு வந்தார். ஆனல் தமது வினவிற்கு ஏற்ற விடையளிக்க வல்லவர் எவரையும் அவர் சந்திக்கவில்லை. கேசவ சந்திர சேனருங்கூடக் கடவுளைக் காண்பதற்கு இவ்வாறு வாழ வேண்டும், அவ்வாறு அனுஷ்டிக்கவேண்டும் என்று வெறும் வாசா ஞானம் பேசினரே யொழியத் தாம் கடவுளைக் கண்டிருப்பதாகத் துணிந்து கூறவில்லை.

கடைசியாகப் பிரம்மசமாஜத்துப் பிரமுகர்களாகிய இவர்கள் எல்லாருக்கும் தலைவராகத் திகழ்ந்த மகரிஷி *தேவேந்திரநாத தாகூரிடம் மெய்ஞ்ஞான வேட்கை கொண்டிருந்த நமது இளம்யோகி செல்வாராயினர். அப்பெரியார் தியானத்தில் அமர்ந்திருந்தபொழுது அவருடைய அனுமதியை நாடாமலேயே இவ் இளைஞன் அவரது அறைக்குள் நுழைந்தார். மகரிஷி கண் விழித்ததும் "ஐயன்மீர்! நீவிர் கடவுளைக் கண்டிருக்கிறீரா?" என்று ஆர்வத்துடனும் பதைபதைப்புடனும் வாலிபர் வினவினர். உள்ளத்தைப் பீறிட்டு வந்த இக்கேள்வி மகரிஷியைத் திடுக்கிடச் செய்தது. எவ்வித விடையும் பகர அவருக்கு நா எழவில்லை. ஞான தாகத்தால் பொறி பறக்க ஒளி வீசிய இளைஞரது கண்களைக் காணலுற்ற முனிபுங்கவர், "பிள்ளாய்! நீ ஒரு பெரிய யோகியாவாய்" என்று மட்டும் பகர்ந்தார். ஆனல் பிள்ளைக்கு அதனல் திருப்தியுண்டாகவில்லை. மக்கள் போற்றி வந்த அந்த மகரிஷியிடத்திருந்தும் தாம் எதிர்பார்த்த பதில் வரவில்லை! பாரமார்த்திகப் பெரும்

---

* தேவேந்திரநாத தாகூர் என்பவர் கவி வேந்தரான ரவீந்திரநாத தாகூரின் பிதா. அவர் பாரமார்த்திக சாதனத்தில் மிகவும் ஈடுபட்டிருந்ததை முன்னிட்டுப் பிரம்ம சமாஜத்தாரும் மற்றவர்களும் அவரை ஒரு மகரிஷியென மதித்து வந்தனர்.

பேறு படைத்திருந்த நிறைமொழி மாந்தர் என்பார் யாரையுமே மாநிலத்தில் காண்பதற்கில்லை. ஆதலால் கடவுளைப் பற்றி மறைமொழிகள் பெருமிதமாக ஓலமிடுவதெல்லாம் வீண் பேச்சு என்று கருதிய நரேந்திரர் பெரிதும் ஏமாற்றமடைந்தவராய் வீடுபோய்ச் சேர்ந்தார். அப்படித் திரும்பிப் போகும்பொழுது இவ்விளைஞர் மனதில் உதித்த எண்ணம் குறிப்பிடத் தகுந்தது: "ஐயா, நீவிர் கடவுளைக் கண்டிருக்கிறீரா? என்று கேட்டேன். ஆம், நான் கடவுளைக் கண்டிருக்கிறேன் என்றோ, அல்லது கண்டதில்லை யென்றோ மறுமொழி யுரைப்பது முறை. அப்படிப் பொருத்தமான பதில் சொல்லுதற்குப் பதிலாக இவர் எனக்கு எதிர் காலத்தில் என்ன வந்து வாய்க்கப் போகிறது என்று அபிப்பிராயங் கூறியனுப்பிவிட்டார். என்னைப்பற்றி இவர் 'என்ன கருதுகிறார் என்பதல்ல நான் இவரிடம் கேட்டது."

5. ஆளுடைய அண்ணலை அடைதல்

இளங்குமாரரது ஞான தாகத்தையும், அது தணியாமையினால் அவர் பட்ட பரிதாபத்தையும் காணலுற்ற அவரது நெருங்கிய உறவினர் ஒருவர் அவரை அழைத்து, "பிள்ளாய்! நீ ஏன் பிரம்மசமாஜத்துக்கும் வேறு பல இடங்களுக்கும் வீணாய் ஓடியலைகின்றனை? கடவுளைக் கண்டவரைக் காண நீ விரும்பின் இந்நகருக்கு அருகாமையிலே, வடபுறத்திலே, கங்காதீரத்திலே திகழும் தக்ஷிணேசுவர ஆலயத்துக்குச் செல்க. அவ்வாலயத்தின்கண் எழுந்தருளியிருக்கும் காளிகா தேவியின் அருட்பிரசாதத்தைப் பருகிப் பரவசமடைந்திருக்கும் பெரியார் ஒருவர் அவண் வதிந்து வருகின்றார். உன் மனத்தகத்தே மலிந்து நிற்கும் மயக்கத்தை மாற்ற வல்லவர் அவர் ஒருவரேயாவார்" என உறுதிமொழி கூறினர். தமக்கு ஊக்கம் ஊட்டிய அந்த நல்ல செய்தியைக் கேட்ட நரேந்திரரும் அங்கே சென்றுவர இசைந்தார்.

தக்ஷிணேசுவர ஆலயத்துக்குத் தனிப்பெருமையையும் புகழையும் தேடி வைத்தவர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் என்பார். இப்பெரியாரது புனித வாழ்வு பாரமார்த்திகம், கடுந்தவம், சுவானுபூதி முதலிய மாண்புகளை விளக்கும் ஒளி மிகுந்த ஒரு தீபமாகத் துலங்கியது. கடவுளது அருளுக்குப் புறம்பான வேறு எதையும் இவர் இவ்வுலகிலே அடைந்து அறிந்திலர். பிரபஞ்சம் பொய், பரம்பொருள் ஒன்றேமெய் என்பதற்கு இவரது தூயவாழ்வு அத்தாட்சியாயிற்று. சுருங்கச் சொல்லின் பரதகண்டம் பல்லாயிரம் ஆண்டுகளாகப் பாவித்து வந்த பாரமார்த்திக நாகரிகமே வடிவெடுத்து வந்தாற்போல இவர் விளங்கினர். நவீனக் கொள்கை, கல்வி முறை, நாகரிகம் இவைகளின் மாண்பனைத்தும் நரேந்திரர்

மாட்டு உறைந்து மிளிர்ந்தன. இவர் பரமஹம்சரை அணுகியதன் வாயிலாகப் புராதன வைதிக தர்மத்தைக்கொண்ட பழைய பாரதநாடும், புதிய பரந்த கொள்கை படைப்பதற்கிருந்த பரதகண்டமும் சந்தித்தன. இச்சேர்க்கையால் இழிவோ அழிவோ இரண்டுக்கும் ஏற்படவில்லை. சனாதன தர்மம் மீண்டும் சிறந்தோங்கலாயிற்று. வலுத்த உடல் ஒன்று உயிர்பெற்றாற் போல நவநாகரிகமும் புனிதம் பெறலாயிற்று. இந்துமதம் உலகெங்கும் சிறந்து ஓங்குதற்கேற்ற சீர்மையை இவ் இருவர்களிடமிருந்தும் பெறுவதாயிற்று.

பரமஹம்சர் எய்தியிருந்த பாரமார்த்திகப் பிரபாவத்தை வையகமெங்கும் வழங்கவல்ல அருட்செல்வர்கள் அவர்மாட்டு வருவார்களென்று அவர் வழிபடு தெய்வமாகிய ஜகன்மாதா அவருக்குப் பகர்ந்தருளியிருந்தனள். ஆதலால் அவர்களது நல்வரவை ஸ்ரீ ராமகிருஷ்ணரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார். காலக்கிரமத்தில் அப்புனிதர்களும் ஒருவர்பின் ஒருவராக அவரிடம் வருவாராயினர். தக்ஷிணேசுவரம் ஏகுமாறு ஏவப்பட்ட நரேந்திரரும் 1880 வது ஆண்டு நவம்பர் மாதத்திலே அப்புண்ணிய தீர்த்தத்துக்குப் புறப்பட்டார். போகும் வழியில் தமது கேள்விக்கு என்ன விடை வருமோ வென்ற ஐயம் ஒருபுறமும், ஆவல் மற்றொரு புறமும் இப்பரம பக்குவியைப் பரிதவிக்கச் செய்தன. பரமஹம்ச தேவரது சன்னிதானத்துக்கு இவ்விளைஞர் சென்றதும் அப்பெரியார் பரவசமடைந்துவிட்டார். பழைய நண்பன் ஒருவனைக் கண்டவர் போல் அவர் பிரியம் மிகப்பூண்டு உரையாடினர். "எத்தனை நாள் நான் ஆவலுடன் உனக்காகக் காத்திருப்பது!" என்று இரங்கிக் குறைகூறினர். மருள் நிறைந்த கல்கத்தா நகரிலே அருள் நிறைந்த இத்தகைய புனிதன் ஒருவனும் பிறப்பானோ வென்று அவர் வியந்தார். நரேந்திரரைப் பாடும்படி அவர்

வேண்ட, பிள்ளையாரும் அதற்கிணங்கிப் பாடல் ஒன்றுபாடினர். அவரது கானத்தைக் கேட்டுப் பரமஹம்சர் திரும்பவும் பரவசமடைந்தார். நெடுநாளாக நரேந்திரரது உள்ளத்தை வாட்டிவந்த கேள்வி இப்பொழுது அவரது மனதில் முன்னணியில் வந்து நின்றது. "நீவிர் கடவுளைக் கண்டதுண்டா?" என்று இவரிடத்தும் நரேந்திரர் வழக்கம்போல வினவினர். "ஆம் பிள்ளாய்; நான் அவரை இடையருது கண்டு களிகூர்கிறேன். ஊனக்கண்ணுல் நான் உன்னைக் காண்பதைவிடப் பன்மடங்கு அதிகத் தெளிவுடனே அகக்கண்ணுல் அவரை அறிகிறேன். வேண்டுமானுல் அவரை உனக்கும் காட்டுகிறேன்" என்ருர் கருணைகரர். வலியுறு இவ்வார்த்தைகளைக் கேட்ட நரேந்திரரது உள்ளம் பூரித்தது; உடல் நடுங்கிற்று; உரோமம் சிலிர்த்தது. ஆனுல் "நன்கு ஆராயுமுன் நாம் இவரை நம்பிவிடலாகாது" என்று அவர் தீர்மானித்தார். உள்ளம் அவரது அன்புக்கு உவந்து உட்பட்டது எனினும், அவரைப் பெரியாரென ஏற்றுக்கொள்ள அவ் இளைஞரது அறிவானது மறுதலித்தது.

ஸ்ரீ ராமகிருஷ்ணரது விருப்பத்துக்கு இணங்கி நரேந்திரர் அடிக்கடி தக்ஷிணேசுவரம் போய்வருவாராயினர். கன்றினுக்குத்தாய் கசிந்துருகுவது போன்று இப்பிள்ளையாரைக் காண அவர் பரிதவித்திருப்பார். சேர்ந்தாற்போல இரண்டு மூன்று வாரம் இவரைப் பாராதிருக்க அவர் சகியார். அவ்வாறு பிரிந்திருக்க நேருமாயின் தமது அருட்செல்வரைத் தேடிக்கொண்டு அவர் தாமே கல்கத்தா போய்விடுவார். தம்மை ஈன்றெடுத்த அன்னையுங்கூடத் தம்மீது அருள் நிறைந்த அத்தகைய அன்பு பாராட்டியதில்லையென்று தம்மை ஆட்கொண்டவரைக் குறித்து நரேந்திரர் பிற்காலத்தில் சொல்லியதுண்டு. இவர்கள் இவ்வாறு தெய்வீக முறை

யில் உறவாடி வருகையிலே இளையவர் மூன்றும் முறை தக்ஷிணேசுவரம் போயிருந்தார். அப்போது எதிர்பாராத நிகழ்ச்சியொன்று நேர்வதாயிற்று. அதாவது பக்தர்கள் பலர் ஆங்குப் புடைசூழ்ந்திருக்கையில் இவர் பேரின்பமுறப் பாடிக்கொண்டிருந்தது பரமஹம்சதேவரைப் பரவசமடையச் செய்தது. உயர்நிலை எய்தியிருந்த அவர் இளைஞரது முகத்தை ஏறிட்டுப் பார்த்து விட்டுப் பிறகு புறத்தே அவரை அழைத்துச் சென்றார். ஆங்கு, "உன் திருமேனியில் திகழ்வது சிவம்; என் உள்ளத்து உறைவது சக்தி" யென்று அவர் இரகசியமாக எடுத்தோதினர். இதைக் கேட்ட இளைஞர், "இதென்ன பைத்தியம்!" என்று மனதிலே எண்ணிப் புன்னகை புரிந்தார். ஆயினும் தாம் எண்ணியதை அவன் தம் மனத்துக்குள்ளேயே வைத்துக்கொண்டார். வாய்விட்டு அதை வெளியில் பேசவில்லை. அவர்கள் இருவரும் திரும்பவும் அறைக்குள்ளே வந்து உட்கார்ந்து கொண்டிருக்கையில் எல்லாம் அமைதியாகவும் பரம சாந்தமாகவும் இருந்தது. அதுபோழ்தும் பரவச நிலையிலிருந்த பரமஹம்சர் ஆழ்ந்த கருத்துள்ளவராய் நரேந்திரரை அணுகித் தமது வலக்கரத்தை அவரது நெஞ்சின்மீது நாட்டினர். அதன் விளைவாகத் திடீரென்று அவர் மாட்டுப் பெரும் மாறுதல் ஒன்று விளைவதாயிற்று. "ஆ! என்ன செய்கின்றீர்? என் பெற்றோர்கள் என்னை நினைத்துப் பரிதவிப்பார்களே!" என்று சொல்லிக்கொண்டே அவர் நிலைமாறிப் போய்விட்டார். சிறிது நேரம் சென்றபின் ஸ்ரீ ராமகிருஷ்ணர் திரும்பவும் அவரது இதயத்தைத் தீண்ட, துயிலுணர்ந்தவர் போல நரேந்திரர் விழிப்புற்றார். அதுபோழ்து அவரது உடல் உற்சாகமும், உள்ளம் தெளிவும் பெற்றிருந்தன. அவர்மீது வருவிக்கப்பட்டிருந்தது மயக்கமும் அல்ல, உறக்கமும் அல்ல; மயக்கம், உறக்கம், விழிப்பு இம்மூன்றையும் கடந்த சமாதி அவஸ்தையாம்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் இயல்பாக இருப்பது இந்நிலையிலேதான். ஆனால் இன்னும் பூரண பக்குவம் அடைந்திராத நரேந்திரர் பலவந்தமாக அதனுள் இழுத்துச் செல்லப்பட்டார். ஆத லாலே தான் அதன் துவக்கத்தில் அவர் சிறிது மருண்டு போய் விட்டார்; எனினும் அது முதல் அவர் குருநாதரால் ஆட்கொள்ளப்பட்டவரானர். அதன் பிறகு அவரது அப ரோக்ஷஞானம் பெருகிக்கொண்டே வருவதாயிற்று.

குருவுக்கேற்ற சிஷ்யரும், சிஷ்யருக்கேற்ற குருவுமாக இருவரும் அமைந்திருந்தனர். ஐதிகமாக வந்துள்ள குரு சிஷ்ய இணக்கத்தினின்று இருவரும் விலகியவர்கள் போன்று தென்பட்டனர். தமது உள்ளத்தினுள்ளே புதைந்து கிடந்த பாரமார்த்திகப் பிரபாவமனைத்தும் வடிவெடுத்து வந்தாற்போல ஸ்ரீ ராமகிருஷ்ணர் நரேந்திரருக்குப் புலப் பட்டு விளங்கினர். அப்பெரியாரோ நரேந்திரரை ஒரு சீடனு கப் பாராட்டவில்லை. மற்ற சிஷ்யர்கள் போலவே இவரும் தமக்கு ஏதாவது குற்றேவல் செய்ய அவர் சம்மதிப்பதில்லை. நரேந்திரர் தம்மாட்டு மறைந்திருந்த மகிமை முழுதையும் தாமே நன்கு அறிந்திருந்தாரல்லர். ஆனால் அத்தெய்விகம் யாவும் பரமஹம்சதேவருக்கு மட்டும் தெற்றென விளங்கி யது. ஆதலாலே சாக்ஷாத் நாராயணன் அல்லது சிவன் என்றே இச்சிறுவரை அவர் கருதிப் போற்றி வந்தார். மற்ற சிஷ்யர்களும், கேசவ சந்திரசேனர் போன்றவர்களும் சிற்சில நட்சத்திரங்கள் போன்று விளங்குகையிலே நரேந் திரர் மட்டும் காலையில் உதயமாகும் சூரியன் போல் தமக்குக் காணப்படுகிறார் என்று அவர் சொல்வார். நரேந்திரர் தீய ஒழுக்கமும் துர்நடத்தையும் உடைய வாலிபர்களுடனுங்கூட மிக அன்னியோன்னியமாய்ப் பழகுவதுண்டு. இதைக் காண லுற்ற பலர் நரேந்திரரும் நன்னடத்தையினின்று நழுவி

விட்டாரென்று ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் குறை கூறினர்கள். அவர்களது கூற்றுக்கு ஒருகணமேனும் அப்பெரியார் செவி சாய்த்தாரில்லை. ஏனெனில் நரேந்திரர் ஒரு சித்த புருஷன் என்பது அவருக்கு நன்கு தெரிந்திருந்தது.

பரமஹம்சதேவர் ஒரு பரமஞானி எனினும் ஆகார விஷயத்தில் அவர் பெரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டவரா யிருந்தார். பரிசுத்த ஆத்மாக்களிடமிருந்து வரும் தூய உணவை மட்டும் ஏற்றுக்கொள்வது அவரது வழக்கம். ஆனல் ஜாதியை முன்னிட்டுக் கட்டுப்பாடு எதுவும் அவர் செய்வதில்லை. துர் நடத்தையுடையவர்களிடமிருந்து அவர் எதையும் ஏற்கவே மாட்டார். அத்துடன் இதே கட்டுப் பாட்டைத் தமது சிஷ்யர்களுக்கும் அவர் செய்து வைத்திருந் தார். ஆனல் நரேந்திர நாதரை மட்டும் இந்தக் கட்டுப்பாடு எதிலும் அவர் உட்படுத்தவில்லை. தீயாரோடு சதா பழகி வந்த போதிலும், துச்ச உணவையே புசித்து வந்த போதி லும் அவரது ஆத்மத் தூய்மைக்குப் பங்கம் ஒருபோதும் வாராதென்பது பரமஹம்சதேவரது சித்தாந்தம். புனிதம் நிறைந்த இந்த இளைஞரிடம் ஞானக்னி ஒளி வீசிக்கொண்டி ருந்ததை அவர் மட்டுமே தெளிவுற அறிந்திருந்தார்.

நவீனக் கல்விப் பயிற்சியை நரேந்திரர் வேண்டியவாறு பெற்றிருந்தாராயினும், கல்லூரிப் படிப்பைக் கனவிலுமே கண்டறியாத பரமஹம்ஸதேவரிடமிருந்து அவர் பெற்று வந்த பேரறிவும் அநுபவங்களும் மிக மிக அற்புதமானவை களாம். கடவுள் சகுண வஸ்துவா, நிர்க்குண வஸ்துவா? எல்லைகாணுத பரம்பொருள் அவதாரப் புருஷனுகப் புவியில் பிறப்பதுண்டா?—இத்தகைய அரும்பெரும் விஷயங்களைப் பற்றிச் சிஷ்யர்களுக்கிடையே ஒருநாள் நீண்டசம்வாதம் நடந் தது. முடிவாக எல்லாரையும் நரேந்திரர் வாயடக்கி விட்டார்.

அவர் ஒருவரது குரல் மட்டும் ஊக்கத்துடன் உரக்க ஒலித்துக் கொண்டிருந்தது. சிஷ்யர்களுடைய சம்வாதத்துக்கு ஆரம்பத்தில் செவிகொடுத்துக் கொண்டிருந்த ஸ்ரீ ராம கிருஷ்ணரது கருத்தோவெனின் அதுபோழ்து பரம்பொருளிடத்துப் புதைந்து கிடந்தது. ஏதோ சில சமயங்களில் அரைகுறையாக இவர்களது சொற்களில் சிலவற்றை அவர் செவிமடுத்தார். கடைசியாக அவர் அறையை விட்டு வெளியேகிக் கங்கைக் கரையோரம் போய்விட்டார். ஆங்கு அவர் நூதனக்காட்சி யொன்றைக் கண்டு புன்னகை பூத்தார். சல்லாபமிட்டுக் கொண்டிருந்த சிஷ்யர்களை அழைத்து அக் காட்சியை அவர்களுக்கும் காண்பித்தார். நதிக்கரையோரம் பிணம் ஒன்று ஒதுக்கப்பட்டிருந்தது. சில நாய்கள் கூடிக் கொண்டு அதைப் பிய்த்துப் புசித்துக் கொண்டிருந்தன. ஆனால் அப்பிணத்தை அணுக முடியாத வேறு சில குக்கல்கள் எட்ட நின்று கொண்டு குலைத்துக்கொண்டும், பல்லைக் காட்டி உறுமிக்கொண்டும், ஊளையிட்டுக்கொண்டும் இருந்தன. சிஷ்யர்களும் இந்த வேடிக்கையைப் பார்த்தார்கள். இதன் அடிப்படையான கருத்து பசுமரத்தாணி போல நரேந்திரது மனத்திலே பாய்ந்தது. அதாவது கடவுளது பேரருளைப் புசித்துப் பரவசமடைந்தவர்கள் பேச்சு மூச்சற்றுச் சும்மாயிருக்கையிலே வெறும் வாசா ஞானிகள் அவரைப் பற்றி வாதாடி வீண்காலம் கழிக்கின்றனர்! இது போன்று பல்வேறு சந்தர்ப்பங்களில் பரமஹம்சதேவர் மேலான தத்துவங்களைச் சொல்லாமற் சொல்லி நரேந்திரரை சீர்ப்படுத்தி வந்தார்.

வெறும் நூல் ஆராய்ச்சியும், சாதுர்யமான வாய்ப்பேச்சும் வேதாந்தம் ஆய்விடாது என்கிற விவேகம் நம் வாலிபரிடம் சிறிது சிறிதாக உறுதிபெற்று வந்தது. சாதகன் ஒருவன்

பால் தான்கொண்டுள்ள லட்சியத்தில் அன்பு மேலும் மேலும் பெருகவேண்டும்; மெய்ப்பொருளைப்பற்றிச் சிந்திப்பது நன்றே எனினும் மனத்தகத்தே அப்பொருளின் காட்சி கிட்டவேண்டும். கண்டிராத ஒன்றைப்பற்றி அதிகாரத்துடன் பேசும் சுதந்திரம் யாருக்குமில்லை. ஆனால் திருக்காட்சி காணப்பெற்றுள்ள அதிகாரி ஒருவனது சொல்லில் உயிரும் உரனும் உண்டு. அவன் பகர்வதெல்லால் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரது திருவாய்மொழி போன்று மாந்தரது உள்ளத்து ஊடுருவிப் பாய்வது திண்ணமென்று நரேந்திரர் உணரலானார்.

இவ்விளைஞரது அறிவு இவ்வாறு விரிவடைந்து கொண்டு வருகையிலே குறிப்பிடத்தக்க சிறிய நிகழ்ச்சியொன்று நேரலாயிற்று. பிதா காலமானது தொட்டுக் குடும்பத்தைப் பரிபாலிக்கும் பெரும்பாரம் இவர் மீது சுமத்தப்பட்டிருந்தது. அத்துடன் வறுமையின் கொடுமைகளும் மற்றும் பல சஞ்சலங்களும் இவரது உள்ளத்தை வாட்டி வந்தன. ஆதலால் இளைஞரது உடல் மெலிந்து மண்டையிடியும் மயக்கமும் வந்துவிட்டன. பல வாரங்களாகத் தக்ஷிணேசுவரம் போகாமல் இவர் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிக் கிடந்தார். ஆனால் இப்பிள்ளையாரைப் பிரிந்திருக்க மாட்டாத பரமஹம்ஸதேவர் இவரது க்ஷேம சமாசாரத்தைக் கவலையுடன் பிறரிடமிருந்து விசாரித்து அறிந்து வந்தார். ஒருநாள் அப்பெரியார் தாமே கல்கத்தா சென்று நரேந்திரரைத் தமது முன்னிலைக்கு வரவழைத்து, அவருக்குற்ற சஞ்சலங்களையும் பிணிகளையும் குறிப்பாலறிந்து, அன்பு கூர்ந்து தமது திருக்கரங்களை அவரது சிரசின்மீது நாட்டினார். வாலிபரை வாட்டி வந்த நோயனைத்தும் அக்கணமே சூரியனைக் கண்ட பனி போல மறைந்தன.

அதன் பிறகு தமக்குற்ற வறுமை நோயைக்களைய ஏதாவது ஓர் உபாயம் செய்யவேண்டுமென்று நரேந்திரர் அப்பெரியாரிடம் விண்ணப்பித்துக் கொண்டார். தமக்காகத் தமது இறைவனனவர் ஜகதீசுவரியிடம் பிரார்த்திக்க வேண்டுமென்றும் வேண்டினர். ஆனல் பரமஹம்சதேவர், "நீயே தேவியின் சந்நிதி சென்று அவ்வரம் வேண்டிக் கொள்" என்று அனுமதித்தார். சிஷ்யரும் அவ்வாறே செய்யத் தீர்மானித்துக் கோயிலுக்குச் சென்றுவிட்டுக் குளிர்ந்த மனதுடன் திரும்பி வந்தார். அங்கு நிகழ்ந்தது யாதோவென ஸ்ரீராமகிருஷ்ணர் வினவ, "பக்தியும் ஞானமும் எனக்குக் கடாட்சித்தருள வேண்டுமென்று அம்பாளிடம் வேண்டி வந்தேன்" என்று உவகையோடு வாலிபர் விடை விடுத்தார். "உனக்குற்ற தரித்திரத்தைப் போக்குமாறு ஏன் கேட்கவில்லை? மறுபடியும் போய் அவ்வரம் வேண்டி வா" என்ருர் அண்ணல். ஆனல் நரேந்திரர் இரண்டாம் முறையும் தமது வறுமை நோய் நீங்கற்பொருட்டும் தமக்கு இடுக்கண் இல்லாத வாழ்வு துவங்குதற்பொருட்டும் வரம் கேட்க மறந்து விட்டார். ஆதலால் மற்றுமொருமுறை அதே ஞாபகத்துடன் கோயிலுக்குப் போகும்படி அவருக்கு ஆட்கொண்ட அண்ணலிடமிருந்து ஆக்ஞை பிறந்தது. இப்போது தமது வறுமையைப்பற்றி அவர் நினைத்திருந்தார் எனினும், தேவியிடம் அத்தகைய வரம்கேட்க அவருக்கு மனம் எழவில்லை; நாவும் எழவில்லை; கேவலம் உணவையும் உடையையுமா எல்லாந்தரவல்ல ஜகன்மாதாவிடம் யாசிப்பதென்று வெட்கி வாளாவிருந்து விட்டார். பெறுதற்கரிய பக்தியையும் ஞானத்தையும் மட்டும் அவர் ஆர்வத்துடன் வேண்டி நின்ருர். ஆதலால் ஞான ஒளி வீசிய முகத்துடன் சாந்தமூர்த்தியாக அவர்தேவியின் சந்நிதியினின்று வெளியே

வந்தார். உலக வாழ்வைப்பற்றிய வரம் எதுவும் கேட்க அவருக்கு இயலாது போய்விட்டது. உண்ணும் நாழியரிசிக் காகவும் உடுக்கும் நான்கு முழத் துணிக்காகவும் சஞ்சலத்து டனே எண்பது கோடி நினைந்தெண்ணுவர் சாதாரண மாந் தர். ஆனால் அறிஞர்கள் அங்ஙனம் செய்வரோ? உற்றாரை யும் தமது உடலையும் பேணுவதைப்பற்றி நரேந்திரர் பின்பு ஒன்றும் எண்ணாது இருந்தார் எனினும் ஜகன்மாதாவின் பேரருளால், அவரது குடும்ப சம்ரட்சணைக்குரிய பொருள் அது முதல் அவருக்குக் கடவுள் கிருபையால் எப்படியோ கிடைத்து வந்தது. "வேறெதையும் எண்ணாது எவன் ஒரு வன் யாண்டும் என்னையே வழிபடுகிறானோ அவனது யோக க்ஷேமத்தைப்பற்றிய பொறுப்பை நானே ஏற்றுக்கொள்கின் றேன்" என்று பகவான் கீதையில் பகர்ந்தருளிய பொய்யா மொழிக்கு நரேந்திரரது வாழ்வே சான்றாகத் திகழ்ந்தது. ஒரு செல்வரோடு ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரு நாள் உரையாடிக் கொண்டிருக்கையில் நரேந்திரரும் ஆங்கு அமர்ந்திருந்தார். நானாவிதப் பேச்சுக்களுக்கிடையே நரேந்திரருக்குற்ற குடும் பக் கஷ்டங்களைப் பற்றிய பேச்சும் எழுந்தது: அவ்விளைஞ ருக்கு ஏதாவது பொருளுதவி புரிவது சிறந்ததோர் கைங்கரி யமாகுமென்று பரமஹம்ஸதேவர் தனவந்தர்பால் தெரிவித் தார். ஆனால் வேற்று மனிதரொருவரிடத்து அவர் தமது வீட்டின் வறுமைகளைப்பற்றிப் பகர்ந்தது இளைஞருக்குச் சிறி தேனும் பிடிக்கவில்லை. அச்செல்வர் சென்ற பிறகு அவர் தமது கருத்தைத் தெரிவித்துத் தம்மை ஆட்கொண்டவரைக் கடிந்துகொண்டார். தமது செய்கைகளில் குற்றமொன்று மில்லையென்று விளக்க விரும்பிய பரமஹம்ஸதேவர் "குழந் தாய்! நான் உனக்காக வீடு வீடாகச் சென்று இரக்கவும் ஆயத்தமாய் இருக்கிறேன் என்பதை நீ அறியாயா?"

என்று பரிந்து பேசினர். அன்பு ததும்பிய அவ் இன்மொழிகளைச் செவியுற்ற நரேந்திரரது உள்ளம் குழைந்தது. தம்மை ஆட்கொண்டவரது அடியிணையில் அவர் விழுந்து நமஸ்கரித்தார். பிற்காலத்தில் தமது குருநாதரைப் பற்றிப் பேச நேர்ந்தபோது "ஊசியைக் காந்தம் கவர்வதுபோல அவரது களங்கமற்ற அன்பு என்னை என்றும் பிரியாவண்ணம் அவருக்கு அடிமையாக்கிவிட்டது" என்று ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் சொல்லியதுண்டு.

மெய்யடியார்களையும் புனிதர்களையும் நிந்திக்கும் சுபாவமுடையவர்கள் பலர் இப்புவியின்கண் இருக்கின்றனர். ஆனல் இறைவன் அருட்பேற்றை நாடுவோர் அவர்களது கூற்றுக்குச் செவிமடுக்கலாகாது. பெருந்தன்மை வாய்ந்த யானைபோன்று 'அவர்கள் சன்மார்க்கத்திலே பிரவேசிக்க வேண்டும். சூழ்ந்தோடிவந்து குலைக்கின்ற நாய்களை யானை சிறிதேனும் கவனிப்பதில்லை. அதுபோன்று பக்தர்கள் உலகத்தவர் புன்மொழிகளைப் பொருட்படுத்தலாகாது என்று சொல்லிவந்த பரமஹம்ஸதேவர் நரேந்திரரைப் பார்த்து, "உன்னைப்பற்றிப் புறங்கூறும் மாந்தர்பால் நீ என்ன எண்ணங்கொள்வாய்?" என்று கேட்டார். அதற்கு அவர், "ஏன், நாய்கள் சில என்னைக் கண்டு குரைக்கின்றனவென்று கருதுவேன்" என்று அலட்சியமாகத் தயங்காது பதில்விடுத்தார். இதைக்கேட்ட ஸ்ரீ ராமகிருஷ்ணர் உடல் குலுங்க நகைத்துவிட்டு, "இல்லை, இல்லை; குழந்தாய்! இவ்விஷயத்தில் வரம்புகடந்து போய்விடாதே. அவர்களது கூற்றை நீ காதில் போட்டுக்கொள்ள வேண்டாம். ஆனல் அவர்கள் எல்லாரும் நாராயணனுடைய வடிவமென்பதை மட்டும் மறந்துவிடாதே. கடவுள் எல்லார் உள்ளத்திலும் குடிகொண்டிருக்கிருர். அவரது திருவிளையாடலுக்கு ஓரள

வில்லை. புனிதவேடம் பூண்டிருப்பவனும் நாராயணன்; புன்மை வேடம் பூண்டிருப்பவனும் நாராயணனே. இதை யாண்டும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்" என்றார். பிற்காலத்தில் ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளின் பெருமைகளைக் கண்டு சகியாதவர்களிடத்தும், புறங்கூறினவர்களிடத்தும் அவர் அன்புடனும் அனுதாபத்துடனும் நடந்து கொண்டதற்குக் காரணம் இந்தப் போதனையின் சீரிய விளைவு எனலாம்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரும் அவருடைய பிரதம சிஷ்யரும் வெளித் தோற்றத்துக்கு ஒருவரோடு ஒருவர் முரண்படுபவர் போன்று காணப்பட்டனர். கடுந்தவத்தின் விளைவாக மெலிந்த மேனி படைத்தவர் பரமஹம்ஸர்; குஸ்தி பிடித்தல் போன்ற பயிற்சிகள் பல புரிந்து உடல் கட்டும் உறுதியும் வாய்க்கப்பெற்றவர் விவேகானந்தர். உண்டி சுருங்கியவர் முந்தையவர்; உண்டியில் வலுத்தவர் பிந்தையவர். பரஞானம் ஒன்றிலேயே கருத்தைச் செலுத்தியவர் பரமஹம்ஸர்; கலைஞானங்கள் பல நன்கு பயின்றவர் மற்றவர். கடவுளைப் பற்றியல்லாது வேறு எதையும் பரமஹம்ஸர் பேசார்; கடவுளைப்பற்றியும் உயர்ந்த உலக விஷயங்களைப் பற்றியும் பேசக்கூடியவர் சிஷ்யர். நல்லவரோடு மட்டும் இணக்கம் வைப்பவர் குரு; நல்லார் பொல்லார்ஆகிய எல்லாருடனும் இணக்கம் வைப்பவர் சிஷ்யர். இங்ஙனம் உடல் அமைப்பிலும் மனப்பான்மையிலும் முரண்படுபவர்கள் போன்று இருவரும் தென்பட்டனர். ஆனால் சொரூபத்தில் இவர்கள் இருவரும் ஒன்றே என்பதை மெய்ப்பொருள் உணர்பவர்கள் அறிவார்கள். ஆட்கொள்ளப் பெற்றவர் காலக்கிரமத்தில் ஆண்டவரது மயமாகவே மாறிவிட்டார். ஸ்ரீ ராமகிருஷ்ணரே விவேகானந்தராக மாறிவிட்டார் என்று

சொல்லலாம். ஏனெனில் இந்த அண்ணலது அருட்சக்தி யனைத்தும் சீடரது உள்ளத்திலே புகுந்து பயன் தருவதா யிற்று. சுவாமிகள் உலகுக்கு வழங்கினதெல்லாம் ஸ்ரீ ராம கிருஷ்ணரது அருட்செல்வமேயன்றோ! ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் உபதேசித்து அருளிய அருள் மொழியொன்று இவர்களைச் சீர்தூக்குதற்கு உதவுகிறது. "வீட்டுக் கூரையி னின்று கீழே விழுகிற மழை நீர் பசுவின் வாயினின்றும் சிங் கத்தின் வாயினின்றும் கீழே விழுவதுபோன்று உருவங்களை மக்கள் கட்டடத்தில் அமைத்து வைக்கின்றனர். ஆனால் வானத்தினின்று வரும் புனலே பசு, சிங்கம் போன்றவை களின் வாயினின்று வருவதுபோல் தென்படுகிறது." அங்ங னம் பாரமார்த்திகப் பேருண்மைகளே இவ் இரு மூர்த்திகள் வாயினின்று வெளியாயின.

---

6. பிறவிப் பெரும்பயன் எய்துதல்

நரேந்திரர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரை அணுகி ஆண்டுகள் நான்கு ஆகிவிட்டன. "ஐயன்மீர்! நீவிர் கடவுளைக் கண்டதுண்டா?" என்ற வினவுடன் வந்தவர் இப்போது தாமே கடவுளைக் கண்டு கவலை யொழிந்திருக்கும் உயர்நிலைக்கு வந்துவிட்டார். சந்தேகத்துடன் வந்தவருக்கு இப்போது ஐயங்கள் யாவும் அகன்று போயின. நன்கு ஆராய்ந்து அறியுமுன்னர் இவ்விருத்தரை மேலோரென ஏற்கலாகாதென்று ஸ்ரீ ராமகிருஷ்ணரைப்பற்றி எண்ணிய வாலிபரைப் பார்த்து அப்பெரியாரும், "நாணயம் மாற்றுபவன் ஒவ்வொரு காசையும் நன்கு பரீட்சித்து ஏற்பது போன்று நீயும் என்னை வேண்டியவாறெல்லாம் சோதித்த பின்னரே நம்புவாயாக" என்றார். நுண்ணறிவோடு கூடிய ஆராய்ச்சியாளராகிய இளைஞரும் அவ்வாறே செய்தமையால் பரமஹம்ஸ தேவரது மாண்பு சோதிக்கப்பட்ட சொர்ணமென மிளிரலாயிற்று. இளைஞருக்கும் அவர்மீது மெய்யான குருபக்தியும் விசுவாசமும் தோன்றலாயின. ஆராய்ச்சி சிறிதுமிலாது ஸ்ரீ ராமகிருஷ்ணரைத் தமது குருநாதரென ஏற்றுக்கொண்டிருந்திருப்பாராகில் பரமஹம்ஸரது பெருமை இவரது உள்ளத்து ஊடுருவிப் பாய்ந்திருக்காது. உலகத்தவருக்கும் அவரது தபோபலம் நன்கு விளங்கியிருக்காது.

முதல் ஈராண்டு ஏதோ சில சமயங்களில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் பால் வந்து கொண்டிருந்த நரேந்திரர் மூன்றும் ஆண்டில் அடிக்கடி அவரிடம் வரலாயினர். நான்காவது வருஷத்தில் குறிப்பிட்ட காலங்களில் தவறுதலின்றி அப்பெரியாரிடம் வந்து கொண்டிருந்தார். கடைசியான ஐந்தாம் ஆண்டில்

அவர் அல்லும் பகலும், தமது அண்ணலோடே அமர்ந்திருந்தார். இதற்குள்ளாகப் பக்தர்களும் சிஷ்யர்களும் பலர் ஸ்ரீ ராமகிருஷ்ணதேவரைப் புடைசூழலாயினர். அவர்களுள் ஒரு சிலர் கிரகஸ்தர்கள். மற்றொரு சாரார் பெரும்பாலும் கல்லூரிகளில் வாசித்துக்கொண்டிருந்த இளம் மாணவர்கள். அவர்களுள் அநேகம் பேர் விவாகம் ஆகாதவர்கள். உலக ஆசைகளாம் காகங்களால் கொத்தப்படாத தூய கனிகள் போன்றவர்கள் அவர்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவர்களைத் துறவறத்துக்கென்றே தயார் செய்து வந்தார். இந்த சிஷ்யக் கூட்டத்தார் அனைவருக்கும் தலைவராகத் திகழ்ந்து வந்தார் நரேந்திரர்.

பரமஹம்ஸ தேவரது ஆக்கைக்கு அந்திய காலம் அணுகி விட்டது. ஆதலால் அவரது திருமேனி அதிவேகமாய் மெலிந்து கொண்டு வந்தது. கோடையின் வெக்கையைத் தாங்கும் வலிமை அவரது உடலுக்கு இல்லாது போய் விட்டது. பாரமார்த்திக விஷயங்களைப் பற்றி அவர் மட்டுக்கு மிஞ்சிப் பேசிக்கொண்டிருந்தமையால் தொண்டையிலே ஒரு வித வலியுண்டாகி, பிறகு அது கண்டப்பிளவையாக மாறிற்று. அதற்குத் தகுந்த சிகிச்சைகளைக் கடிதில் கையாளாவிடில் தங்களது அண்ணலின் ஆக்கைக்கு அழிவுவருமென்று அஞ்சின நரேந்திரரும் மற்ற சிஷ்யர்களும் வைத்தியத்தின் பொருட்டுக் கல்கத்தாவுக்கு அருகில் காசிப்பூர் தோட்டத்தில் இருந்த ஒரு மாளிகைக்கு அவரை அழைத்துச் சென்று அங்கே வசித்திருக்கப் பண்ணினர். இக்கொடிய நோயானது ஒரு விதத்தில் பெரும் நன்மையொன்றை விளைவித்தது. சிஷ்யர்கள் அனைவரும் ஒரு மரபினராகக் கூடியிருப்பதற்கு இது ஏற்றதோர் சந்தர்ப்பமாயிற்று. அவருக்குக் குற்றேவல்கள் புரிவதற்காக ஒரு சிலர் அல்லும் பகலும் அவர் அண்டை

யிலேயே வசித்திருக்க வேண்டிய அவசியமாயிற்று. இதற்காக நரேந்திரர் தமது சகோதர சீடர்களைக் கல்லூரிகளினின்று கிளப்பி அங்கே கொணர்ந்து சேர்த்தார். வீட்டு வாடகைக்கும் வைத்தியத்துக்கும் ஆகும் செலவை கிரகஸ்த சிஷ்யர்கள் தங்களது பொறுப்பாக ஏற்றுக்கொண்டனர். இவர்களது குருபக்தியை ஓங்குவிக்கும் பொருட்டே பகவான் பிணியை வருவித்துக் கொண்டனர் போலும்.

இவ்வண்ணம் திங்கள்கள் சில கழிந்தன. இதற்குள்ளாகக் காசிப்பூர் தோட்டம் சிறந்ததோர் தபோவனமாக மாறி விட்டது. அரும்பெரும் விஷயங்களைப் பற்றி ஆராய்ச்சி பண்ணிக் கொண்டிருப்பார்கள் சிலர்; ஆழ்ந்த நிஷ்டையிலே அமர்ந்திருப்பவர்கள் இன்னும் சிலர்; பரவசமடைந்து பாடிக் கொண்டிருப்பார்கள் வேறு சிலர்; இறைவன் திருநாமங்களை உச்சரித்துக்கொண்டு ஆனந்தக் கூத்தாடுவார்கள் மற்றும் சிலர். இவ்வைபவங்களுக்கிடையே நரேந்திர நாதரும் அவர் போன்ற வாலிபர்கள் பலரும் பிரபஞ்சவாழ்வில் விரக்தியடைந்திருந்தது பரமஹம்ஸ தேவருக்கு அடங்காத அக மகிழ்ச்சியை உண்டுபண்ணிற்று. அவர்களில் சிலருக்குப் பகவான் இரகசியமாக சந்நியாசம் தந்து, அவர்களைக் காவியுடை உடுக்குமாறு செய்து, அதைப் பார்த்துப் பூரித்துப் பரவசமடைந்திருந்தார். சந்நியாச தர்மத்துக்கு ஏற்ப, பிக்ஷையெடுக்குமாறு குருநாதர் அவர்களை வெளியேயனுப்ப, அவர்களும் கடவுளின் பெயரால் லௌகிக அபிமானங்களை யெல்லாம் நீத்தவர்களாக, பிக்ஷையேற்று வந்தனர். இதை யெல்லாம் கண்டு களித்த கருணாமூர்த்தி திரும்பவும் வசதியான காலம் வரும் பரியந்தம் காவியுடைகளைக் கழற்றி வைத்துவிட வேண்டுமென்று பணித்தருளினர். சிஷ்யர்களும் அவர் கட்டளையின்படியே நடந்து கொண்டனர்.

பின்பு பரமஹம்ஸதேவர் தமது அருட்செல்வத்தைப் பேணு தற்கும் அதைப் பாரிலுள்ளோர்க்கிடையில் எடுத்து வழங்கு தற்கும் ஏற்ற நன்மக்கள் தமக்கு வாய்த்திருப்பதைக் குறித் துப் பெருமகிழ்ச்சியடைந்தார். அந்த வாலிப சந்நியாசி களுக்குத் தலைவராக சுவாமி விவேகானந்தர் வாய்த்திருப் பது அதிலும் அதிக மகிழ்வை ஊட்டியது. எந்த மேலாம் இலட்சியத்தை நிலைநாட்டுதற்கு அவர் மண்ணுலகில் பிறந் தாரோ அந்த இலட்சியம் இனி உருவெடுத்துவிடும் என்று அவர் உறுதி கொண்டார்.

காசிப்பூர் தோட்டத்தில் இவ்வாறு காலங்கழித்து வரு கையில் பெரியார்கள் பலரைப் பற்றிய பேச்சுக்கள் இடை யிடையே எழலாயின. அக்கூற்றுகளுள் கௌதம புத்தரைப் பற்றிய வரலாறு நரேந்திரரது உள்ளத்தை முற்றும் கவர்ந் தது. வாழ்வின் மர்மத்தை அறிதற்பொருட்டும், அக்கோமகன் இராஜ பதவியையும் போகங்களையும் நீத்துவிட்டு வெளி யேகினர். இவ்வுலக வாழ்வைத் துறந்த அன்னவர் கடுந் தவம் புரிந்ததும், பிறகு கயாவிலே போதி சத்துவம் அடை யப் பெற்றதும் இவ்வாலிபரது மனதில் ஊடுருவிப் பாய்ந் தன. புத்தர் போதி சத்துவம் அல்லது பரஞானம் அடையப் பெற்ற கயாவைப் போய்ப் பார்த்து அங்கு நிஷ்டை புரிய அவர் அவாவுற்றார். ஆனால் இச்செய்தியை யாருக்கும் தெரி வியாமல் நரேந்திரர் ஒருநாள் திடீரென்று புறப்பட்டு குரு சகோதரர் இருவருடன் புத்த கயாவுக்குப் போய்விட்டார். காணாமற்போன இவர் நிமித்தம் காசிப்பூர் தோட்டத்தில் இருந்தவர்கள் கவலை மிக அடைந்தார்கள். துறவு வேடம் பூண்டு இமாலய பர்வதத்துக்கோ அல்லது வேறு எங் கேயோ அவர் தவத்துக்குப் போய் விட்டாரோ என் றெண்ணி ஏனைய குரு சகோதரர்கள் ஏக்கமுற்றிருந்தனர்.

பரமஹம்ஸ தேவரது காதுக்குக் கடைசியாக இச் செய்தி எட்டியது. ஆனல் அவர் அதைக் குறித்து அணுவளவேனும் கவலைப்படாதவராக இருந்தார். "நரேந்திரன் விரைவில் வந்துவிடுவான்" என்ருர். அதற்குச் சிறிய உவமை ஒன்றை அவர் எடுத்துரைத்தார். அதாவது, "ஒரு கப்பலின் பாய்மரத்தில் பறவையொன்று வசித்து வந்தது. ஒரே இடத்தில் தங்கியிருந்து சலித்துப்போன அப்பறவை உட்காருதற்குப் புதிய இடம் தேடி நான்கு பக்கங்களிலும் பறந்து போயிற்று. ஆனல் கடலில் அதற்கு அமருதற்கு வேறு இடம் எங்கும் அகப்படவில்லை. ஆதலால் பழைய பாய்மரத்துக்கே அது திரும்பிப் போய்ச் சேர்ந்தது. நரேந்திரனும் அது போன்று வந்து சேருவான்" என்ருர். அவ்வாறே புத்தகயாவில் சின்னுள் இருந்து நிஷ்டைபுரிந்து திருப்தியடைந்த நரேந்திரர் குருநாதரின் திருமேனி என்ன நிலையில் இருக்கின்றதோ என்று ஏக்கமுற்றவராய்க் காசிப்பூர் வந்து சேர்ந்தார்.

நிர்விகற்ப சமாதி என்பது அநுபூதிகள் அனைத்திலும் முடிவானது. இதை எய்துகிற ஒருவன், கடலினுள் செல்லும் உப்புப் பிரதிமை போன்று கடவுள்மாட்டு இரண்டறக் கலந்து விடுகிருன். அதன்பின் பிறப்பு இறப்பு என்பவை அவனுக்குக் கிடையா. பிரபஞ்சப் பிரக்ஞையே அவனுக்கு உண்டாவதில்லை. அகண்ட தேஜோமய சத்-சித்-ஆனந்தத்தில் அப்புனிதன் பரம்பொருளோடு ஒன்ருய் விடுகிருன். ஆனல் அக்ஞான இருளினின்று உலகத்தை உய்விப்பதற்கென அவதரிக்கும் ஆசாரிய புருஷர்கள் சிலர் மட்டும் இவ்வாறு நிர்விகற்ப சமாதி நுகர்ந்த பின்னரும் தெய்வ சங்கற்பத்தால் ஜீவப் பிரக்ஞை பெற்று உலக ஞாபகத்துக்குத் திரும்பி வருகின்றனர் என்று மேலோர் பகர்கின்றனர்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் இத்தகைய ஆசாரியர்களுள் ஒருவர் ஆவார். இவர் உதவியால் தாமும் நிர்விகற்ப சமாதியை அனுபவிக்க வேண்டுமென்ற பேரவா நரேந்திரர் பால் எழலாயிற்று. ஆதலால் அவர் தமது இச்சையைப் பூர்த்தி செய்து வைக்குமாறு பரமஹம்ஸ தேவரைப் பன்முறை வேண்டி வந்தார். சீடரது பக்குவத்தைப் பார்த்திருந்த அப் பெரியாரும் ஒருநாள் மாலை அவ்விதமே அனுக்கிரகம் செய்தருளினர். நிஷ்டை புரிய உட்கார்ந்த நரேந்திரர்பால் பெரும் மாறுதல் ஒன்று நேரலாயிற்று. ஏதோ ஒரு பரம சக்தியால் கவரப்பட்ட இவர் தமது சிரசின் பின்புறம் எல்லை காணாத ஜோதியொன்றைக் காணலுற்ருர்! அதன் பேரொளி அகண்டாகாரமாகப் பரவிற்று. மனம் முற்றிலும் ஒடுங்கப் பெற்ற நரேந்திரர் அதனுள்ளே ஐக்கியமாகி விட்டார். நட்சத்திரங்கள், உலகங்கள், அண்டங்கள் இவையாவும் ஒடுங்கி வரவும், தமது பிரக்ஞையானது திரண்டு விரிந்து கொண்டே போகவும் பார்த்தார் இப்புனிதர். அதற்கப் பால் சிந்தையும் செல்லவில்லையெனின் அந்த நிலையைச் சொல்லில் அடக்குவது எங்ஙனம்! அந்த நூதன அனுபவத்தினுள் நுழையுங்கால் திகைத்து நாக்குளறிய நரேந்திரருக்கு இப்போது மூச்சில்லை, பேச்சில்லை, நாடியும் அடிக்கவில்லை; முகத்தில் பரம சாந்தம் நிறைந்து ஒளி விடுவது மட்டும் காணப்பட்டது.

நரேந்திரருக்கு ஏதோ விபத்து நேர்ந்துவிட்டதென்று எண்ணிய ஏனையவர்கள் குருதேவரிடம் ஓடித் தங்கள் மனதில் பட்டதையெல்லாம் அவரிடம் தெரிவித்தனர். ஆனல் அவர் எல்லாம் முன்னமே அறிந்திருந்தவர் போலப் புன்னகை பூத்துப் பேசாதிருந்தார். நரேந்திரரைத் தேற்றி யெழுப்ப அங்கே கூடியிருந்தவர்கள் நானவித முறைகளைக்

கையாண்டு பார்த்தார்கள்; ஒன்றும் பலிதமாகவில்லை. இதற்குள் இரண்டு மூன்று மணிநேரம் ஆகிவிட்டது. அப்போது அவர் தாமாகவே துயிலுணர்ந்தாலன்னப் புறவுணர்ச்சி பெற்று எழுந்திருந்தார். பிறகு அவர் நேரே ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் சென்று தமக்கு வேறொன்றும் வேண்டாமென்றும் தாம் இதுபோழ்து நுகர்ந்த வண்ணம் யாண்டும் சமாதியிலே சொக்கியிருக்க அருளினாற்போதுமென்றும் பிரார்த்தித்தார். அதைக் கேட்ட பகவான் திடுக்கிட்டவர் போலச் சீடரைப் பார்த்து, "பிள்ளாய், நீ உன் முக்தியை மட்டும் நாடுவது சுயநலமாகும். உன்போன்ற உத்தமன் ஒருவனுக்கு அது தகாது. நீ அடைந்திருக்கும் பிறவிப்பயனை உலகத்தவருக்கும் எடுத்து வழங்கவேண்டும். அவர்கள் ஈடேறுதற்கேற்ற வழியைக் காட்டிய பின்னரே நீ திரும்பவும் இந்த உயர்ந்த சமாதிநிலை எய்துவை. அது பரியந்தம் இது உன்னிடமிருந்து ஒதுக்கி மூடி வைக்கப்பட்டுள்ளது. இதைத் திரும்பவும் மீட்டெடுப்பதற்கான திறவுகோல் என் கைவசம் உளது. அறிந்தாயா?" என்றார். சிஷ்யரும் குருவின் ஆக்ஞைக்கு உட்பட்டவராகக் கீழ்ப்படிந்து வணங்கினர்.

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரது தேகமானது நாளுக்கு நாள் சக்தி குறைந்து வந்ததைக் காணலுற்ற நரேந்திரர் அவர் இன்னும் சொற்ப நாளில் அதை உகுத்து விடுவார் என்று அஞ்சி ஏக்கமுற்றிருந்தார். தமது ஆருயிர்த் துணைவர் இனித் தம்மைத் தன்னந்தனியே விட்டுவிட்டு மறைந்து விடுவார் என்ற துயரம் ஒருபக்கம்; தமது குரு சகோதரர்களைப் பரிபாலிக்கும் பெரும் பாரம் தம்மீது சுமத்தப்பட்டிருப்பதைப் பற்றிய கவலை மற்றொரு பக்கம். ஆனால் இந்த வியாகூலங்களுக்கிடையே அவர் நாள்தோறும் அண்ணலிடமிருந்து ஆசீர்வாதம் பெற்று ஆத்மசக்தியில் வளர்ந்து

கொண்டே வந்தார். அடிக்கடி பரமஹம்ஸதேவர் அவரைத் தனியே அழைத்து வைத்துக்கொண்டு சிஷ்யர்களை ஆத்ம சாதனத்தில் பயிலுவிப்பதைப் பற்றியும், அவர்கள் எல்லாரையும், ஒன்றுசேர்த்து மடம் ஒன்று ஸ்தாபிப்பதைப்பற்றியும், பிற்காலத்தில் அவர் செய்யப்போகும் அரும்பெருங் காரியங்களைப் பற்றியும் எடுத்தோதி, நானு விதத்தில் அவருக்கு நல்லறிவு புகட்டி வந்தார். இதெல்லாம் முடிந்த பின்பு ஒருநாள் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமது அருட் செல்வரைத் தனியாகத் தமது அறைக்குள் வரவழைத்து நிஷ்டையில் உட்கார வைத்தார். சிறிது நேரத்துக்குள் ஆண்டவரும், ஆட்கொள்ளப்பட்டவரும் ஆழ்ந்த சமாதிநிலை எய்தி விட்டார்கள். அப்போது அண்டங்கள் அனைத்தையுமே ஆக்கவோ அழிக்கவோ வல்ல அருட்சக்தி யொன்று தம்முட் பிரவேசிப்பதை சிஷ்யர் உணரலானர். பிறகு இருவருக்கும் சமாதி கலைந்த போது பரமஹம்ஸதேவர் முத்துமுத்தாகக் கண்ணீர் சிந்திக்கொண்டு, "குழந்தாய்! இத்தரணியில் தர்மத்தை நிலைநாட்டுதற்கென எனது தபோபலன்களை யெல்லாம் இன்று உன்பால் ஒப்படைத்துவிட்டேன். முழு மனதுடன் இப்பெருங்கடனை ஆற்றுவாயாக" என்று பகர்ந்தருளினர். இச்சம்பவம் நிகழ்ந்த இரண்டு மூன்று நாளில் பகவான் தமது ஊனுடலை நீத்து அகண்ட சத்-சித்-ஆனந்தத்தில் மூழ்கி மகா சமாதியடைந்தார். குரு ஆக்ஞைக்கு உட்பட்டு நடந்தது மட்டுமல்ல, குரு ஆட்டுவித்த வண்ணம் ஆடி எத்தகைய செல்வங்களை ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் உலகுக்கு வழங்கினர் என்பதை மேலும் ஆராய்வோம்.

ஈண்டுக் கேள்வியொன்று எழுகிறது. பரமஹம்ஸதேவர் ஒரு நிறைஞானி. உலகத்தவர்களுக்குரிய இன்ப துன்பம் அவருக்கு இல்லை. அத்தகையவர் சிஷ்யரிடம் பொறுப்பை

ஒப்படைக்கும்போது முத்து முத்தாய்க் கண்ணீர் சிந்துவானேன் என்பது கேள்வி. அனைத்தும் கடந்த ஞானியாகிய அவரிடத்தும் தமது அருட்செல்வராகிய நரேந்திரரிடத்து காதல் மிக இருந்தது. வேதாந்த இயக்கத்தை நிலைநாட்டு தற்பொருட்டு அவர் எத்தனை யெத்தனை இன்னல்களுக்கு ஆளாகப் போகிறார் என்பது முன்கூட்டியே பரமஹம்ஸர் மனதில் பட்டது. அதையெல்லாம் எண்ணி அவர் கண்ணீர் வடித்ததில் வியப்பொன்றுமில்லை.

பரமஹம்ஸ தேவர் பூதவுடலினின்று ஆகஸ்டு மாதம் 15ஆம் தேதி விடுதலை பெற்றார். பின்பு, பிற ஆட்சியினின்று இந்தியதேசம் ஆகஸ்டு 15ஆம் தேதி விடுதலைபெற்றது.

7. மடாலய ஸ்தாபனம்

மலைப்பிரதேசங்களில் காப்பித்தோட்டம், தேயிலைத் தோட்டம், பழவகைகளை உற்பத்திபண்ணும் தோட்டம் ஆகிய பரந்த தோட்டங்களைக் காணலாம். அத் தோட்டங் களை மதிப்புப் போடுகிறவர்கள் கையாளும் முறையொன்று உண்டு. மேடு பள்ளங்களில் விரிந்து கிடக்கும் தோட்டம் முழுதையும் சென்று சுற்றிப்பார்க்கவேண்டிய அவசியம் இல்லை. ஒரு தோட்டத்தில் அமைந்திருக்கிற நாற்றங்காலைச் சரியாகக் கவனித்துப் பார்த்தால் போதும். அதன் தரத்தி னின்று தோட்டத்தின் தரம் வெளியாகிவிடும். ஒருதோட் டத்துக்கு நிகர் சமுதாயம். அதன் நாற்றங்காலுக்கு நிகர் அச்சமுதாயத்தில் உள்ள மடாலயம் போன்ற அறநெறிப் பாதுகாப்பு ஸ்தாபனம்.

உலகிலே அறம் வளர்ந்திடச் செய்தலிலும், புதிய கொள்கைகளையும் கருத்துக்களையும் பரப்புதலிலும், மக்களின் வாழ்வு முறையை மாற்றுதலிலும் மடாலயங்கள் எத்தகைய பணியாற்றி வந்திருக்கின்றன என்பதற்குச் சரித்திரமே சான்றாகும். புத்தர், ஏசுநாதர், சங்கரர், குருநானக் போன்ற மதஸ்தாபகர்கள் மரபிலே வாழையடி வாழையெனத் தோன் றிய பெரியோர்கள் அவ்வப்போது இப்புவிக்குப் புத்துயிரும் புனித வாழ்வும் வழங்கியிருக்கிறார்கள். அங்ஙனமே ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்ஸரின் பெயரால் காணப்பட்டுள்ள மடமும் இந்நாளிலே பாரத நாடு மேன்மையடைதற்குத் தொண் டாற்றி வருகிறது. சமுதாயத்துக்கும் சந்நியாச ஆஸ்ரமத் துக்கும் இடையே புதிய பொருத்தமொன்றை உண்டுபண்ண இது தோன்றியுள்ளது. தன்னலத்தை அறவே நீத்துவிட் டுப் பரோபகார நிமித்தம் வாழ்வை அர்ப்பணம் செய்யும்

ஒருவனுக்குத் தெய்வத்தன்மை தானே வந்தெய்தும் என்பது இந்த மடத்தின் கொள்கையாகும். பரம்பொருளை நாடி இகலோக இன்பங்களைத் துறந்தவர்கள் உலக நன்மைக்காகவென்று ஒரு சங்கத்தினராகத் திரண்டிருக்க வேண்டி வந்தது. பாரமார்த்திக வாழ்வும் லௌகிக முன்னேற்றமும் ஒன்றோடொன்று முரண்படுபவைகளல்ல. அருள்துறையில் மனிதன் முன்னேற்றம் அடைதற்கு ஏற்பப்பொருள் துறையிலும் அவன் முன்னேற்றம் அடையலாம். அறத்துறையில் ஆற்றும் பணியானது காலத்துக்கு ஏற்றவாறு மாறியமைய வேண்டும். சனாதன தர்மத்தின் தனிச் சிறப்பு இதுவேயாம். அழிந்துபட்டுப் போதல் என்பது அதற்கில்லை. காலத்துக்கு ஏற்ற புதிய நிர்மாணத்திட்டங்களை உருவாக்கும் ஆற்றல் அதற்குண்டு. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரும், ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளும் தங்களுடைய புனித வாழ்வின் மூலமாக சனாதன தர்மத்தின் பெருமையை நன்கு விளக்கிக் காட்டியிருக்கின்றனர். அவர்கள் காட்டியிருக்கின்ற நல்வழியைக் கடைப்பிடித்தால் நாடு இம்மையிலும் மறுமையிலும் மேன்மையுறும் என்பதை எடுத்துக் காட்டுதற்கே ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் காலமானதும் அவருடன் வாழ்ந்து வந்த வாலிப சிஷ்யர்களுள் தாங்கள் இனி என் செய்வது என்ற கேள்வி எழுந்தது. அவர்கள் தத்தம் வீடு போய்ச் சேரட்டும் என்று சில கிரகஸ்தர்கள் புத்தி புகட்டினார்கள். கல்லூரிப்படிப்பு முடிந்த பின்னர் எல்லாம் யோசிக்கலாம் என எண்ணிய சிலர் அவ்வாறே வீடு போக எத்தனித்தனர். வேறு சிலர் தவம்புரியத் தீர்த்தங்களுக்குப் போகலாமென்று எண்ணினர். ஆனால் எக்காரணத்தை முன்னிட்டும் திருக்கூட்டம் கலையாதிருக்க வேண்டுமென்று

தீர்மானித்தவர் நரேந்திரர் ஒருவரே. பரீட்சைக்குப் படிக்க வேண்டுமென்று கருதித் தத்தம் வீடு சென்றவர்களை அவர் ஆங்காங்குத் தேடிக் கண்டு பிடித்து, பரமஹம்ஸதேவர் புகட்டிய உயர் நோக்கங்களையெல்லாம் திரும்பவும் அவர்களுக்கு எடுத்தோதி, எல்லாரையும் ஓரிடத்திற்குக் கொண்டு வந்து சேர்த்தார். கல்கத்தாவுக்கு அருகாமையில் ஜன சஞ்சாரம் அதிகம் இல்லாதிருந்த வாரநகர் என்னுமிடத்தில், குடியிருக்கத் தகுதியற்றிருந்த பாழுங் கட்டடமொன்றில், இவர்கள் குழுமியிருந்து தவம் புரியத் தீர்மானித்தார்கள்.

ஆனால் இவர்கள் கொண்ட நோக்கம் வயது முதிர்ந்த சிலருக்குப் பிடிக்கவில்லை. உணவில்லாது பட்டினி கிடந்து சாகத்தான் நேருமென்று அவர்கள் பயமுறுத்தினார்கள். இத்துடன் இந்த இளந்துறவிகளுக்குப் பெற்றோர்களால் நேர்ந்த இடைஞ்சல்கள் கணக்கற்றவை. தங்களை விட்டுப் பிரிய வேண்டாமென்று பிள்ளைகளிடம் சிலர் வருந்தி வேண்டினார்கள். வீட்டுக்கு வராவிடில் உயிர் துறப்போம் என்று பரிந்து அழுதார்கள் வேறு சிலர். வாதாடினவர்களும், மிரட்டிப் பயமுறுத்தினவர்களும் ஒருபுறமிருக்க, மகனது பிடிவாதத்தைக் கண்டு சகியாத பேதையர் ஒருவர் ஆத்திரங் கொண்டு, "கொன்றுவிடுவேன்" என்று கத்தியைத் தூக்கிக் கொண்டார்! 'பிள்ளைகளின் போக்கு வரவர கெட்டுப் போய் விட்டதற்கும், அதன் பயனாக நேர்ந்துள்ள குழப்பத்திற்கும் காரணம் நரேந்திரர்' என்பதாகப் பழி முழுதும் அவர்மீது சுமத்தப்பட்டது. இத்தனை கஷ்டங்களுக்கும் இன்னல்களுக்கும் இடையிலே ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் சிஷ்யர்கள் தங்களது மேலாம் கருமத்திலேயே கண்ணும் கருத்துமாயிருந்தார்கள். மரணமே வரினும் தாங்கள் பூண்டிருந்த விரதத்தினின்று அணுவளவேனும் பிசகுவ

தில்லை யென்று அவர்கள் அனைவரும் ஒருங்கே தீர்மானித்திருந்தார்கள். பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குப் பதிலாக நரேந்திரர் தலைவராகத் தோன்றியிருந்தது அத்துறவிகள் மாட்டுப் பேருக்கத்தை ஊட்டி வந்தது. உலகப்பற்று யாவையும் நீத்துவிட்டதற்கு அறிகுறியாக இப்போது அவர்கள் அனைவரும் காவியுடை தரித்துக் கொண்டார்கள். தாங்கள் வதிந்து வந்த வீட்டின் ஓரறையில் தங்கள் குருநாதரது திருவுருவப்படம் ஒன்றை ஸ்தாபித்து, அதன் மூலம் அவர்கள் அவருக்கு நித்தம் வந்தனை வழிபாடுகள் செலுத்தி வந்தார்கள். இத்துடன் கடவுளைக் காண்பது எங்ஙனம் என்ற ஒரே எண்ணந்தான் அல்லும் பகலும் அவர்கள் உள்ளத்தில் குடிகொண்டிருந்தது. உணவைப் பற்றிய கவலை அறவே ஒழிந்து போய்விட்டது. உணவேயில்லாது கழிந்த நாட்கள் எத்தனை யெத்தனையோ இருந்தன. சத்துள்ள உணவு எதுவும் சிலவேளை வாரக் கணக்கிலும் மாதக் கணக்கிலுங் கூடக் கிடைக்காமலிருக்கும். பிக்ஷையாய்க் கிடைத்த அரிசியையும், குளக்கரையில் காடாக வளர்ந்து கிடந்த கீரையையும் அவர்கள் சமைத்துப் புசித்துப் பசிப்பிணியைத் துடைத்து வந்தார்கள். உடுக்கப் போதுமான உடையில்லாமையால் பெரும்பாலோர் கோவண தாரிகளாய் மாறிவிட்டார்கள்.

இது போன்ற எளிய வாழ்வுக்கிடையே அவர்கள் புரிந்து வந்த தவம் போற்றுதற்குரியது. உறக்கத்தில் கழிந்த நேரம் மிகச் சிறிதேயாம். அதை அறவே விலக்கியிருந்த நாட்கள் பலப்பல. இரவென்றும் பகலென்றும் உணராது அவர்கள் ஆழ்ந்த நிஷ்டை புரிந்தார்கள். உண்ணும்போதும் உலாவும் போதும் கடவுளது திருநாமமே அவர்களின் நாவில் குடிகொண்டிருந்தது. தாங்கள் படைத்திருந்த தம்புரு ஒன்றை மீட்டிக்கொண்டு நெடுநேரம் பரவசமடைந்து பஜனை

பண்ணுவார்கள்; இறைவனைப் போற்றிப் புகழ்ந்து சங்கீர்த்தனங்கள் பாடுவார்கள்; ஆரவாரத்துடன் ஆனந்தக்கூத்தாடுவார்கள். கம்பீரமும் இனிமையும் வாய்க்கப்பெற்ற குரலிலே விவேகானந்த சுவாமிகள் பாடுவதைக் கேட்ட மாத்திரத்திலே கல்லும் கரைந்துருகுமெனின், அவரது கானத்துக்குச் செவிமடுத்த தூய இளந்துறவிகள் மெய் சிலிர்த்து, உள்ளங்குழைந்து, ஆனந்தப்பரவசமடைந்திருந்ததில் வியப்பென்ன? மெய்ப்பொருளை நாடி அழலின் மெழுகாய் நைந்து உருகி அழுவார்கள்; கண்ணீரும் கம்பலையுமாய்ப் பரிந்து பிரார்த்தனைகள் புரிவார்கள். இவர்கள் மண்ணுலகத்தவரோ அல்லது விண்ணுலகத்தவரோ என்று பார்த்தோர் வியப்புறுதற்கான புனித வாழ்வு வாழ்ந்து வந்தார்கள். உடல் உலகிலும், உள்ளம் ஈசனது சந்நிதியிலுமாக இவர்கள் காலங்கழிப்பாராயினர்.

நூல்கள் ஆராய்தலிலும் பரமஹம்ஸதேவரின் சிஷ்யர்கள் பேரூக்கம் கொண்டிருந்தார்கள். கல்லூரிகளில் பயின்ற கல்வியிலும் பன்மடங்கு அதிகமானதும் வாழ்வுக்குப் பயன் படுவதுமான பயிற்சியை இங்கு இவர்கள் பெறலாயினர். நரேந்திரநாத தத்தர் மாணவராய் இருந்தபோதே அவருடைய கல்வித் திறமையையும், நுண்ணறிவையும், சொல் வன்மையையும் ஆசிரியர்கள் பலர் போற்றிப் புகழ்ந்திருந்தனர் அன்றோ! அத்துடன் அவர் அதுபோழ்து பரமஹம்ஸ தேவரது அருளால் ஒரு தீர்க்கதரிசியாய்விட்டார். ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் ஆத்ம ஞானமும் கலைஞானங்கள் பலவும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவர் ஆவர். கலைமகளே இவரது நாவிற் குடியிருந்தாலன்ன பேரறிவு ததும்பிய இன்மொழிகள் இவரது திருவாயினின்று பொழியா நிற்கும். இந்துமதத்தின் பல சமயக் கொள்கைகள், அவை

யாவுக்கும் அடிப்படையாயிருக்கும் வேதாந்தம், சங்கரர், புத்தர், ஏசுநாதர், முகமதுநபி இத்யாதி மகா புருஷர்களின் அவதாரம், ஆஸ்திகம், நாஸ்திகம், மேல் நாட்டுப் புலவர் களின் கொள்கைகள், தேச சரித்திரம், பௌதிக சாஸ்திரம், சமுதாய ஏற்பாடு இவைபோன்ற அரும்பெரும் விஷயங் களைப்பற்றி சுவாமிகள் வெள்ளிடை மலைபோன்று விளக்க முறுமாறு விவரித்துப் பேசுவார்கள்.

சில வேளைகளில் அவர்கள் எல்லோரும் இரு கட்சி களாகப் பிரிந்துகொண்டு மெய்ப்பொருளைப்பற்றியும், மற்ற விஷயங்களைப் பற்றியும் சம்வாதம் செய்வார்கள். தமது வாக்குச் சாதுர்யத்தைக்கொண்டு கடவுளே இல்லையென்று விவேகானந்தர் சில சமயங்களில் நிரூபிப்பார். பின்பு தமது கூற்றிலுள்ள குறைபாடுகளைத் தாமே எடுத்துக்காட்டிக் 'கடவுள் ஒருவர்தான் நிலைத்து உளர்; அவருக்கு அன்னிய மாக எதுவும் இல்லை' என நிர்ணயிப்பார். அவருடைய ஆன்ம சகோதரர்கள் தங்களையறியாமலே இந்த ஞானங் களனைத்தையும் அவரிடமிருந்து பெற்று வந்தனர். பிற்காலத் தில் அவரைப் பின்தொடர்ந்து தர்மப் பிரசாரம் பண்ணுவ தற்கும் அவர்கள் இப்போது சுவாமிகளால் பயிலுவிக்கப் பட்டு வந்தார்கள்.

'ஓடுகின்ற நதியிடத்தும், சஞ்சரிக்கின்ற சந்நியாசியிடத் தும் பொல்லாங்கு எதுவும் படிகிறதில்லை' என்னும் கருத் துக்கு ஒப்ப, வாரநகர் மடத்திலிருந்த சாதுக்கள் அடிக்கடி ஸ்தலயாத்திரை செய்ய வெளியேகி விடுவார்கள். விவேகா னந்த சுவாமிகளும் இடையிடையே யாத்திரை போய்வரு வார். பரதகண்டத்தின் வரலாற்றைச் சரித்திர வாயிலாக அறிந்திருந்தது போதாதென்று அவர் கருதினர். அதன் நாடு நகரங்களையும் ஜனத்திரளையும் அவர்களது பாங்கையும்

கண்கூடாகப் பார்க்க அவருக்கு அவாவுண்டாகி, நாளேற ஏற அந்த அவா அதிகரித்துக்கொண்டே வந்தது. குரு தேவரின் அருட்பிரசாதத்தை அவர் பாரெங்கும் வழங்குதற்கு உற்ற தருணமும் அணுகிவிட்டது. எனவே, வெளியேகும் வண்ணம் ஏதோ ஒரு பரமசக்தி அவரது உள்ளத்தினின்று அவரைத் தூண்டி வந்தது. கட்டுக்கடங்காத மிருகேந் திரனைப் போல் அவர் உலகெங்கும் உலவிச் சஞ்சரிக்க விரும்பினர். உற்று ஆராயுமிடத்து நல்லார் இணக்கமும் ஒருவித பந்தமேயாம். ஆதலால் அதையும் நீத்துவிட்டு ஏகாந்தத்தை நாடித் தன்னந்தனியே போய்விடவேண்டு மென்று அவர் அடிக்கடி தெரிவிப்பார். இத்தகைய மனப் பான்மை அவர் மாட்டு மேவி வந்ததைக் காணலுற்ற குரு சகோதரர்கள் அவர் பிரயாணம் புறப்பட்டபோதெல்லாம் மீண்டும் இனித் திரும்பி வாராது பரிவ்ராஜக பரமஹம்சரா கத் தேச சஞ்சாரம் செய்யப் போய்விடுவாரோ என்று ஐய முற்றிருந்தார்கள்.

8. தேச சஞ்சாரம்

உலகை உய்வித்தற் பொருட்டு சுவாமிகள் முடிவாக வெளியேறுதற்கேற்ற காலம் வந்து நேர்ந்தது. 1891வது ஆண்டின் துவக்கத்தில் கையில் கமண்டலமும் தண்டமும் தாங்கிப் பரம்பொருள் ஒன்றையே துணையாகக்கொண்டு பரிவ்ராஜக பரமஹம்சராய் அவர் புறப்பட்டுவிட்டார். பணம் எதையும் கையாளுவதில்லையென்றும், வலிய வருகிற உணவை மட்டும் புசிப்பதென்றும், நாளைக்கென்று எதையும் தேடிவைப்பதில்லையென்றும் அவர் விரதம் பூண்டு கொண்டார். நெடும் பிரயாணம் செய்யவேண்டியவிடத்து யாராவது புகைவண்டிக்குச் சீட்டு வாங்கிக் கொடுத்தால் அதை ஏற்றுக்கொள்வதாகவும், ஏனைய சந்தர்ப்பங்களில் கால்நடையாகவே போவதாகவும் கருத்தினில் வைத்தார். பிரம்ம தேஜஸ் திகழ்ந்த திருமுகமும், ராஜகுமாரன் போன்ற கட்டழகும், கம்பீரமான திருமேனியும் தாங்கிய சுவாமிகளை ஆங்காங்கு காணலுற்றவர்கள், "இவர் நரேந்திரரோ, தேவேந்திரரோ" என்று எண்ணித் திகைத்து நிற்பர். கதிரவன் ஒளியை போன்று இவரது மாண்பு சொல்லாமலே மாந்தரது உள்ளத்தில் பாயும். கற்றவர்கள் இவரோடு உரையாடக் காமுறுவர்; மற்றவர்கள் இவரைக் கண்டு சேவிக்க முன்வருவர். "கற்றோருக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு" என்றன்றோ ஔவைப் பிராட்டியார் அருளினர்! ஆனல் சுவாமிகள் விஷயத்திலோ அவர் ஓரூர் செல்லும் முன்பே அவரது சிறப்பு அங்கு விரைந்து போய்விடும். இவ்வாறு பேரும் புகழும் தம்மீது சுமத்தப்படுவதை விரும்பாத சுவாமிகள் தாம் எத்திசை நோக்கி ஏக உத்தேசங் கொண்டிருக்கிறார் என்பதை எவருக்கும் வெளியிட மாட்டார். சில இடங்களில் ஒன்றும் பேசாது மௌனவிரதம்

பூண்டவர்போல் சும்மாவிருந்துவிடுவார். இன்னும் சில இடங்களில் தமது திருநாமத்தை மாற்றிக்கொண்டு போவார். ஆனால் அருணனை எப்பெயரிட்டு அழைக்கினும் அவனது ஒளி மங்கிவிடுமோ?

சுவாமிகள் பல ஊர்களைக் கண்டும் கடந்தும் கடைசியில் கால்நடையாகக் காசி வந்துசேர்ந்தார். இப்புண்ணிய க்ஷேத்திரத்துக்குள் பிரவேசிக்கும்போதே அவரது உள்ளத்தில் அளவிலா ஆனந்தம் ததும்பியது. அனேக ஆயிரம் ஆண்டுகளாகத் துறவிகளது உறைவிடமாகவும், கல்விக் கழகமாகவும், சிவனரது திருப்பதியாகவும் திகழ்ந்து வரும் இடமல்லவோ இந்நகர்! புனிதம் பொலியும் புனற் கங்கை, பக்தகோடிகளின் பெருந்திரள், அன்னவர்கள் அல்லும் பகலும் செய்யும் வந்தனை வழிபாடுகள்—இத்யாதி புனிதக் காட்சிகளைக் காணலுற்ற சுவாமிகள் பரவசமடைந்திருந்தார். கருணையங்கடலாகிய கௌதம புத்தரும், வாலறிவராகிய ஜகத்குரு சங்கரரும் முதன்முதல் தர்மப் பிரசாரம் செய்த இடம் இக்காசி க்ஷேத்திரந்தான் என்ற ஞாபகம் இவருக்கு வந்தது. தினமும் கங்கையில் நீராடி, விசுவநாதர் தரிசனம் கண்டு நிஷ்டைபுரிந்து வந்தார். அக்காலத்தில் ஆங்கு எழுந்தருளியிருந்த திரைலிங்க சுவாமிகள், பாஸ்கரானந்த சுவாமிகள் முதலாயினேரை நமது ஞானசிங்கம் தாமே சென்று சேவித்து வந்தார். இவர் வாரணசியில் வதியுங்கால் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி ஒன்று நேர்ந்தது. அதாவது இவர் ஒருநாள் ஒரு வீதியிலே போய்க்கொண்டிருக்கையில் குரங்குக் கூட்டமொன்று இவரைப் பின் தொடர்ந்தது. அம்மிருகங்களிடமிருந்து மீண்டுகொள்ள இவர் விரைந்து சென்றார். ஆனல் அவைகளும் வேகமாய் இவரைப் பின்பற்றி வந்தன. முடிவில் அவ்வானரங்கள் இவரைச் சூழ்ந்து

கொண்டு தாக்கும் தறுவாயில் இருந்தபோது அவ்வழியே சென்றுகொண்டிருந்த வயோதிக சந்நியாசி ஒருவர், "ஓடாதே, மிருகத்தை எதிர்த்து நில்" என்றுரைத்தது சுவாமிகளின் காதுகளில் விழுந்தது. இவரும் அக்கணமே மருள் நீங்கப்பெற்று, மெய்யுணர்வெய்தி எதிர்த்து நிற்கவே, துரத்திக்கொண்டு வந்த வானரங்கள் திகைத்து நாலு பக்கமும் சிதறி ஓடின! சுவாமிகள் இதிலின்று பெரிய பாடமொன்றைக் கற்றுக்கொண்டார். மிருகத்தை மட்டுமல்ல, மிருகத்தன்மை வாய்ந்த யாவையையும், மருளப் பண்ணுகிற யாவையையும், மயக்கம் வருவிக்கின்ற யாவையையும் எதிர்த்து நிற்கவேண்டும்; அவைகளுடன் போராடவேண்டும்; திகைத்து ஓடலாகாது என்பதாம். சுவாமி விவேகானந்தர் உலகுக்கு நல்கிய நல்லுபதேசங்களில் இது ஒன்றாகும். வாழ்க்கையில் எத்தனையோ இடுக்கண்கள் அவருக்கு நேர்வனவாயின. அவைகளைக் குறித்து மனம் தளர்வுறாதிருந்து அவைகளைச் சமாளித்ததே அவரது செயற்கரிய செயலாகும். நல்ல காரியம் ஒன்றில் மனிதன் ஈடுபடும் பொழுது அஃதற்குத் தடைகள் பல வருகின்றன. அவைகளை அமைதியுடன் மீளுதல் நல்ல ஆத்ம சாதனமாகிறது.

தாம் தரிசிக்க வேண்டிய ஸ்தலங்கள் வேறு பல இருப்பதை எண்ணிய சுவாமிகள் சின்னாளைக்குப் பின்பு காசியினின்று புறப்பட்டு அயோத்தி போய்ச்சேர்ந்தார். அப்புண்ணிய க்ஷேத்திரத்திலும் இவரது மனத்தகத்தே அடங்காத ஆனந்த பரவசமுண்டாயிற்று. இவர் வழிபடும் கடவுளாகிய இராமபிரானின் அற்புதச் செயல்களையெல்லாம் கருதிக் களிப்புறுவாராயினர். புனித எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் ஊட்டவல்ல இடங்களுக்குப் படாதபாடுபட்டும், சகிக்கவொண்ணாத அல்லல்களுக்கு ஆளாகியும் போவது

தகுமென்று கருதினர் சுவாமிகள். பின்பு மொகலாய சக்கர வர்த்திகள் ஆண்ட காலத்திலே சீரும் சிறப்புமுற்று விளங் கிய நகரங்களாகிய ஆக்ரா, லக்ஷ்மணபுரி முதலிய இடங் களுக்கு இவர் போனர். அவண் இருந்த பழங்கோட்டை களும், கூடகோபுர மாளிகைகளும் ஆங்கு ஆட்சி புரிந்திருந்த அக்பர் போன்ற உத்தம வேந்தர்களைப் பற்றி இவருக்கு ஞாபக மூட்டலாயின. தாஜ்மஹாலில் சலவைக் கல்லில் செய் திருந்த சித்திர வேலையானது சுவாமிகளைத் திகைப்புறச் செய்தது. அக்கட்டடத்தின் எப்பகுதியைத்துருவி ஆராய்ந் தாலும் பேரரசன் ஒருவனது அன்பு அதனூடேமிளிர்வதைக் காணலாம் என்பது சுவாமிகளின் கருத்தாகும். அதன்பால் அமைந்திருந்த சிற்பம், ஓவியம் இவைகளைக் கற்கப் பல் லாண்டுகள் வேண்டுமென்று இவர் கருதினர். இவைகளின் வாயிலாகப் பரத கண்டத்தின் பெருமையை ஓர்ந்துணர்ந்த பிறகு, சுவாமிகள் பிருந்தாவனம் போய்ச் சேர்ந்தார்.

பிரேமை பக்தியைப் புகட்டினவனும் கீதாசாரியனு மான கண்ணபிரான் இளம்பிராயத்தில் புரிந்த திருவிளை யாடல்களெல்லாம் ஈண்டு அவர் மனத்தகத்தே தெற்றெனத் தோன்றலாயின. இப்புண்ணிய க்ஷேத்திரத்திற்கு வந்திருக் கையிலே சுவாமிகள் ஒருநாள் கோவர்த்தன கிரியைப்பிர தட்சிணம் பண்ணி வந்தார். பரிவ்ராஜக பரமஹம்சராகத் தேச சஞ்சாரம் செய்து கொண்டிருந்தபொழுது சுவாமிகள் கடினமான விரதம் ஒன்று எடுத்திருந்தார். எங்கும், யாரி டத்திலும் பிக்ஷை கேட்பதில்லை என்பதாகும் அவ்விரதம். உலகத்தவர் வலிய வந்து படைத்த பிக்ஷான்னத்தை அவர் ஏற்று வருபவர் ஆயினர். அப்படி அன்றைக்கு ஆகாரம் எது வும் அவருக்குக் கிடைக்கவில்லை. வனத்தினுட் போய்க் கொண்டிருந்த அவரை யார்தான் தேடிவந்து உணவளிக்கப்

போகின்ருர்கள்? எனினும் அன்னத்தைப் பற்றிய கவலேயே சிறிதும் இல்லாதவராய், கார்வண்ணனே மட்டும் கருத்தினில் வைத்தவராய், அவர் மலேயை வலம் வந்து கொண்டிருந் தார். பசியும் களேப்பும் அதிகரித்து விட்டன. சேர்ந்தாற் போல மழையும் வந்து சோவென்று பொழிந்து சுவாமிகளே முற்றும் நனேத்து விட்டது. அப்போதும் கண்ணனேப் பற் றிய எண்ணந்தான் அவரது சிந்தையிற் குடியிருந்தது. அது போழ்து இவரை அழைக்கின்ற குரல் ஒன்று திடீரென்று பின்புறமிருந்து இவரது காதில் விழுந்தது. ஆனல் திரும்பிப் பாராமலே சுவாமிகள் விரைந்து சென்ருர். கூவியழைத்த அன்பன் இவருக்காக ஆகாரம் எடுத்து வந்திருப்பதாய்ச் சொல்லிக் கொண்டே நெடுந்தூரம் பின் தொடர்ந்து ஓடி வந்து இவரை அணுகினன். இது தெய்வாதீனமோவென்று வியந்த சுவாமிகள், மேலும் இதை ஆராய்ந்தறிய வேண்டு மென்று எண்ணி விரைந்து ஓட ஆரம்பித்தார். அம்மனித னும் சுமார் ஒரு மைல் தூரம் கூடவே பின்பற்றி ஓடி வந்து அவரைத் தடுத்து நிறுத்தி, தான்கொண்டு வந்திருந்த ஆகா ரத்தை ஏற்குமாறு பணிந்து விண்ணப்பித்துக்கொண்டான். சுவாமிகளும் அவனது விருப்பத்துக்கு இணங்கி போஜனம் பண்ணினர். அவரது உதரக்கனல் ஒடுங்கவே அம்மனிதனும் வனத்தினுட் சென்று மறைந்து போய் விட்டான்! வனந்தி ரத்தில் நிகழ்ந்த இந்த அற்புத நிகழ்ச்சியை எண்ணி எண் ணிக் கண்ணீர் மல்கியவாறே சுவாமிகள் கண்ணனது கருணையைப் புகழ்ந்து வாழ்த்தினர்; ஒருவேளே அக்கார்மேக வண்ணனே இவ்விதம் உடல் தாங்கி வந்தானேவென்றும் வியந்தார். கல்லினுட் சிறு தேரையையுங் காப்பாற்றுகிற கடவுள் தம்மையும் ஆதரித்து வருகிருர் என்ற திடச் சித்தம் இவருக்கு உதிக்கலாயிற்று.

அக்காலத்தில் காஜிப்பூர் என்னுமோர் ஊரிலே பெரியார் ஒருவர் வாழ்ந்திருந்தார். அவர் சில நாட்களுக்கு ஒரு முறைதான் உணவு ஏற்பது வழக்கம். ஆதலால் மாந்தர் அவரை "பவ ஆஹாரி பாபா" என்று அழைத்து வந்தார்கள். "காற்றைப் புசித்து வாழும் பெரியார்" என்பது அப்பெயரின் கருத்து. ஐம்பொறிகளேயும் அறவே சுட்டெரித்த யோகீசுவரர் அவர். இப்பெரியாரிடமிருந்து பாத்திரமொன்றைத் திருடன் ஒருவன் ஒருநாள் அபகரித்துக் கொண்டு போகையிலே இவரது கண்ணுக்குத் தான் புலப்பட்டு விட்டதை அத்திருடன் அறிந்தான். மருண்டுபோன கள்வன் உடனே அப்பாத்திரத்தைக் கீழே போட்டுவிட்டு ஓட்டம் பிடித்தான். ஆனல் பாபாஜி அவனேத் துரத்திப் பிடித்து அதை ஏற்றுக்கொள்ளும்படி வணங்கி வேண்டினர்! தம்மிலும் அத்திருடனுக்கு அது அதிகம் தேவையானதென்பது அவரது கருத்து. "எப்பொழுது இதில் நீ ஆசை வைத்து விட்டாயோ அப்பொழுதே இது உனக்கு உரியது ஆய்விட்டது" என்ருர் பாபாஜி. ஆனல் இந்நிகழ்ச்சி அத்திருடனே ஒரு நொடிப்பொழுதில் ஒரு சத் புருஷனுக்கி விட்டது. பாபாஜியை வீழ்ந்து வணங்கிவிட்டுத் திருடவந்தவன் ஒரு துறவியாக மாறிப் புறப்பட்டுப் போனன். எண்ணம் மாறியதற்கு ஏற்ப அம்மனிதன் ஒரு மேலோனுகை முன்னேற்றம் அடையலானன். சில வருஷங்களுக்குப் பின்பு அம்மேலோனே நேரில் சந்திக்கிற வாய்ப்பு சுவாமி விவேகானந்தருக்கு உண்டாயிற்று. பவ ஆஹாரி பாபா தமக்கு நேரும் துன்பத்தை ஒரு தேவ தூதாகப் பாராட்டுவது வழக்கம். துன்பம் எப்போதும் மனிதனுக்கு நற்புத்தி புகட்டுகிறது என்று அவர் சொல்லுவார். ஒருநாள் கொடிய அரவம் ஒன்ருல் தீண்டப்பட்டு மூர்ச்சையடைந்த பாபாஜி மயக்கம் தெளிந்த பின்பு அந்தச் சர்ப்பத்தையும் ஒரு தேவ தூத

ருகவே பாராட்டி வணங்கினர். அருளுடைய அந்த நல்லா ருடன் சின்னுள் இணங்கி உறவாட விரும்பிய விவேகானந்த சுவாமிகள் அவரது உறைவிடம் தேடியேகுவாராயினர்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் மாண்பனைத்தும் பவ ஆஹாரி பாபாவுக்கு முன்னமே தெரிந்திருந்தது. ஆதலால் அவர் அப்பெரியாருக்கு உகந்த சிஷ்யரை அன்புடன் வர வேற்றது இயல்பே. இருவர் கருத்தும் ஒருமித்து அவர்கள் இன்புற்றிருக்கையிலே அரும்பெரும் விஷயங்களைப் பற்றிய பேச்சு அடிக்கடி எழும். அவைகளின் வாயிலாக பாபாஜி யின் ஞானமுதிர்ச்சியையும், மேன்மையையும் அறிந்து கொண்ட சுவாமிகள் உலக நன்மையின் பொருட்டு அவர் ஏன் ஜன சமூகத்துடன் தொடர்பு வைத்துக்கொள்ளலாகாது என்று வினவினர். இதைக் கேட்டுத் திடுக்கிட்டவர்போல் தோன்றிய பாபாஜியும், "ஏன்? தேகத்தின் உதவியின்றி ஒரு மனம் மற்றொரு மனத்தைக் கவராதோ?" என்று திருப் பிக்கேட்டார். கம்பியின் உதவியில்லாமலே சத்தம் இடத் துக்கு இடம் செல்வது போன்று, தேகத்தைக் கொண்டு வெளியிடாவிடினும் தவ வலிமையால் உயர்ந்த கருத்துக்களை உலகுக்கு ஊட்டி விடலாம் என்பது இதன் கருத்து. பாபாஜி யின் இக்கூற்றை விவேகானந்த சுவாமிகள் நன்கு சிந்தித் துப் பார்த்தார். பின்பு அவர் ஓர் அரிய முடிவுக்கு வந்தார். உலக மக்களுக்கிடையிலே உபன்யாசங்கள் வாயிலாக அருள் விருந்தை வழங்கியவர்களை விட அதிகமாக மௌன நிலையில் இருந்தவர்களே வழங்கியிருக்கிறார்கள். இது எல் லார்க்கும் விளங்குகிறதில்லையெனினும் இதுதான் உண்மை: யோக மார்க்கத்தில் மிகக் கடினமானவைகளும், நுட்பமான வைகளுமான சாதனங்கள் பலவற்றைச் சாதித்தவர் காஜிப் பூரில் வதிந்திருந்த பெரியார். அவர் பயின்று பூர்த்திபண்ணி

யிருந்த அந்தச் சாதனங்களையெல்லாம் தாமும் ஏன் பயில லாகாது என்று விவேகானந்த சுவாமிகள் சிந்திக்கலானார்.

முடிவாகத் தாம் யோக தீட்சை பெற விரும்புவதாகப் பாபாஜியிடம் தெரிவிக்கலாமென்று எண்ணி சுவாமிகள் ஒரு நாள் காலை அவரது குகைக்குப் போகப் புறப்பட்டார். ஆனால் ஏனோ நடக்கக் கால் வரவில்லை. உடல் கட்டுண் டாற்போல் போய்விட்டது. ஏதோ ஒரு சக்தி இவ்வரை நகரவொட்டாது தடுத்தது; துயரம் மேலிட்டது. சோகத் தால் பிடிக்கப்பட்ட சுவாமிகள் கீழே உட்கார்ந்து கொண்டு "நம் இறைவன் யார்? ஸ்ரீ ராமகிருஷ்ணரா? பவ ஆஹாரி பாபாவா? என்று ஏக்கமுறுவாராயினர். பிந்தியவரிடம் சென்று புதிய யோக சாதன முறைகளைத் தெரிந்துகொள்ளு தலில் தோஷமொன்றுமில்லையே என்று முடிவு கட்டினர். ஆனால் நாவறண்டு போய்விட்டது; கண்களில் நீர் ததும்பி யது. இந்த மருட்சிக்கிடையே ஜோதியொன்று தென் பட்டது. பரிந்த முகத்துடன் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம்மைப் பார்த்துக் கொண்டு நிற்பதை அவர் கண்டார்! விவேகா னந்தருக்குப் பேச நா எழவில்லை. நீர் மல்கிய கண்களைத் துடைத்துக்கொண்டு பரமஹம்சரை அவர் திருப்பத் திரும் பப் பார்த்தார். இவ்வாறு சுமார் இரண்டுமணி நேரம் சென்றது. பெறுதற்கு அரிய அருள்பேறு யாவையும் விவே கானந்தர்மீது பரிவு கூர்ந்து அளித்த பரமஹம்சதேவர் பற்றுடனும் பரிதாபத்துடனும் அவரைப் பார்த்த வண்ண மாகவே நின்றார். "ஆ! குருபக்தியற்றவன் ஆனேன் அல் லவா?" என்ற எண்ணம் இடிவிழுந்தாற்போலச் சிஷ்யரது மனத்திற் பாய்ந்தது. அதுபோழ்தும் காட்சி கொடுத்துக் கொண்டே நின்ற தமது அண்ணலைப் பார்த்து, "அத்தா! உனக்கு ஆளாகி, இனி அல்லேன் எனல் ஆமே?" என்று

கண்ணீரும் கம்பலையுமாக விண்ணப்பித்து வீழ்ந்து நமஸ்கரித்தார். அதன் பிறகு சுவாமிகள் பவ ஆஹாரி பாபாவிடம் ஒரு தோழன்போல நடந்துகொண்டாரேயொழிய அவரைக் குருவாக ஏற்றுக்கொள்ளத் திரும்பக் கனவிலும் கருதவில்லை.

பின்பு தபஸ்விகளுக்கும், ரிஷிபுங்கவர்களுக்கும் பல்லாயிரம் ஆண்டுகளாக உறைவிடமாயிருந்து வந்த ஹிமாலய பர்வதத்துக்கு யாத்திரை பண்ண விரும்பிய சுவாமிகள் உத்தர திசையை நோக்கிப் புறப்பட்டார். மலையின் அடிவாரத்தில் ஆங்காங்குத் தவம் புரிந்துகொண்டிருந்த தமது சகோதர சிஷ்யர்களான அகண்டானந்தர், சாரதானந்தர் ஆகியவர்களைத் தற்செயலாகக் கண்டு மகிழ்வுற்றார். பிறகு அவர்களையும் தம்மோடு அழைத்துக்கொண்டு அவர்மலை நாட்டினுள் பிரவேசித்தார். உலகிலே மிகமிகப் பெரியதாகிய இப் பர்வதத்தின் கம்பீரமான தோற்றம் சுவாமிகளின் மனதை மகோன்னத நிலைக்கு எடுத்துச் சென்றது. அடர்ந்த ஆரண்யம், விண்ணுலகினின்று மண்ணுலகுக்கு வருவனபோல மலையுச்சியிலிருந்து வீழ்ந்த அருவிகள், ஓடும் ஓடைகள், அலைமெறியும் ஆறுகள், பாடும் பறவைகள், வீசும் இளங்காற்று, ஓசையொலி ஒன்றும் கேளாத குகைகள் ஆகிய இவைகளுக்கிடையே பரந்த எண்ணங்கள் எண்ணியும், உயர்ந்த உணர்ச்சிகள் எய்தியும், ஆழ்ந்த நிஷ்டைகள் புரிந்தும் சுவாமிகள் காலம் போக்குவாராயினர். கண்ணுக்கு எட்டியவரையும் அதற்கப்பாலும் ஒளிவிலாதிருக்கும் பனிக்கட்டியினுள் புதைந்து கிடந்த பர்வதங்களைப் பார்த்த மாத்திரத்திலே எவருக்கும் பரம சாந்தமுண்டாகும். அத்தகைய மகோன்னத மலையிலே நிலவும் சிவனார் போன்று நம் சுவாமிகளும் மனம் ஒடுங்கப்பெற்றுச் சாந்தமூர்த்தியாகத் திகழ்ந்திருந்தார்.

பத்ரிகாஸ்ரமம், கேதார்நாதம், கைலாயகிரி இத்தியாதி க்ஷேத்திரங்களைக் கண்டு தரிசிக்கவேண்டுமென்று எண்ணியவராய் அவர், மலைத்தொடர்கள் பல கடந்து மேல் நோக்கிப் போய்க்கொண்டிருந்தார். சமவெளியினின்று சுமார் இருநூறுமைல் மலைப் பிரதேசத்துக்குள் இவர் வந்துவிட்டார். மரம் செடி கொடிகள் வளராதபனிக் கட்டியினுள் நெடுந்தூரம் பிராயணம் பண்ணியாய்விட்டது. பத்ரிகாஸ்ரமத்தையும் அணுகிவிட்டார். அப்போது திடீரென்று இவரது சகோதர சிஷ்யர் அகண்டானந்த சுவாமிகளுக்குக் கடுஞ்ஜுரம் வந்துவிட்டது. ஆதலால் மேலும் பிரயாணம் செய்வது இயலாத காரியமாயிற்று; தாம் காண விரும்பிய ஸ்தலங்களை மனத்தால் சிந்தித்து வணங்கிவிட்டுக் கீழ்நோக்கி வந்தார். ஹிரிஷிகேசம் வந்தானதும் அகண்டானந்தருக்குற்ற நோய் சொஸ்தமாயிற்று. ஆனால் அங்கு சுவாமி விவேகானந்தருக்குக் கடும் ஜுரம் வந்துவிட்டது. இரண்டு மூன்றுநாள் அவர் பிரக்ஞையில்லாமலும் இருந்தார். நாடி ஒழுங்காயடியாது நலிவுற்று, சீதம் உடலெங்கும் பரவிற்று. இவருக்கு அந்தியகாலம் வந்துவிட்டதென்று எண்ணி குரு சகோதரர்கள் திகிலடைந்துவிட்டார்கள். என்ன செய்வதென்று அறியாமல் அவர்கள் ஏங்கியிருக்கையில் சந்நியாசி ஒருவர் ஆங்குத் திடீரென்று வந்து சேர்ந்தார். அவர் கொணர்ந்திருந்த தேனில் ஏதோ ஒரு மாத்திரையைக் குழைத்து சுவாமிகளது வாயினுள் செலுத்தினர். சிறிது நேரத்தில் அவர் தெளிவுபெற்றெழுந்து சகோதரர்களைப் பார்த்து, "நான் மெய்ம்மறந்து கிடந்த போது உயர்ந்த அனுபவம் ஒன்று காணலானேன். நான் இவ்வுலகில் சாதிக்கவேண்டிய அரும் பெரும் காரியங்கள் பல உள. அவைகளைப் பூர்த்திபண்ணும்வரை ஓய்ந்து இருக்க என்னல் இயலாது. ஏகாந்தமான குகை வாசத்தை

நான் நாடுவதெல்லாம் வீணே. நான் செய்து முடிக்கவேண்டிய காரியத்தின் பொருட்டு உலகில் உலவும்படி ஏதோ ஒரு சக்தி என்னை ஏவுகிறது" என்றார். கட்டுக்கு அடங்காத அருட்சக்தி அவர்மாட்டுத் ததும்பி மிளிர்வதைச் சகோதர சிஷ்யர்களும் காணலானார்கள். பிணியால் நேர்ந்த நலிவு ஒழிந்து நல்ல தேகவலிவு பெற்றபின், அவர்களை விட்டுப் பிரிந்து மிருகேந்திரன் போன்று சுவாமிகள் தன்னந்தனியே மற்ற நாடுகளையும் காணப் புறப்பட்டுத் தம் போக்கில் போனார்.

தென் திசையாகப் பிரயாணம் பண்ணிய சுவாமிகள் சொற்ப நாளில் டில்லி போய்ச் சேர்ந்தார். பார்த்தவிடமெல்லாம் பழைய கோட்டைகளும் மாளிகைகளுமே காணப்பட்டன. சுமார் பத்துமைல் விஸ்தீரணத்துக்கு அழிந்துபோன அரண்மனைகளே தென்பட்டன. முன்னைய மன்னர்களது மாட்சிக்குச் சான்றுகள் யாண்டும் மிளிர்ந்திருந்தன. எத்தனையெத்தனையோ அரசர்களுக்குத் தலைமைப் பட்டணமாய்த் திகழ்ந்த இடம் இது. ஆனால் பார் ஆளும் பதவி பெறினும் உலக வாழ்வு நிலையற்றதென்பதையே சுவாமிகள் ஈண்டு இடையறாது சிந்திப்பராயினர். முடிசார்ந்த மன்னர்களும் முடிவிலே ஒருபிடி சாம்பலாய்ப்போய் விட்டார்கள் என்பதையே ஆங்காங்குக் காணப்பட்டகுட்டிச் சுவர்களும் பாழுங்கட்டடங்களும் இவருக்கு ஞாபக மூட்டின.

---

9. மாளிகையிலும் குடிசையிலும்

டில்லியினின்று மேலும் சஞ்சரித்துக்கொண்டே போன சுவாமிகள் இராஜபுதன சமஸ்தானங்களில் ஒன்றாகிய ஆள்வார் ராஜ்யத்தில் பிரசன்னமானார். அங்கே கடைத்தெருவிலேயிருந்த தர்மசாலை ஒன்றின் மேன்மாடியிலே அவர் தங்கினார். முகம்மதியப் பண்டிதர் ஒருவரும், டாக்டர் ஒருவரும் இவருக்கு முதன் முதல் பழக்கம் ஆனார்கள். சொற்ப நாளில் இவரது பெருமை அவ்விருவர் மூலமாக ஊரெங்கும் பரவி விட்டது. கற்றவர்களும் மற்றவர்களும், இந்துக்களும் முகம்மதியர்களும் திரள் திரளாய் இவரிடம் வரலாயினர். இந்து மதம், முகமதிய மதம், மதங்களின் சமரசம், சம்ஸ்கிருதம், ஆங்கிலம், உருது இத்யாதி விஷயங்களைப்பற்றிச் சுவாமிகள் அற்புதமாகப் பேசியது எல்லாருடைய மனத்தையும் கவர்ந்தது. முகம்மதியர்கள் பலர் இவர் மீது பேரபிமானங்கொண்டு, தங்களுடைய இல்லங்களுக்கு இவரை அழைத்துச் சென்று இந்துக்களது ஆசாரத்துக்கு ஒப்ப உணவு சமைத்து அளித்து உபசரித்தார்கள். சுவாமிகளும் சந்நியாச தர்மத்தை அனுசரித்து, மக்கள் அனைவரையும் கடவுளின் குழந்தைகளாகப் பாராட்டி,அன்னவர்கள் பக்தியுடன் படைக்கும் உணவை ஏற்று வந்தார்.

அதுபோழ்து ஆள்வார் சமஸ்தானத்தில் திவானாயிருந்த சேனாதிபதி இராமசந்தர்ஜீயின் காதுக்குப் புதியதாய் வந்திருந்த சுவாமிகளின் மகிமை எட்டியது. அவர் சுவாமிகளைத் தம் வீட்டுக்கு அடிக்கடி வரவேற்று அவரோடு நெருங்கிப் பழகி வருவராயினர். "ஆங்கிலக் கல்வியில் அளவில்லாத தேர்ச்சிபெற்ற ஒரு மகா புருஷர் எனது இல்லத்தில் எழுந்தருளியிருக்கின்றார்" என்று ஒருநாள் திவான், ஆள்

வார் மகாராஜாவுக்குத் தெரிவித்தார். அக்கோமகனும் ஒரு தினம் பிரதானிகள் புடைசூழ, சுவாமிகளது இருப்பிடம் சென்று பணிவுடன் அவரை வணங்கினர். பிறகு, பார்ஆளும் வேந்தனுக்கும் அருள் ஆளும் வேந்தனுக்குமிடையே பின் வரும் சம்பாசணை நடந்தது.

மகாராஜா: பண்டிதராகிய நீவிர் பணம் சம்பாதியாது பிக்ஷை எடுப்பானேன்?

சுவாமிகள்: அரசே! பிரஜைகளைப் பரிபாலிப்பதைப் புறக்கணித்துவிட்டு, நீவிர் ஆங்கிலேயர்களுடன் கூடி வனத்தில் வேட்டையாடியும், நாட்டிற்குரிய பொருளை விரயம் பண்ணியும் வீண் காலம் கழிப்பானேன்?

மகாராஜாவுடன் வந்திருந்தவர்கள் அவர் அஞ்சாது அளித்த மறுமொழியைக் கேட்டு மருண்டார்கள். "என்ன தைரியம்! இவரது கதி என்னகுமோ!" என்று திகைத்தார்கள். ஆனல் கோமானுக்கோ கோபம் வரவில்லை. அவர் சற்றுச் சும்மா இருந்தார். பிறகு "அது என் இஷ்டம்" என்று அவர் விடையிறுத்தார்.

"இரந்துண்பது என் இஷ்டம்; ஆனல் சமூகத்துக்கு நான் செய்யவேண்டிய கடமையில் தவறுவதில்லை" என்ருர் சுவாமிகள்.

"விக்கிரகங்களை வணங்குவதில் எனக்கு விருப்பமில்லை; என் கதி என்னகும்? என்று கேட்டுவிட்டுப் பரிகாசத்துடன் மகாராஜா புன்னகை புரிந்தார்.

சுவாமிகள்: என்ன, ஏளனம் பண்ணுகின்றீர்களோ?

மகாராஜா: இல்லை சுவாமிகளே! பாமரர் போன்று நான் கல்லையும், மண்ணையும், உலோகத்தையும் வணங்கேன்.

இது ஓர் அபராதம் எனின், இதற்காக நான் மறுமையில் துன்புற நேரிடுமோ?

சுவாமிகள்: நல்லது, ஒவ்வொருவரும் அவரவரது கொள்கையின்படி நடந்து கொள்ளட்டும்.

விக்கிரகங்களினெதிரே நின்றுகொண்டு சுவாமிகளே கசிந்துருகி வழிபட்டதைப் பார்த்தவர்கள் சிலர் அச்சபையின்கண் அமர்ந்திருந்தனர். அன்னவர்கள், விக்கிரகாராதனையைக் கண்டிக்க சுவாமிகள் மகாராஜாவுக்கு எப்படி இடந்தந்தாரென்று வியந்தார்கள்.

ஆனால் சிறிது நேரத்துக்குள் சுவாமிகள் நிலைமையை அறவே மாற்றிவிட்டார். ஆங்கு ஒரு சுவரில் மாட்டப்பட்டிருந்த படமொன்றைக் கொணரச் செய்தார். அப்படத்தை வாங்கிக் கையில் வைத்துக்கொண்டு "நீர் சிறு காரியம் ஒன்று செய்வீரா?" என்று திவானைக் கேட்டார். "தங்கள் ஆணையை நிறைவேற்ற நான் கடமைப்பட்டிருக்கிறேன்" என்றார் திவான். அவரிடமிருந்து அந்த வார்த்தையை வாங்கிக்கொண்ட பிறகு தம் கையில் இருந்த படத்தின் மீது காரித்துப்பும்படி திவானை ஏவினார்; மற்றவர்களையும் அங்ஙனமே தூண்டினார். ஆனால் அவர்கள் எல்லாரும் மருண்டார்கள்; வெகுண்டார்கள்; வியர்வைக் கொட்டினார்கள். "ஏன்! இது வெறும் கண்ணாடியும் காகிதமும்தானே! இதன் மீது துப்புவதற்கு உங்களுக்கு என்ன ஆட்சேபம்?" என்றார். "அது எங்கள் அரசர் பெருமானது படமல்லவா?" என்று ஒடுங்கிய குரலிலுரைத்தார்கள் சபையோர் அனைவரும். சுவாமிகள் மீண்டும் "அப்புகைப்படமானது மகாராஜா அல்ல என்பது உங்களுக்குத் தெரியும். அவர் போன்ற பிரதி பிம்பம் மாத்திரமே அது. எனினும், அதன் மூலம் நீங்

கள் அவருக்கு மரியாதை காட்டுகிறீர்கள். அது போன்றே கல்லும் மண்ணும் கடவுள் ஆகிவிடமாட்டா. 'கல்லே, மண்ணே, தாமிரமே' என்று யாரும் பிரார்த்திப்பதில்லை. இவ்வஸ்துக்களினுல் செய்யப்பட்டிருக்கும் விக்கிரகங்கள் அல்லது சின்னங்களின் மூலம் ஏகனுய், எல்லாம்வல்லவனுய், எங்கும் நிறைந்தவனுய் இருக்கும் முழுமுதற் கடவுளையே நினைந்து ஜனங்கள் வணங்குகின்றனர். கடவுளது ஞாபக மூட்டுதற்கே இந்த உருவங்கள் உதவி புரிகின்றன'' என்று விளக்கிக் காட்டினுர். இதையெல்லாம் செவியுற்ற இராஜா, "பெரியோய்! இது விஷயத்தில் நான் இதுபரியந்தம் அறிவிலியாயிருந்தேன். இப்போது கண் விழித்துக்கொண் டேன்'' என்று கைகூப்பி வணங்கி விநயத்துடன் தெரிவித் தார். பின்பு திவானது வீட்டினின்று புறப்பட சுவாமிகள் எழுந்திருந்தபோது, "என் மீது கிருபை வைக்கவேண்டும் சுவாமிகள்!'' என்ருர் அரசர் பெம்மான். "வேந்தே, கடவுள் ஒருவர்தான் கிருபாமூர்த்தி. அவரை அல்லும் பகலும் வேண்டி வழுத்தும்; உம்மை இரட்சிப்பார்'' என்று பகர்ந் தருளியபின் சுவாமிகள் வெளியேகி விட்டார். சுமார் ஏழு வார காலம் அவர் அந்நகரில் வசித்திருந்து ஆண்டி முதல் அரசன் வரை தம்மை நாடிய அனைவருக்கும் அருள் கனிந்த நல்லுபதேசம் செய்தருளினுர்.

பிறகு நெடுகப் பிரயாணம் பண்ணிக்கொண்டு ஜயப்பூர், ஆஜ்மீர் இத்தியாதி ஊர்கள் உட்படப் பல இடங்களைப் பார்த்துவிட்டுக் கடைசியாக ஆபுமலைக்குச் சுவாமிகள் போய்ச்சேர்ந்தார். தேவகணங்கள் நிலவுவதற்கேற்ற அத்த கைய அழகு வாய்ந்ததாயிருந்தது அம்மலை. பின்பு, அது மக்கள் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு போவதில் வியப் பொன்றுமில்லை. பதின்மூன்ருவது நூற்ருண்டிலே அளவி

ல்லாத தனம் செலவிட்டு அம்மலையின்மீது கட்டப்பட்டிருந்த ஜைனக்கோயிலின் அழகையும், சிற்ப அமைப்பையும் கண்டு களித்து அதற்கு நிகரானது மற்றொன்று நாட்டினுள் இருக்குமோ என்று சுவாமிகள் திகைத்தார். அங்கு ஒருநாள் ஒரு பண்டிதருடன் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டுச் சிரமபரிகாரம் செய்துகொள்ள சுவாமிகள் ஓரிடத்தில் படுத்து உறங்கிக்கொண்டிருந்தார். அப்போது கேத்திரி மகாராஜா அம்மலைக்கு யாத்திரை வந்திருந்தார். அவருடைய காரியதரிசி இவரைத் திண்ணைத் தூங்கிச் சோம்பேறிக் கூட்டத்தில் ஒருவராகக் கருதினர். ஆதலால் இவர் விழித்ததும் பரிகாசம் செய்தற்பொருட்டு இவரோடு உரையாட ஆரம்பித்தார். ஆனால் அந்தோ! சொற்ப நேரத்துக்குள் 'இவர் சாமானியமானவர் அல்லர்' என்பதை அவர் அறிந்து கொண்டார். உடனே காரியதரிசியானவர் மகாராஜாவிடம் போய்த் தாம் தரிசித்த பெரியாரைப் பற்றித் தெரிவித்து இருவரையும் அறிமுகம் பண்ணிவைத்தார். கேத்திரி நாடாண்ட அம்மன்னர் மிகப் படித்தவர்; ஈசுவர பக்தியுடையவர். ஆதலால் சுவாமிகளிடம் அரும்பெரும் விஷயங்களைப் பற்றி அவர் கேள்விகள் பல கேட்டார். இவர் விடுத்த பதில்கள் பக்குவியாகிய அந்த அரசனது உள்ளத்திலே பசுமரத்தாணிபோற் பாய்ந்தன. நற்குண நல்லொழுக்கம் வாய்க்கப்பெற்ற மகாராஜா மீது சுவாமிகளுக்கும் அபிமானம் மிக உண்டாயிற்று. வேந்தனது வேண்டுகோளுக்கிணங்கி சுவாமிகள் அவரைச் சிஷ்யராக ஏற்றுக்கொண்டு உபதேசம் செய்தருளினர். ஆங்காங்குப் பரிபக்குவம் அடைந்தவர்களைக் காணுந்தோறும் அவர்களுக்குத் தீட்சை முதலியன தந்து சிஷ்யர்களாக அவர்களைச் சுவாமிகள் ஏற்று வந்தனர். ஆயுள் பரியந்தம் கேத்திரிக் கோமானனவர் சுவாமிகளின் முக்கிய சீடர்களில் ஒருவராகத் திகழ்ந்

திருந்தார். அமெரிக்காவினின்று அவர் விடுத்த மேலான கருத்துக்களடங்கிய கடிதங்களிற் சில இம்மன்னவருக்கு எழுதப்பட்டனவாம்.

அந்த மஹாராஜாவின் வேண்டுகோளுக்கிணங்கி சுவாமிகள் அந்தச் சமஸ்தானத்துக்குச் சென்று அங்கே கொஞ்ச காலம் தங்கியிருந்தார். வேறு பல ஊர்களுக்குச் சென்று பார்க்க வேண்டிய அவசியம் சுவாமிகளுக்கு ஏற்பட்டிருந் தமையால் அரசர் அரைமனத்துடன் அவரை வழியனுப்பி வைத்தார். அதன் பிறகு அருள் வேந்தர் கூர்ஜரத்தில் பல இடங்களில் பிரசன்னமாயிருந்தார். இலிம்படி என்பதோர் சமஸ்தானம் அம்மாகாணத்தில் உண்டு. சஞ்சாரத்தில் களைத்துப் போயிருந்த சுவாமிகள் அவ்வூர் போய்ச் சேர்ந்த தும், சந்நியாசிகள் வசிக்கும் இடம் ஒன்று அங்கே இருப்ப தாகக் கேள்வியுற்று அங்கே சென்றார். அது ஒரு தன்னந் தனியான வீடு. அதில் வசித்திருந்த சாதுக்கள் சிலர் எத்தனைநாள் வேண்டுமானாலும் அங்கு அமர்ந்திருக்கலா மென்று கூறி அன்புடன் இவரை வரவேற்றனர். அம்மனி தர்களுடைய ஒழுக்கத்தைப் பற்றி முதலில் சுவாமிகள் சிந்திக்கவில்லை. ஆனால் இரண்டு மூன்று நாளில் எல்லாம் இவருக்கு விளங்கி விட்டன. அவர்கள் பில்லி சூனியக்காரர் கள். குரூரமான முறையில் மக்களைப் பலி கொடுத்தும், அரு வருப்பான நீசத்தொழில்கள் புரிந்தும் துஷ்ட தேவதைகளை வசப்படுத்துவது அவர்களது நோக்கம். அத்தகையவர்கள் பக்கத்து அறையில் பூஜை போடுவது சுவாமிகள் காதில் விழுந்தது. தீங்கு ஏதாவது நேரிடுமோவென்று எண்ணி அவர் வெளியேகப் பார்த்தார். ஆனால் அந்தோ! வெளிக் கதவைப் பூட்டி வைத்துக்கொண்டு அவர்கள் காவலிருந்தார் கள்! விபரீதக் கொள்கையும், கொடூரச் செயலும் உடைய

ஒரு கூட்டத்தார் தேவாராதனையின் பெயரால் நீசத்தொழில் செய்வதுண்டு என்று சுவாமிகள் கேள்விப்பட்டிருந்தார். இக்கொடியவர்களால் தமக்குக்கெடுதியும் ஆபத்தும் நேரிடப் போகிறதென்று யூகித்துக் கொண்டாரெனினும் கடவுளை நினைந்து அவர் சாந்தமாயிருந்தார்.

இது இப்படியிருக்க, நம் சுவாமிகளைக் கண்டு தரிசிக்க ஒரு சிறுவன் இடையிடையே அங்கு வந்து கொண்டிருந் தான். அவன் வயதில் சிறியவனானபடியினால் அவனைப்பற்றிச் சூனியக்காரர்கள் யாருக்கும் சந்தேகம் ஒன்றும் உண்டாக வில்லை. மறுநாட்காலையில் அவனைக் கண்டதும் திடீரென்று யோசனை யொன்று சுவாமிகள் மனதில் தோன்றியது. தம் அறையில் கிடந்த ஓர் ஓட்டின்மீது அடுப்புக்கரியால் ஏதோ எழுதி, "நான் அபாயத்தில் அகப்பட்டுக் கொண்டிருக் கிறேன். இதை இவ்வூர் மகாராஜாவிடம் கொண்டோடு" என்று அப்பையன் காதில் ஓதி, ஓட்டைக் கையில் கொடுத் தார். அவனும் அதை வேட்டிக்குள் மறைத்துக்கொண்டு வெளியே போய்விட்டான். ஒரு மணி நேரத்திற்குள் சிப்பாய்த் திரள் ஒன்று அங்கு வந்துவிட்டது. சுவாமிகளும் அப்பாதகர் கையினின்று மீண்டார். அச்சிறுவன் செய்த உதவியைச் சுவாமிகள் என்றும் மறக்கவில்லை.

இவ்விதம் மகாராஜாவின் அரண்மனையைச் சார்ந்த பண்டிதர்கள் சிலருடன் சுவாமிகள் சொற்பநாள் அமர்ந் திருந்தார். அப்பொழுது அரும்பெரும் விஷயங்களைப்பற்றி அவர்களோடு உரையாட சுவாமிகளுக்குச் சந்தர்ப்பம் வாய்த் தது. பிறகு ஜுனகாட் சமஸ்தானத்துக்கு அவர் செல்வாராயி னர். அங்கே அரசருடனும் மற்றும் பல பிரமுகர்களுடனும் அவர் நெருங்கிப் பழகினது தமதுபேருக்காகவும் புகழுக்காக வும் அன்று. சமுதாயத்தில் பொறுப்பு மிகப் படைத்திருந்த

அன்னவர்களைச் சீர்த்திருத்திவிட்டால் அவர்களின் மூலம் ஆயிரக்கணக்கான பிரஜைகள் நன்மையடைவார்கள் என்பதே அவரது நோக்கம். கல்வி, பொருளாதாரம், கைத்தொழில், விவசாயம் முதலிய தொழில்களில் என்னென்ன அபிவிருத்திகள் செய்ய வேண்டுமென்று அரசர்களுக்கும், மந்திரிப் பிரதானிகளுக்கும், திவான்களுக்கும் சுவாமிகள் எடுத்துப் போதிப்பார். இன்று அவர் ஓர் இராஜ மாளிகையிலும், நாளை ஓர் ஏழையின் குடிசையிலும் காணப்படுவார். இவ்வாறு பிரயாணம் செய்த சுவாமிகள் ஜுனகாட் ராஜ்யத்துக்குத் திவானயிருந்த பாபு ஹரிதாஸ் விஹாரிதாசுடைய விருந்தினராகக் கொஞ்சகாலம் தங்கியிருந்தார். அதுபோழ்து தினந்தோறும் திவானுக்கும் மற்ற, உத்தியோகஸ்தர்களுக்கும் சநாதன தர்மத்தின் பெருமையைப் புகட்டி வந்தார்.

கூர்ஜர மாகாணத்திலிருந்த மற்றும் பல இடங்களுக்கும், சிற்றரசர்களது நகரங்களுக்கும் சுவாமிகள் போயிருந்தார். அவைகளுள் சுதாமபுரி ராஜ்யம் குறிப்பிடத்தக்கது. அந்நாட்டு மகாராஜாவுடன் ஒன்பது மாதகாலம் அவரது அரண்மனையிலேயே சுவாமிகள் அமர்ந்திருந்தார். அவ்வாறு அவர் அங்குத் தங்கியதன் நோக்கம் அங்கிருந்த பண்டிதர்களுடன் கூடி வேதங்களையும், மற்றும் பல சாஸ்திரங்களையும் ஆராயவேயாம். இந்த ஆராய்ச்சியும் பிற்காலத்தில் சுவாமிகளுக்கு மிகவும் பயன்பட்டது. ஆயுள் பரியந்தம் அவ்விடத்திலேயே அமர்ந்துவிடும்படி மகாராஜாவானவர் சுவாமிகளை மிக வேண்டினர். ஆனல் அருளாளர் அதற்கு எவ்வாறு இசைவார்? பரத கண்டம் முழுதையும் தாம் சுற்றிப்பார்க்க வேண்டுமென்றும், தம்மால் பூர்த்தியாக வேண்டிய பெருங் காரியம் ஏதோ ஒன்று இருக்கிறதென்றும், அது எத்தகை

யது, எவ்வாறு முடிவுபெறுமென்று தமக்கே தெரியாதென்றும் அவர் பகர்ந்தருளினர். இவரது ஆற்றல்களையெல்லாம் ஒருவாறு அறியலான பண்டிதர்கள் ஐரோப்பா, அமெரிக்கா முதலான மேல்நாடுகளில் வேதாந்த மதத்தை விளக்கிக் காட்டவல்லவர் இவர்தாம் என்று கருதலானர்கள். இந்த எண்ணத்தை முதன் முதல் இவருக்கு ஊட்டினவர்களும் இப்பண்டிதர்களேயாம். சுவாமிகளும், "இறைவனது திருவருள் சம்மதம் எதுவோ அதன்படி எல்லாம் நடைபெறுவனவாகுக" என்று நவின்றுவிட்டு அந்நாட்டினின்று புறப்பட்டார்.

பின்பு அம்மகாபுருஷர் பிரவேசித்த பட்டணங்களில் பிரதானமானது பம்பாய் நகரம். ஈண்டு அவர் இருந்தது சில நாட்களே எனினும் பிரபலமானவர்கள் பலரைச் சந்தித்துப்பேச அவருக்குத் தருணம் விரைவில் வாய்த்தது. சுவாமிகளும் அவர்கள் மனத்தகத்தே இருந்த மருளைநீக்கி அறிவை அன்னவர்களுக்கு வழங்கியருளினர். அவர்களுள் விருத்தாப்பிய வைதிகர்கள் கிளிப்பிள்ளைகள் போன்று சாஸ்திரங்களை ஓதினவர்களாயிருந்தார்களேயொழிய அவர்களது வாழ்விலே காலமாறுபாட்டுக்கு ஏற்பப் புதிய பெருமை எதுவும் பொலியாதிருந்ததைக் கண்ட சுவாமிகள் நாட்டின் க்ஷீண தசையை நினைந்து மிக வருந்தினர். ஆனல் வாலிபர்களுக்குத் தேசியக்கல்வி அளிக்கப் பெருதிருந்த போதிலும், அவர்கள் மாட்டுப் புதிய கருத்துக்களைக் கிரகிப்பதில் அவாவும் காலத்துக்கேற்ற வாழ்வுமுறையைக் கையாள வல்ல ஆற்றலும் இருப்பதைக்கண்டு, வருங்காலத்தில் தேசம் முன்னேற்றம் அடையப்போவது இளைஞர்கள் மூலமாகத்தான் என்று அவர் நன்கு உணரலானர்.

சுவாமிகள் பின்னர் பூனவிற்கு விஜயம் செய்தார். மகாபண்டிதரெனவும் தேசாபிமானியெனவும் நாடெங்கும்

பிரசித்திபெற்றிருந்த பாலகங்காதரதிலகருடன் இவ்வூரிலே சுமார் பத்துநாள் அவர் தங்கியிருந்தார். நான்கு வேதங்களேயும் கசடறக் கற்றவர் திலகர் பெருமான். ஆதலால், சுவாமிகளும் அவரும் வைதிக வாழ்வே இந்தியாவின் சிறந்த நாகரிகம் என்றும், அதை ஆதாரமாகக்கொண்டு தான் புதிய முறையில் இந்தியா புத்துயிர் பெற்று எழுந்திருக்கவேண்டுமென்றும் அளவளாவி உரையாடியிருந்தனர். அங்கிருந்து சுவாமிகள் பெல்காம் என்னும் பட்டணம் போய்ச் சேர்ந்தார். அங்குக் கற்றவர்களும் மற்றவர்களுமாக ஏராளமானவர்கள் வந்து அவரைச் சூழ்ந்துகொண்டேயிருந்தனர். அண்ணலும் அவர்களுக்கு வேண்டிய நற்புத்திகளேப் புகட்டி வந்தார். அவைகளில் இரண்டொன்று ஈண்டுக் குறிப்பிடத்தக்கவைகளாகும். அதாவது சதா ஔஷதம் சாப்பிடும் பழக்கத்துக்கு யாரும் ஆளாய்விடலாகாது. மனந்தான் அநேக வியாதிகளுக்குக் காரணம். ஆதலால் மனம் உற்சாகத்துடனும், மகிழ்ச்சியுடனும், தூய்மை பொருந்தியும் இருந்தால் நோய்கள் பல எளிதில் தவிர்க்கப்படும். அத்துடன் தேகத்தைத் தளர்வுறச் செய்கின்ற இன்பம் எதிலும் மனிதன் ஈடுபடலாகாது. இனி, அனுபவத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு உலகை ஆராய்பவர்க்கு அரியதொரு உண்மை விளங்கும். அதாவது நல்லவர்களுக்குத் தான் உலகம் நல்லதாகத் தோன்றும். பிறர்மீது குறைகூருது எல்லார்க்கும் அன்பாய் நடப்பவனிடத்து மற்றவர்களும் அன்பாய் நடந்துகொள்வார்கள் என்பதாம்.

பம்பாய் இராஜதானியில் சஞ்சரித்துக்கொண்டிருந்தபோது சுவாமிகள் அநேகமகாராஜாக்களேச் சந்திக்கநேரிட்டதெனினும், அவர் அப்பிரதேசங்களில் சிற்சில வேளேகளில் உண்ண உணவில்லாது கழித்த நாட்களும் இருந்தன. ஒரு

முறை அவர் முதுவேனிற் காலத்தில் ரயில் வண்டியில் நெடும் பிரயாணம் பண்ணநேர்ந்தது. அப்போது எந்த ஸ்டேஷனிலும் விலை கொடுத்தாலொழியக் குடிப்பதற்கும் ஜலம் அகப்படாது போய்விட்டது. சுவாமிகளோ கையில் பணம் வைத்துக்கொள்வதில்லை. ஆதலால் ஒருநாள் முழுதும் ஜலபானமுங்கூட இல்லாது அவர் வண்டியில் போய்க் கொண்டிருந்தார். அவரோடு பிரயாணம் பண்ணிய ஒரு வணிகன் அவரைப் பரிகாசம் பண்ணிக்கொண்டே போனான். ஏனென்றால் பணம் சம்பாதியாத சோம்பேறியைக் காண அவனுக்குப் பிடிக்கவில்லை. மறுநாள் உச்சிவேளையில் ஒரு சந்திப்பு ஸ்டேஷனில், ரயில் வண்டி மாற்றுதற்காகத் தங்கு மண்டபம் ஒன்றில் பிரயாணிகள் காத்திருக்க வேண்டிய தாயிற்று. ஏதோ கொஞ்சம் குடிக்கூலி கொடுத்தவர்களை மட்டும் காவற்காரன் மண்டபத்தினுள் உட்காரவிட்டான். தம் கையில் காசு இல்லையாதலால் சுவாமிகள் மண்டபத் துக்குள் பிரவேசிக்கவும் முடியவில்லை. வேட்டி ஒன்றை நனைத்து, சுடு மணலின்மீது அதை விரித்து, ஒரு கம்பத்தின் மீது சாய்ந்துகொண்டு, மாளாத கடும் வெயிலில் அவர் உட்கார்ந்திருந்தார். அவர் எதிரே மண்டபத்தினுள் அமர்ந் திருந்த வணிகனுக்கு இதெல்லாம் வேடிக்கையாயிருந்தது. "சந்நியாசியாரே, பாரும்! நான் கஷ்டப்பட்டுப் பணம் சம்பாதிக்கிறேன்; ஆதலால் நிழலிலே வீற்றிருந்து பூரி,லட்டு முதலிய பட்சணங்கள் புசிக்கின்றேன். நீர் உலகைத் துறந்த பெரியார் அல்லவா? ஆதலால் உலர்ந்த தொண்டையும் ஒடுங்கிய வயிறுந் தாங்கி வெய்யிலில் புழுங்கிக்கிடப்பதுதான் உமது கதி!" என்று பரிகசித்தான். எரிசினம் ஊட்டும் இந் நிலையிலும் சுவாமிகளது முகத்துக்கு அணிகலமாக இலங்கிய சாந்தம் சிறிதும் மாறவில்லை.

அப்போது அவ்வூரைச் சார்ந்த மனிதன் ஒருவன் வலக் கரத்திலே பெரியபொட்டலமொன்றும், லோட்டாவொன்றும், இடக்கரத்திலே ஆசனமொன்றும் மண் கூஜாவில் குளிர்ந்த ஜலமும் பற்றி எடுத்துக்கொண்டு அங்கு வந்து சேர்ந்தான். ஓரிடத்தில் அவசரத்துடன் ஆசனத்தைப் பரப்பி, அதன்மீது தான் கொணர்ந்த பண்டங்களை வைத்துவிட்டு "போஜனம் பண்ண எழுந்தருளும் சுவாமி!" என்று பசித்திருந்த சுவாமிகளை வணங்கி வேண்டினன். சுவாமிகள் சற்று நேரம் ஒன்றும் பேசாதிருந்தார். ஆனல் அம்மனிதன் ஓயாது வேண்டியழைத்தபோது அவர், "நான் உன்னை முன்பின் அறியேன். நீ தேடுபவர் வேறு யாரோ ஒருவர் இருக்க, என்னைத்தான் அம்மனிதன் என்று நீ தவருக எண்ணுகிருய் போலும்" என்ருர். "இல்லை, இல்லை: எனக்குக் காண்பிக்கப்பட்டவர் நீங்கள்தான். தயவு கூர்ந்து விரைவில் உணவேற்க வாருங்கள் சுவாமி" என்று பணிவுடன் திரும்பவும் அழைத்தான் புதியதாக வந்த அம்மனிதன். "நீ என்னை எங்குக் காணலுற்ருய்? விவரம் சொல்லுக" என்று சுவாமிகளும் மிக வியந்து அம்மனிதனிடம் வினவினர்.

அதற்கு அம்மனிதன், "அடியேன் இவ்வூரிலுள்ள ஒரு மிட்டாய்க்கடைக்காரன். இன்று நான் போஜனம் பண்ணியதும் சிறிது கண்ணுறங்கலாமென்று படுத்தேன். அப்போது ஸ்ரீ ராமபிரான் எனது கனவில் தோன்றி, தங்களை நன்ருகக் குறிப்பிட்டுக் காட்டி, 'என் பக்தன் இரண்டு நாளாய் உண்ண உணவின்றி வருவதைக் காண நான் ஆற்றகில்லேன். பூரியும் கறியும் சமைத்து, மிட்டாய் வகைகள், குளிர்ந்த ஜலம், அமர்ந்திருக்க ஆசனம் இவைகளை எடுத்துக்கொண்டு ஸ்டேஷனுக்குப் போய் என் பக்தனுக்குப் பணிவிடை செய்' என்ருர். விழித்தெழுந்த பேதையேன்

இது வெறுங்கனவெனக் கருதி அப்புறம் திரும்பிப் படுத்தேன். ஆனால் எம்பெருமான் மறுபடியும் என்னைத் தட்டியெழுப்பி இப்பணியாற்ற ஆக்ஞாபித்தார். அவ்வண்ணமே அடியேனும் விரைந்து வந்துள்ளேன். தூரத்தில் வரும்போதே தேவரீரை அடையாளம் தெரிந்துகொண்டேன். பசியால் வாடியிருக்கும் பெரியோய்! உண்ண எழுந்தருளும்'' என்று பகர்ந்துகொண்டு கைகூப்பி வணங்கி வேண்டி நின்றான். தமது உபாசனா மூர்த்தியாகிய இராமபிரானது கருணையை நினைந்துகொண்டே சுவாமிகளும் அமுதுபண்ணினார். நிகழ்ந்தயாவையையும் வியப்புடன் பார்த்து வந்த வணிகன் தனது அபராதத்தை க்ஷமித்தருளும்படி சுவாமிகளின் அடியிணையில் விழுந்து நமஸ்கரித்து வேண்டினான். நிந்தை ஸ்துதி, மானம் அவமானம் இவையாவையையும் சமமாகப் பார்க்கும் தீர்க்கதரிசியாகிய நம் துறவி வேந்தர் அவ்வணிகனிடம்தாம் சிறிதும் வெகுளவில்லையென்று அவனுக்கு உறுதி கூறினார். பின்பு அவனுக்கும் சிறிது பட்சணம் வழங்கினார்.

ஆணவ அகங்காரம் உடையவர்களை அதட்டிப் புத்தி புகட்டவல்ல ஆற்றலும் ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் மிகப் படைத்திருந்தார். ஒருநாள் பிரபு ஒருவர் ரயிலில் இரண்டாம் வகுப்பு வண்டிக்கு இவருக்குச் சீட்டு வாங்கிக் கொடுத்திருந்தார். பெட்டி படுக்கையின்றி, உணவின்றி இவர் இரண்டாம் வகுப்பு வண்டியிலே பிரயாணம் பண்ணினது அவ்வண்டியிலே பிரயாணம் செய்த இரண்டு ஆங்கிலேயர்களுக்கு வியப்பூட்டியது. இரந்துண்ணும் பக்கிரி ஒருவனுக்குத் தாங்கள் பேசும் ஆங்கில மொழி எவ்வாறு தெரியுமென்றெண்ணி அவர்கள் சுவாமிகளைக் குறித்துப் பரிகாசமாய்ப் பேசிக் காலம் போக்குவாராயினர். சுவாமிகளும் ஒன்றும் தெரியாதவர்போல் அமரிக்கையாகவே அமர்ந்திருந்

தார். நெடுந்தூரம் சென்றபின் ஓரிடத்தில் வண்டி நின்ற போது பருக நல்ல ஜலம் எங்கு அகப்படுமென்று ஸ்டேஷன் மாஸ்டர் ஒருவரை சுவாமிகள் ஆங்கிலத்தில் வினவினர். உடன் சென்ற வெள்ளைக்காரர்கள் இருவரும் வியப்படைந்து, "ஓ, உமக்கு ஆங்கிலம் தெரிகிறதே! நாங்கள் பகடி பண்ணினதை நீர் ஏன் நிராகரிக்கவில்லை?" என்று கேட்டார்கள். "அன்பர்களே! நான் மூர்க்கர்களைக் காண்பது இது வல்ல முதல் தடவை!" என்று சுவாமிகள் மறுமொழி விடுத்தார். அதைக் கேட்டதும் வெள்ளைக்காரர்களுக்குக் கோபம் மூண்டு விட்டது. இவரைத் தாக்கித் துன்புறுத்த வேண்டுமென்று அவர்கள் சினந்து முன் வந்தார்கள். "ஓகோ! ஒழுக்கம் தவறி நடந்துகொண்டதுமல்லாமல் தேக வலிமையால் உங்களது மேன்மையைச் சாதிக்க வருகின்றீர்களா? நல்லது வாருங்கள்! அதற்கும் ஆயத்தம்!" என்று சொல்லிக்கொண்டே சட்டை விளிம்பைச் சுருட்டிக்கொண்டு சுவாமிகள் மற்போருக்குத் தயாரானர். பக்கிரியின் முகத்தில் திகழ்ந்த தைரியத்தையும், புஜங்களில் துடித்த வலிமையையும் காணலுற்ற ஆங்கிலேயர்கள் இந்த மனிதனேடு முரண்படுவது பொருந்தாது என்றெண்ணி மெதுவாகப் பின் வாங்கி விட்டார்கள். தாங்கள் தவறுதலாக நடந்துகொண்டதற்கு மனப்பூர்வமாக மன்னிப்பும் கேட்டுக்கொண்டார்கள். அதன் பிறகு சுவாமிகள் அவ்விருவருடன் அன்போடு உரையாட ஆரம்பித்தார். சுத்த வீரனே அஹிம்சா தர்மத்தையும், காருண்யத்தையும் கையாள வல்லவனென்று சுவாமிகள் புகட்டி வந்தார். அப்படி அவர் புகட்டியதற்கும், அவர் இது போன்ற சந்தர்ப்பங்களில் நடந்து கொண்டதற்கும் இடையில் உள்ள பொருத்தம் சிந்தனைக்குரியதாம்.

---

10. பாரதத் தாயின் திருவடியில்

பெல்காமினின்று தென்முகமாகப் புறப்பட்டுச் சென்ற சுவாமிகள் பெங்களூர் வந்து சேர்ந்தார். அந்நகரில் இருந்த அறிஞர்கள் பலர் ஒரு வாரத்துக்குள் இவரது பெருமையை அறிந்து இவர்பால் புடை சூழலாயினர். மைசூர் சமஸ்தா னத்துக்கு அப்போது திவானயிருந்த சேஷாத்திரி ஐயர் அவர்கள் சுவாமிகளைத் தமதில்லத்திலேயே அதிதியாக அமர்ந்திருக்கச் செய்தார். சொற்பநாளில் மகாராஜா ஸ்ரீ சாமராஜேந்திரா உடையார் முன்னிலைக்கு அவர் அழைத் துச் செல்லப்பட்டார். சுவாமிகளின் பேரறிவையும், தேசாபி மானத்தையும் மற்றும், பல மாண்புகளையும் காணலுற்ற மகாராஜாவுக்கு அவர்மீது நாளேற ஏற அன்பும் மரியாதை யும் அதிகரித்துக்கொண்டே வந்தன. இராஜ்ய பரிபால னத்தைப் பற்றிய விஷயங்கள் பலவற்றை இவர் அவ்வேந்த னுக்கு எடுத்துப் புகட்டினர். அவர்பாலிருந்த பல நற் குணங்களைச் சுவாமிகள் யாண்டும் புகழ்ந்து பேசினரெனி னும் நேரே அவரோடு உரையாடினபோதெல்லாம் அவர் மாட்டிருந்த குறைபாடுகளை எடுத்தோதிச் சீர்திருத்த முயன்ருர். சமஸ்தானக் காரியங்களை நிர்வகித்த உத்தி யோகஸ்தர்களைப் பற்றியும், பிரதானிகளைப் பற்றியும் சுவாமி கள் கொண்டிருந்த அபிப்பிராயம் யாதென்று மகாராஜா வானவர் கேட்டார். அப்போது உத்தியோகஸ்தர்கள் பலர் பக்கத்தில் இருந்தும் சுவாமிகள் தயங்காது அவர் களுடைய குணக்குற்றங்களையெல்லாம் அச்சபையின்கண் எடுத்துச் சொன்னர். பெரிய அந்தஸ்தில் இருப்பவர்களைப் பற்றி இவ்வாறு வெட்ட வெளிச்சமாகப் பேசுவது சில சம யங்களில் உயிருக்கே ஆபத்தாய் முடியுமென்று சுவாமி களைத் தனியாக அழைத்து அரசர் சிறிது கவலையுடன்

தெரிவித்தார். அதற்கு அருளாளர் "முகஸ்துதி பண்ணுவது சந்நியாசியுடைய தொழில் அன்று. வேந்தே, உமது ஒழுக்கத்தைப் பற்றி எனது அபிப்பிராயம் யாதென்று உமது குமாரர் கேட்பாராகில் நான் யதார்த்தந்தான் பேசுவேன். உயிரையும் பொருட்படுத்தாது சத்தியம் பேச வேண்டியது சந்நியாசியினுடைய கடமை. தவிர தங்கள் இராஜ்ய பரிபாலனத்தைத் தர்ம நெறிக்கிசைய சீர்திருத்த வேண்டுமென்பதுதான் எனது நோக்கம்" என்றார். துறவு வேடம் பூண்டிருப்பினும் இவர்தாம் உலகை ஆளுதற்கு அருகர் என்று மன்னரும் மனதில் எண்ணிக்கொண்டார்.

திங்கள் ஒன்றிரண்டு கழிந்த பின்பு மைசூரினின்று புறப்படவேண்டுமென்று சுவாமிகள் கருதினர். ஆனல் அவரை விட்டுப் பிரியு முன்பு அவருக்குப் பாதபூஜை பண்ணவேண்டுமென்று பாராளும் வேந்தர் விரும்பினர். அண்ணலானவர் அதற்கு இசையவில்லை. அமெரிக்காவில் நடைபெறுதற்கிருந்த சர்வமத மகாசபைக்குச் சுவாமிகள் விஜயம் செய்ய வேண்டுமென்றும், அதற்கென வேண்டிய அளவு பொருளுதவி புரியத் தாம் ஆயத்தமாயிருப்பதாகவும் ஸ்ரீ சாமராஜேந்திர உடையார் தெரிவித்தார். 'ஈசுவர சங்கற்பப்படி ஆகுக' என்று சுவாமிகள் பகர்ந்துவிட்டு ரயில் மார்க்கமாகக் கேரளத்துக்குச் சென்றார். கொச்சியிலும், திருவனந்தபுரத்திலும் வழக்கம் போலப் பல அறிஞர்களுக்கு இவர் அறிமுகமானர். திருவாங்கூர் மலைநாட்டின் வனப்பைக் கண்டு சுவாமிகள் கழிபேருவகையுற்றார். அங்கிருந்து மதுரை மார்க்கமாய் இராமநாதபுரம் போய், அந்நகர் இராஜா பாஸ்கரசேதுபதிக்கு அறிமுகம் ஆனர். பக்திமானகிய பாஸ்கர சேதுபதி சுவாமிகளின் மகிமைகளை அதிவிரைவில் அறிந்துகொண்டார். அவர் அவசியம் அமெரிக்கா

போக வேண்டுமென்றும், அதற்காகத் தம்மால் இயன்ற பணிவிடைகளை யெல்லாம் தாம் செய்யத் தயாராய் இருப்பதாகவும் இராஜா பேருக்கத்துடனும் உற்சாகத்துடனும் பகர்ந்தார். ஆனால் அவருக்கும் உறுதிமொழி ஒன்றுங் கூருது, 'இறைவனது திருவுளப்படி ஆகுக' என்று நவின்று விட்டுச் சுவாமிகள் இராமேசுவரம் என்னும் திருப்பதியை நண்ணினர். இந்தத் தீர்த்தத்தில் சொற்பநாள் வதிந்திருந்த விவேகானந்தர் இதைத் தக்ஷிணகாசி என்றே சொல்லத்தகும் என்று போற்றினர்.

கடைசியாகப் பாரதத் தாயின் திருவடியெனத் திகழும் கன்னியாகுமரிக்குச் சுவாமிகள் எழுந்தருளினர். இங்கே அவர் மனத்தகத்தே எழுந்த உயர்ந்த எண்ணங்களைக் கூறி முடியா. வடக்கே இரண்டாயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள பத்ரிகாஸ்ரமத்தினின்று தென்கோடியிலிருக்கும் குமரிமுனை பரியந்தம் உள்ள பிரதேசம் அனைத்தும் சேர்ந்து ஒரே திருப்பதியென அவருக்குத் தென்படலாயிற்று. "எத்தனை யெத்தனை பாங்குள்ள ஜனங்கள்! பாஷைகள் எத்தனை! பழக்க வழக்கங்களில் என்னென்ன வேறுபாடுகள்! வேற்றுமைகள்! இத்தனைக்குமிடையே உயர்ந்த ஒற்றுமையும் ஒன்று பரந்த இந்நாட்டினுள் உளது! அதாவது பல்லாயிரம் ஆண்டுகளாகப் பாரமார்த்திகம் ஒன்றே இந்நாட்டின் ஒப்பற்ற உயர்ந்த இலட்சியமாய் இலங்கி வந்திருக்கிறது. தர்மம் ஒன்றுதான் இப்புண்ணிய பூமியின் உயிர்நாடி. அது தழைத்தோங்கிய காலங்களிலெல்லாம் தேசத்தில் எல்லா மேன்மைகளும் மிளிர்ந்திருந்தன. அது குறையவே கேடுகள் பல வந்துள்ளன. மேல்நாட்டு நாகரிகம் என்னும் மயக்கம் ஒன்று இடையில் இந்நாட்டினுள் புகுந்திருக்கிறது. கட்டுலைகாத முறையில் அது மக்களுக்கிடையில் தீங்கிழைத்து

வருகிறது. ஆயினும் அதனிடத்துச் சிறப்பு இயல்புகளும் சில உள்ளன. அதன்பால்உள்ள குணங்களை மட்டும் எடுத்துக் கொண்டு குற்றங்களையெல்லாம் அறவே களையவேண்டும். இதற்கு முதலில் மேல்நாட்டுக்குப் போய் அவ்விடத்திய மேதாவிகளைச் சநாதன தர்மத்தின் பெருமைகளை உணரும்படி செய்தல் சிறந்த உபாயமாகும். அதன் பிறகே இந்தியாவும் ஒழுங்குக்கு வரும்"—இவ்வாறெல்லாம் சுவாமிகள் சிந்திப்பாராயினர். சீரிய எண்ணங்கள் பல அவரது சிந்தையில் வந்து சூழ்ந்தன. கடைசியாகப் பாரதநாடு பழம் பெருமையை மீண்டும் பெறுதற்குத் தாம் செய்யவேண்டிய அறப்பணி இன்னதென்று தீர்மானித்தார் துறவி வேந்தர். பிறகு அண்டங்கள் அனைத்தையும் ஈன்றெடுத்த பின்னரும் கன்னியெனக் குமரிமுனையில் எழுந்தருளியிருக்கும் அன்னை ஜகன்மாதாவை வாழ்த்தி வணங்கிவிட்டு சுவாமிகள் சென்னையை நோக்கிப் புறப்பட்டார்.

அவர் புதுச்சேரி போய்ச்சேரும் பரியந்தம் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியொன்றும் நேரவில்லை. ஆனால் வழியெங்கும் தமிழ்நாட்டின் மாண்புகளை அவர் நேரே கண்டறிந்து கொண்டார். இப்பரம புருஷர் புதுச்சேரியில் வதிந்திருந்த போது புராதான வைதிக பண்டிதர் ஒருவருடன் நெடிய சம்வாதம் ஒன்று நடைபெற்றது. வைதிக தர்மத்தில் எந்த விதமான சீர்திருத்தமும் செய்யலாகாதென்றும், அங்ஙனம் செய்தற்கு அவசியம் இல்லையென்றும், ஜாதி வேற்றுமைகள் இருக்கத்தான் வேண்டுமென்றும், இந்துக்கள் வெளிநாடுகளுக்குக் கப்பல் பிரயாணம் பண்ணலாகாதென்றும், மிலேச்சர்களாகிய ஆங்கிலேயர்களுடன் வைதிக தர்மத்தார் பழகலாகாதென்றும் அப்பண்டிதர் வாதாடினர். அவருடைய கொள்கைகளெல்லாம் பண்டைக்காலத்துக்கே உரியன

என்பதும், வைதிகமானது உள்வலிவை இழக்காமலே கால நிலைமைக்கு ஏற்றவாறு மாறவல்லது என்பதும், அப் போதைக்கப்போது அவதரித்துள்ள ஆசாரிய புருஷர்கள் அங்ஙனமே செய்து சாதித்திருக்கின்றார்கள் என்பதும், இப் போது கால வேறுபாட்டிற்கு ஏற்றவாறு இந்துக்கள் வாழ்வு முறையை மாற்றிக்கொள்ள வேண்டுமென்பதும், அவ்வாறு செய்யாவிடில் உலக முன்னேற்றத்தில் இவர்களுக்கு இட மில்லாது போய்விடுமென்பதும் சுவாமிகளின் கடைந் தெடுத்த கொள்கைகளாகும். பழைய போக்குப் பண்டிதர் கருத்தில்பட்ட வைதிகதர்மம் ஒருவிதமானது. காலமாறு பாட்டை அனுசரித்து சமுதாய வாழ்க்கைமுறையைத் திருத்தியமைக்கவேண்டுமென்று உணர்ந்த துறவி வேந்தர் கருத்தில்பட்ட வைதிக தர்மம் மற்றொருவிதமானது. ஆத லால் அவ்விருவருக்கும் இடையில் அபிப்பிராய ஒற்றுமை உண்டாகவில்லை. பண்டிதரது பழங்கொள்கைக்குச் சுவாமி கள் அனுதாபம் மிகக் காட்டினர். ஆனல் அதற்கு ஆதரவு கொடுக்க அவர் சம்மதிக்கவில்லை.

சென்னையில் சுவாமிகள் எழுந்தருளுதற்குச் சில நாட் களுக்கு முன்னரே பேராற்றலுடைய பெரியார் ஒருவர் வரு கிறார் என்ற செய்தி ஆங்கு எட்டியது. ஊராரிற் சிலர் ஆவலுடன் அவரது நல்வரவை எதிர்பார்த்திருந்தனர். பிறகு ஆங்கிலம் பேசுகிற சுவாமிகள் ஒருவர் பட்டணத்தில் பிரவேசமாகியிருக்கிறார் என்ற விவரம் ஊர் எங்கும் அதி வேகமாய்ப் பரவியது. கல்லூரிகளினின்று மாணவர்களும், ஆசிரியர்களும் பெருங்கூட்டமாக அவரைக் காணச் சென் றார்கள். அவர்களுள் சிலருக்குச் 'சந்நியாசி ஒருவர் ஆங் கிலம் பேச முடியுமா?' என்ற ஆச்சரியம்! இந்து மதத்தின் ஊழல்களை எடுத்துக்காட்டி அவரை வாயடக்கவேண்டும்

என்ற தீர்மானம் இன்னும் சிலருக்கு; பாண்டித்தியத்தால் அவரைத் தோற்கடிக்க வேண்டுமென்று கல்விச்செருக்குடைய வேறு சிலர் கருதினர்; தமாஷ் பார்க்க வந்தனர் மற்றும் சிலர்; பயபக்தியுடனும் அன்புடனும் அணுகினவர்கள் மிகமிகச் சிலரேயாம். ஆனல் ஆணவத்துடன் வந்தவர்கள் கல்லின்மீது மோதுண்ட மண்கலம் எனத் தோல்வியுற்றனர். புராணம், இதிகாசம், காவியம், ஓவியம், பௌதிகசாஸ்திரம், ஆங்கிலம், சம்ஸ்கிருதம் முதலிய பாஷைகள், மேல்நாட்டு மேதாவிகளின் ஆராய்ச்சிகள், சங்கீதம், சிலம்ப வித்தை, தேகப் பயிற்சி ஆகியவைகளைப் பற்றியும் இன்னும் பலப்பல விஷயங்களைப் பற்றியும் பேச்சுக்கள் எழுந்தன. வெல்ல வந்தவர்கள் எல்லாரும் வெல்லப்பட்டனர். கடைசியில் சுவாமிகள் கல்வியில் கரை காணமுடியாத ஒரு சமுத்திரமென்று எல்லாரும் ஒருங்கே ஒத்துக்கொண்டனர்.

அமெரிக்காவில் கூடுதற்கிருந்த சர்வமத மகாசபைக்கு இந்து மதத்தின் பிரதிநிதியாகப் போகத் தகுந்தவர் நம் சுவாமிகள்தான் என்று சென்னை வாசிகளுள் பலர் தீர்மானித்தார்கள். அவர்களது வேண்டுதலுக்கு இணங்கினவராகச் சுவாமிகள் ஏற்கனவே கொண்டிருந்த கருத்தை ஸ்திரப்படுத்தினர். ஊக்கம் ததும்பிய மாணவர்கள் உடனே வீடு வீடாய்ச் சென்று இரண்டு மூன்று நாட்களில் பிரயாணச் செலவுக்காக ரூபாய் ஐந்நூறு வசூலித்துக்கொண்டு வந்து விட்டார்கள். "பணத்தைக் கையாளவேண்டி வந்துவிட்டதே" என்று சுவாமிகள் சிறிது தயங்கினர். தாம் மேல் நாட்டுக்கு விஜயம் செய்வது தெய்வாதீனத்துக்கு ஏற்ப உசிதமென்றல் மேலும் நிதி தானகவே வருமென்றெண்ணி, இந்த ரூபாய் ஐந்நூறையும் ஏழைகளுக்கு அன்னமிடுவதில்

சுவாமிகள் செலவழித்துவிட்டார். இதற்கிடையே ஐதரா பாத்தை ஆளும் நைஜாம் உட்பட அறிஞர்கள் பலர் இவரை அந்நகருக்கு விஜயம் செய்யவேண்டுமென்று வற்புறுத்தி வரவழைத்தனர். சுவாமிகளும் அதற்கிசைந்து ஆங்குச் சென்றிருந்தார். அவர் அமெரிக்காவுக்குப் போகவேண்டிய அவசியத்தைப்பற்றி அவ்வூர்ப்பெருமக்களும் பலவாறு எடுத்து இயம்பினர்.

இப்பொழுது இதற்கெல்லாம் ஒருவாறு இசைந்தவரா கச் சுவாமிகள் திரும்பவும் சென்னை வந்து சேர்ந்தார். அவர் மேல்நாட்டுக்கு எழுந்தருள வேண்டுமென்னும் உணர்வு கற்றவர்களுக்கிடையில் அதிகரிக்கலாயிற்று. அவர் அமெ ரிக்கா போயே ஆகவேண்டுமென்று பலர் மிக வேண்டினர் கள், வற்புறுத்தினர்கள். எனினும் "ஆண்டவனிடமிருந்து தமக்கு ஆதேசம் இன்னும் வரவில்லையே" என்று இவர் ஏங்கியிருந்தார். இது சம்பந்தமாக அவர் அல்லும் பகலும் இறைவனை நினைந்து நினைந்து தியானம் பண்ணிக்கொண்டி ருந்தார். தாம் இருக்குமிடம் இன்னதென்று தமது குரு சகோதரர்களுக்குத் தெரிவிக்காமலே இருந்தார் சுவாமிகள். ஆனால் அதை இப்பொழுது மறைத்துவைக்க முடியவில்லை. சுவாமி சாரதானந்தருக்கு அவர் ஒரு கடிதம் எழுத வேண் டியதாயிற்று. தாம் அமெரிக்கா போய்வருவதைக் குறித்து அன்னைசாரதாதேவியார் என்ன அபிப்பிராயம் கொள் கிறார் என்பதை அறிந்து தமக்குத் தெரிவிக்கவேண்டும் என் பதே அக்கடிதத்தின் உட்பொருளாகும். இப்படி இருக்கை யிலே ஒருநாள் தம்மை ஆட்கொண்ட பெம்மான் திடீரென்று தம் எதிரே பிரசன்னமாவதைப் பார்த்தார். தம்மைப் பின் பற்றும்படி சைகையால் அன்னவர் அறிவித்துவிட்டுச் சமுத் திரத்தினுட் சென்று மறைந்தார். இந்த அருட் காட்சியைப்

பெற்றபின்பே புறநாடு செல்வதைப் பற்றிய எண்ணத்தை அவர் ஊர்ஜிதப்படுத்தினர். உடனே தமக்கு உத்தரவு வந்து விட்டதென்று கருதி விவேகானந்த சுவாமிகளும் வெளிநாடு புறப்படச் சம்மதம் கொடுத்து சென்னே அன்பர்களைத் திருப்திப் படுத்தினர். இதற்குள்ளாக அன்னை சாரதாதேவியாரின் பூரண அனுமதியும், ஆசியும் அடங்கிய மறுமொழிக் கடிதமும் வந்து சேர்ந்தது.

அரும் பெரும் காரியங்களைச் சாதிப்பதற்கென்று அவனியில் தோன்றியுள்ள பெருமக்கள் திட்டம் போட்டுச் செயல்களில் ஈடுபடுவதில்லை. தெய்வாதீனமாக வந்தமையும் கடமைகளைக் கருத்துடன் அவர்கள் நிறைவேற்றுகின்றனர். ஸ்ரீ ராமன் படிப்படியாகத் தென்திசைக்கு அனுப்பப்பட்டது ராவண சம்மாரத்தின் பொருட்டேயாம். ராமபக்தராகிய விவேகானந்தர் படிப்படியாகக் கடல் கடக்கத் தூண்டப் பட்டது வெளிநாடுகளிலுள்ள அக்ஞான இருளை அகற்றுதற் பொருட்டேயாம்.

11. அலைகடல் தாண்டுதல்

பிறநாடு போதற்கு சுவாமிகள் உறுதிமொழி கொடுத்தானதும் அதற்காக நிதி சேகரிக்கவேண்டுமென்று சிஷ்யர்கள் விரைந்து வெளியே கிளம்பிப் போனார்கள். ஒரு சிலர் மைசூர், இராமநாதபுரம், ஐதராபாத் முதலிய சமஸ்தானங்களிற் போய்ப் பொருள் திரட்டியெடுத்து வந்தனர். முன், சென்னையில் சேகரித்த தொகை உட்படப் பிரயாணத்துக்கு வேண்டிய ரூபாய் முழுதும் இரண்டு மூன்று வாரங்களில் சேர்ந்து விட்டது. பம்பாயினின்று சுவாமிகள் கப்பல் ஏறிக் கடல் கடந்து போகவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. ஆதலால் அவரை வழியனுப்புவதற்காக அவரோடு இரண்டு சிஷ்யர்களும் அந்நகர் போய்ச் சேர்ந்தார்கள். இத்தனை நாள் மூட்டை முடிச்சு ஒன்றும் இல்லாது யதேச்சையாய்த் திரிந்தவர்க்கு இப்போது வேண்டிய அளவு உடைகள், பட்டாடைகள், பெட்டிகள், படுக்கை முதலியன தயாரிக்கப் பட்டன. போகபூமியில் இருப்பவர்களுக்கு யோகத்தைப் பற்றிய செய்தி சொல்ல வேண்டியிருந்தமையால் சுவாமிகள் இத்தகைய வெளியாடம்பரங்களுக்கும், பொருள் படைத்திருக்கும் பாங்குக்கும் உட்படவேண்டியதாயிற்று. கடைசியாகப் புறப்படும் நாளும் வந்துசேர்ந்தது. 1893-வது ஆண்டு மே மாதம், முப்பத்தோராம் தேதியன்று பகவானின் திருநாமத்தை உச்சரித்துக்கொண்டு "பெனின்சுலார்" என்ற பேர்படைத்த கப்பலேறி சுவாமிகள் திரை கடலினுட் சென்றார்.

விரிந்த கடலிலே மிதந்து செல்லுகையில் சுவாமிகளது மனதில், பரந்த எண்ணங்கள் பல உதித்தன. இடையிடையே இயற்கையின் வண்மையையும், வளப்பையும்

கண்டு களிப்புறுவார். கொழும்பு, பினங்கு, சிங்கப்பூர் முதலிய துறைமுகங்களில் கப்பல் தங்கிநின்றபோது அவ்வவ்வூர்களையும் அவர் விரைந்து சென்று பார்த்துவந்தார். சீனத்தில் ஹாங்காங் என்னுமிடத்தில் கப்பலானது மூன்று நாட்களுக்கு நிற்கவேண்டியிருந்தது. அதற்குள்ளாக உள்நாட்டில் இருந்த பௌத்த மடாலயம் ஒன்றைப் பார்த்துவிட்டு வரலாமென்று சுவாமிகளும், அவருடன் பிரயாணம் செய்த ஜெர்மனியர் சிலரும் புறப்பட்டார்கள். ஆலயத்தின் அருகிற் செல்ல வெளிநாட்டார் யாரையும் சீன சந்நியாசிகள் விட மாட்டார்களென்று வழி காட்டினவன் இவர்களுக்குத் தடை சொன்னான். ஆயினும் இவர்கள் கோயிலை அணுகினார்கள். எதிர்பார்த்த வண்ணம் சீனர்களும் கோபாவேசத்துடன் திடீரென்று தடிகளைத் தூக்கிக்கொண்டு ஓடிவந்ததைக் கண்டதும் பிரயாணிகள் ஓட்டம் பிடித்துவிட்டார்கள். வழி காட்ட வந்தவனும் அவர்களோடு சேர்ந்து நழுவிவிட்டான். சுவாமிகள் மட்டும் சாந்தமாக நின்று, ஆசீர்வதிப்பவர் போன்று வலது கரத்தை உயர்த்திக்கொண்டு "ஹிந்து யோகி, ஹிந்துயோகி" என்றார். யோகி என்ற பதம் அக்கணமே அவர்களது முகக் குறியை அறவே மாற்றிவிட்டது. சீனர்கள் அவரது திருவடிகளில் விழுந்து நமஸ்கரித்துவிட்டு, கோயிலினுள்ளும் அழைத்துச்சென்று அங்கிருந்த யாவற்றையும் அவருக்குக் காட்டி வைத்தார்கள். சம்ஸ்கிருத நூல்கள் பல பழைய ஏடுகளில் எழுதி வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்த சுவாமிகள் ஆச்சரியப்பட்டார். இந்தியாவினின்று பரவின புத்தமதந்தான் இதற்குக் காரணமென்று அவர் கருதினார். புத்த மதத்தைப் புறமதம் என்று ஒதுக்கி வைக்கும் குறுகிய மனப்பான்மை ஹிந்து சமயவாதிகள் சிலர்க்கிடையில் இருந்து வருகிறது. பொல்லாத சேயும்

தாய்க்குப் பிள்ளையாய் இருந்து வருகிறது. அந்த இணக்கத்தை யாரும் மாற்ற முடியாது. ஆனால் புத்தமதம் பொல்லாத சேயன்று. தாய் மதமாகிய ஹிந்து மதத்துக்கு அது பலப்பல நன்மைகளையும் புதிய வழிபாட்டு முறைகளையும் வழங்கியிருக்கிறது. உலகில் புத்தமதம் சென்றவிடங்களிலெல்லாம் இந்தியாவின் பாரமார்த்திப் பெருமையானது பாராட்டப்பட்டது. இதையெல்லாம் சுவாமிகள் மனதில் கொள்வாராயினர்.

கப்பலுக்குத் திரும்பி வந்த பின்பு சீனர்களின் பழக்க வழக்கங்கள் சிலவற்றை அவர் மிகவும் போற்றிப் புகழ்ந்தார். அவர்கள் ஓயாது உழைத்து வேலை செய்வதும், மெய் வருந்தப் பாடுபட்டுப் பொருள் சம்பாதிப்பதும் சுவாமிகளுக்குப் பரம திருப்தியை உண்டுபண்ணின. சோம்பலால் தேம்பித் திரியும் லட்சக்கணக்கான இந்தியர்களும், இவர்கள் போன்று மனமுவந்து பாடுபட்டாலொழிய, நாட்டினுள் தலைவிரித்தாடுகின்ற தரித்திரம் தொலையாதென்று அவர் எண்ணினர். இவைகளை யெல்லாம் குறித்துச் சில அரிய கடிதங்களை சுவாமிகள் சென்னையிலிருந்த சிஷ்யர்களுக்கு எழுதினர். சீனர்கள் அன்று உழைத்தது போன்றே இன்றும் உழைத்து வருவது பாராட்டுதற்குரிய விஷயமாகும். பிறகு பெனின்சுலார் கப்பலானது ஜப்பான் தேசத்துக்குப் போயிற்று. அழகும், ஆக்கமும், ஊக்கமும் வாய்க்கப்பெற்று, அதிவேகமாய் முன்னேற்றமடைந்து வருகின்ற இந்நாட்டைப் பார்த்துவிட்டு, சுவாமிகள் பரந்த பசிபிக் மகா சமுத்திரத்தைக் கடந்து அமெரிக்கா போய்ச் சேர்ந்தார்.

மேற்குக்கரையில் வான்கூவர் என்ற துறைமுகத்தில் கப்பலினின்று இறங்கின சுவாமிகள் மூன்று நாட்கள் தொடர்ச்சியாக ரயில் பிரயாணம் பண்ணிச் சிகாகோ நகர் போய்ச்

சேர்ந்தார். அமெரிக்க நாட்டுப் பழக்க வழக்கங்கள் ஒன்றும் தெரிந்திராத சுவாமிகள் கும்பலும் குழப்பமும் நிறைந்திருந்த அந்தப் பிரம்மாண்டமான ரயில்வே ஸ்டேஷனினின்று எவ்வாறு எங்கே செல்வது என்று ஒன்றும் தெரியாது திகைத்திருந்தார். முடிவாக ஒரு ஹோட்டல் காரியஸ்தனுடன் இராஜமாளிகை போன்று காணப்பட்ட ஒரு ஹோட்டலில் போய் இறங்கினர். தமக்கென்று விடப்பட்டிருந்த அறையினுள் சென்றதும் அவர் நெடுநேரம் ஆழ்ந்து நிஷ்டைபுரிந்து மனோசாந்தி பெற்றார். பிறகு அவர் தொடர்ச்சியாகச் சுமார் பத்துப் பன்னிரண்டு நாட்கள் அந்நகரில் நிகழ்ந்த உலகக் கண் காட்சிச் சாலைக்குப் போய்வருவாராயினர். பாரெங்குமுள்ள அற்புதங்கள், அழகுப்பொருள்கள், மனிதனால் கண்டு பிடிக்கப்பட்டுள்ள நூதன இயந்திரங்கள் இவையாவும் ஆங்கு ஒருங்கு திரட்டி வைக்கப்பட்டிருப்பதைக் கண்டு அவர் வியந்தார். இகலோக வாழ்வில் மேல் நாட்டார் எய்தியிருந்த மேன்மையானது எத்தகையது என்பது அவருக்கு நன்கு விளங்கிற்று.

இதற்கிடையே இந்த இரண்டு வாரங்களுக்குள் தம்மை எதிர்த்து நின்ற கஷ்டங்களும், விக்கினங்களும் அவருக்கு வெள்ளிடை மலையென விளங்கலாயின. தாம் நாடி வந்த முக்கிய காரியம் பலிதமாகுமா வென்னும் ஐயம் எழுந்தது. சர்வமத மகாசபையின்கண் சொற்பொழிவு செய்யலாமென்று எண்ணி வருகிற ஒவ்வொருவருக்கும் சபையின் அனுமதி கிடைக்குமென்பதில்லை. இந்தியாவில் கூடுகின்ற சத் சங்கங்கள் போன்றதல்ல இது. ஒரு மதத்தின் பிரதிநிதியாக இன்னவரை அனுப்புகின்றோம் என்று அந்நாட்டு மக்கள் முன்னதாகவே விண்ணப்பித்து மகா சபையின் அனுமதி பெற்றிருக்க வேண்டும். மேலும் அத்தகைய பிரதிநிதி

தமது மேன்மையை நிரூபிப்பதற்கான அதிகாரப் பத்திரங்களை அந்நாட்டின்கண்ணுள்ள பொது ஸ்தாபனங்களினின்று கொணர்ந்திருக்க வேண்டும். ஆனல், சுவாமி விவேகானந்தராவது அல்லது அவரை அனுப்பிவைத்த சென்னை மாணவர்களாவது இத்தகைய உலக நடைமுறை யொன்றையும் அறிந்திருந்தவர்கள் அல்லர்.

மகாசபை கூடுதற்கு இன்னும் ஏழு வாரங்கள் இருந்தன. சிறிது முன்னதாகவே இவர் அமெரிக்காவுக்கு வந்துவிட்டார். கையிலிருந்த பணமோ அதிவேகமாய்ச் செலவாகி வந்தது. அந்நாட்டு வழக்கத்துக்கு விபரீதமாகத் தோன்றின உடைதரித்திருந்த இவரை வீதியில் கண்டவர்களெல்லாம் எள்ளி நகையாடினர்கள். இந்த இடைஞ்சல்களுக்கிடையில் இன்னமும் இவர் யாருக்கும் அறிமுகமும் ஆகவில்லை. வேற்று நாட்டிலே வேற்றுருவனுகத் திரிந்து வந்தார். சர்வமத மகாசபையிலே சொற்பொழிவு செய்ய வகையில்லாதிருப்பினும் மற்ற முறைகளிலாவது அமெரிக்க சமூகத்துக்கு எப்படியாவது அறிமுகமாக வேண்டுமென்று எண்ணி அங்ஙனமே அவர் முயன்று வந்தார். சிறிது சங்கங்களிலும், கூட்டங்களிலும் பிரசங்கங்கள் செய்து, அதன் மூலம் கல்விமான்களோடு நெருங்கிப் பழகலாமென்றும், இவ்வண்ணம் ஹிந்து தர்மப் பிரசாரம் சிறிது சிறிதாவது செய்யலாமென்றும் அவர் கருதினர். எவ்வகையிலும் தனது நோக்கம் சித்திக்காது போய்விட்டால் இந்தியாவுக்குச் சென்று நல்ல தருணம் வரும்வரை காத்திருப்பதென்றும் அவர் தீர்மானித்துக் கொண்டார்.

கையிலிருந்த பணத்தில் பெரும்பகுதி சிகாகோ நகரில் செலவாகிவிடவே, சிக்கனமான எளிய வாழ்வுக்குப் பொருந்திய இடமாகிய பாஸ்டனுக்குப் புறப்பட்டார். பிரயாணம்

செய்து கொண்டிருக்கையில் ரயில் வண்டியில் இவரோடு பேசிக்கொண்டுபோன விருத்தாப்பிய மாது ஒருத்தி இவரைத் தனது வீட்டில் விருந்தினராய் வந்து கொஞ்ச நாளைக்கு அமர்ந்திருக்கும்படி அழைத்தாள். 'நிகழ்வது எல்லாம் தெய்வச் செயலே' என்று கருதிய சுவாமிகளும் அவளது அழைப்புக்கு இசைந்தார். விபரீதமான இந்த மானிடரைத் தன் நண்பர்களுக்கு வேடிக்கை காட்டவேண்டு மென்பது அந்தக் கிழவியின் நோக்கம்! எப்படியாவது பணச் செலவில்லாது காலம் போக்க வேண்டுமென்பது சுவாமிகள் கருத்து! இருவர் நோக்கமும் பலிதமாயிற்று. இவரை வந்து பார்ப்பது அநேகருக்கு ஒரு நூதனக் காட்சி யாயிருந்தது. மனதில் தோன்றியவாறெல்லாம் அவர்கள் அர்த்தமில்லாத கேள்விகள் பலவற்றைக் கேட்பார்கள். சுவாமிகளும் பொறுமையுடன் அவர்களுக்குப் பதில் விடுத்து வந்தார். இவ்வாறு இவரை வேடிக்கை பார்க்க வந்தவர் களுள் அமெரிக்காவெங்கும் பெயர் பெற்றிருந்த ஆசிரியர் ஜே. எச். ரைட் என்பாரும் ஒருவர். யார் அறிவார் எல்லாம் வல்ல இறைவனது அருட்செயலை! சுவாமிகளுடன் சிறிது நேரம் உரையாடினதும் அவரது மகிமையை அந்த ஆசிரியர் அறிந்து கொண்டார். "பெரியோய்! சர்வமத மகாசபையில் ஹிந்து மதத்தைப்பற்றி நீவிர் அவசியம் உபந்நியாசம் செய்ய வேண்டும்" என்றார் அவர். ஆனால் தமக்கு ஏற்பட்டிருந்த இடைஞ்சல்களையெல்லாம் எடுத்தோதி, அதிகாரப் பத்திரம் எதுவும் தம்மிடம் இல்லையே என்று பகர்ந்தார் பரம யோகியானவர். "அதிகாரப் பத்திரம் வேண்டுமென்று நும்மைக் கேட்பது சூரியனைப் பார்த்து, 'பிரகாசிக்க உனக்கு அதிகாரம் தந்தது யார்?' என்று வினவுவதை ஒக்கும். நீவிர் இன்றைக்கே சிகாகோ நகருக்கு எழுந்

தருளும். வேண்டிய ஏற்பாடுகளை நான் செய்து வைக்கி றேன்" என்று ஆர்வத்துடன் பேசினர் ஆசிரியர் ரைட்.

பேரறிஞராகிய இந்த ஆசிரியர் சர்வமத மகாசபையை நிர்வகிக்கும் பெரியார்களுள் செல்வாக்கு மிகப்படைத்தவர். அவர் அச்சபைத் தலைவருக்கு எழுதின சிபார்சுக் கடிதத்தில் பல அடைமொழிகளுக்கிடையே "நமது ஆசிரியர்கள் எல்லாரும் ஒன்று திரண்டு நின்றாலும் கல்வியில் இப்பெரி யாருக்கு ஒப்பாகமாட்டார்கள்" என்று வரைந்திருந்தார். சுவாமிகள் கையில் போதிய அளவு பணமில்லாதிருப்பதை யும் தெரிந்து ரயில் வண்டிச் சத்தமும் ஆசிரியரே கொடுத்து அவரைச் சிகாகோவுக்கு அனுப்பி வைத்தார். அங்கே இவர் வந்து சேர்ந்தது இரவு நேரம். விதி வசத்தால் தாம் போய்ச் சேர வேண்டிய இடத்தின் விலாசத்தை வழியில் அவர் இழந்துவிட்டார். பிரயாணத்தில் மிகக் களைத்துப் போயி ருந்த சுவாமிகள் 'எல்லாம் காலையில் பார்த்துக்கொள்ள லாம்' என்று எண்ணி ஸ்டேஷனிலேயே இராத்தங்கி விட் டார். இன்னும் சொற்ப நாளில் அமெரிக்காவையே அடி யோடு ஆட்டி வைப்பதற்கிருந்தவர் இப்போது திக்கற்ற வராக ஒரு நீண்ட பெட்டியின்மீது படுத்துக்கிடந்தார். மறு நாட்காலையிலே தாம் சேரவேண்டிய இடத்தை நாடி மாளி கைகள் நிறைந்த வீதிகளில் கால் நடையாகப் புறப்பட்டார். தாம் அடைய விரும்பின இடத்தை விசாரித்துக் கொண்டே போனபோது அநேக அல்லல்களுக்கும், அவமானங்களுக்கும் அவர் ஆளானர். வீடுதோறும் சென்று தாம் சந்திப்பதற் கிருந்தவர் பெயரைச் சொல்லி விசாரித்தார். கேட்ட கேள் விக்குப் பதிலாகச் சிலர் சிரித்தனர்; சிலர் வேடிக்கை செய் தனர்; சிலர் சீறி விழுந்தனர்; சிலர் சினந்து கர்ஜித்தனர்; யாரோ சிலர் தங்களுக்கு அப்பிரமுகர் தெரிந்திலர் என்று

இன்சொல் கூறினர். பின்பு யதேச்சையாக வந்து இவர் மாட்டு அனுதாபம் காட்டிய சீமாட்டி ஒருத்தியால் குறிப் பிட்ட இடத்துக்கு இவர் அழைத்துச் செல்லப்பட்டார். அந்த மகாசபை நிர்வாகிகளும் சிபார்சுக் கடிதத்தைப் பார்த்துவிட்டு இவரையும் ஓர் உபந்நியாசகராக ஏற்றுக் கொண்டு இடவசதி, போஜன வசதி முதலியன இவருக்குச் செய்துவைத்தனர். கவலைகளையெல்லாம் ஒழித்துக் கடவுளை யும், தம் குருநாதரையும் மனதார வாழ்த்திவிட்டு நிஷ்டை புரிந்தும், பெருங்கூட்டத்தின் முன் எழுந்து நின்று சொற் பொழிவு செய்வதற்குத் தமக்கு ஆற்றல் நல்குமாறு பிரார்த் தனைகள் செய்தும் அவர் ஏனைய நாட்களைப் போக்குவாரா யினர்.

நலன் ஒன்று நிகழ்தற்கு முன் பொலன்கள் பல தோன் றித் தாண்டவமாடுகின்றன. நலன் புரிபவரது மனபரிபாகத் தைச் சோதிப்பதற்கு அப்பொல்லாங்குகள் பயன்படுகின் றன. இதுகாறும் சுவாமி விவேகானந்தரை அல்லல்படுத்திய பொலன்கள் யாவும் அவரது பொறுமையைச் சோதிப்பதற்கு உதவுவனவாயின.

12. சர்வமத மகாசபை

சிகாகோ நகரில் நிகழ்ந்த கண்காட்சியை ஒட்டியே உலகின்கண் உள்ள எல்லா மதங்களேயும் சீர்தூக்கிப் பார்த்து, அவைகளின் மேன்மைகளே ஆராயவேண்டுமென்ற பரந்த நோக்கத்துடன் சர்வமத மகாசபையானது நடாத்தப்பட்டது. அதற்காக எல்லாத் தேசங்களினின்றும், சர்வ சமயங்களுக்கும், கொள்கைகளுக்கும் உரிய பிரதிநிதிகள் வரவழைக்கப்பட்டிருந்தனர். ஜன சமூகத்தின் ஒற்றுமையை வற்புறுத்துவதற்கும், ஒருவர் கருத்தை ஒருவர் அறிந்துகொள்வதற்கும் இது ஒரு முக்கிய ஏதுவாதலால் உலக சரித்திரத்திலேயே இந்த மகாசபையானது ஒரு சிறந்த நிகழ்ச்சியெனக் குறிப்பிடலாம். 1893வது ஆண்டு செப்டம்பர் மாதம் 11ஆம் தேதியன்று காலே பத்துமணிக்கு இம்மகாசபை துவக்கப்பட்டது. வாத்தியங்களின் ஆரவாரங்களுக்கிடையிலும், எதிரொலி செய்த மணியோசைகளுக்கிடையிலும் தெள்ளி யெடுக்கப்பட்ட உபந்நியாசகர்கள் மேடையின்மீது அணியணியாய் அழைத்துச் செல்லப்பட்டார்கள். எல்லா மதங்களின் மாண்புகளேயும் கேட்டறிய விரும்பிய பேரறிஞர்கள் சுமார் பத்தாயிரம் பேர் 'கொலம்பியன் ஹால்' என்ற மண்டபத்தினுள் கூடியிருந்தனர்.

அவைத் தலேவரானவர் அந்த மகாசபையின் உயர் நோக்கத்தைப் பற்றி அழகிய முன்னுரை யொன்று பகர்ந்தான பின்பு, உபந்நியாசகர்களே ஒருவர் பின் ஒருவராகச் சபைக்கு அறிமுகம் செய்து வைத்தார். தமது முறையும் அணுகி வருவதை அறிந்து ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் சிறிது அஞ்சினர்; உடல் துடித்தது, நாவுலர்ந்தது. பெரிய சபையின்கண் இதற்கு முன் அவர் எப்போதும் பேசின

தில்லை. இந்தத் திருக்கூட்டமோவெனின், தேர்ச்சி பெற்ற பிரசங்கிகளையும் திகைத்திடச் செய்யவல்லது. முடிவாக, சுவாமிகளும் சபையின் முன் அழைக்கப்பட்டார். அப்போது அவர் அம்பாள் சரஸ்வதியையும், தமது குருநாதரையும் நினைந்து, பரவசமடைந்து விட்டார். அவரது முகம் அப்போது ஞான ஒளி வீசிப் பிரகாசித்தது. துலங்கும் சூரியன் போல் கண்கள் ஜொலித்தன. ரிஷிபுங்கவரின் தவ வலிமை ஈண்டுத் திகழலாயிற்று. ஆசனத்தினின்று எழுந்திருந்து மேடையின் முன் வந்து நின்ற மகிமையே சபையோரது உள்ளத்தை ஒருவாறு கவர்ந்துவிட்டது. கம்பீரத்தொனியில், "அமெரிக்க நாட்டுச் சகோதரி சகோதரர்களே" என்றார். மேலும் அவரைப் பேசவொட்டாது தடுத்து, இடியிடித்தாற் போன்று கரகோஷம் முழங்கிற்று. காரணம் வேறொன்றுமல்ல; மற்ற உபந்நியாசகர்கள் எல்லாம் "சீமாட்டிகளே! சீமான்களே" என்று சபையோரை விளித்துத் தத்தம் உபந்நியாசங்களைத் தொடங்கினர். ஆனால் உலகனைத்தையும் ஒரே குடும்பமாகப் பாராட்டினவர் இந்த ஹிந்து சந்நியாசி ஒருவரேயாவர்! சர்வமத மகாசபையின் நோக்கத்தையும் அக்கணத்திலேயே அவர் பூர்த்திபண்ணி வைத்தவரானார். அமெரிக்கா தேசத்தையும் அந்த இரண்டு வார்த்தைகளைக் கொண்டே அவர் தமக்குச் சொந்தமாக்கிக் கொண்டார். உலகனைத்தையும் ஒன்றாக இணைக்கவல்லது அன்பு. அதற்கு நிகரான ஆகர்ஷண சக்தி வேறு ஒன்றும் இல்லை.

"பல்லாயிரம் ஆண்டுகளாக வாழையடி வாழையென அவதரித்து வந்திருக்கும் மகரிஷிகள், ஞானிகள், யோகிகள் பெயராலும், மதங்களுக்கெல்லாம் தாய்மதமாய்த் திகழும் சநாதன தர்மத்தின் பெயராலும், கோடானுகோடி ஹிந்துக்கள் பெயராலும் நான் உங்களுக்கு வந்தனம் செலுத்துகின்

றேன்" என்று உபந்யாசத்தைத் துவக்கிய சுவாமிகள், கீழ்ப்படியாயிருக்கும் விக்கிரக ஆராதனை முதல், அத்வைத வேதாந்தம் வரையிலுள்ள எல்லாவித வந்தனை வழிபாடுகளுக்கும்—கொள்கைகளுக்கும் ஹிந்துமதம் இடம் தருகிறதென்றும், மனிதனுனவன் தேகத்தினுள் குடியிருக்கும் அழிவில்லாத ஓர் ஆத்மாவென்றும், அனந்தங்கோடி பிறவிகள் பெற்ற பின்னராவது தெய்வத்தன்மை அடைவதுதான் அவனது முடிவான குறிக்கோள் என்றும் விளக்கிக் காட்டிய பின்பு, நதிகள் வெவ்வேறு இடங்களில் உற்பத்தியாகி நேராகவோ, கோணலாகவோ பல பிரதேசங்களின் வழியாக ஓடி, பரந்த ஒரே சமுத்திரத்தில் சங்கமமாவது போன்று, பெரியோர்களால் காணப்பட்டுள்ள மதங்கள் ஒன்றோடொன்று முரண்படுவன போலக் காணப்படினும், மாந்தர்களை அவரவருக்கேற்ற வழிகளில் கடவுள் என்ற ஒரே மெய்ப்பொருளினிடத்து அழைத்துச் செல்கின்றன. ஆதலால், மதத்தின் பெயரால் சண்டையிடுவதை ஒழித்துவிட்டு, மக்கள் சகோதரபாவனையுடன் வாழவேண்டுமென்று சொல்லி முடித்தார். சுவாமிகள் நிகழ்த்திய "சிகாகோ பிரசங்கம்" என்னும் சிறுநூலை வாசித்துப் பார்ப்பவர்களுக்கு ஹிந்து மதத்தின் அடிப்படைத் தத்துவங்கள் நன்கு விளங்கும்.

ஒரே நாளில் சுவாமிகளின் கீர்த்தி நாடெங்கும் திடீரென்று அபரிமிதமாய்ப் பரவுவதாயிற்று. சமாசாரப் பத்திரிகைகள் இவரைப் புகழ்ந்து போற்றியதற்கு ஓரளவில்லை. சர்வமதமகாசபையில் இவருக்கு நிகரானவர் வேறு எவரும் இல்லையென்றே எல்லாரும் ஏகமனதாய்த் தெரிவித்தார்கள். மகாசபை நடந்து வந்த நாட்களில் உபந்யாசகர்கள் எல்லாரும் பேசியான பின்பு விவேகானந்த சுவாமிகள் முடி

வுரையாக ஏதாவது பேசுவார் என்றால் மட்டும் ஜனங்கள் மண்டபத்தில் நெடுநேரம் காத்திருப்பார்கள். "கிறிஸ்து நாதர் போன்று மற்றொரு மகாபுருஷர் தர்மத்தை நிலைநாட்டு தற்கெனக் கீழ்நாட்டிலிருந்து எழுந்தருளியிருக்கின்றனர்" என்றனர் ஒரு சிலர். வீதிகளின் முக்கிய இடங்களில் இவருடைய திருவுருவப்படங்கள் மாட்டப்பட்டிருந்தன. எண்ணிறந்த ஜனங்கள் இவரைத் தரிசனங்காண வந்து சூழ்ந்தனர். தத்தமது வீட்டுக்கு அதிதியாக இவரை அழைத்துச் செல்ல வேண்டுமென்று கோடீசுவரர்கள் பலர் முன்வந்தனர். செல்வம் மிகப் படையாதவர்கள் தங்கள் தரத்துக்கு ஏற்றவாறு இவருக்கு உபசாரம் செய்ய விரும்பினர். டாக்டர்கள் கைம்மாறு கருதாது இவருக்கு மருத்துவப் பணிவிடை செய்ய ஆயத்தமாயிருப்பதாகக் கடிதங்கள் எழுதித் தெரிவித்தனர். பல் கட்டும் டாக்டர் ஒருவர் இவருக்கு இலவசமாக தந்த சுத்தி செய்து வைக்கத் தமக்கு விருப்பமிருப்பதாகத் தெரிவித்தார். நாவிதர்கள் இரண்டு மூன்று பேர், இவருக்கு க்ஷவரம் செய்துவைப்பதைத் தங்கள் கைங்கரியமாக ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினர். இப்படி அவரவர் தரத்துக்கும், தொழிலுக்கும் ஒப்ப சுவாமிகளுக்குச் சேவை செய்யப் பலர் முன்வந்தனர். சாமானிய மனிதன் ஒருவனாயின், இவ்வளவு பெருமிதமாக வந்த பேரும் புகழும் அவனைத் தலை புரளச் செய்திருக்கும் அன்றோ? ஆனால், சுவாமிகள் பேர் வேண்டினாரில்லை; பதவி வேண்டினாரில்லை. உள்ளத்து உறையும் இறைவனைச் சார்ந்திருந்த அவரை இவைகள் எங்ஙனம் மயக்கும்?

புதிதாகத் தம்மீது சுமத்தப்பட்டிருந்த பெரியபதவி ஒரு விதத்தில் சுவாமிகளுக்குப் பிடிக்கவில்லை. ஏகாந்தத்தின் இனிமையை இப்பகட்டினிடையே அவர் கண்டாரில்லை.

யாண்டும் மக்களால் சூழப்பட்டிருப்பதைச் சிந்தித்த மாத்திரத்தில் அவர் மருண்டு பெருமூச்செறிவார். தம்மீது சுமத்தப்பட்டிருந்த புகழானது தமக்கு எத்தகைய பேரிடைஞ்சலாகக் குறுக்கிட்டிருக்கிறது என்பது திரும்பத்திரும்ப அவர் ஞாபகத்துக்கு வரும். விஷயம் தெரியாத பாமரரால் போற்றப்படுவதே பெரும் புகழுமாகும். பாரமார்த்திக வாழ்வு வாழ்ந்து தனித்திருப்பவர்களுக்கு அத்தகைய புகழ் பரம விக்கினமாகும். ஏகாந்தத்தின் இனிமைக்கு அவர்கள் புறம்பாய் விடுகின்றனர். அருள் நாட்டம் உடையவர்களுக்கு அமைதியாக அருள்துறையில் ஊக்கம் ஊட்டிவிட்டு, மற்றவர்களுக்கு முற்றிலும் வேற்றூராய் இருப்பது ஏகாந்தம். அதற்கு மாறாகப் பொருந்தியவர், பொருந்தாதவர் ஆகிய எல்லாருடைய கண்பார்வையிலும் இருப்பது மிகச் சங்கடமான நிலையாகும். ஆனால் தாம் சாதிப்பதற்கிருந்த பெருங் காரியத்தை முன்னிட்டே அவர் இவையாவையும் சகித்திருந்தார். சர்வமத மகாநாடுமுடிந்த பின்பு ஒரு பிரபுவின் மாளிகையில் இவர் இராஜரீக வைபவங்களுடன் அமர்ந்திருக்க நேர்ந்தது. விலையுயர்ந்த விற்கட்டிலின்மீது விரிக்கப்பட்ட மெல்லிய பஞ்சணைத்த பட்டு மெத்தை இவர் படுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இவற்றினலெல்லாம் சுவாமிகளுக்குத் துயரமே மேலிட்டது. இரவெல்லாம் உறங்காது இந்தியாவின் ஏழ்மையை நினைந்து நினைந்து கசிந்துருகி வருந்திக்கொண்டிருந்தார். கொடும் பசியை ஆற்றுதற்கு அன்னமிலாது ஆயிரக்கணக்கான பேர் ஆங்கு அலைந்து மடிகின்றனர்; இங்கு இவர்கள் மட்டுக்கு மிஞ்சிய போகத்திலே மூழ்கிக் கிடக்கின்றனர். க்ஷீண தசையில் இருக்கும் இந்தியாவானது நாளேற நாளேறக் கீழ் நோக்கியே போய்க்கொண்டிருக்கிறது. பாரதத் தாய் உய்தலும்,

பழம் பெருமையை மீண்டும் எய்தலும் எங்ஙனம்? இவை யன்ன துயரம் மலிந்த எண்ணங்கள்தாம் அவரை யாண்டும் உருக்கி வாட்டிக் கொண்டிருந்தன.

சுவாமிகள் அமெரிக்காவிலே எய்தியிருந்த ஒப்பற்ற மேன்மையைக் காணச் சகியாதவர்களும் சிலர் இருந்தனர். குறுகிய நோக்கமுடைய கிறிஸ்தவப் பாதிரிமார்கள், அன்னி பெஸண்ட் அம்மையாரின் பிரம்ம ஞான சங்கத்தைச் சேர்ந் தவர்கள், வங்காளத்தில் தோன்றிய பிரம்ம சமாஜத்தைச் சார்ந்தவர்கள் ஆகிய இந்த மூன்று கூட்டத்தாருக்கும் இவர் ஓர் இடைஞ்சலாகவே காணப்பட்டார். ஏனென்ருல் தத் தம் மதத்தையே மேலானதென்று ஸ்தாபிக்க அவர்களால் இயலாதது ஒருபுறமிருக்க, ஆன்ம சக்தியும், தபோவலிமை யும் வாய்க்கப்பெற்ற இந்தப் பரமாசாரியரின் முன்னிலையில் அவர்களது வெறும் வாசாஞானம் மக்களது மனதில் புகுந்து அவர்களுக்குத் திருப்தியூட்டுவது எங்ஙனம்? ஆதலால் அவர்கள் கொண்ட பொருமைக்கு ஓரளவில்லை. எவ்விதத்தி லாவது இவரை மடக்கிப் பின்னணிக்குத் தள்ளிவிடவேண்டு மென்று முயன்ருர்கள். ‘இந்தியாவில் அந்தஸ்து எதுவும் இல்லாத ஒரு வெறும் ஆண்டி இவன்’ என்று பலருக்கு எடுத்தோதினர்கள். இவர் சென்ற இடங்களிலெல்லாம் இவரைப்பற்றிய ஈன வதந்திகள் பல பரப்பினர். பத்திரிகை களில் பொய்யும், புளுகும் வேண்டியவளவு இவரைப்பற்றி எழுதப்பட்டன. அவர்களின் புல்லிய செயல்களால் இவரது பரிசுத்த வாழ்க்கைக்குப் பல சோதனைகள் அமெரிக்காவில் ஏற்பட்டன. ஆயினும் ‘அட்டாலும் பால் சுவையிற் குன்ருது’ என்பதுபோல, இத்தகைய சூழ்ச்சிகள் எதனுலும் சுவாமி களின் பெருமை சிறிதும் குன்றுவதற்கு இடமில்லாமற் போயிற்று. தூய்மையே வடிவெடுத்து வந்த துறவி வேந்தர்

சத்திய வழியில் நின்று சத்தியத்தைப் புகட்டி வந்தார். "சத்தியமே ஜயிக்கும், தூய்மையே ஜயமடையும்" என்னும் கோட்பாட்டிற்கு சுவாமிகளது தூய வாழ்வு நல்லதொரு எடுத்துக்காட்டு ஆகும்.

பல பட்டணங்களிலிருந்தும் நகரங்களிலிருந்தும் இப் பரம புருஷருக்கு அழைப்புக் கடிதங்கள் அநேகம் வந்து குவிந்தன. உபந்நியாசங்கள் வாயிலாக மாந்தருக்கு நல்லறிவு புகட்டுதற் பொருட்டு இவரும் அவ்வழைப்புகளுக்கிணங்கி நாலாப் பக்கங்களிலும் சுற்றுப் பிரயாணம் பண்ணினார். அப்போது சில நாட்களில் இரண்டு மூன்று இடங்களிலே தொடர்ந்து பிரசங்கங்கள் செய்ய நேரிடும். உடலுக்கு உற்ற இளைப்பையும், ஆயாசத்தையும் சிறிதேனும் பொருட்படுத்தாது, சுவாமிகளும் ஆங்காங்குச் சென்று தூயவர்களது உள்ளத்தில் ஞான விளக்கேற்றி வந்தார். ஹிந்து மதத்தைப்பற்றியும், இந்தியாவைப்பற்றியும் அமெரிக்கர்கள் கொண்டிருந்த தப்பபிப்பிராயத்தைப் போக்கவும், எம்மதத்துக்கும் சம்மதமாயிருக்கின்ற மெய்யான மத அனுஷ்டானங்களை அவர்களுக்குப் புகட்டவும் அவர் முயன்று வந்தார். அரும்பெரும் விஷயங்கள் பலவற்றை எடுத்துக் கூறி முடித்த பின்பு, நாளை எதைப்பற்றிப் போதிப்பது என்று தீர்மானம் ஒன்றும் செய்யாதவராய் அவர் சயனிக்கச் செல்லுவார். வழக்கம்போல யோக நித்திரையில் துய்த்திருக்கும் தருணத்தில் தாம் முன்னர் எப்போதும் கேட்டிராத விஷயங்கள் பல அவர் காதில் வந்து விழும்; அவ்வாறே பழைய கருத்துக்களைப் புதிய முறையில் யாரோ உரக்க எடுத்துக் கூறுகின்ற சத்தம் அவரது செவியில் விழும். இப்படித் தாம் இரவில் கேட்டறிந்த விஷயங்களை மறுநாள் தெற்றென ஜனங்களுக்கு எடுத்துக்கூறித் தெளிவுறுத்துவார். இத்தகைய

யோக சக்தியானது ஆன்ம பரிபாகம் அடைந்துள்ள ஆன்ரோர்களுக்குத் தானுகை வந்து வாய்க்கிறது. முன்னளில் வேதங்களை இயற்றிய ரிஷிகள் இதுபோன்ற ஆதேசம் அடையப்பெற்றிருந்தார்கள். ஓர் அரிய உபமானத்தைக் கொண்டு ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் அதை நன்கு விளக்குவாராயினர். ஒருவன் தானியத்தை அளந்துகொட்டும்பொழுது மற்ருெருவன் அதைத் தள்ளிக்கொடுக்கிருன். அங்ஙனம் அருள் விருந்தை உத்தமர்கள் உலகுக்கு எடுத்து வழங்கும்போது இறைவன் உள்ளத்தினுள் இருந்து கொண்டு புதிய புதிய கருத்துக்களை எடுத்து வழங்குகிருர். இறைவன் கையில் கருவியாயிருக்கத் தெரிந்துகொள்ள வேண்டும். பண்டைக் காலத்து ரிஷிகள் போன்று விவேகானந்த சுவாமிகளும் பரம்பொருளின் அருள் பிரசாதம் வழங்கப் பெறுதற்குக் கருவியாயிருந்தார்.

யோக சாதனத்தில் சம்பூரணமடைந்த மனிதன் ஒருவன் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பரமசாந்தமாக இருக்கமுடியுமென்று சுவாமிகள் ஒருநாள் தமது உபந்நியாசத்தில் வலியுறுத்திப் பேசினர். இவரது கூற்றுக்கும் பரிபக்குவத்துக்குமிடையே உள்ள சம்பந்தத்தைப் பரீட்சிக்க விரும்பின மாணுக்கர்கள் சிலர், இவர் ஒரு மேடையின்மீது நின்று பிரசங்கம் செய்துகொண்டிருக்கையில், இவரைச் சுற்றிலும் கைத்துப்பாக்கியால் சுட்டார்கள். இடி விழுந்தாற்போல வெடித்த சத்தங்களையும், தமது உடலோரம் சீறிக்கொண்டுபோன குண்டுகளையும், சிறிதேனும் பொருட்படுத்தாது தாம் எடுத்திருந்த விஷயத்தை சுவாமிகள் தொடர்ந்து பேசிக்கொண்டே போனுர்! அதைப் பார்த்து வியப்புற்ற வாலிபர்கள் இவரது கூற்றை முற்றும் மெய்யென்று நம்பினதுமல்லாது, இவர் தாமே ஒரு பெரிய யோகி யென்பதையும் உணர்ந்தனர்.

ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் வெளிநாட்டில் எய்தி வந்த வெற்றியின் செய்தியானது வெகுதூரத்துக்கு அப்பால் இருந்த தாய் நாட்டிற்கும் எட்டிற்று. இந்தியாவில் பிரசுரமாகி வந்த பத்திரிகைகள் பிரபல்யமாக அவரைப் புகழ்ந்து எழுதலாயின. இந்தியர்கள் உள்ளத்திலேயே பெருங் கிளர்ச்சியொன்று எழலாயிற்று. சர்வமத மகாசபையில் ஜய பேரிகை கொட்டிய தங்களுடைய இளம் வீரரைப்பற்றியும், பரத கண்டத்தின் மகிமையைப்பற்றியும், இந்து மதத்தைப் பற்றியும் அவர்கள் பெருமை பாராட்டினர்கள். சுவாமிகளைப் பற்றிய பேச்சுஒன்றே நாடெங்கும் மக்களது நாவில் குடியிருந்தது. வேதாந்த கேசரியாகிய சுவாமிகளை வாழ்த்துதற்கும், அவரை அன்புடன் வரவேற்ற அமெரிக்காவுக்கு ஆசிமொழி கூறியனுப்புதற்கும் சென்னை, கல்கத்தா போன்ற பெரிய நகரங்களில் மாநாடுகள் பல கூடின.

சிந்தனைக்குரிய மற்றொரு விஷயத்தை ஈண்டு நாம் ஆராயக் கடமைப்பட்டிருக்கிறோம். கன்னியாகுமரியில் அமர்ந்திருந்தபோது அரியதொரு கருத்து சுவாமிகளின் மனதிற் பட்டது. அதாவது நம் நாட்டு மக்கள் சுய அறிவைப் பெரிதும் பறிகொடுத்து விட்டனர். மேல்நாட்டவர்கள் எதைப் பாராட்டினர்களோ அதைத் தாங்களும் பாராட்டுகின்றனர். அவர்கள் எதை ஒவ்வாதென்று புறக்கணிக்கின்றனரோ அதை இந்தியரும் புறக்கணிக்க முந்துகின்றனர். நல்லதையும், கெட்டதையும் பாகுபடுத்த அவர்களுக்கு சுய அறிவில்லை. தங்களுக்குப் பல்லாயிரம் ஆண்டுகளாகச் சொந்தமாயிருந்துவரும் பாரமார்த்திகப் பெருவாழ்வின் சிறப்பை அவர்கள் அறிந்திலர். மேல்நாட்டவர்களுக்கு அதை எடுத்துப் புகட்டி அதை அவர்கள் மனமுவந்து ஏற்றுக்கொள்ளும்படி செய்தால் அவர்களைப் பின்பற்றி இந்தி

யர்களும் நல்வழிக்கு வருவார்கள். இந்தியர்களுக்கு மோக மூட்டுகிற மேல்நாட்டவர்கள் மனதைச் சரிப்படுத்தினுல் பிறகு இந்தியர்கள் மனது சரியாய்விடும். இங்ஙனம் சுவாமிகள் குமரிமுனையில் முடிவு கட்டினர். அந்த முடிவு இப்பொழுது ஒருவாறு செயலாக வடிவெடுத்து வருவது அவருக்குத் திருப்தியளித்தது.

ஆனல் அமெரிக்காவிலும், இந்தியாவிலும் நிகழ்ந்து வந்த வெறும் ஆரவாரத்தைக்கண்டு ஏமாந்துபோய் விடுபவர் அல்லர் நம் சுவாமிகள். ஆயிரக்கணக்கானபேர் கூடித் தமது பிரசங்கத்தைக் கேட்டபின் அவர்கள் கைகொட்டி விட்டுத் தம் போக்கில் போவது தர்ம ஸ்தாபனமாகாது என்று அவர் எண்ணினர். வாழ்வின் உயர் நோக்கத்தைத் தெளிந்தறிந்து, அதற்கென நெறிவழுவாது வாழவல்ல உத்தமர்களாலேயே தமது இலட்சியம் நிறைவேறுமென அறிந்திருந்த சுவாமிகள், தமக்கு உவந்த சிஷ்யர்களைத் தேடியெடுப்பதில் கருத்துடையவராய் இருந்தார். அறநெறியைக் கடைப்பிடிக்கவல்ல அறிஞர்கள் சிலர் சேர்ந்துவிட்டால் தமது சீரியநோக்கம் முற்றுப்பெறுமென்று அவர் எண்ணினர். பாரமார்த்திக வாழ்வைப்பற்றிய விஷயங்களில் குழந்தைப் பருவத்தில் இருந்து அமெரிக்காவிலே சுவாமிகள் ஏற்றுக்கொண்டது சாமானியமான காரியமல்ல. ஆயினும் ஆங்காங்கு அறிஞர்கள் சிலர் இவரை வந்து அணுகலாயினர்கள். அத்தகையவர்களை ஒன்று திரட்டி வைத்துக்கொண்டு பழைய காலத்து ரிஷிகள் கையாண்டு வந்த முறையிலே ஒரு மரத்தடியிலோ அல்லது வசதியான வேறு ஏதேனும் ஓர் இடத்திலோ தரையின்மீது அமர்ந்திருந்து அவர்களுக்கு அன்புடன் வேதாந்தப் பாடம் புகட்டி வந்தார். தியானம், யோகப்பயிற்சி இத்யாதி அனுஷ்டானங்களை யெல்லாம்

சிஷ்யர்கள் கற்றுணரலானார்கள். பாரமார்த்திகம் புகட்டிய போது சுவாமிகள்மாட்டு மிளிர்ந்த அருட்சக்திக்குச் சான்ருக அவருடைய மேல்நாட்டு சிஷ்யர்கள் இன்றைக்கும் இலங்கி வருகிருர்கள். இவர்களை இங்ஙனம் பக்குவப்படுத்தி வந்தது ஒரு புறமிருக்க, இந்தியாவில் இருந்த சீடர்கள் செய்யவேண்டிய காரியங்களைக் கடிதங்களின் மூலம் சுவாமிகள் அவர்களுக்குத் தெரிவித்து வந்தார். எனவே, பூமியின் இருபகுதிகளிலும் அவரது இயக்கம் வலிவுற்று வந்தது.

ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் அமெரிக்காவில் சிஷ்யர்களுக்கு ஆத்ம சாதனம் கற்பித்து வந்த இடங்களில் முக்கியமானதாகக் குறிப்பிடத்தக்கது 'ஆயிரந் தீவுச்சோலை' என்பதாம். ஸெயின்ட் லாரன்ஸ் நதியினுள் இருக்கும் எண்ணிறந்த தீவுகளில் இஃதொன்று. யோகியொருவனைப் பரவசமடையச் செய்யவல்ல வனப்பு வாய்ந்த இடம் இது. ஜனசஞ்சாரம் எதுவும் இதனருகில் கிடையாது. இந்தத் தீவில் அமைக்கப்பட்டிருந்த அழகிய வீடு ஒன்று சுவாமிகளின் சிஷ்யர்களுள் ஒருவருக்குச் சொந்தம். ஆதலால் அவர் அங்கு 1895வது ஆண்டின் கோடையிலே ஏழு வார காலம் அமர்ந்திருந்து பாரமார்த்திகப் பாடம் புகட்ட அந்த வீடு உதவுவதாயிற்று. அப்பொழுது அது அருள் நிறைந்த ஓர் ஆசிரமமாக மாறிவிட்டது. இந்த ஏழு வாரங்களும் இவரது வாழ்விலே பெரு நிகழ்ச்சிகளால் சூழப்பெற்றிருந்த தருணங்களில் ஒன்ருகும். சுமார் முந்நூறு மைலுக்கு அப்பாலிருந்தும் சிஷ்யர்கள் இவரைத் தேடிக்கொண்டு இங்கு வந்து சேர்ந்தார்கள். "கிறிஸ்துநாதரே இன்றைக்கு உடல் தாங்கி இவ்வுலகில் உலவுவாரேல், அவரை நாடி நாங்கள் எவ்வாறு செல்வோமோ, அவ்வாறே தங்களைத்தேடி, ஈண்டு வந்துள்ளோம்" என நவின்றனர் சில நன்மக்கள். கிறிஸ்து

நாதரைப் பன்னிரண்டு சிஷ்யர்கள் பின்தொடர்ந்தது போன்று, ஈண்டு இவர்பால் பன்னிரண்டு பேர் வந்தடைந்த தும் குறிப்பிடத்தக்கது. விரிந்த மலரை நாடி வண்டுகள் வருவதுபோன்று இப்புனிதரை நாடிப் பக்குவிகள் நண்ணி னர். சுவாமிகளும் அவருடைய சிஷ்யர்களும் தவிர அந்தத் தபோவனத்தில் வேறு ஒரு வேலைக்காரனுங்கூட இல்லா திருந்தது இவர்களுக்குப் பரம திருப்தியை அளித்தது. சமைப்பது உட்பட எல்லா நித்திய நைமித்திக கர்மங்களை யும் தாங்களே ஆற்றி வந்தார்கள். சில வேளைகளில் சுவாமி கள் தாமே சுவைசெறிந்த பட்சணங்கள் பல சமைத்துச் சீடர்களுக்குப் படைப்பார். கலைகள் பலவற்றில் சுவாமிகள் வல்லுநராயிருந்தது போன்று பாக சாஸ்திரத்திலும் அவர் தேர்ச்சி மிகப் பெற்றிருந்தார்.

பன்னிரண்டு பேர்களுக்கும் சுவாமிகள் மந்திரதீட்சை பண்ணிவைத்து ஜபதபம் முதலியன பயிற்றுவித்தார். வாழ்வு முழுதும் பிரம்மசரியம் அனுஷ்டிப்பதாக ஐந்துபேர் விரதம் பூண்டு கொண்டனர். இன்னும் இரண்டுபேர் சந்நியாச ஆஸ்ரமம் ஏற்றுக் கொண்டார்கள். நாள்தோறும் சுவாமி கள் இவர்களுக்கு வேதாந்தம் போதித்து வந்தார். கிறிஸ் துவ நூலாகிய பைபிள், வேதாந்த சூத்திரம், யோக சூத்தி ரம், பகவத்கீதை, உபநிஷத் இத்யாதி நூல்களையெல்லாம் இவர் சீடர்களுக்குக் கற்பித்து வந்தார். இடையிடையே நினைத்தாற் போல்ச் சுவாமிகளுக்கு நிஷ்டை கூடிவிடும். அது போழ்து அருள்வெள்ளம் அவரிடத்திருந்து யாண்டும் பொலியும். சத் சங்கத்தின் பெருமையைப் பாக்யவான் களாகிய அந்தப் பன்னிரண்டு பேர்களும் உள்ளங்கை நெல் லிக்கனியென உணரலாயினர். முனிவர்கள் பல்லாண்டு தவம் புரிந்து பெறுகின்ற பேரின்பத்தைச் சுவாமிகளது

சந்நிதான விசேஷத்தாலேயே அவர்கள் எய்தி இன்புற்றி ருக்கலாயினர். புனலானது ஊற்றெடுத்து ஓடுவது போன்று பேரன்பு அவரிடமிருந்து பொலியா நிற்க, அதில் மூழ்கிப் பரவசமடைந்திருந்தார்கள் சிடர்கள். ஆயிரந்திவு சோலையில் சுவாமிகள் நிகழ்த்திய பாரமார்த்திகப் போதனை களெல்லாம் "விவேகானந்த உபநிஷதம்" என்னும் தலைப் புடன் இப்பொழுது தமிழில் வெளியாகியுள்ளது.

நிறைஞானி ஒருவர் எந்த இடத்தில் வசித்திருந்து மக்களுக்கு அருளை எடுத்து வழங்குகிறாரோ அந்த இடம் ஒரு புண்ணிய ஸ்தலமாகிவிடுகிறது. அமெரிக்காவில் அத் தகைய ஸ்தலம் ஒன்று ஆயிரந்திவு சோலையிலே உண்டா னது அமெரிக்க நாட்டு மக்களின் பாக்கியமாகும்.

13. மேல்நாடுகளில் வேதாந்தக்கொடி

வேதாந்தத்தின் உட்பொருளை அமெரிக்கர்களுக்கு மட்டும் புகட்டினால் போதாது; மேல் நாடுகளிலெங்கும் அது பரவவேண்டும்; சிறப்பாக அது இங்கிலாந்தில் வழங்கப் பெற்று அதன் மூலம் ஆங்கிலேயர்களின் மனம் திரும்ப வேண்டுமென்று சுவாமிகள் பன்முறை சிந்திப்பாராயினர். இவரது கருத்திற்கேற்ப லண்டன் மாநகருக்கு இவர் ஒரு முறையாவது விஜயம் செய்யவேண்டுமென்று பலரிடமிருந்து கடிதங்கள் அடிக்கடி வரலாயின. சுவாமிகளும் அவர்களது வேண்டுகோளுக்கிணங்கி ஆயிரந்தீவுச் சோலையினின்று நியூயார்க் பட்டணம் வந்தும், அங்கிருந்து கப்பலேறி ஐரோப்பாவுக்குப் புறப்பட்டார். பேருழைப்பை முன்னிட்டு ஒருவாறு இளைத்திருந்த இவரது தேகத்துக்கு அட்லாண்டிக் மகாசமுத்திரப் பிரயாணம் பெரும் நலன் விளைவித்தது.

ஐரோப்பாக் கண்டத்தில், சுவாமிகள் முதன் முதலாக மேல்நாட்டு நாகரிகத்துக்கு உறைவிடமாயிருந்த பாரிஸ் நகரை அடைந்தார். ஈண்டு அறிஞர்கள் பலருக்கு இவர் அறிமுகமானார். பிறகு லண்டன் நகருக்குச் சுவாமிகள் போய்ச் சேர்ந்தார். அமெரிக்காவில் இவர் எய்தியிருந்த வெற்றியைப் பற்றிய செய்தி முன்னமே இந்நாட்டுக்கு எட்டியிருந்தது. ஆதலால் இவர் இங்கு விஜயம் செய்த போது பத்திரிகைகள் பல இவரைப் போற்றிப் புகழ்ந்து எழுதலாயின. அறிஞர்கள் அநேகர் ஆவலுடனும், இவரது போதனையை அலசி ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்னும் எண்ணத்துடனும் இவரை வந்து சூழ்ந்தனர். சிறு கூட்டங்களுக்கிடையிலே வீற்றிருந்து குரு சிஷ்ய முறையில்

போதித்தும் பெருஞ் ஜனத்திரள்களுக்கெதிரே மேடையின் மீது நின்று பிரசங்கம் செய்தும் வேதாந்தத்தின் உயர் கருத்துக்களையும், நோக்கங்களையும் ஆங்கிலேயர்களது மனதிற் பாய்ந்து பதியும்படி இப்பரமாசாரியர் செய்து வந்தார். சுவாமிகளின் ஆங்கில சிஷ்யர்களும், அவர்களுள் மிகச் சிறந்து விளங்கிய சகோதரி நிவேதிதை என்பாளும் இது போழ்துதான் இவரை வந்து அணுகினர். சுவாமிகளுக்கு உவந்த சிஷ்யர்களும், அபிமானிகளும் இன்னும் பலரும் அவரை வந்தடைந்தனர். எனவே வேதாந்தப் பிரசாரம் இங்கிலாந்திலும் திருப்திகரமாகவே நடைபெற்று வந்தது. அவ்விடத்திய மேதாவிகளுக்குச் சன்மார்க்க ஆராய்ச்சி பண்ணவும், யோகம் பயில்வும் வழிகாட்டிக் கொடுத்த பிறகு, தாம் திரும்பவும் ஒருமுறை அங்கு வருவதாக வாக்குக் கொடுத்துவிட்டுச் சுவாமிகள் மீண்டும் அமெரிக்காவை நோக்கி ஏகினர்.

சுடர் ஜோதியொன்றைப் போலச் சுவாமிகள் மேல் நாடுகளில் ஆங்காங்கு உலவி வந்தார். விசால புத்தி, அஞ்சா நெஞ்சம், விஷயங்களை வெட்டெனப் பேசுந்தன்மை இத்யாதி மாண்புகள் பல படைத்திருந்த இவர் புத்தர், சங்கரர், இயேசுநாதர் போன்று மாந்தரின் உள்ளங்கவர் கள்வனாய் எங்கும் சஞ்சரித்தார். யாண்டும் கடவுளது சந்நிதியில் வதிந்திருந்த இப்பெரியார் பேசின பேச்செல்லாம் அதிகாரம் ததும்பிய ஆப்த வாக்கியங்களாயிருந்தன. போகத்திலும், பௌதிகத்திலும், நாஸ்திகத்திலும் உழன்று கிடந்த மேல்நாட்டின் மனப்போக்கை மாற்றியமைத்து வந்தவரான இப்பரம புருஷனை ஜகத்குருவென்றும், இந்தியாவின் தபோபலனென்றும் அழைப்பது தகும் அன்றோ?

இங்கிலாந்தினின்று திரும்பவும் அமெரிக்கா போந்த சுவாமிகள் புதிய பல பட்டணங்களுக்கும், நகரங்களுக்கும் சென்று உபந்நியாசங்கள் பல பொழிந்து வந்தார். அச் சொற்பொழிவுகளின் வாயிலாகத் தெளிந்த பக்குவிகளைத் தேர்ந்தெடுப்பதே இவரது உயர் நோக்கமாயிருந்தது. இது போழ்து இன்னும் சில சிஷ்யர்கள் இவரிடம் வந்து சரண் புகலாயினர். அவர்களுக்கெல்லாம் சுவாமிகள் மந்திரோப தேசம் பண்ணி இரண்டு மூன்று பேர்களுக்குப் பிரம்மசரிய சம்ஸ்காரம் செய்து வைத்து ஒருவருக்குச் சந்நியாசமும் தந்தருளினர். இது பரியந்தம் மேல்நாட்டில் சுவாமிகள் திரட்டியெடுத்த சந்நியாசிகள் கிருபானந்தர், அபயானந்தர், யோகானந்தர் என்னும் மூவர். கடவுளை அடைவதற்காக வும், உலகை உய்விப்பதற்காகவும் வேண்டிப் புலன்களை யடக்கிப் பரிசுத்த வாழ்வு வாழவல்ல துறவிகளை அமெரிக்கா போன்ற தேசத்தில் தயாரிப்பது எத்தகைய கடினமான காரியமென்பது சொல்லாமலே விளங்கும். நியூயார்க் நகரத்திலே வேதாந்த சங்கமொன்று ஸ்தாபித்து, அதற்கு ஆசாரியராகக் கிருபானந்தரை சுவாமிகள் அமர்ந்திருக்கப் பண்ணினர். அந்தச் சங்கத்தின் அங்கத்தினர்கள் வேதாந்தி கள் என்று அழைக்கப்பட்டார்கள். வேதாந்தி என்ற பதத் தின் பொருள் 'ஹிந்து' என்பதன்று. தவிர, பிறமதத்தினரை ஹிந்து மதத்தில் சேர்ப்பதும் அந்தச் சங்கத்தின் நோக்க மன்று. வித்தை வடிவத்திலிருப்பது வேதம். அந்த வேதத்தின் அந்தம் அல்லது முடிவு வேதாந்தமாம். அதாவது முடிவான வித்தையாகிய கடவுளைப்பற்றிய ஞானம் தேடுபவர்களெல் லாம் வேதாந்திகளாம். அமெரிக்காவில் தாம் துவங்கிய தர்ம ஸ்தாபனம் இங்ஙனம் செவ்வனே நடைபெறுமாறு செய்து வைத்துவிட்டு 1896வது ஆண்டு, ஏப்ரல் மாதம் மறு படியும் சுவாமிகள் இங்கிலாந்துக்குப் புறப்பட்டுச் சென்றார்.

லண்டன் நகரில் இரண்டாம் முறை ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளது நல்வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த சிஷ்யர்களும், நண்பர்களும் ஆர்வத்துடன் அவரை வரவேற்ருர்கள். சென்ற வருஷத்தில் அவர் இங்குத் துவக்கிய பாரமார்த்திகப் பேரியக்கத்தைச் செழித்து ஓங்குவிக்கச் செய்தற்பொருட்டு மேலும் முயற்சிகள் பல அவர் எடுத்துக் கொண்டார். இந்நகரில் அவர் திரும்பவும் விஜயம் செய்திருப்பதைப் பத்திரிகைகள் பல போற்றியும், பாராட்டியும் எழுதி வந்தன. இந்தப் பிரசுரங்களின் வாயிலாகப் புதிதாகச் சுவாமிகளைப் பற்றி அறியவந்தவர்கள் பக்தி விசுவாசத்துடன் அவரை அணுகினர்கள். அப்பரமாசாரியரும் சரீர சிரமத்தைச் சிறிதும் பொருட்படுத்தாது, வேதாந்தம் புகட்டுகின்ற உயர் வாழ்வு இன்னதென்பதை அன்பு கூர்ந்து அவர்களுக்குப் போதித்து வந்தார். வாரந்தோறும் அரிய பிரசங்கங்கள் பல பெரிய கூட்டங்களிலே நடைபெறும். சாதாரணமாக எங்கும் நடைபெறும் சத் காலக்ஷேபம் போன்றது அல்ல அவரது பிரசங்கம். உபந்நியாசம் பண்ணும்போது உடலை மறந்து பரவசநிலையை அவர் எய்தி விடுவார். அப்போது அவரிடமிருந்து அருள் வெள்ளம் எங்கும் பொழிந்து வியாபிக்கும். சபையினரும் அவருடைய அருள் மொழிகளைச் செவிமடுத்துப் பரமானந்தமடைந்திருப்பர். பேசுபவர், பேசப்படுபவர் என்ற இருமை ஒழிந்துவிடும். ஆராயப்படும் வஸ்துவைப்பற்றிய கருத்து ஒன்றுதான் எல்லார்க்கும் பொதுவாக இலங்கும். உள்ளங்கை நெல்லிக்கனி போன்று சுவாமிகள் பரமானந்தத்தையும், புதிய வாழ்வையும் தங்களுக்குப் பகுத்தெடுத்து வழங்கியுள்ளார் என்று அவருடைய சொற்பொழிவுகளை மட்டும் கேட்டவர்கள் கூட இன்றைக்கும் சொல்லுகிருர்கள் என்ருல், அவரோடு இணங்கியிருக்கும்

பாக்கியம் வாய்க்கப் பெற்றவர்கள் எய்திய மேன்மையைப் பற்றிப் பகர்வானேன்!

லண்டன் நகரில் சுவாமிகள் நிகழ்த்திய உபந்நியாசங்களிற் பெரும்பகுதி பக்தியோகம், ஞானயோகம் என்னும் இரண்டு நூல்களில் அடங்கப் பெற்றிருக்கின்றன. மாயாவாதத்தைப்பற்றி மேல் நாட்டார் மட்டுமன்றி, இந்தியர்களிற் பலரும் தப்பபிப்பிராயம் கொண்டிருக்கின்றனர். வாய் வேதாந்தத்தில் பெரும் விவாதம் வருவதும் பெரும்பாலும் இதைப்பற்றியேதான். ஆனல் மாயையைப்பற்றிய கருத்தை எல்லாருக்கும் இனிது விளங்கும் பொருட்டு எவ்வளவு தெளிவுறச் சுவாமிகள் விளக்கியுள்ளார் என்பது அவரது ஞானயோகத்தைப் படிப்பவர்களுக்குத் தெரியவரும். பொதுப்பட அவரது மதபோதனையைப்பற்றி மேல் நாட்டுச் சிஷ்யர் ஒருவர் கூறியதாவது:—"எங்களிற் பலருக்கு விவேகானந்த சுவாமிகளது திருவாய்மொழியானது தாகத்தினுற் பரிதவிப்பவர்களுக்குப் பருகக் குளிர்நீர் கொடுத்தாற்போலிருந்தது. சென்ற சில ஆண்டுகளாகக் கற்றறிந்த ஐரோப்பியர்களுள் மதசம்பந்தமாக மனக்குழப்பமும், நம்பிக்கையின்மையுமே அதிகரித்துக்கொண்டு போயின. எங்கள்மீது சுமத்தப்பட்டிருந்த அர்த்தமில்லாத மத சம்பிரதாயத்தை நாங்கள் அறவே மறுத்து வந்தோம். இருளில் உலாவிய எங்களுக்கு இப்போது வேதாந்த விளக்கமானது பேரொளி காட்டுகிறது."

மூன்று திங்கள் இடையருது இங்கிலாந்தில் உழைத்துக் களைத்துப் போயிருந்த சுவாமிகளுக்கு ஓய்வு சிறிது வேண்டியிருந்தது. ஆதலால் அதற்காக ஐரோப்பாக்கண்டத்தினுள் சுற்றுப் பிரயாணம் போதல் உசிதமென்று சிஷ்யர்கள் சிலர் கருதினர். பள்ளிப்பிள்ளை யொருவன் விடு

முறை நாட்களை விருப்புடன் வரவேற்பது போன்று சுவாமி களும் அதற்கு அன்புடன் இசைந்தார். ஐரோப்பாவின் சிங்காரத் தோட்டமெனத் திகழும் ஸ்விட்ஜர்லாந்து நாட்டுக்கு ஒரு சிறு கூட்டமாக அவர்கள் புறப்பட்டார்கள். வளமும், வனப்பும் நிறைய வாய்க்கப்பெற்ற அந்நாட்டினுள் சஞ்சரிக்கும்போது சுவாமிகள் துய்த்த இன்பமும், மன அமைதியும் சொல்லில் அடங்கா. பனிக்கட்டி அடுக்கடுக்காய் உறைந்துள்ள ஆல்ப்ஸ் மலையில் இவர் ஆனந்தமாய் உலவித் திரிந்தார். அம்மலைநாடு இவருக்கு இமாலய பர்வதத்தைப் பற்றிய தூய எண்ணங்களையெல்லாம் திரும்பவும் ஞாபக மூட்டியது. அந்த மலைநாட்டைக் கண்டு பூரித்திருந்த சுவாமிகள் பிறகு ஜெர்மனிக்குப் போனார். அதன் தலைமைப் பட்டணமாகிய பெர்லின் முதலிய நகரங்களின் அழகிய அமைப்பானது அத்தேசத்தின் பெருமைக்குச் சான்றாயிருந்தது. ஜெர்மானிய சர்வகலாசாலையில் கல்வி வழங்கப்பட்டமுறையையும், இராணுவ இலாக்காவில் வீரசேனைகளைத் தயாரித்த முறையையுங்கண்டு வியந்ததுமல்லாது வல்லரசு நாடுகளில் அது முக்கியமானது எனவும் அவர் தீர்மானித்தார்.

பால்தாசன் என்னும் மேதாவி ஒருவர் அக்காலத்தில் ஜெர்மனியில் வாழ்ந்திருந்தார். அவர் சம்ஸ்கிருதத்தில் பாண்டித்தியம் மிகப்படைத்தவர். வேதாந்த சாஸ்திரத்தில் அத்தியந்தப் பிரியமுடையவர். இந்தியா முழுதும் சுற்றுப் பிரயாணம் பண்ணிப்பார்த்த பின்பு அதன் நாகரிகத்தை மிகப்போற்றினவர் அவர். "வாழ்ந்திருக்கையிலும், வாழ்வு நீங்கும்போதும் சர்வதுக்க நிவர்த்தி தருவது வேதாந்தம் ஒன்றுதான். இந்தியர்களே! உங்களது பொக்கிஷமாகிய அதை நீங்கள் நன்கு கடைப்பிடியுங்கள்" என்று இந்தியர்களுக்கு ஆசி கூறியவர் அப்பெரியார். அவர் இயற்றியிருக்

கும் வேதாந்த நூல் ஒன்று கற்றவரது உள்ளத்தை முற்றும் கவரவல்லதாயிருக்கிறது. ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளது வரலாற்றை இவர் கேள்வியால் அறிந்திருந்தார். ஆதலால் அவரைத் தமது விருந்தினராய் வந்திருக்க வேண்டுமென்று மிக வேண்டி, பால்தாசன் அப்பெரியாருக்கு அழைப்பு ஒன்று விடுத்திருந்தார். சுவாமிகளும் அன்புடன் அதற் கிணங்கித் தமது சிறிய திருக்கூட்டத்துடன் அந்த மேதாவி யின் இல்லத்தில் சில நாட்கள் வாழ்ந்திருப்பாராயினர். அதுபோழ்து இவர்கள் இருவரும் தங்களுடைய குறிக் கோளாகப் பாராட்டி வந்த பாரமார்த்திக விஷயங்களைப் பற்றி ஆழ்ந்து ஆராய்ந்து அளவளாவிக் காலங்கழிப்பாரா யினர். பிறகு சுவாமிகள் ஜெர்மனியினின்று புறப்பட ஆயத் தம் பண்ணினபோது அவ்வரை விட்டுப் பிரிய மனமில்லாத இந்த மேதாவி அவரோடு இங்கிலாந்துக்குச் சென்று சொற்ப நாள் அங்கு வதிந்திருந்தார்.

ஐரோப்பிய நாடுகளில் இரண்டு மாதம் செய்த சஞ்சா ரத்தால் தேக நலனும், மனத்திட்பமும் மீண்டும் வாய்க்கப் பெற்றிருந்த சுவாமிகள் இங்கிலாந்துக்குத் திரும்பிப் போய்ச் சேர்ந்தார். அங்கு சிஷ்யர்களோடு அவர் வாழ்ந்திருக்கை யிலே அவரது மனப்பாங்கில் தடுமாற்றம் என்பது சிறிதே னும் இல்லை யென்பதைக் காட்டவல்ல நிகழ்ச்சியொன்று நேரலாயிற்று. சுவாமிகளும் அவரோடு ஆடவர் ஒருவரும் மகளிர் ஒருவரும் ஆக மூன்று பேர் ஒருநாள் மாலையில் ஒரு கழனியில் உலாவிக் கொண்டிருந்தார்கள். அப்போது பருத் துத் திமிர் பிடித்த காளைமாடு ஒன்று இவர்களைத் தாக்க வேகமாய்ப் பாய்ந்து ஓடிவந்தது. உடன் வந்து கொண்டி ருந்த ஆண்மகனர் உடனே ஓட்டம் பிடித்துவிட்டார். பெண் பாலோவெனின், 'மயங்கிக் கீழே விழுந்து விட்டாள்.

விரைந்து வந்த மிருகத்தை எதிர்த்து அவளது அண்டை யிலே நின்ருர் சுவாமிகள். அத்துஷ்ட மிருகம் தம்மைத் தூக்கி வீசுமானல் தாம் எங்கே போய் விழ நேரிடுமென்று கணித்துக்கொண்டிருந்தாராம் அவர்! ஆனல் அவரது முக வசீகரத்தாலோ அல்லது வேறு எக்காரணத்தாலோ அரு கில் வந்ததும் மாடு அப்படியே பிரமித்து நின்று விட்டது.

இங்கிலாந்தில் ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையில் மாக்ஸ்முல்லர் என்ற பெரியார் ஒருவர் இருந்தார். அவர் சம்ஸ்கிருதத்தில் மகா பண்டிதர். நான்கு வேதங்களையும் திரட்டி வைத்தவர் வியாச மகரிஷியென்றும், மகா விஷ்ணுவே மச்சாவதாரமாக வந்து சதுர்வேதத்துக்கு அழிவு வாராது காப்பாற்றினர் என்றும் கதைகள்கேட்டிருக்கிறோம். அது எங்ஙனம் ஆயினும் ஆகுக. இக்காலத்தில் வேதத்துக்கு அழிவு வாராது காப்பாற்றினவர் மகரிஷி மாக்ஸ்முல்லர் என்பது உலகறிந்த விஷயம். நாற்பது வருஷகாலம் இடை யருது வேத ஆராய்ச்சி பண்ணி, பனையோலை ஏட்டுப் பிரதி களில் மறைந்து கிடந்த அவைகளை ஒழுங்குப்படுத்தி, பிழை திருத்தி, ஆங்கில மொழிபெயர்ப்புடன் அழகிய புத்தகங் களாக அச்சியற்றி வெளியிடுவது மேல்நாட்டார் ஒருவருக் குப் பகீரதப் பிரயத்னம் ஆகுமென்பது சொல்லாமலே விளங்கும். அத்தகைய காரியத்தைப் பூர்த்தி பண்ணியவர் இவர். மேலும் இவர் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரைப்பற்றி மிகக் கேள்விப்பட்டிருந்தார். அந்த மகாபுருஷரிடத்தில் பக்தியும் விசுவாசமும் மிகப்படைத்தவர் ஆவர் முல்லர் என் னும் முனிபுங்கவர். பரமஹம்சரது வரலாற்றை ஒருசிறு நூலா கவும் இவர் இயற்றியிருக்கிருர். இப்பெரியவரைக் கண்டு தரிசிக்கவேண்டுமென்று கருதிய விவேகானந்த சுவாமிகள் ஆக்ஸ்போர்டில் இவரது ஆஸ்ரமத்தைத் தேடிச் சென்ருர்.

“யானையின் பலத்தை யானை யொன்றுதான் அறியவல்லது” என்னும் பழமொழிக்கு ஒப்ப, இவ்விருவரும் ஒருவரை யொருவர் நன்கு அறியலாயினர். வேதத்தைப் பற்றியும் அதன் பிறப்பிடமாகிய பரத கண்டத்தைப் பற்றியும் நீண்ட சம்பாஷணை யொன்று நடந்தது. “இந்தியாவுக்குத் தாங்கள் ஒருமுறை விஜயம் செய்யலாகாதா? அந்நாட்டு மக்கள் ஆயிரக்கணக்கான பேர் தங்களைப் பேரன்புடன் வரவேற்பர்” என்றார் சுவாமிகள். “அப்புண்ணிய பூமிக்குச் சென்றால், இத்தேகம் இங்கே திரும்பி வராது!” என்று கண்களில் ஆனந்த பாஷ்பம் ததும்ப மன எழுச்சியால் சிறிது உரை குளறினவராய் முனிவர் விடையளித்தார். இவர் முன் ஜன்மத்தில் இந்தியாவில் ஒரு முனிவராகத்தான் இருந்திருக்கவேண்டும் என்று சுவாமிகள் முடிவு கட்டினார். ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பற்றிய பேச்சு வந்தபோது இந்தியாவில் அவரை அநேகர் ஓர் அவதார புருஷராக வணங்குகின்றார்கள் என்று சுவாமிகள் சொன்னார். “அவரை அல்லாது வேறு யாரைத்தான் அங்ஙனம் வணங்குவது!” என்றார் முல்லர் பெருமான். கல்வியின் பயனாகிய அடக்கமும், பணிவும், சாந்தமும் அவர் மாட்டுச் சாலத்திகழ்ந்தன. அவரைச் சந்தித்த நாள் ஒரு திருநாள் என்றே சுவாமிகள் எண்ணினார். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் சீரிய சிஷ்யரைச் சந்திக்கும் பாக்கியம் தமக்குக் கிடைத்ததை அம்முனிவர் பெரிதும் பாராட்டி அவருக்கு அன்புடன் அமுதுபண்ணி வைத்தார். பிறகு சுவாமிகள் புறப்படுதற்கு விடையளிக்கும்படி வேண்ட, அப்பெரியாரும் பிரிவு ஆற்ற இயலாதவராய்ச் சிறிது தூரம் உடன் சென்று வழியனுப்பி வைத்தார்.

சுவாமிகள் புரிந்த உபந்நியாசங்களைப் பத்திரிகைகள் பல பிரசுரித்த வண்ணமாயும், பின்பு அவரைப் புகழ்ந்த

வண்ணமாயும் இருந்தன. ஆனால் சுவாமிகள் சென்றவிட மெங்கும் பெருவெற்றி எய்தியதற்கு இவை சான்றாய் விட மாட்டா. ஏனென்றால் பத்திரிகைகள் ஒருவரைப் போற்று வதும் தூற்றுவதும் சர்வ சாதாரணம். சுவாமிகளும் இவ் விஷயத்தை நன்கு அறிந்திருந்தார். சமாசாரப் பத்திரிகை களைச் சிறிதும் பொருள்படுத்தாதிருந்ததே அவருடைய போக்கு ஆயிற்று.

இயேசுநாதர் செம்படவர்களைப் பார்த்து, "வாருங்கள், வலை வீசி மாந்தரைப் பிடிக்கும் விதம் உங்களுக்குக் கற்பித் துத் தருகிறேன்" என்று சொல்லி அழைத்தார். அதாவது உலகத்தவரை அக்ஞான இருளினின்று உய்விப்பதுதான் பெரியார்களது ஒப்பற்ற தொழில். சுவாமிகளின் உபதேசங் களும் மாந்தரது உள்ளத்தில் அத்தகைய பயனை விளை வித்து வந்தன. அவரது அறிவுரை கேட்டுப் பலர் தமது மனத்தகத்து இருந்த மாசுகளை அகற்றுவாராயினர். உல கனைத்தையும் ஒரே குடும்பமாகப் பாராட்டவல்ல பரந்த எண்ணம் படைத்தார்கள் மற்றும் பலர்; ஆத்ம சாதனத்தின் பொருட்டு அவர்மாட்டுத் தங்கள் உடல், பொருள், ஆவியை யெல்லாம் உவந்து அளித்துவிட்ட பேரறிஞர்களும் சிலர் இருந்தனர்.

சுவாமிகளிடம் சரணாகதி யடைந்தவர்களுள் சேவியர் தம்பதிகள் குறிப்பிடத்தக்கவர்கள். லண்டன் நகரில் தங்க ளுக்குச் சொந்தமாயிருந்த வீடு வாசல் யாவையும் விற்றுப் பெரு நிதி திரட்டி அதைத் தங்களுடைய குரு மூர்த்தியிடம் சமர்ப்பித்து விட்டு அவரோடு இந்தியாவுக்குச் செல்ல அவர்கள் ஆயத்தமானார்கள். இமாலய பர்வதத்தில் மாயா வதி என்னுமிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் அத்வைத ஆஸ்ரமம் இவர்களது நிதியைக்கொண்டே நிறுவப்பெற்றது.

ஜே. ஜே. குட்வின் என்பவர் சுவாமிகளின் மற்ெருரு முக்கிய மான சிஷ்யர். அல்லும் பகலும் அவர் சுவாமிகளது நிழல் போன்றிருந்து அவருக்குப் பணிவிடைகள் புரிந்து வந்தார். சுவாமிகளின் உபந்நியாசங்களை யெல்லாம் சுருக்கெழுத்தால் (Shorthand) குறித்து வைத்துப் புத்தகங்களாக வெளியாகும் படி செய்து வைத்தவரும் இவரேயாம். இவர்கள் எல்லார்க் கும் மேலாக, பாரதத்தாயின் திருப்பணிக்காகவே நிவேதனம் செய்யப்பட்டவள் ஆவள் சகோதரி நிவேதிதை. 'மார்க்ரெட் நோபில்' என்பது இவளது கன்னித் திருநாமம். இந்தியாவின் தேசீய இயக்கத்தில் சகோதரி நிவேதிதை எத்தகைய வினை யாற்றி வந்தாள் என்பதை இந்திய உலகம் நன்கறியும். இவளுடைய அரிய நூல்களில் சில இன்றைக்கும் இளைஞர் களது உள்ளத்தில் ஊக்கமும் புத்துயிரும் ஊட்டிவருகின் றன. மற்றும் பல புத்தகங்கள் மேதாவிகளுடைய உள்ளத் தைக் கவர வல்லவைகளாயிருக்கின்றன. அவைகளுள் இரண்டு புத்தகங்கங்களைச் சிறப்பித்து ஈண்டுக் குறிப்பிட லாம். இந்திய சமுதாய அமைப்பு (The Web of Indian Life) என்பது ஒன்று. எனது குருநாதரை நான் அறிந்துகொண்ட விதம் (The Master as I saw him) என்பது மற்ெருன்று. இவைகளுள் இறுதியாக இயம்பப்பட்டுள்ள நூலை வாசிக் கின்றவர்களுக்குத்தான் விவேகானந்த சுவாமிகளின் மகிமை நன்கு விளங்கும். சுவாமி விவேகானந்தரின் சிஷ்யர்களுள் சகோதரி நிவேதிதைக்கு முதல் ஸ்தானம் கொடுப்பது பொருந்தும். இங்கிலாந்தினின்று சுவாமிகளிடம் வந்து சேர்ந்த சிஷ்யர்கள் அனைவருமே பாராட்டுதற்குரிய பெரு மக்களாம். இத்தகைய புனிதவான்கள் நமது பரமாச்சாரிய ரோடு உடனிருந்து வாழவேண்டுமென்று கருதி இங்கிலாந்தி னின்று இந்தியாவுக்கு வந்து விட்டார்கள்.

நான்கு வருஷகாலம் மேல் நாடுகளிலேயே தொடர்ந்து நிலைத்திருந்து வேதாந்தப் பேரியக்கம் ஒன்று துவக்கி வைத்த சுவாமிகள் இப்போது தாய்நாட்டுக்குத் திரும்பி வரவேண்டியது அவசியமாயிற்று. எனவே லண்டன் நகரிலும் வேதாந்தப் பிரசாரம் செவ்வனே நடைபெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வைத்துவிட்டு 1896-வது ஆண்டின் இறுதியில் அவர் அவ்விடம் விட்டுப் புறப்பட்டார். அப்போது அவரை விட்டுப் பிரிந்திருக்க ஆற்றாத சிஷ்யர்களுள் ஒருவர் பகர்ந்ததாவது :— "இன்று ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் எங்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு போய் விட்டார். அவரை விட்டுப் பிரிந்ததும் பேரிருள் போன்ற துயரம் வந்து எங்கள் உள்ளத்தை மூடிக்கொண்டிருக்கிறது. அவரது கேண்மையைப் பெறுதற்கேற்ற புண்ணியம் எதுவும் நாங்கள் இப்பிறப்பில் செய்ததில்லை. ஒருவேளை அது முன்செய்த தவத்தின் பயனோ என்னவோ அறியோம். எதைப்பெற விரும்பி நாங்கள் பரிதவித்திருந்தோமோ அதை அவர் எங்களுக்கு அகழ்ந்து எடுத்து அருளியுள்ளார்."

சிஷ்யர்களுள் மூவரைத் தம்முடன் அழைத்துக்கொண்டு ஐரோப்பாவில் ரயில் மார்க்கமாகச் சுவாமிகள் ரோமாபுரிக்குச் சென்றார். இந்தியாவில் டில்லி போன்று இத்தாலியில் ரோம் நகர் புராதனப் பெருமைக்குப் பேர் பெற்றது. அங்கே கண்ட பிரம்மாண்டமான ஆலயங்கள், அழிந்துபோன அரண்மனைகள், கோட்டைகள் இவையாவும் அவர் இளமையிற் கற்றிருந்த சரித்திரத்தைத் திரும்பவும் அவரது நினைவுக்குக் கொணர்ந்தன. பிறகு அவர் நேபிள்ஸ் துறைமுகம் சென்று கப்பலேறி இலங்கைத் தீவை நோக்கிப் பிரயாணமானார். அத்தீவுக்குத் தலைமைப்பட்டினமாகிய கொழும்பில்

எத்தகைய வரவேற்பு அவரை எதிர்பார்த்திருந்தது என்பதைச் சுவாமிகள் சிறிதும் அறிந்திலர்.

ஒரு நாடு ஏனைய நாடுகளோடு தொடர்வு வைப்பதற்கு மூன்று துறைகள் இருக்கின்றன. அவைகளை முறையே பொருள்துறை, ஆட்சித்துறை, அருள்துறை எனலாம். பொருள்துறையில் "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்பது முதுமொழி. மற்ற நாடுகளுடன் வாணிபம் செய்து பொருளைப் பெருக்குவது பொருந்தும். ஆனால் பிறநாடுகளை அடிமைப்படுத்தும் விதத்தில் அவைகளோடு ஆட்சித் தொடர்வு வைத்துக்கொள்வது தகாது. பிற நாடுகளுக்கு அருளை அள்ளி வழங்குதல் தலையாயது. நமது அருள் வள்ளல் அத்தகைய அரும்பணியைத் துவக்கி வைத்துள்ளார்.

———

14. தாய்நாடு தாங்கியழைத்த விதம்

கொழும்பு நகரவாசிகளில் குறிப்பிட்டவர்கள் சிலர் சுவாமிகளுக்கென வரவேற்புக் கழகமொன்று நிறுவி அதன் மூலம் ஆடம்பரமான ஆயத்தங்கள் பல செய்து வைத்திருந்தனர். 1897-வது ஆண்டு, ஜனவரி மாதம், பதினைந்தாம் தேதியன்று சுவாமிகள் ஊர்ந்து வந்த கப்பல் துறைமுகத்தினுள் நுழைந்தது. ஜனங்கள் திரள் திரளாகக் கண்ணுக்கு எட்டிய தூரம் ஆவலுடன் அங்கே கூடியிருந்தனர். அன்று மாலை சுவாமிகள் திருவடிகளைத் தரையின் மீது நாட்டிய போது முழங்கின ஆனந்த கோஷங்கள் கடலின் கர்ஜனையையும் அமிழ்த்திவிட்டன. கழகத்தார் சுவாமிகளுக்கு மாலை சூட்டி, அவர் அடியிணையைப் பூஜித்து, இரட்டைக் குதிரை பூட்டிய விமானமொன்றில் அவரை எழுந்தருளப் பண்ணி மெதுவாக ஊர்வலமாய் அழைத்துச் சென்றனர். சுவாமிகளைக் கண்டு தரிசிக்க வேண்டுமென்று ஆயிரக் கணக்கானபேர் வீதியின் இருபுறங்களிலும் ஆவலுடன் எதிர்பார்த்து நின்றுகொண்டிருந்தனர். வீதியில் ஆங்காங்கு அலங்காரப் பூம்பந்தல்கள் அமைக்கப்பட்டிருந்தன. "வருக!, வீரர் வருக!" என்னும் ஆசிமொழி தாங்கிய பந்தல் ஒன்றும் அவைகளினிடையே நின்றது. ஊர்வலம் நெடு நேரத்துக்குப் பிறகு விடுதியை வந்தடையவே, உயர்ந்த ஆசனமொன்றில் அப்பெரியாரை வீற்றிருக்கச் செய்து ஊரார் அனைவரும் வரவேற்புப் பத்திரிகையொன்றை வாசித்தளித்துவிட்டு வணங்கி நின்றார்கள். சுவாமிகளும் அத்தருணத்துக்கேற்ற உபந்நியாசம் ஒன்று செய்து எல்லாரையும் ஆசீர்வதித்தருளினர்.

ஆங்காங்கு விஜயம் செய்யவேண்டுமென்று தந்திகளும் கடிதங்களும் சுவாமிகள்பால் வந்து குவிந்தன. ஆதலால்

கொழும்பிலிருந்து மறுபடியும் கப்பலேறிச் சென்னை செல்வதாக எண்ணியிருந்த சுவாமிகள் அக்கருத்தை ஒழித்து நெடுக நிலமார்க்கமாகவே பிரயாணம் செய்யத் தீர்மானித்தார். கண்டியிலும் அதன் பிறகு யாழ்ப்பாணத்திலும் ஜனங்கள் பேரார்வத்துடன் அவரை எதிர்கொண்டு அழைத்தனர். அவரது நல்வரவை எதிர்பார்த்து வீதிகளெல்லாம் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தன. சுவாமிகள் ஊர்ந்து வந்த வண்டியானதுமேளவாத்தியத்துடன் ஊரினுள் அழைத்துச் செல்லப்பட்டது. புஷ்பமாரி வழியெங்கும் பொழிந்தது; பன்னீர்த்துளிகளும் தெளிக்கப்பட்டன. திருநாம கோஷம் எங்கும் எதிரொலி செய்தது. தேவாரம், திருவாசகம் ஓதப்பட்டன. பண்டைக்காலத்துச் சமய குரவருள் ஒருவர் திரும்பவும் எழுந்தருளியது போன்றிருந்தது அக்காட்சி. நள்ளிரவு பரியந்தம் சுவாமிகளைக் கண்டு சேவிக்கப் பெருங்கூட்டங்கள் வந்துகொண்டேயிருந்தன. அருள் வேந்தரும் ஆயாசத்தைப் பொருள்படுத்தாது அவர்களுக்குக் காட்சி கொடுத்தருளினர். பக்தியும் விசுவாசமும் பொதிந்துள்ளதுதான் மெய்யான மத அனுஷ்டானம் என்னும் கருத்தடங்கிய உபந்நியாசங்கள் சிலவற்றை அவர் நிகழ்த்தினர். நெடுநாள் இலங்கையில் அமர்ந்திருக்க அவகாசமில்லையென்று கூறி, அத்தீவின் மக்களை ஆசீர்வதித்துவிட்டு, அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு சுவாமிகள் இந்தியாவுக்குப் புறப்பட்டார்.

பாம்பனில் அவரது நல்வரவை இராமநாதபுரம் சமஸ்தானம் பேராவலுடன் எதிர்பார்த்திருந்தது. வெளிநாடுகளில் வேதாந்தக் கொடியேற்றிய விவேகானந்தர் திரும்பவும் தாய் நாட்டிலே திருவடிகளை நாட்டியபோது அதிர்வேட்டுகள் ஆகாயத்தைப் பிளந்தன. ஜய பேரிகைகள்

முழங்கின; ஜனங்கள் ஆரவாரத்துடன் ஆனந்தக்கூத்தாடினார்கள். அவர்கென அலங்கரித்து வைத்திருந்து ஒரு கொட்டகையினுள் உயர்ந்த ஆசனத்தின் மீது சுவாமிகளை அமர்ந்திருக்கச் செய்து, இராஜா பாஸ்கர சேதுபதியும், அவருடைய பிரஜைகளும் அவர் அடிபணிந்து போற்றி நின்றனர். பிறகு இராமேசுவரத்துக்கும், இராமநாதபுரத்திற்கும் சுவாமிகள் அழைத்துச் செல்லப்பட்டார். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு தாம் அத்திர்த்தத்திற்கு எந்நிலைமையில் வந்திருந்தார் என்பதையும் இப்போது எந்நிலைமையில் வர நேர்ந்திருக்கிறது என்பதையும் நினைந்து சுவாமிகள் வியந்தார். கோயிலில் இவரைக் காணச் சூழ்ந்திருந்த ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு மெய்யான சிவ பூஜையைப்பற்றிய உபந்நியாசம் ஒன்றை நிகழ்த்தினர். விக்கிரகத்தைக் கடவுளாகப் பாராட்டுவது போல துக்கவேடமும், தரித்திர வேடமும் தாங்கியிருக்கும் மக்களையும் கடவுள் சொருபமாகப் பாராட்டி வணங்கவேண்டும் என்பது அதன் அடிப்படையான கருத்து. பிறகு இராமநாதபுரம் அரண்மனைக்கு இராஜரீதியுடன் அழைத்துச் செல்லப்பட்டார். அவரை இரதத்தில் எழுந்தருளப் பண்ணி இராஜாவும் குடிகளும் வடம் பிடித்து இழுத்துக்கொண்டு ஊர்வலம் சென்றனர். பட்டத்து யானை, குதிரை, ஒட்டகம் முதலியன முன் சென்றன. வெண்சாமரம் விசப்பட்டது; குடை, கொடி முதலியன பிடிக்கப்பட்டன; மேளங்கள் முழங்கின; இத்தகைய ஆடம்பரங்களுடன் ஊர்வலம் சென்ற பின்பு, பரமாச்சாரியரைக் கொலுமண்டபத்தினுள் எழுந்தருளப் பண்ணினார்கள். பின்பு ஆங்கிலம், தமிழ், சம்ஸ்கிருதம் இத்தியாதி பாஷைகளில் வாழ்த்துக்கள் வாசிக்கப்பட்டன.

சுவாமிகளும் ஆங்குக் கூடியிருந்தவர்களுக்கு உபந்நியாசம் ஒன்று செய்தருளினர். வேந்தனும் குடிகளும் ஒன்று

கூடி ஆரவாரத்துடன் தமக்குக் காட்டிய மரியாதைகள் தேசத்தின் உயர் நோக்கத்துக்கே அறிகுறியாகுமென்ருர். 'போர் வீரர்களையும் இராஜதந்திரிகளையும் வணங்குவது மற்ற நாடுகளிலே உள்ள வழக்கம்; ஆனல் பார் ஆளும் வேந்தனுங்கூட பிக்ஷையெடுக்கும் சந்நியாசி ஒருவரை வணங்குகிற வழக்கம் இந்தியாவுக்கே உரியது. இதினின்று பாரமார்த்திக வாழ்வின்மீது நாடு எத்தகைய பற்று வைத் திருக்கிறது என்பது தெரிய வருகிறது' எனக் குறிப்பிட்டுக் கூறினர். இந்தியர்கள் அனைவரும் இப்புனித வாழ்வில் பற்றுடையவர்களாய் இருக்கவேண்டுமென்றும், அதுதான் அவர்களது உயிர் நாடியென்றும், அழிவற்ற நாகரிகமென் றும் சுவாமிகள் மேலும் பகர்ந்தருளினர்.

பிறகு சென்னையை நோக்கி வடதிசையாக அவருடைய திருக்கூட்டம் புறப்பட்டது. இப்பெரியாரைக் கண்டு தரி சிக்க வழியெங்கும் ஜனக்கூட்டங்கள் திரள் திரளாய் நின்று கொண்டிருந்தன. தமிழ் மக்களது மேன்மைக்கு உறைவிட மாகிய மதுரையில் சுவாமிகள் மூன்று நாள் தங்கியிருந்தார். அப்போது பக்தி விசுவாசத்துடன் அவரை வணங்க வந்த வர்களைக் கணக்கிடுவது இயலாத காரியமாயிற்று. பிறகு அங்கிருந்து இருப்புப்பாதை மார்க்கமாகச் சுவாமிகள் கும்ப கோணத்துக்குப் புறப்பட்டார். பிரயாணம் செய்யும் போது இரவு முழுதும் அவருக்கு உறக்கம் என்பது இல்லாதுபோய் விட்டது. அவரைக் கண்டு தரிசிக்க ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஒவ்வொரு ஸ்டேஷனிலும் வந்து திரண்டு கொண் டிருந்தனர். ரயில் வண்டி வந்து நின்றதும் திருநாம கோஷங் கள் பீறிட்டு முழங்கின. சுவாமிகளும் மனமுவந்து வந்தவர் களை ஆசீர்வதித்தார். ஆங்காங்குத் தம்மைக் காண விரும்பி வந்திருந்த மக்களோடு அவகாசமாய் அளவளாவியிருக்க

முடியாமற் போனது பற்றி அவர் மிக வருந்தினர். திருச்சி, தஞ்சை முதலிய இடங்களில் வரவேற்புப் பத்திரங்கள் ஸ்டேஷனிலேயே வாசித்து அளிக்கப்பட்டன. கும்பகோணத்தில் மட்டும் சிரம பரிகாரம் செய்து கொள்ளுதற்காகச் சுவாமிகள் மூன்று நாள் தங்கியிருந்தார். அப்போது, 'வேதாந்தத்தின் போதனை' என்னும் விஷயத்தைப்பற்றி அரிய உபந்நியாசம் ஒன்று புரிந்தார். அதன் பிறகு அவர் சென்னைக்குப் புறப்பட்டார். வழியில் ரயில் நிலையம் ஒவ்வொன்றிலும் அத்துக்கு அடங்காத வண்ணம் ஜனங்கள் நின்று கொண்டிருந்தனர். இமைப்பொழுதாவது சுவாமிகளது தரிசனம் கிடைத்தாற் போதுமென்பதே அவர்களது இச்சை. ரயில் வண்டி நிற்காத ஒரு சிறிய ஸ்டேஷனில் கூடியிருந்த மக்கள் வழிமறித்துப் பாதையில் படுத்து வண்டியை நிறுத்திவிட்டார்கள். சுவாமிகளது தரிசனம் பெற்ற பின்பே அவர்கள் ரயிலை நகரவிட்டார்கள் என்றால், அவரது திக்விஜயமானது ஜனங்களிடத்தில் எத்தகைய எழுச்சியை உண்டுபண்ணியிருந்தது என்பது சொல்லாமலே விளங்கும்.

பல வாரங்களாகச் சென்னை நகரெங்கும் சுவாமிகளது நல்வரவைப் பற்றிய பேச்சு ஒன்றுதான் மக்களுக்கிடையில் நிகழ்ந்து கொண்டிருந்தது. வீடுகளிலும், வீதிகளிலும், கடைத்தெருக்களிலும், பள்ளிகளிலும், இது சம்பந்தமான வார்த்தைகளே விசேஷமாகக் காதில் விழலாயின. அவரை வரவேற்பதற்காக ஆடம்பரமான ஏற்பாடுகள் நகரெங்கும் செய்யப்பட்டன; சிங்காரப் பந்தல்கள் பதினேழு ஆங்காங்குச் சோடிக்கப்பட்டிருந்தன. அவைகள் ஒவ்வொன்றிலும் உயர் கருத்து அடங்கிய மொழிகளும் எழுதி அமைக்கப்பட்டிருந்தன. "வருக, விவேகானந்தர் வருக," "இறைவ

னது புதல்வா போற்றி," "வாழ்க, விவேகானந்தர் நீடுழி வாழ்க," "ஸ்ரீ ராமகிருஷ்ணரின் நன் மகனே போற்றி," "மாந்தரது மன்ன வருக" என்னும் இத்யாதிப் பொன் மொழிகள் அப்பூம்பந்தல்களிலே பொறிக்கப்பட்டிருந்தன.

சுவாமிகள் எழுந்தருளுதற்கிருந்த நன்னுளன்று அதி காலையிலிருந்தே பெரும் ஜனத்திரள் எழும்பூர் ஸ்டேஷனை நோக்கிச் சென்றது. பார்த்தவிடமெங்கும் ஒரு பெரிய உற்சவக்காட்சியே தென்பட்டது. ஸ்டேஷன் மேடையானது அற்புதமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அதன் உள்ளும் புறமும் எள்ளும் விழாவண்ணம் மாந்தர் நிறைந்து நின்ற னர். நகர வாசிகளில் முக்கியஸ்தர் அனைவரும் அன்று காலை அங்குக் கூடியிருந்தனர். ரயில் வண்டி ஸ்டேஷனில் நுழைந்ததும் இடியிடித்தாற்போல மக்களது ஆரவாரச் சத்தம் ஒலித்தது; வாத்தியமும் முழங்கியது. வண்டியி னின்று சுவாமிகள் கீழே இறங்குகையில் திருநாம கோஷம் கொட்டகையைத் தூக்கிற்று; பூமாரி பொழிந்தது. ஜனங் களின் சார்பாக நீதிபதி சுப்பிரமணிய ஐயர் சுவாமிகளுக்கு மாலை சூட்டினர். சிறிது நேரத்துக்குள் ஊர்வலமும் துவங் கியது.

விமான வண்டியில் பூட்டியிருந்த குதிரைகள் இரண்டை யும் அப்புறப்படுத்திவிட்டு ரதம் போன்று அதை வடம் பிடித்து இழுக்க மாணவர்கள் முன் வந்தனர். வீதியில் கண் ணுக்கு எட்டிய அளவு மாந்தரின் தலைகளே தென்பட்டன. நெடுந்தூரம் பஜனைகளும் மேளவாத்தியங்களும் முழங்கின. மெதுவாக வண்டியும் நகர்ந்தது. கற்பூர ஆராதனைகளும் தேங்காய் பழ நைவேத்தியங்களும் இடையருது வந்து கொண்டேயிருந்தன. வீடுதோறும் நிறைகுடங்கள் வைக் கப்பட்டிருந்தன. மாடிகளின் மீது கூடி நின்றவர்கள் மலர்

மாரி சொரிந்தார்கள். சுவாமிகளைத் தரிசித்துப் பலர் கை கூப்பி நின்று வணங்கினர். வீதிகளின் சந்திப்புகளில் நின்று கொண்டிருந்த பல்லாயிரம் பேர்களுக்கு அவரது காட்சி கிடைத்தற்பொருட்டு வண்டியானது நெடுநேரம் ஆங்காங்கு நிறுத்தப்பட்டது. அதுபோழ்து நிகழ்ந்த ஆடல்களுக்கும், பாடல்களுக்கும், ஆனந்தக் கூத்துக்களுக்கும் ஓரளவில்லை. இவ்வாறு மெல்ல மெல்ல நகர்ந்து சென்ற ஊர்வலம் கடைசியாகத் திருவல்லிக்கேணியிலே கடலோரம் இருக்கும் 'காசில் கர்னன்' அல்லது 'ஐஸ்ஹவுஸ்' என்னும் மாளிகைக்குப் போய்ச் சேர்ந்தது. சுவாமிகளுக்கு அம்மாளிகையிலேதான் விடுதி ஏற்படுத்தப்பட்டிருந்தது.

சென்னையிலே அவர் வதிந்திருந்தது ஒன்பதே நாள் எனினும் அதை ஒரு நவராத்திரி விழாவென்று பலர் பல கால் பகர்ந்துகொண்டிருந்தனர். அல்லும் பகலும் அவரைக் காணவந்த பண்டிதர்களும் பாமரர்களும் எத்தனை யெத்தனையோ பேர். சென்னையில் சுவாமிகள் நிகழ்த்தின உபந்நியாசங்கள் ஐந்து. அவைகளிலே ததும்புகின்ற தேச பக்தியும், நாட்டின் நலமும், மக்களின் மேன்மையும் இன்றைக்கும் பலருக்குப் புத்துயிர் அளித்து வருகின்றன. பத்திரிகைகள் அவரது விஷயத்தை விரிவாக வர்ணித்து எழுதலாயின. 'ஹிந்து' பத்திரிகை வரைந்ததாவது:— "இத்தகைய வரவேற்பு இது பரியந்தம் சென்னையில் யாருக்குமே கிடைத்ததில்லை. நவீன இந்தியாவின் ஆச்சாரியராக ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிக்கு அளிக்கப்பட்டது போன்ற வரவேற்பையும், இயற்கையாக அவரிடம் ஜனங்களுக்கு உதித்த அன்பையும், மரியாதையையும் வேறு எந்த அரசகுமாரனாவது, மகாராஜாவாவது, இராஜப்பிரதிநிதியாவது இந்தியாவில் எப்போதும் பெற்றது கிடையாது. அடியார் ஒருவரைப்

போற்றுவது எங்ஙனம் என்பது இந்தியர்களுக்குத்தான் நன்கு தெரியும்.''

சாமானிய மனிதன் ஒருவனைத் தலை புரளப் பண்ணி விடுவதற்கு இந்த ஆரவாரங்களில் ஒரு சிறு பகுதியே போதுமானது. ஆனால் சுவாமிகள் இயல்பாகப் படைத்திருந்த குழந்தை போன்ற சுபாவமும் பணிவான மனப்போக்கும் எந்நிலைமையிலும் ஒரு கணப்பொழுதேனும் மாறவே யில்லை. இந்த வெளிப்பகட்டுகளெல்லாம் நிலையற்றவை யென்பது அவருக்கு நன்கு தெரியும். மனத்தகத்தே குடிகொண்டிருந்த பரம சாந்தத்தை அவர் யாண்டும் பருகிப் பரமானந்தத்திலேயே திளைத்திருந்தார். பரமஞானி ஒருவருக்குப் பிரபஞ்சமெல்லாம் ஒன்று கூடித் தம்மைப்போற்றுவதும், பிரபஞ்சமெல்லாம் ஒன்று கூடித் தம்மைத் தூற்றுவதும், பிரபஞ்சமெல்லாம் ஒன்று கூடித் தம்மைப் பாராமுகமாகப் புறக்கணித்து விட்டுவிடுவதும், பிரபஞ்சமெல்லாம் ஒருங்கே ஒடுங்கிப் பிரளயமாகப் போவதும் ஆகிய செயல்கள்யாவும் வெறும் பிரபஞ்சவிகாரங்களாகத்தோன்றுகின்றன. ஆகையால் ஆரவாரங்கள் அவர்களை அசைத்து விடமாட்டா.

சுவாமிகள் சென்னையில் வதிந்திருந்த ஒன்பதுநாட்களில் நிகழ்ந்தவைகளைச் சுருக்கமாக ஆராய்வது அவசியமாகிறது. பழங்காலத்துப் பர்மாசாரியர்களுள் ஒருவர் மீண்டும் ஒரு முறை இக்காலத்தில் மண்ணுலகில் விஜயம் செய்தால் மக்கள் எத்தகைய ஆர்வமும் பரவசமும் அடைந்திருப்பார்களோ அவைகளெல்லாம் விவேகானந்தரின் வரவால் சென்னையிலே நிகழ்வனவாயின. இவர் திருஞானசம்பந்தருக்கு ஒப்பானவர் என்று பலர் பகிரங்கமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். சுவாமிகளின் தரிசனத்துக்காக ஜனக்

கூட்டம் ஓயாது வந்துகொண்டிருந்தது. ஒரு திருவிழாவின் பொழுது தேவாலயத்துக்கு எப்படி மக்கள் ஓயாது போய்க்கொண்டும் வந்துகொண்டும் இருப்பார்களோ அதே விதத்தில் அண்ணலின் தரிசனத்துக்காக அதிகாலையிலிருந்து மாலையில் இருட்டிப்போம் பரியந்தம் அவர்கள் வந்துகொண்டேயிருந்தனர். பிரசங்கத்துக்காக அவர் புறப்பட்டுப்போகும்பொழுது ஆங்காங்கு அவர் வரவை எதிர்பார்த்து ஆவலுடன் நின்றுகொண்டிருந்த அன்பர்கள் வீதியில் வீழ்ந்து நமஸ்கரிப்பார்கள்.

சுவாமிகள் தங்கியிருந்த 'காசில் கர்னன்' என்னும் மாளிகையின் வெளிப்பக்கத்தில் பெரியதொரு கொட்டகை அமைக்கப்பட்டிருந்தது. காலை நேரங்களில் மக்களது வசதியின் பொருட்டு சுவாமிகள் அக்கொட்டகையிலே உயர்ந்ததொரு ஆசனத்திலே அமர்ந்திருப்பார். பார்க்க வந்தவர்களில் பலர் அமைதியாக வணங்கிவிட்டு வெளியேகுவார்கள். வேறு சிலர் வணங்கிய பின்பு சற்று அவர் அண்மையில் அமர்ந்திருந்தபின் புறப்பட்டுப் போவார்கள். மற்றும் சிலர் சுவாமிகளிடம் கேள்விகள் பல கேட்பார்கள். அப்படிக் கேள்வி கேட்டவர்களை இருதரத்தார்களாகப் பிரிக்கலாம். சுவாமிகளது பாண்டித்தியத்தைப் பரீட்சை பண்ணுவதற்காகக் கிளப்பும் கேள்விகள் ஒருவிதமானவை. கேள்வி கேட்டவர்களைத் திகைக்கச் செய்யும்படியாக அப்பொழுது விடைகள் வரும். தங்கள் ஐயங்களை அகற்றிக் கொள்ளுதற்காகப் பணிவுடன் கிளப்பும் கேள்விகளுக்கு அன்புடனும் ஆதரவுடனும் சுவாமிகள் விடைகள் விடுப்பார். கேட்டவரைத் திகைக்கச் செய்த வினாவிடையொன்றை ஈண்டு மாதிரிக்காக எடுத்துக்கொள்ளலாம். அத்வைத சம்பிரதாயக்காரர்களைத் தாக்கும் மனப்பான்மையுடன்

வந்திருந்த துவைத மதவாதி யொருவர் கேட்ட கேள்வி யாவது: "அதீதத்தில் இருக்கும் பரம்பொருள் பிரபஞ்சமய மான இத்தனையுமாய் ஏன், எப்படி, எப்பொழுது மாறலா யிற்று?" விடை: "அதீதத்திலிருக்கும் பரம்பொருள் பலவாக ஒருபொழுதும் மாறவில்லை. ஆகவே அப்பாரமார்த்திகப் பெருநிலையில் இக்கேள்வியெழுதற்கு இடமில்லை."

இவ்விடையைக் கேட்டு ஸ்தம்பித்துப் போன மத வாதிக்கு மேலும் என்ன கேட்பது என்று விளங்கவில்லை.

புத்த மதத்தைப் பின்பற்றியவர் ஒருவர் வேதாந்தத் திலும் சிறந்தது புத்தமதம் என்று வாதாட வந்திருந்தார். அவ்விரண்டு மதங்களுக்கிடையில் உண்மையில் வித்தியாச மில்லையென்று சுவாமிகள் நன்கு விளக்கிக் காட்டினர்.

சைவ சித்தாந்தமும் வேதாந்தமும் சமரசப்பட முடியுமா என்னும் ஐயத்துடன் மற்றொரு கூட்டம் வந்திருந்தது. அதற்கேற்ற விடையையும் பகர்ந்தருளி இரண்டும் சமரசப் பட்டே இருக்கின்றனவென்று சுவாமிகள் பகர்ந்தருளினர்.

விசிஷ்டாத்வைதி ஒருவர் சம்ஸ்கிருத பாஷையிலே எதையெதையோ ஏராளமாகப் பேசி மனங்குழம்பிய பாங் கில் சங்கையைக் கிளப்பினர்.

வாய் வேதாந்தம் பேசி வாழ்க்கையை வீணாக்க வேண்டாமென்றும் தெளிந்த முறையில் தெய்வ வழிபாட்டை யும் மக்கள் சேவையையும் இனிது செய்து வரலாமென்றும் சுவாமிகள் மறுமொழி கூறினர்.

சம்ஸ்கிருதப் பண்டிதர் ஒருவர் வியாகரணத்திலே மிகக் கடினமானதும் பலப்பல அபிப்பிராயங்களுக்கும் இடந் தருவதுமான சூத்திரம் ஒன்றை எடுத்தோதி அதற்கு விளக் கம் கொடுத்தருளுமாறு சுவாமிகளிடம் வேண்டினர். அவர்

கொடுத்த விளக்கம் தமது ஐயத்தை அறவே அகற்றி விட்டதென்று அப்பண்டிதர் அகமகிழ்வுடன் திரும்பிப்போனுர்.

மற்ருெரு பண்டிதர் முன்வந்து மாயாவாதத்தைப் பற்றி என்னென்னவோ பிரச்னைகளைக் கிளப்பினுர்.

மாயை என்பது வாதத்துக்குரிய விஷயமன்று. பிரபஞ்சத்தின் நடைமுறையைப் பற்றிய தத்துவம் மாயை யெனப் பகரப்படுகிறதென்று சுவாமிகள் மறுமொழி கூறினுர். இத்தகைய விளக்கத்தை ஜகத்குரு சங்கரர் இம்முறையில் எங்குமே தமது பாஷியங்களில் பகரவில்லையே யென்று பண்டிதர் தடை கூறினுர். எதைப் பகராது சங்கரர் பாக்கி வைத்திருந்தாரோ அதைத் தெளிவுப்படுத்திப் பூர்த்தியாக்குதல் பொருட்டு ராமகிருஷ்ண பரமஹம்சர் இக்காலத்தில் தோன்றி வந்துள்ளார் என்று சுவாமிகள் விடைவிடுத்தார். பண்டிதரும் அக்கூற்றை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டார்.

சாயுங்கால வேளைகளில் சுவாமிகள் இன்னிசைக் கருவியுடன் பரம்பொருளைப் புகழ்ந்து பாடுவதுண்டு. அவருடைய கம்பீரமான இனிய குரலையும் இன்னிசை ஞானத்தையும் அறியவந்த அன்பர்கள் பலர் பக்தி புகட்டும் பாடல் ஏதேனும் ஒன்றைப் பாடியருளுமாறு விண்ணப்பித்தார்கள்.

ஜயதேவர் இயற்றியுள்ள அஷ்டபதி என்னும் ஸ்தோத்திரங்களை சுவாமிகள் ஆனந்த பரவசநிலையிலிருந்து பாடியது அன்பர்களுக்கு அரியதொரு அருள் விருந்தாய் இருந்தது.

சமயங்கள் பல செறிந்துள்ள இந்தியாவிலே எத்தகைய மதத்தை சுவாமிகள் மக்களுக்கிடையில் வழங்குவதாகத் திருவுளங்கொண்டிருக்கிருர்கள் என்று அறிஞர் பலர் கேட்டார்கள்.

சமயங்கள் அனைத்துக்கும் நடுநாயகமாயுள்ள வேதாந்த தர்சனத்தையே மக்களுக்கிடையில் எடுத்து வழங்கவேண்டு

மென்று சுவாமிகள் கூறியருளினர். ஒருநாள் மேடைப் பிர சங்கத்தின் இறுதியில் வினுக்களுக்கு விடையளிப்பதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. துண்டுக் காகிதங்களில் வினக்கள் எழுதி அனுப்பப்பட்டிருந்தன. ஒருவர் ஒவ்வொன் ருக வினுக்களை வாசிக்க, சுவாமிகள் அவைகளுக்கேற்ற விடைகளைக் கூறியருளினர். இறுதியாக வந்த வினு: 'மக் கள்படும் துன்பங்களுக்கெல்லாம் காரணம் யாது?' விடை: 'துன்பங்களுக்கெல்லாம் மூலகாரணம் அக்ஞானம், அக் ஞானம், அக்ஞானம்.'

சென்னையில் தங்கியிருந்த சில நாட்களுக்கிடையில் தமிழ்ச்சொற்கள் பலவற்றைச்சுவாமிகள் கற்றுக்கொண்டார். சமையல்காரனேடு சில தமிழ் வார்த்தைகள் அவர் உரை யாடினது கேட்டவர்களுக்குப் பெருமகிழ்வூட்டியது.

அல்லும் பகலும் மக்கள் குழாங்களுக்கிடையிலே பலப் பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பதற்கிடையில் திடீரென்று அவருடைய மனது சிறிது நேரத்திற்கு அதீத நிலைக்குப் போய்விடும். அப்படி அவர் அதீத நிலையில் இடையிடையே இருந்ததே வியவகாரங்களுக்கிடையில் அவர் பெற்று வந்த விச்ராந்தியாகும்.

இலங்கையிலிருந்து சென்னை பரியந்தம் செய்த பிரயா ணத்தாலே சுவாமிகளுக்குப் போதிய அளவு ஓய்வும் உறக் கமும் இல்லாது போய்விட்டன. இரவும் பகலும் இடை யருது மாந்தர் அவரை மொய்த்துக்கொண்டேயிருந்தனர். கல்கத்தா போய்ச் சேருதற்கு அவர் இன்னும் ஆயிரம் மைல் பிரயாணம் செய்யவேண்டும். நீண்ட அந்த வழி முழுதும் அவர் நிலமார்க்கமாகப் போயிருந்திருப்பாராகில் மாந்தர் எங்ஙனம் அவரை அன்பால் அலைக்கழித்திருப்பார்கள்! ஆத லால் தொடர்ந்து வருதற்கிருந்த அந்தப் பெருஞ் சிரமத்தி

னின்று சின்னுளேக்காவது விலகியிருக்க விரும்பின சுவாமிகள் சென்னையினின்று கப்பலேறி, கடல் மார்க்கமாய்க் கல்கத்தாவுக்குப் புறப்பட்டுவிட்டார். விரிகடலிலே போகும் போது அவரது உடல் ஓய்வுற்றிருந்தது. வழியெங்கும் வங்காளத்தைப் பற்றிய எண்ணங்களே மனதில் தோன்றி அவரை மகிழ்வுறச் செய்தன.

கல்கத்தா வாசிகளுக்குச் சுவாமிகளது வரவு எத்தகைய இன்பத்தை ஊட்டியிருக்குமென்பது சொல்லாமலே விளங்கும். தங்கள் மாகாணத்திற் பிறந்த மகான் அல்லரோ அவர்! இந்தப் பரமகுருவை உலகுக்கு அளித்த பெருமை இந்தியாவுக்கு உண்டெனினும் அது சிறப்பாக வங்காளத்துக்கே உரியதன்ருே? எனவே சுவாமிகள் வந்திறங்குதற்கிருந்த இடத்தில் பல்லாயிரம் பேர்கள் கூடி ஆவலுடன் அவரது நல்வரவை எதிர்பார்த்து நின்றனர். அவ்வீரரைக் காணவேண்டுமென்று காத்துக்கொண்டிருந்தபோது கழிந்த ஒவ்வொரு கணமும் அவர்களுக்கு ஒவ்வொரு யுகம்போல் தோன்றியது. துறைமுகத்தினின்று சுவாமிகளே ஏற்றி வந்த ரயில் வண்டியும் கடைசியாகக் கண்ணுக்குப் புலப்பட்டது. திடீரென்று பீரங்கிகள் வெடித்தாற் போலிருந்தன அப்போது கிளம்பிய பேரொலிகள். அப்பெருமானும் தங்களெதிரே தோன்றவே தலைகள் அத்தனையும் ஒருமித்துச் சாய்ந்து வணங்கின. நறுமணமலர் சாத்தி மாலை சூட்டி அவரது திருமேனி முழுதையுமே மூடிவிட்டார்கள். பிறகு ஜனத்திரளை ஒதுக்கி ஒழுங்குபடுத்திச் சுவாமிகளை வண்டிக்கு அழைத்துச் செல்வதற்குள் தொண்டர்களுக்குப் போதும் போதுமென்று ஆகிவிட்டது. வண்டியை வாலிபர்கள் கூடி இழுக்கவே வாத்திய முழக்கத்துடனும் பஜனை கோஷ்டிகளுடனும் ஊர்வலம் துவங்கியது.

அதியற்புதமாக அலங்கரிக்கப்பட்டிருந்த வீதிகளின் வாயிலாக ஊர்வலம் சென்று முடிவுற நெடுநேரம் ஆயிற்று. ஆதலால் வரவேற்புப் பத்திரம் படித்தல் வேறு ஒருநாளைக்கு ஒத்திவைக்கப்பட்டது. சுவாமிகளும் அவருடைய மேல்நாட்டுச் சிஷ்யர்களும் மாளிகை ஒன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அநேக ஆயிரம் பேர்கள் கூடியிருந்து வரவேற்பு உபசாரத்தையும் ஒரு நாள் மிக விமரிசையாக நடத்தி வைத்தனர். அன்றைய தினம் சுவாமிகள் புரிந்த சொற்பொழிவானது, அப்பெரியார் மக்களுள் மாண்பு மிக வாய்க்கப் பெற்றவர் என்பதையும், நாட்டை உய்விக்க வந்துள்ள அருள் வேந்தர் என்பதையும் நன்கு வெளிப்படுத்தலாயிற்று.

ஏழு ஆண்டுகளுக்கு முன்பு வாரநகர் மடத்தில் தமது குரு சகோதரர்களை விட்டுப் பிரிந்த சுவாமிகள் இப்போது திரும்பவும் அவர்களைச் சந்திக்கலானார். சர்வமத மகாசபையில் பிரசித்தியடையும் பரியந்தம் அவர் எங்கு இருந்தார் என்பதே அவர்களுக்குத் தெரியாது. தங்களுடைய தலைவரோடு திரும்பவும் கூடியிருக்கையிலே குரு சகோதரர்கள் எய்திய இன்பம் எத்தகையது என்பதை எடுத்தோத வேண்டியதில்லை. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் இவரைப்பற்றி முன்பு கூறியிருந்ததெல்லாம் இப்போது பிரத்தியட்சமாய் நடைபெற்று வருவதைக் கண்டு அவர்கள் மகிழ்வுற்றனர்.

சுவாமிகளைக்கண்டு தரிசிக்கவும் அவரவருக்கு உற்ற ஐயங்களை அகற்றிக் கொள்ளவும் தினந்தோறும் மக்கள் அவர்பால் வந்து சூழ்ந்துகொண்டிருந்தனர். அவர்களுள் நெடுந்தூரத்துக்கு அப்பாலிருந்து வந்தவர்களும் உண்டு. ஆன்மிக விஷயங்களைப்பற்றிக் கேள்விகள் கேட்கப்படும் முன்பே பெரும்பாலும் சுவாமிகளிடமிருந்து பதில் வந்துவிடும். தங்களது மனத்தகத்தே இருந்த மயக்கத்தை இவர்

எவ்வாறு அறியலானூர் என்று பலர் வியந்தனர். பிராணுயாமத்தில் சிறிது பயிற்சி பெற்றிருந்த ஒருவர் ஒருநாள் தமது சந்தேகங்களை நிவர்த்தி பண்ணிக்கொள்ள விரும்பிச் சுவாமிகளிடம் வந்தார். வந்தவர் தமக்குற்ற சந்தேகத்தை வினவுதற்கு முன்பே அந்த விஷயத்தைப்பற்றி சுவாமிகள் ஆராயத் தொடங்கினுர். நான்கு மணி நேரம் அதன் நுண்பொருள்களையெல்லாம் தெற்றென அவர் விளக்கிக்கொண்டே போனுர். ஒப்பிட்டு நோக்குங்கால் யோகத்தைப்பற்றி இத்தகைய விரிவானதும் அனுஷ்டானத்துக்கு உரியதுமான விளக்கம் இது பரியந்தம் எந்த யோக சாஸ்திரத்திலுமே வெளியாகவில்லை எனலாம். அவர் இயற்றியிருக்கும் 'இராஜ யோகம்' என்ற நூலில் கூட இதைப்பற்றி அவர் பகர்ந்திருப்பது மிகமிகச் சொற்பம் என்று ஐயம் அகற்றிக்கொள்ள வந்தவர் முடிவு கட்டினுர்.

நானுவித விஷயங்களைப்பற்றி வெவ்வேறு பாங்குடையவர்களுடன் சுவாமிகள் சம்பாஷிக்க நேரிடும். அத்தகையவர்களுள் கோ-ரக்ஷக சபையொன்றைச் சேர்ந்தவர் ஒருவர் ஒருநாள் சுவாமிகளிடம் வந்தார். பசுமடங்கள் கட்டி அவைகளின் வாயிலாகக் கிழட்டுப் பசுக்களையும், கசாப்புக் கடைகளினின்று மீட்கப்பட்ட பசுக்களையும் பரிபாலிப்பது அந்தச் சங்கத்தின் நோக்கம். அதற்காகப் பணம் வசூலித்துக் கொடுக்கும்படி சுவாமிகளிடம் வந்த அங்கத்தினர் அவரை வேண்டினுர். மத்திய மாகாணத்தில் அது போழ்து மாந்தர் ஒன்பது லட்சம் பேர் பஞ்சத்தால் மடிந்து போய் விட்டனர். அவண் உற்றிருந்த வறுமை நோயைக் களைய இவர்களது சங்கம் ஏதாவது முயற்சியெடுத்துக் கொண்டதுண்டா, என்று சுவாமிகள் வினவினுர். "ஊழ்வினையினுல் அவர்கள் மடிந்து போனுர்கள். நாங்கள் ஏன் அவர்களுக்கு

உதவி புரியவேண்டும்?" என்று மறுமொழி கூறினர் கோ-ரக்ஷகர். "ஆடுமாடுகள் வெட்டுண்டு சாவது ஊழ்வினையாலேதான் என்று ஏன் பகரலாகாது?" என்று சுவாமிகள் மீண்டும் அவரைக் கேட்டார். "அப்படியன்று; பசுவைக் 'கோ மாதா' வென்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. மாதாவைப் பரிபாலிப்பது நம் கடமையல்லவா?" என்றார் பணம் சேகரிக்க வந்திருந்தவர். "வாஸ்தவந்தான், கோ மாதாவன்றி வேறு எந்த மாதாதான் உன்போன்ற புத்தி சாலிகளைப் பெற்றெடுப்பாள்!" என்று சுவாமிகளும் வியந்து விடைவிடுத்தார். கோ-ரக்ஷகர் திரும்பிப்போன பின்பு, அவர் போன்ற கல் நெஞ்சமுடையவர்களைப் பற்றியும், மதத்தை அனுஷ்டிப்பதில் விபரீத எண்ணங்களுடையவர்களைப் பற்றியும் சுவாமிகள் மிகவும் பரிந்து பேசினர்.

1897ஆம் ஆண்டு மே மாதத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் சிஷ்யர்கள் அனைவரையும் சுவாமிகள் கல்கத்தாவிலே ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு வரவழைத்தார். ஆங்கு அவர்களைக்கொண்டு மகாநாடு ஒன்று கூட்டுவித்து, ஐக்கிய வாழ்வின் அத்தியாவசியத்தைப் பற்றிச் சுவாமிகள் அவர்களுக்கு விரித்துக் கூறினர். மேல் நாடுகள் மகோன்னத நிலையடைந்திருப்பதற்குக் காரணம் ஐக்கிய வாழ்வு ஒன்றே என்பதையும் ஐயம் திரிபுற அவர் எடுத்துக் காட்டினர். பின்பு பரமஹம்ச தேவரின் பெயரால் தாங்கள் துவக்கியிருக்கும் இயக்கமானது பெருகுதற்கும் வலியுறுதற்கும் சங்கம் அல்லது ஐக்கிய வாழ்வு இன்றியமையாதது என்பதையும் அவர் நன்கு விளக்கிக் காட்டினர். அங்கே கூடியிருந்த பெரியோர்களும் ஒரு மனதாகச் சுவாமிகளது கருத்துக்கு இணங்கினர்கள். எனவே சத்சங்கமொன்று அன்று நிறுவப்பெற்றது. அதில் ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் என்றும்,

ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கம் என்றும் இணைபிரியாத அம்சங்கள் இரண்டு அமைக்கப் பெறுவனவாயின. முந்தையது முற்றும் பாரமார்த்திகமானது. கர்மயோகம், ராஜயோகம், பக்தியோகம், ஞானயோகம் என்னும் நான்கு யோகங்களின் வாயிலாக, சந்நியாசிகளும் பிரம்மசாரிகளும் கடவுளை அடைய முயலுதற்கெனவே அது ஏற்பட்டுள்ளது. முக்தியை நாடுகிறவர்கள் எடுத்துக் கொள்ளும் முயற்சிகளெல்லாம் அத்யாத்மிக விஷயமாகும். தங்களைத் தாங்களே சாதனங்களின் வாயிலாகத் திருத்தியமைப்பது அதன் நோக்கமாகும். தாங்கள் திருந்தியமைதற்கு ஏற்ப உலகக் காட்சி சாதகர்களுக்கு மாறியமைகிறது. தங்களது மனம் முற்றிலும் திருந்திச் செம்மையானல் அகத்திலும் புறத்திலும் இலங்குவது ஒரே பரம்பொருள் என்பது சுவானுபூதியில் அறியப்படுகிறது. இத்தகைய ஆத்ம சாதனங்களுக்கென்று அமைந்திருப்பது ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் என்னும் முற்பகுதியாம். பிந்தியது பரோபகார சம்பந்தமானது. தர்மப் பிரசாரம் செய்தல், பள்ளிக்கூடங்கள் வைத்தல், வைத்திய சாலைகள் நடத்துதல், நானவித கஷ்டநிவாரண ஊழியங்கள் புரிதல் ஆகிய பல அலுவல்களை அதே சந்நியாசிகளும் பிரம்மசாரிகளும் இரண்டாவது அங்கத்தின் மூலம் நிர்வகித்து வருகின்றனர். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரைப் பின்பற்றுகிற ஒவ்வொருவனிடத்திலும் இந்த இரண்டு அம்சங்களும் இருக்கவேண்டும். அதாவது தான் கடவுளை அடைய விரும்புவது போன்று, கடவுளின் பிள்ளைகளாகிய உலகத்தவருக்குத் திருத்தொண்டு செய்யவும் பழகி வரவேண்டும். இந்த உயர் நோக்கத்துடன் சுவாமிகள் துவக்கிய சங்கமானது இன்றைக்கு உலகெங்கும் எவ்வாறு பரவி வருகிறதென்பது நாடு அறிந்த விஷயமே.

சுவாமிகள் கல்கத்தாவில் வதிந்திருந்தபோது அவரது அளவிலாக் கருணையைத் தெளிவுறக் காட்டிய நிகழ்ச்சியொன்று நேரலாயிற்று. அதாவது சாயணச்சாரியர் பாஷியத்துடன் அவர் ஒரு தடவை ரிக்வேதம் படித்துக்கொண்டிருந்தார். அப்போது ஸ்ரீ ராமகிருஷ்ணரின் கிரஹஸ்த சிஷ்யருள், கிரீஷ் சந்திரகோஷர் என்பார் அங்கு வந்துசேர்ந்தார். அப்பெரியார் ஒரு பரம பக்தர் எனினும் சாஸ்திரஞானம் அதிகம் உடையவரல்லர். ஆதலால் சுவாமிகள் அவரைப் பார்த்து "நீவிர் வேதம் படிக்கலாகாதா? வெறும் நாமஜபத்தால் ஆவதென்ன?" என்றார். இதைக் கேட்டதும் கிரீஷ் சந்திரகோசர், "உங்கள் வேதத்துக்கு தூர நின்றுகொண்டே ஒரு நமஸ்காரம் செய்கின்றேன்" என்று சொல்லிக்கொண்டு வணங்கினர். பிறகு அவர் உலகில் விதவைகள் படுகிற வேதனைகளையும், அனாதைகள் படுகிற அல்லல்களையும், ஏழைகள் படுகிற துயரங்களையும் மனமுருக எடுத்தோதினர். "உங்கள் வேதம் இவர்களுக்காக என்ன செய்திருக்கிறது?" என்று கிரீஷ் கேட்டார். இம்மொழிகளைச் செவிமடுத்த சுவாமிகளது உள்ளம் குழைந்தது; கண்களில் நீர் ததும்பியது; புத்தகங்களை மூடிவைத்துவிட்டுத் தனியாக ஓரிடத்தில் போயிருந்துகொண்டு நைந்துருகி அவர் அவனியில் அவதிப்படுபவர்களைக் குறித்துக் கண்ணீர் சிந்தினர். ஞானம் என்றால் கல்நெஞ்சம் படைத்திருப்பது அன்று என்பதாகப் பன்முறை அவர் பகர்ந்ததுண்டு. அங்ஙனமே பாமரருக்காக அவர் பட்ட கஷ்டமும் சிந்திய கண்ணீரும் எவ்வளவு என்பதை அந்தோ யார் அறிவார்!

ஓய்வில்லாத உழைப்பால் சுவாமிகளது உடல் நலம் சிறிது குலைந்து வந்தது; உள்ளமும் தளர்வுற்று வந்தது. ஆதலால் அவர் மலைநாடுகளுக்குச் சென்று சின்னாள் வதிந்

திருப்பது உசிதமென்று மருத்துவர்கள் பகர்ந்தார்கள். சுவாமிகளும் அதற்கு இணங்கித் தமது பரிவாரங்களுடன் இமயமலையிலுள்ள அல்மோரா என்னும் இடம் போய்ச் சேர்ந்தார். அவ்வூரார் அப்பரம புருஷருக்கு அளித்த வரவேற்பு உபசாரம் மற்ற இடங்களில் அவர் பெற்றவைகளுக்கு எவ்விதத்திலும் குறைந்தது அன்று. ஆனால், அதை ஈண்டு வருணிக்கவேண்டிய அவசியமில்லை. வைதிகக் குரவர் ஒருவரை வரவேற்கும் விதம் ஹிந்துக்களுக்கு இயல்பாகவே நன்கு தெரியும். ஆதலால் மீண்டும் அவர் சென்றவிடங்களிலெல்லாம் அவருக்கு நடந்த வந்தனை, வழிபாடு, உபசாரம் முதலிய சிறப்புக்களைப்பற்றித் திரும்பத் திரும்பப் பகர்வோமல்லோம்.

அல்மோரா வாசிகளது விருப்பத்துக்கிணங்கிச் சுவாமிகள் ஆங்கு ஆங்கிலத்திலும் ஹிந்தி பாஷையிலும் சில உபந்நியாசங்கள் செய்தருளினர். ஹிந்தி பாஷையில் முன் எப்போதும் அவர் பிரசங்கம் பண்ணியது கிடையாது எனினும் அம்மொழியிலே அவர் மிக நன்றாகவும், தெளிவாகவும், தங்குதடையின்றியும் பேசினர் என்று பலர் மெச்சினர்கள். சுவாமிகளின் சொற்பொழிவுகளின் பலனாக அவ்வூரார்கள் மாட்டு ஈசுவரபக்தியும் தேசாபிமானமும் அதிகரிக்கலாயின. பத்துவாரகாலம் அம்மலைநகரின்கண் சுவாமிகள் வதிந்திருந்தார். அதற்குள்ளாக அவர் எய்திய உடல் நலனைத் தாமே மிகப்போற்றிக் கூறியுள்ளார். சிறு பிராயத்தில் தமக்கிருந்த துடுக்கும் திண்மையும் இப்போது திரும்பி வந்துவிட்டன என்றார். அவர் இதுபோழ்து உடல் திட்பம் படைத்துள்ள ஒருவரை ஒரே தட்டில் அடித்து விழ்த்த வல்லவராயிருந்தார்.

சுவாமிகள் அல்மோராவில் வசித்திருந்த காலை நிகழ்ந்த இரண்டு சம்பவங்கள் குறிப்பிடத்தக்கவைகளாகும். அன்பர்

கள் சிலர் இவருடன் வந்து பேசிக்கொண்டிருந்தபோது "பிறர் மனதில் எழும் எண்ணங்களை நீங்கள் அறிந்து கொள்ள முடியுமா?" என்னும் கேள்வியொன்றைக் கிளப்பினர். "அதில் சிரமமென்ன கிடக்கிறது? இதோ இந்த சுவாமிகள் உமது மனதில் இருக்கும் எண்ணத்தை விளையாட்டாக எடுத்து உரைப்பார்" என்று தம் அருகில் அமர்ந்திருந்த குரு சகோதரர் ஒருவரைச் சுட்டிக்காட்டிச் சொன்னார். ஆனால் உண்மையில் அந்தச் சித்தியைப் பக்கத்தில் இருந்த துறவியர் பெற்றிருந்தாரல்லர். "என்ன, என்னை ஏளனம் பண்ணுகிறீர்களா?" என்று குரு சகோதரர் வங்காள மொழியில் ஆட்சேபித்தார். அங்கிருந்த மற்ற அன்பர்களுக்கு வங்காள மொழி தெரியாது. ஆனால் சுவாமிகளோ வங்காளத்தில் மேலும் விளக்குவாராயினர்: "இதில் சிரமம் ஒன்றுமில்லை. உமது மனதைக் காலியாக்குங்கள்; அப்பொழுது அதில் எழுகிற எண்ணம் இம்மனிதருடைய உள்ளத்தில் துடித்துக்கொண்டிருக்கிற எண்ணமாகும்" என்றார். குரு சகோதரரும் அங்ஙனமே செய்தார். வந்திருந்தவர் மனதில் தோன்றிய எண்ணத்தைச் சரியாக அவர் சொல்லிவிட்டார்! அதைக் குறித்து வினவியவர் பெருவியப்படைந்தார். ஆனால் இதுபோன்ற சித்திகளைச் செய்யலாகாதென்று சுவாமிகள் இருவரும் பிறகு தமக்குள்ளே பேசிக்கொண்டிருந்தனர். சுவாமிகள் அல்மோராவில் வசித்திருந்தபோது பிரம்ம ஞான சபைக்குத் (Theosophical society) தலைமை வகித்திருந்த அன்னி பெஸண்ட் அம்மையார் (Mrs. Annie Besant) அவ்வூரில் ஓய்வின் பொருட்டுத் தங்கியிருந்தார். இந்த பிரம்ம ஞானசபை இந்தியாவுக்குச் செய்து வந்த பல நன்மைகளுக்கிடையில் குருட்டு நம்பிக்கையொன்றை மக்களுக்கிடையில் பரப்பிவந்தது. பழங்காலத்து மஹாத்மாக்கள் சூட்சும சரீரங்கள் தாங்கி ஹிமாலயத்தில்

வதிந்திருப்பதாகவும், அவர்கள் அப்பர்வதத்தில் இடையிடையே சபைகள் கூட்டுவதாகவும், அத்தகைய மஹாத்மாக்களில் சிலர் பெஸண்ட் அம்மை போன்றவர்களுக்குக் காட்சி கொடுத்து அவர்களை நல்வழியில் தூண்டுவதாகவும், மக்களுக்கிடையில் போதித்து வந்தார்கள். அந்தப் போதனை முற்றிலும் பொருளற்றது என்று விவேகானந்த சுவாமிகள் கண்டித்து வந்தார். பெஸண்ட் அம்மையார் சுவாமிகளை அல்மோராவில் சந்தித்துத் தம்மையும் தமது பிரம்ம ஞான சபையையும் பற்றித் தாக்கி ஒன்றும் பேசவேண்டாம் என்று வணங்கி வேண்டிக்கொண்டார். அதுமுதல் சுவாமிகள் அந்தச் சபையைப்பற்றிய தமது கருத்தை வெளியிடாமல் தம்மோடு வைத்துக்கொண்டார். அவரது உதார குணத்துக்கு இது நல்லதோர் எடுத்துக்காட்டாகும்.

அநேக இடங்களுக்குச் சுவாமிகள் எழுந்தருள வேண்டுமென்று அழைப்புக் கடிதங்கள் வந்து குவிந்து கொண்டிருந்தன. அவைகளுள் ஒன்று காஷ்மீரத்திலிருந்து வந்தது. சுவாமிகளும் அதற்கிணங்கிக் கடிதில் அங்குப் போகவேண்டியது அவசியமாயிற்று. கற்றவர்களுடனும், மற்றவர்களுடனும், மகாராஜாவுடனும் அவர் அங்கு நெருங்கிப் பழகி வருவாராயினர். சமஸ்தானத்தில் இராஜரீதிக்கு ஏற்ற மரியாதைகள் இத்துறவி வேந்தருக்கு அளிக்கப்பட்டன. ஊராரது வேண்டுகோளுக்கிணங்கிச் சுவாமிகள் இவ்விடத்திலேயும் ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும் உபந்நியாசங்கள் சில பொழிந்தருளினர். வைதிக ஹிந்துக்களுக்கும், ஆரிய சமாஜிகளுக்கும், மகமதியர்களுக்கும் இடையே இருந்த சில பிணக்குகளையும் அபிப்பிராய வித்தியாசங்களையும் போக்குதற்கு அவருடைய சொற்பொழிவுகள் பெரிதும் பயன்பட்டன. பிறகு பாஞ்சாலத்துக்கும், இராஜபுதனத்தில் ஆள்வார், கேத்திரி போன்ற சமஸ்தானங்களுக்கும் சுவாமிகள்

விஜயம் செய்தார். ஆங்காங்கு அவர்பால் முன்னமே சரண் புகுந்திருந்த சிஷ்யர்களும், அறிமுகமாயிருந்த நண்பர்களும் உத்தியோகஸ்தர்களும் எத்தகைய ஆர்வத்துடனும் ஆடம் பரத்துடனும் அவரை வரவேற்றனர் என்பது விரிக்கிற் பெருகும்.

பல ஆண்டுகளுக்கு முன்பு இவர் பரிவ்ராஜகராய்ச் சுற் றித் திரிந்தபோது ஆள்வார் நகரில் பேரன்புடன் இவருக்கு அமுது பண்ணி வைத்த பரம ஏழைக் குடும்பம் ஒன்றிருந் தது. அதைப்பற்றிய ஞாபகம் இப்போது சுவாமிகளுக்கு வந்தது. ஆதலால் இராஜரீதியுடன் திகழ்ந்த இந்நாளிலும் அவர் தாமே வலிய அக்குடிசையை நாடிச் சென்ருர். அங்குக் குடியிருந்த பாட்டியார் ஒருத்திக்குச் சுவாமிகளேக் கண்ட தும் சொல்லுக்கடங்காத பரமானந்தம் உண்டாயிற்று. அவள் வார்த்த கூழைச் சுவாமிகள் தேவாமிர்தம்போல் பாராட்டிப் பருகிப் பூரித்திருந்தார். அமெரிக்கா சென்ற திலிருந்து இவர் பணத்தைக் கையாள வேண்டியது அவசிய மாயிற்று என்பதை ஈண்டுக் கருத்தில் வைப்போம். அக்குடி சையினின்று புறப்படுகையிலே அதில் வாழ்ந்திருந்த ஏழைக் குடும்பத்துக்கு ரூபாய் நூறு அவர் பரிசளித்தார். வறுமையி லும் செம்மை தவருத அவர்களோ அதை ஏற்க மறுத்தனர்; சுவாமிகள் மன்ருடி அதைப் பெற்றுக்கொள்ளச் செய்தார்.

காஷ்மீரம், பாஞ்சாலம், இராஜபுதனம் இந்த மூன்று மாகாணங்களிலும் எழுந்தருளியிருந்தபோது சுவாமிகள் நிகழ்த்திய உபந்நியாசங்களின் வாயிலாகவும் சம்பாஷணை களின் வாயிலாகவும் நாட்டை உய்விப்பதற்கேற்ற கருத்துக் கள் சிலவற்றை அவர் வெளியிட்டார். அவைகளில் சில ஈண்டுக் கருதப்படுவனவாம்:—

“ஏற்கனவே மலிந்து கிடக்கின்ற ஜாதி பேதங்களைப் பெருக்குவது ஒண்ணுது; தகுந்த கல்வி முறையைக்கொண்

டும் மற்றும் பல விதங்களிலும் அவைகளை ஒடுக்கவே முயல வேண்டும். வறுமை நோயால் வருந்துகையிலும் விவாகம் பண்ணிக்கொண்டு பலவீனமான அடிமைக் குழந்தைகள் பலபேரைப் பெற்றெடுத்து அவைகளை உலகிலே உழன்று அலையவிட மடையன் ஒவ்வொருவனும் ஆத்திரத்துடன் முன் வருகின்றான். இப்பரிதாபத்தைப் போக்க பிரம்மசரிய விரதம் அதிகரிக்க வேண்டும். சுயநலத்தைப் பின் அணி யிலும் பரநலத்தை முன் அணியிலும் வைத்து வாழவல்ல பரந்த எண்ணமுடையவர்கள் பல்லாயிரம் பேர்கள் நாட்டி னுள் தோன்றுவது அவசியம்.''

சுவாமிகளது நன்றியறிதலை விளக்குகின்ற சிறிய நிகழ்ச்சி யொன்றையும் ஈண்டுப் பகர்வோம். அல்மோரா வில் பல்லாயிரம் பேர்கள் இவரை ஆடம்பரத்துடன் ஊர் வலம் அழைத்துச் சென்றனர். அப்போது எட்ட நின்று கொண்டு இதையெல்லாம் பார்த்து வியந்திருந்த மகமதியப் பக்கிரி யொருவன் இவருக்குத் தென்பட்டான். உடனே சுவாமிகள் வாகனத்தினின்று இறங்கி அவ்விடம் போய்ச் சில ஆண்டுகளுக்கு முன்பு தாம் தாகத்தால் நாவறண்டு உயிர் விடும் தறுவாயிலிருந்தபோது வெள்ளரிப்பழம் தந்த நன் மகன் அவனல்லவாவென்று ஞாபக மூட்டினார். அவன் சிறிது சிந்தித்துப் பார்த்து அப்பழைய நிகழ்ச்சியை ஞாப கத்துக்குக் கொண்டு வந்தான். அப்பொழுது அவனுக்கு உண்டான ஆச்சரியத்துக்கு அளவில்லை. அன்று உலகத்த வர்களுக்கு அறிமுகமாகாது அனாதை போன்று திரிந்த துறவியரா இன்று உலகப்பிரசித்திப்பெற்றுள்ள பரமாசாரிய ராகத் திகழ்கின்றார் என்பது அப்பக்கிரியின் உள்ளத்தில் உதித்த வியப்பு ஆகும். பிறகு அவனுக்குச் சிறிது சன் மானம் அளித்து அவனைப் போற்றிவிட்டு மீண்டும் சுவாமி கள் ஊர்வலத்தில் கலந்துகொண்டார்.

15. நானவித அலுவல்கள்

வடமேற்குத் திசையினின்று கல்கத்தாவுக்குத் திரும்பி வந்த பின்பு சுவாமிகள் சில மாதங்களாக நானவித அலுவல்களில் ஈடுபட்டிருந்தார். கிரஹஸ்த சிஷ்யர்களின் இல்லங்களுக்கு எழுந்தருளல், தம்மைப் பார்க்க வந்தவர்களுக்குப் பேட்டி கொடுத்தல், சந்நியாசிகளுக்கும் பிரம்மச்சாரிகளுக்கும் ஆன்மப் பயிற்சி, கல்வி முதலியன வழங்கல், நெடுநேரம் நிஷ்டை புரிதல், சங்கீர்த்தனங்கள் பாடுதல், சாஸ்திரங்கள் படித்தல், நூல்கள் இயற்றுதல், கட்டுரைகள் எழுதுதல், கடிதங்களுக்குப் பதில் விடுத்தல், கதைகள் சொல்லுதல், கீதை உபநிஷத்துக்களைப் பற்றி உபந்நியாசங்கள் செய்தல், பௌதிக சாஸ்திரங்களையும், தேச சரித்திரங்களையும் ஆராய்தல், சிஷ்யர்களைத் திரட்டி அமர்த்திக்கொண்டு அவர்களுடைய வினக்களுக்கு விடையளித்தல் இத்தகைய சத்காரியங்களில் அவர் காலம் கழிப்பாராயினர்.

மேல் நாடு ஏகுதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்பு கங்கா நதிக்குக் கீழ்புறம் வாரநகர் மடத்தில் சுவாமிகள் வதிந்திருந்தபோது தங்களுக்கு நிலைத்த ஸ்தலம் நதியின் மேற்குக் கரையில்தான் அமையுமென்று அவர் குறிப்பிட்டுச் சொன்னர். அவ்வாறே 1898வது ஆண்டின் துவக்கத்தில் வாரநகருக்கு நேர் மேற்றிசையில் பேலூர் என்னும் கிராமத்தில், கல்கத்தாவுக்கு அருகில், எனினும் ஜன சஞ்சாரமில்லாத ஏகாந்தமான இடத்தில், புண்ணிய நதியாகிய கங்கா தீரத்திலே, பதினைந்து ஏக்கரா பூமியொன்றை அவர் விலைக்கு வாங்கினர். அதற்கென வேண்டியிருந்த பெருநிதியைச் சுவாமிகளின் மேல்நாட்டுச் சிஷ்யர்கள் காணிக்கையாகச் செலுத்தினர்கள்.

இது போழ்து கல்கத்தாவில் பிளேக் என்னும் கொடிய கொள்ளை நோய் பரவலாயிற்று. கணக்கற்ற பேர் அதில் மடிந்து போயினர். அது ஒரு தொற்று நோய் ஆதலால் அரசாங்கத்தார் அவ்விஷயத்தில் கடுமையான நடவடிக்கை யெடுத்துக்கொண்டனர். நகரவாசிகள் திகில் அடைந்து நாலுபக்கமும் சென்று குடியேற ஓடினார்கள். இக்கொள்ளை நோயினால் பிடிக்கப்பட்டவர்களது பரிதாபகரமான நிலைமையைக் கண்டு ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளுக்கு மனம் இளகி விட்டது. உடனே அவரும், மற்ற குரு சகோதரர்களும், சிஷ்யர்களும் கூடிக் கஷ்ட நிவாரண வேலையைத் துவக்கினார்கள். பிளேக் நோயால் வருந்துபவர்களுக்குக் குற்றேவல் புரிந்து பிணியைத் தணிப்பதே அவர்களின் நோக்கம். இத்திருப்பணியைத் துவக்கிய ஆரம்பத்தில் அதற்குப் போதுமான பணம் வந்து சேரவில்லை. ஆதலால் தாம் மடம்கட்டுவதற்கென வாங்கியிருந்த நிலத்தை விற்றுச் செலவிட சுவாமிகள் முன்வந்தார். ஆனால் நிலத்தை விற்பதற்கு முன்பே போதிய அளவு நிதியும் வந்து சேர்ந்து விட்டது. பிளேக் நோயாளி ஒருவனின் அருகிலே போவதும் அபாயகரமானது. பிணியாளியின் சுற்றத்தார்களும் கூட உயிருக்கு அஞ்சி அவனது அண்டையில் போகார். "தந்தை தாய் தமர் தாரம் மகவென்னுமிவை யெல்லாஞ் சந்தையிற் கூட்டம், இதிலோ சந்தேகமில்லை......" என்ற ஆன்றோர் வாக்கை பிளேக் நோயானது வெட்ட வெளியாக்கி வந்தது. ஆனால் அத்தகைய திக்கற்ற பிணியாளர்களுக்குச் சுவாமிகளும் அவரைச் சார்ந்தவர்களும் அன்புடன் செய்த பணிவிடைகளானவை அரசாங்கத்தாரையும் நாட்டு மக்களையும் வியக்கப் பண்ணின. தன்னலம் பாராட்டாத அன்பு துறவியர்களிடத்துத் தான் உண்டு என்பதை இவர்கள் செயலில் காட்டினார்கள்.

அமெரிக்காவினின்றும் இங்கிலாந்தினின்றும் சிஷ்யர்களும் நண்பர்களும் பலர் சுவாமிகளது சத்சங்கத்தை நாடி இந்தியாவுக்கு வந்திருந்தார்கள். அப்போது முதுவேனிற் காலமாதலால், வெப்பம் மிகுந்த கல்கத்தாவிலே அவர்களை அமர்த்தி வைத்து வாட்டுவது சரியல்லவென்றெண்ணிய சுவாமிகள் இமாலய பர்வதத்துக்கு அவர்களை அழைத்துச் சென்றார். நைனித்தால் என்ற இடத்துக்கு முதன் முதல் அவர்கள் போய்ச் சேர்ந்தார்கள். இங்கே சில வாரங்கள் பரியந்தம் அமர்ந்திருந்து தேக நலம் பெற்றான பின்பு அவர்கள் அல்மோராவுக்குப் புறப்பட்டார்கள். சுமார் ஒரு மாதத்துக்கு மேல் அத்திருக்கூட்டத்தார் ஆங்கு வதிந்திருந்தனர். அதுபோழ்து இந்தியாவினது மறைந்து கிடக்கும் மகிமையைப் பற்றிச் சுவாமிகள் புகட்டின போதனைகளை அவர்கள் பொன்னே போற் போற்றினார்கள். இந்தியர்கள் நடையுடை பாவனைகளிலும் மற்றுமெல்லாச் சடங்குகளிலும் மத அனுஷ்டானத்தையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறார்கள். உடல் அழியும் தன்மையுடையது. ஆன்மா ஒன்றே அழிவற்றது என்பதை ஞாபகத்துக்குக் கொணர ஹிந்துக்கள் முயலுகின்றனர் என்பதைத் தெளிவுற அவர் விளக்கிக் காட்டினார். அத்துடன் ஹிந்துக்களிடத்தில் இருக்கின்ற சில ஆபாச பழக்கவழக்கங்களையும் அவர் தயங்காது எடுத்துரைத்தார். வாழ்வு முறையானது தேசங்கள் தோறும் ஒவ்வொரு பாங்குடையதாயிருக்கிறது. ஆனால், அதை அன்புடனும் அனுதாபத்துடனும் கவனியாமையே துவேஷத்துக்கும் சண்டை சச்சரவுகளுக்கும் காரணமாகிறது என்று சுவாமிகள் சரித்திரபூர்வமாக அவர்களுக்கு அறிவுறுத்தினார்.

பிறகு பரதகண்டத்தின் பூந்தோட்டமெனத் திகழும் காஷ்மீரத்துக்கு அவர்கள் யாத்திரை போனார்கள். வர்ண

னக்கு எட்டாத இயற்கையழகு எங்கேனுமிருக்குமாயின் அஃது இந்த நாட்டிலேதான். ஸ்ரீநகர் என்பது இதற்குத் தலைமைப் பட்டணம். பூமகளின் பெருமையனைத்தும் பொலி யப்பெற்றுள்ள இவ்வூருக்கு அவர்கள் வந்து சேர்ந்தார்கள். ஆங்கு அவர்கள் அரும்பெரும் விஷயங்களை ஆராய்ந்து மகிழ் வுற்றிருக்கையில் அமெரிக்கர்களுக்கு மற்றொருவிதத்தில் ஆனந்தத்தைச் சுவாமிகள் ஊட்டிவைத்தார். அதாவது அமெரிக்கர்களது சுவாதீன நாளாகிய ஜூலை மாதம் நாலாம் தேதி வந்தது. அதை ஒரு பெரிய விழாவாக அவர்கள் அமெரிக்காவில் கொண்டாடுவது வழக்கம். அதற்கேற்ப அன்று அதிகாலையில் அந்நாட்டுத் தேசிய கொடியொன் றைச் சுவாமிகள் புஷ்பங்களுக்கிடையே அலங்கரித்து வைத்து, மேல் நாட்டுச் சிஷ்யர்கள் அனைவரையும் அதைச் சூழ்ந்து அமர்ந்திருக்கப்பண்ணி, "ஜூலைத் திங்களின் நாலாம் திருநாள்" என்ற தலைப்புக்கொண்ட ஆங்கிலச் செய்யுள் ஒன்றை இயற்றி, அதை அவர்களின் முன்னிலையிலே அரங் கேற்றி வைத்தார். அக்காவியத்திற் பொலியும் உயர் கருத் துக்களை யாரும் இன்றைக்கும் படித்தறியலாம். அத்திரு நாளை முன்னிட்டு அப்போது விருந்து ஒன்று நடைபெற்றது. அப்பொழுது நடந்த ஸம்பாஷணையில் தாம் இன்னும் நான்கு வருஷங்கள் தான் இத்தரணியில் தேகம் தாங்கி வாழ்ந்திருக் கப் போவதாகவும் நான்கு ஆண்டுகள் கழிந்த பின்பு ஜூலைத் திருநாளாகிய நாலாந்தேதியன்றே தமது தேகத்தினின்று சுவாதீனம் பெறத் திருவுளம் கொண்டிருப்பதாகவும் சுவாமி கள் பகர்ந்தருளினர்! சுவாமிகளது கூற்றின்படியே அவரது அந்திய காலம் நிகழ்வதை இறுதியில் பார்ப்போம்.

ஹிமாலய பர்வதத்தின்கண் இருக்கும் சிறந்த தீர்த்தங் களுள் அமரநாதம் என்னும் சிவஸ்தலம் ஒன்று. சமுத்திர

மட்டத்துக்கு மேல் 18,000 அடி உயரத்தில் இருக்கிறது. காஷ்மீரத்தின் மார்க்கமாக வருஷத்தில் ஒரே முறைதான் யாத்திரை வாசிகள் ஈண்டுச் செல்கின்றனர். செங்குத்தாக இருக்கும் மலைத்தொடர்களில் பனிக்கட்டியின்மீது, ஒடுங்கிய பாதைகளின் வழியாகப் பெரிய கும்பல் ஒன்று நடந்து செல்லும். அக்கும்பலானது வழியில் வசதியான இடங்களில் கூடாரங்கள் அமைத்து, அவைகளில் தங்கியிருந்து இரவு நேரங்களைப் போக்குவார்கள். அப்பொழுது பஜனை கள் பாடுவது முக்கியமானதொரு நிகழ்ச்சியாகும். ஆண்டு தோறும் ஆவணிப் பௌர்ணமியன்று அமரநாதர் தரிசனம் காண்பது அந்த யாத்திரையின் நோக்கமாகும். சுவாமிகளும் தமது திருக்கூட்டத்தை அழைத்துக்கொண்டு அவ்வாண்டு அந்த ஸ்தலத்துக்குப் புறப்பட்டார்.

அத்திருப்பதியை அணுக அணுக அவரிடத்தில் சிவ போதம் அதிகரித்துக்கொண்டே போயிற்று. பதியின்கண் போய்ச் சார்ந்ததும் புறவுணர்ச்சிகளை யெல்லாம் அறவே இழந்து விட்டுப் பர சொரூபத்திலேயே சுவாமிகள் புதைந் திருந்தார். புண்ணிய க்ஷேத்திரங்களில் பிரத்தியேக மகிமை யொன்று உண்டென்பதை இப்போது அவர் பிரத்யட்சமாய் உணரலானுர். அறியாமலேயே ஒருவன் மருந்தைப் புசித்து விட்டாலும் அதன் பலனை அவன் அனுபவிப்பது போன்று பக்தி விசுவாசம் இல்லாது ஆலயம் தொழுதலிலும் அதற் கேற்ற புண்ணிய பலன் இருக்கிறது. ஆதலால் புண்ணிய க்ஷேத்திரங்களுக்குப் போவது சாலவும் நன்று என்பதை ஈண்டு அவர் நன்குணர்ந்தார்.

அமரநாதத்திலே சிவபெருமானது தரிசனம் கண்டு விட்டு மீண்டும் ஸ்ரீநகர் வந்த பின்பு சுவாமிகள் யாண்டும் சக்தியைப் பற்றியே சிந்திப்பாராயினர். நவீன பௌதிக

சாஸ்திரிகள் அதை ஜடசக்தி என்கிறார்கள். அருள்துறையில் தெளிந்த ஞானிகளோவெனின் அந்தச் சக்தியானது சிவத்துக்கு அன்னியமானதன்று என்கின்றனர். அனன்னியமாதலால் அது முற்றிலும் சிவசொரூபம். சித் சக்தியென்று அது பகரப்பெறுகிறது. க்ஷீரபவானி என்ற அம்பாளது ஆலயம் ஒன்று ஸ்ரீநகருக்கு அருகில் இருக்கிறது. சுவாமிகள் சிலநாள் அங்கே வதிந்திருந்தார். தேவியின் ஆலயம் பழுதுபட்டுக் கிடந்ததைக் கண்டு அவர் சிறிது துயரங் கொண்டார். அதைச் செவ்வனே புதுப்பிக்கவேண்டுமென்று கவலையுற்றிருந்தார். ஆனால் பராசக்தி ஒருநாள் திடீரென்று அவருக்குத் திருக்காட்சி கொடுத்தருளி, "என்னைப் பரிபாலிப்பவன் நீயா? அல்லது உன்னைப் பரிபாலிப்பவள் நானா?" என்று வினவினாள். "அகில அண்டங்களையும் கோயிலாகக் குடிகொண்டிருப்பவளே! மெய்யறிவு பெற்றேன் தாயே! தொழும்பனை க்ஷமித்தருள்வாய்" என்று சுவாமிகளும் விண்ணப்பித்து வணங்கினார். எல்லாம் வல்ல இறைவிக்கு உதவிபுரியும் யோக்யதை மூன்றரை முழ உயரமுள்ள மனிதனுக்குச் சிறிதேனும் இல்லையென்பது இதனால் தெரிய வருகிறது. 'அவனன்றி ஓரணுவும் அசையா'தெனும் பெரிய ஆப்தமொழி ஈண்டுச் சுவாமிகளுக்குச் சுவானுபவமாய் விளங்கலாயிற்று. தமது அனுபவத்தை அவர் 'அம்பாள் காளி' என்னும் தலைப்புக்கொண்ட ஒரு காவிய ரூபமாக ஆங்கிலத்தில் இயற்றியிருக்கிறார்.

காஷ்மீரத்தில் அமர்ந்திருந்தபோது பால சந்நியாசி ஒருவருக்குச் சுவாமிகள் சில யோக சாதனங்கள் கற்பித்துக் கொடுத்தார். ஆதலால் அந்த இளந்துறவிக்கு இவர்மீது அபிமானமும் அன்பும் அதிகரித்து வந்தன. இதைக் கண்டு சகிக்க இயலாத அந்த இளைஞரது குருவானவர் பொறாமை

கொண்டு சுவாமிகள்மீது 'ஏவல்கள்' ஏவினுர். பிறகு தமது சிஷ்யனை அழைத்து, "அந்த வேற்ருனிடம் நீ போகாதே; அவனுக்கு யோகப் பயிற்சி போதாது. ஆதலால் அவன் இரத்தம் இரத்தமாகக் கக்கப்போகிருன். அவனை நம்பினுல் உனக்கும் அதே கதிதான்" என்று புத்தி புகட்டினுர். அவ்வாறே சுவாமிகளுக்குச் சொற்ப நாளில் மண்டையிடி வந்து விட்டது. இரத்தமும் கக்கலானுர். சில நாள் பெரு வேதனையடைந்த பின்புதான் மண்டையிடி சொஸ்தமா யிற்று. பிரம்ம ஞானிகளும் ஏவல் வினைகளுக்கு உட்படு வது வியக்கத்தக்கதேயாம். ஜகத்குரு ஆதிசங்கரரும், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரும் இத்தகைய ஏவல் வினை களுக்கு ஆளானுர்கள். ஆனுல் கேடு போல வந்த வினை யானது முடிவில் அவர்களுக்கு நன்மையையே விளைவித்தது. ஒருவேளை ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளுக்கும் அவ்வாறே நேர்ந்திருக்கலாம். "யோகி ஒருவனுக்குச் சில வேளைகளில் மூலாதாரத்தினின்று மேல் நோக்கிச் செல்லுகிற இரத்த மானது வாயின் வழியாக வெளிப்படாவிடின் அது சிரசுக்கு ஏறிச் சமாதி நிலையை வருவித்துவிடும். அப்போது தேகம் தானே விழுந்து விடுகிறது" என்று யோக சாஸ்திரம் பகர்கின்றது.

காஷ்மீரத்தில் நேர்ந்த் உபாதையால் நைந்து போன திருமேனியுடன் சுவாமிகள் கல்கத்தாவிலுள்ள பேலூர் மடத் துக்கு வந்து சேர்ந்தார். அவரது தேகமும் முற்றும் சொஸ்த மடைந்து பழைய நிலைமைக்கு வருவதற்குச் சிறிது காலம் பிடித்தது. புதிதாக விலைக்கு வாங்கியிருந்த பூமியின்மீது துவக்கப்பட்டிருந்த மடாலயக் கட்டட வேலையும் இப்போது பூர்த்தியாயிருந்தது. குருதேவர் தம்மீது சுமத்தி வைத் திருந்த பொறுப்புள்ள பெருங்காரியமொன்றை நிறைவேற்றி

விட்ட திருப்தி இப்போது அவரது உள்ளத்திலே எழலாயிற்று. ஏனென்றால் இது பரியந்தம் வாடகை வீட்டிலே நிறுவியிருந்த ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துக்கு ஸ்திரமான சொந்த இடமொன்று இப்போது அமைந்து விட்டது. ஒரு சுபதினத்தன்று தமது குருநாதரை ஒரு திருவுருவப்படத்தின் வாயிலாகச் சுவாமிகள் ஆங்கு எழுந்தருளப்பண்ணி வைத்தார். பிறகு பூஜை, ஹோமம் முதலிய வைதிகச் சடங்குகள் முறையே நடைபெற்றன. பேலூர் மடமானது இன்றைக்கு உலகெங்கும் இருக்கும் ஸ்ரீ ராமகிருஷ்ண மடங்களுக்கெல்லாம் தலைமை மடமாகத் திகழ்ந்து வருகிறது. இந்த ஸ்தலத்தைப் பற்றி சுவாமிகள் சொல்லியதாவது: "ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் தமது புனித வாழ்விலே விளக்கிக் காண்பித்தது போன்று எல்லா மதங்களையும் சமயங்களையும் சமரசப்படுத்துவதே இந்த மடத்தினது சிறந்த நோக்கமாகும். புத்துயிர் அளித்து மனிதனை மேம்படுத்த வல்ல பரந்த எண்ணங்களே ஈண்டுப் புகட்டப்படும். சமரசக் கொடி நாட்டப்பட்டிருக்கும் இவ்விடத்தினின்று சாந்தம், அன்பு, அமரிக்கை, அனுதாபம் இத்யாதி சீரிய செய்திகளே மங்களகரமாக உலகெங்கும் வியாபிக்கும்."

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் அரிய போதனைகளையும், மற்றும் பல உயர்ந்த கருத்துக்களையும் எண்ணங்களையும் மக்களுக்குப் புகட்டுதற்கென "பிரபுத்த பாரதம்" (விழித்தெழுந்துள்ள இந்தியா) என்ற பெயர் பூண்ட மாதாந்திரப் பத்திரிகை யொன்று ஆங்கிலத்திலும், "உத்போதனம்" (நல்லறிவு)என்ற பத்திரிகை யொன்று வங்காள பாஷையிலும் சுவாமிகள் துவக்கி வைத்தார். இதே நோக்கத்துடன் வேறுபல பத்திரிகைகளும் இதர பாஷைகளிலே ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தாரால் நாளடைவில் ஆரம்

பிக்கப்பட்டன. வைத்தியசாலேகள் பல ஆங்காங்கு ஸ்தாபிக்க வேண்டுமென்று சுவாமிகள் முயன்றதற்கு முகாமையாயிருந்த நிகழ்ச்சியொன்றும் இக்காலத்திலேதான் நேர்ந்தது. அவர் ஒரு நாள் பேலூர் மடத்திலிருந்து கல்கத்தாவுக்கு நடந்து போய்க்கொண்டிருந்தார். அப்போது வழியிலே திக்கற்றவன் ஒருவன் பிணியால் வருந்திக் கிடப்பதைக் கண்டு சகியாதவராய், வசதியான ஓரிடத்துக்கு அவனைச் சுவாமிகள் தாமே தூக்கிச்சென்று அவனுக்கு வேண்டிய சௌகரியங்களை யெல்லாம் செய்து வைத்தார். மக்கள் எல்லாரும் கடவுளுடைய குழந்தைகள்; ஆதலால் நாம் அன்புடன் அவர்களுக்குச்செய்யும் பணிவிடைகளெல்லாம் இறைவனுக்கு உகந்தவைகளாகின்றன. எங்கும் நிறை கடவுள் நடமாடும் கோயில்களாகிய எண்ணிறந்த மக்களின் இதயத்திலும் குடிகொண்டிருக்கிருர். ஆதலால் மருந்தளித்து, உணவளித்து, உடையளித்து, கல்வியளித்து மக்களை மெய்யன்போடு வணங்குவது கோயிலில் புஷ்பத்தைச் சார்த்திக் கடவுளை வணங்குவதிலும் ஒருவிதத்தில் மேலானது என்பது சுவாமிகளின் கருத்து. பிணியால் வருந்திக்கொண்டிருந்தவனுக்குப் பணிவிடை செய்துவிட்டு மடத்துக்குத் திரும்பி வந்த சுவாமிகள் தமது சிஷ்யருள் ஒருவராகிய கல்யாணனந்த சுவாமிகளைத் தம்மிடம் வரவழைத்தார். அவர் மருத்துவக் கலாசாலேயில் டாக்டர் உத்தியோகத்துக்குப் பயிற்சி பெற்றவர். காசிக்குச் சென்று அங்கே நோயுற்று வருந்திக் கொண்டிருந்தவர்களுக்குக் குற்றேவல் புரியும்படி சுவாமிகள் அந்தச் சிஷ்யருக்குப் பணித்தருளினர். ஆனல் சிஷ்யரோ அதற்கேற்ற மூலதனம், மருத்துவ உபகரணம் முதலியன வாய்க்கப்பெற்ருலொழிய அத்தகைய பணிவிடையைச் செய்வது சாத்தியமல்ல என்று தயங்கினர். அவர்

தயக்கத்தைக் குறிப்பால் அறிந்த சுவாமி விவேகானந்தர் பகர்வாராயினர்: "ஏதேனும் ஒரு ஸ்தாபனத்தை நிறுவுதற்குப் பணம் முக்கியமானதல்ல; தகுந்த மனிதன் வாய்த்து விட்டால் ஸ்தாபனம் தானுக வந்தமைகிறது. இதோ! மூலதனமாக நான்கு அணு தருகிறேன். உனது தகுதியை இதைக்கொண்டு நிரூபிப்பாயாக."

கல்யாணனந்த சுவாமிகள் தமது குருவின் ஆசியையும் மூலதனம் நான்கு அணுவையும் ஏற்றுக்கொண்டு காசிக்குப் புறப்பட்டுப் போனுர். ஆருயிர்களுக்குப் பணிவிடை பண்ணுவதை ஆண்டவன் பணிவிடையாகக் கருதி அல்லும் பகலும் உழைத்து வந்தார். அதன் விளைவாகக் காசியில் தலைசிறந்த ஆஸ்பத்திரி ஒன்று உருவாகியுள்ளது.

கல்கத்தாவுக்கு அருகில் தலைமை மடமானது ஸ்தாபிக்கப்பட்டிருந்தது போன்று, மற்றும் பல இடங்களிலும் கிளை நிலையங்கள் பல காணப்பட்டன. அவைகளிற் சில குறிப்பிடத்தக்கவைகளாம். ஹிமாலய பர்வதத்தில் அல்மோரா ஜில்லாவில் மாயாவதி எனும் ஓர் ஏகாந்தமான இடத்தில் "அத்வைத ஆச்ரமம்" ஸ்தாபிக்கப்பட்டது. சுவாமிகளோடு இங்கிலாந்தினின்று இந்தியாவுக்கு வந்த சேவியர் தம்பதிகள் அளித்த பெருநிதியைக்கொண்டு இந்த ஆச்ரமம் துவக்கப்பட்டது. அவ்வாறே சென்னையில் மயிலாப்பூரில் ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் நிறுவப்பட்டது. வங்காளத்தில் மூர்ஷிதாபாத்தில் அனுதைகளுக்குக் குருகுல ஆச்ரமமும் கல்கத்தாவில் நிவேதிதைப் பெண் பாடசாலையும் ஸ்தாபிக்கப்பட்டன. மேல் நாடுகளில் நிறுவப்பட்டிருந்த வேதாந்த சங்கங்களும் செவ்வனே நடைபெற்று வந்தன. இந்தியாவில் ஆங்காங்கு வேதாந்தப் பிரசாரங்களும், பலவித கஷ்ட நிவாரண வேலைகளும் பேருக்கத்துடன் நிகழ்வனவாயின.

சுவாமிகளது குரு சகோதரரான அபேதானந்தர் முன்னமே அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டிருந்தார். துரியானந்த சுவாமிகள் எனும் மற்றுமொருவரைத் தம்மோடு அழைத்துக்கொண்டு சுவாமிகள் இன்னுமொருமுறை மேல்நாடுகளுக்கு ஏகி வேதாந்த இயக்கத்துக்கு வலிவு தந்து வர வேண்டுமென்று கருதலானர். இது இப்படியிருக்கையில் இப்பரமாசாரியரது அனுஷ்டான வேதாந்தத்துக்கும் பண்டிதர்கள் பலர்மாட்டுக் குடிகொண்டிருந்த வாய் வேதாந்தத்துக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை விளக்கிக் காட்டும் நிகழ்ச்சிகள் இரண்டொன்று நேரலாயின. பண்டிதர் கணேஷ் தேவுஷ்கார் என்பாரும் அவரோடு மற்றும் இரண்டு பேர்களும் சுவாமிகளைத் தரிசிக்க வந்தார்கள். அவர்களுள் ஒருவர் பாஞ்சாலத்தைச் சார்ந்தவர் என்றறிந்த சுவாமிகள் அம்மாகாணத்தில் மக்கள் படும் துயரத்தைப் பற்றிப் பரிந்து பேசிக்கொண்டிருந்தார். இவ்வாறு நெடுநேரம் கழிந்தது. பின்பு புறப்படுவதற்குச் சுவாமிகளிடம் விடை கேட்டபோது பாஞ்சாலதேசத்தவர், "மத சம்பந்தமான அரும் பெரும் விஷயங்களைக் கேட்டறிந்துகொள்ளத் தேவரீரிடம் வந்தோம். ஆனல் தெளர்பாக்கியத்தால் பேச்செல்லாம் பாமரரைப் பற்றியதாகவே போய்விட்டது. நாளும் இன்று வீணே கழிந்து போனது!" என்று வணங்கி விண்ணப்பித்தார். இதைக் கேட்டதும் சுவாமிகளது முகக்குறி திடீரென்று மாறியது; உள்ளம் குழைந்தது. எனினும் அவர் சற்றுச் சாந்தமாயிருந்துவிட்டு "ஐயரே, நமது நாட்டினுள் ஒரு கடையான மனிதனுங்கூடக் கஞ்சிக்கு வகையில்லாது கிடப்பதைப் பார்க்க நான் சகியேன்! அவனுக்கு அன்னமளிக்க முயல்வதுதான் நான் அறியும் மதம். ஏனையவெல்லாம் பொய் மதம் அல்லது போலி மதம்!" என்று கம்பலை

யுடன் கூறினர். மூவரும் பேச்சு மூச்சற்றுத் திகைத்து நின்றார்கள்.

மற்றொரு தடவை, பண்டிதர் ஒருவர் சுவாமிகளோடு வேதாந்த விஷயமாகத் தர்க்கம் பண்ணவேண்டுமென்று வந்தார். அப்போது நாடெங்கும் பஞ்சம். அது சம்பந்தமாகத் தாம் ஆற்றிய நிவாரண வேலை போதவில்லையே என்று சுவாமிகள் வருத்தமுற்றிருந்தார். பண்டிதர் தாம் வந்திருந்த நோக்கத்தை வெளியிட்டதும் சுவாமிகள், "பெரியோய்! அன்னமில்லாது மக்கள் அழுகின்ற கூக்குரல் தங்கள் காதில் விழவில்லையா?" என்று வினவினர். அவ்வாறு வினவும்போதே அவர் கண்களில் நீர் ததும்பியது. "சிறிதாவது பசியைத் துடைத்து அவர்களைத் தேற்றிவாரும்; பின்பு வேதாந்தத்தைப் பற்றி வேண்டிய அளவு வாதம் வளர்ப்போம். பலரது நன்மையை உத்தேசித்துத் தன் உயிரைப் பரித்யாகம் பண்ணவேண்டும். இதுதான் வேதாந்தத்தின் சாரம்" என்றார் கருணாகரர்.

க்ஷீணதசையடைந்திருந்த இடைக்காலத்தில் பாரமார்த்திக வாழ்வைப்பற்றி மக்களுக்கிடையில் தவறுதலான எண்ணம் இருந்து வந்தது. உலகத்தை வெறுத்து அதனோடு தொடர்பு ஒன்றும் வைத்துக்கொள்ளாதிருப்பதே பாரமார்த்திக வாழ்வின் ஆரம்ப தசையென்று அன்னவர் கருதி வந்தனர். மக்களையெல்லாம் கடவுளின் குழந்தைகளாகக் கருதி அவர்களோடு மேலாம் இணக்கம் வைத்துப் பணிவிடை செய்வதே பாரமார்த்திக வாழ்வின் ஆரம்பதசையென்று சுவாமிகள் உலகத்தவர்களுக்குக் காட்டியருளினர்.

16. உலகெங்கும் இயக்கத்தை வலிவுறுத்தல்

தாம் இரண்டாந் தடவை அமெரிக்காவுக்கு விஜயம் செய்யும்பொழுது தம்முடன் தலைசிறந்த யோகி ஒருவரை அழைத்துவருவதாக சுவாமி விவேகானந்தர் தம் அமெரிக்க சிஷ்யர்களுக்கு முன்பு வாக்குக் கொடுத்திருந்தார். தாம் என்னென்ன சீரிய தத்துவங்களை யெல்லாம் புகட்டியிருந் தாரோ அத்தத்துவங்களையெல்லாம் அந்த யோகி தமது வாழ்க்கைச் சொரூபமாகச் செயலில் கொண்டு வந்துள்ளார் என்றும் சுவாமிகள் சொல்லியிருந்தார். அப்படி வாக்குக் கொடுத்தபொழுது தம் குரு சகோதரராகிய சுவாமி துரியா னந்தரை அவர் நினைவில் வைத்திருந்தார். சுவாமி துரியா னந்தரோ வேதாந்த தத்துவங்களை யெல்லாம் தீவிரமாக அனுஷ்டித்து வந்தவர். அவருடைய வாழ்வே வேதாந்தத் துக்கு நல்லதொரு விளக்கமாகும். வெளிநாடுகளுக்குப் போகத் துரியானந்த சுவாமிகளுக்கு விருப்பமில்லை. ஏனென் றால் அவர் இந்தியாவில் அதிகாலையிலிருந்து இரவு படுக்கப் போகும் வரையில் அனுஷ்டித்து வந்த பழக்க வழக்கங்களை வெளிநாடுகளில் அனுஷ்டிக்க முடியாது; உடையணியும் விஷயத்திலும் வேறுபாடு உண்டு. ஆனால் விவேகானந்த சுவாமிகளின் விருப்பத்துக்கு மாறாக நடந்துகொள்ள அவ ருக்கு இயலவில்லை. ஆதலால் அரைமனதுடன் அவரோடு போய்வர இசைந்தார்.

ஸ்ரீமத் சுவாமிகள் கருதியிருந்தவண்ணமே துரியானந்த சுவாமிகளையும், சகோதரி நிவேதிதையையும் தம்மோடு அழைத்துக்கொண்டு, 1899ஆம் ஆண்டு, ஜூன் மாதம் கல் கத்தாவினின்று கடல் மார்க்கமாக மேல் நாடுகளுக்குப்

புறப்பட்டார். கப்பலானது சென்னை துறைமுகத்துக்கு வந்திருந்ததெனினும் பிளேக் சம்பந்தமாக ஏற்பட்டிருந்த சட்ட திட்டங்களுக்குப் பிரயாணிகள் அனைவரும் உட்பட்டிருந்தமையால் சுவாமிகள் ஆங்கு இரண்டொரு நாளைக்கு இறங்கியிருக்க இயலாது போய்விட்டது. ஆதலால் அவருடைய சிஷ்யர்களும் மற்றவர்களும் பெருங்கூட்டங்களாகப் படகில் வந்து அவரது தரிசனம் கண்டு சென்றனர். ஆனால் கொழும்பில் அத்தகைய கட்டுப்பாடு எதுவும் இல்லாதிருந்தபடியால்: ஆங்கு அவர் தம் சிஷ்யர்களுடனும் நண்பர்களுடனும் சிறிது காலம் அமர்ந்திருக்க் அவகாசம் கிடைத்தது. பிறகு இந்துமகாசமுத்திரம், அரபிக்கடல் ஆகியவைகளைக் கப்பலானது கடக்கவேண்டியிருந்தது. அப்பொழுது பருவக் காற்றும் மழையும் மும்முரமாக அடித்துக்கொண்டிருந்தன. கப்பலையே எடுத்து விழுங்குவன போன்று அலைகள் வந்து மோதின. இயற்கையின் ஆதிக்கத்தை எதிர்த்து நீராவிக் கப்பல் தன் குறியை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. அப்பொழுது சுவாமிகள் உள்ளத்தில் உயர்ந்த எண்ணங்கள் உதிக்கலாயின. அகத்திலும் புறத்திலுமுள்ள இயற்கையை வெல்லுவதே மானுட வாழ்க்கையின் குறிக்கோள் ஆகும் என்பது அவ்வெண்ணங்களின் உட்கருத்தாகும். செங்கடல், மத்தியதரைக்கடல் இவைகளின் வழியாக அவர்கள் லண்டன் நகர் போய்ச் சேர்ந்தார்கள். அங்குக் கப்பலினின்று துறைமுகத்தில் இறங்குதற்கு முன்பு துரியானந்த சுவாமிகளுக்கும் சகோதரி நிவேதிதைக்கும் இடையில் நிகழ்ந்த சம்பாஷணை ஒன்றில் உயர்ந்த கோட்பாடு ஒன்று அடங்கியிருக்கிறது. சுவாமி துரியானந்தர் பகர்ந்ததாவது: "உங்கள் மேல்நாட்டுப் பழக்க வழக்கங்களையெல்லாம் நான் அறிந்திலேன். அவைகளுள் சிலவற்றை நீ எனக்கு எடுத்துப் புகட்டுவாயாக."

சகோதரி நிவேதிதை: "சுவாமி, அதில் உங்களுக்குச் சிரமமொன்றுமில்லை. உதாரணம் ஒன்று சொல்லுகிறேன் கேளுங்கள். ஒருவர் உங்களிடம் பேனுக்கத்தி ஒன்றுகேட்டால் மடக்கி வைத்திருக்கிறபடி அதை எடுத்து அவருக்குக் கொடுக்கலாகாது. அதை விரித்தெடுத்து அலகை நீங்கள் பிடித்துக்கொண்டு, கைப்பிடிப் பக்கத்தை அவரிடம் நீட்ட வேண்டும்."

சுவாமி துரியானந்தர்: "இப்பொழுது எல்லாம் எனக்கு விளங்கிவிட்டது. மேற்கொண்டு ஒன்றும் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை."

யார் ஒருவன் எச்செயலைச் செய்தாலும் அதன் மூலம் பிறர்க்கு இன்னுதது ஒன்றும் விளையாதிருக்கும்படி பார்த்துக்கொள்கிறானே அவன் நல்லொழுக்கத்தில் நிலை நின்றவன் ஆகிறான். அத்தகைய நல்லொழுக்கம் கீழ்நாட்டவர்களுக்கு ஒருவிதமானது, மேல்நாட்டவர்களுக்கு மற்றொரு விதமானது என்பதல்ல. மனிதனுக்கு மனிதன் அன்புடனும் அடக்கத்துடனும் செய்யும் பணிவிடைகளே நல்லொழுக்கம் எனப்படுகின்றன. துரியானந்த சுவாமிகளின் ஒழுக்கம் மேல்நாட்டவர்களுக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாக விளங்கிற்று.

லண்டன் நகர் வந்து சேர்ந்த சுவாமிகள் அங்கே சுமார் ஒரு வாரம் தங்கியிருக்க வேண்டியதாயிற்று. அவருக்குத் தங்கியிருக்க இடவசதி முதலியவைகளை யெல்லாம் அன்புடன் செய்து வைத்தவர் சகோதரி நிவேதிதையின் அன்னையாராவார். அக்காலத்தில் இந்தியாவானது ஆங்கில ஆட்சிக்கு அடிமையாயிருந்தது. அடிமைக் குடிமக்களுள் ஒருவரை ஆசாரிய புருஷராக ஏற்றுக்கொள்ள ஆட்சி புரிகிறவர்களுக்கு மனம் வராது. சகோதரி நிவேதிதை தன்னை இந்தி

யாவுக்கு அர்ப்பணம் பண்ணிவிட்டது ஆட்சி புரிகிறவர் களுக்கு ஒருவிதத்தில் ஒவ்வாத செயலாகும். ஆனால் தங்க ளது உயர்ந்த பதவியை யெல்லாம் மறந்துவிட்டு விவேகா னந்த சுவாமிகளைத் தங்கள் குரு மூர்த்தியாக ஆங்கிலேயர் களில் சிலர் ஏற்றுக்கொண்டது அவர்களது மனபரிபாகத் துக்கு எடுத்துக்காட்டு ஆகும். சகோதரி நிவேதிதையின் தாயார் தம் புதல்வியை மனமுவந்து இந்தியாவுக்கு அளித் தது செயற்கரிய செயலாகும். தம்முடைய புதல்வியின் குரு நாதரிடத்து அந்த அம்மையார் காட்டிய மரியாதையும் பாராட்டுதற்குரியதாகும். இப்பொழுது சகோதரி நிவே திதையை லண்டனில் சிலநாள் தங்கியிருக்கச் செய்துவிட் டுத் தமது நல்வரவை எதிர்பார்த்து அங்கு வந்திருந்த அமெரிக்கச் சிஷ்யர்களைத் தம்மோடு அழைத்துக்கொண்டு சுவாமிகள் மீண்டும் அமெரிக்க நாட்டுக்குப் புறப்பட்டார். அழகும் அமைதியும் பொலியப்பெற்றிருந்த அட்லாண்டிக் மகாசமுத்திரத்தின் மீது பத்துநாள் பிரயாணம் பண்ணிய பின்பு அவர் அமெரிக்காவில் நியூயார்க் நகரம் வந்து சேர்ந் தார்.

உடனே நகரெங்கும் சுவாமிகள் எழுந்தருளியிருப்ப தைப்பற்றிய செய்திகள் பத்திரிகைகள் வாயிலாக வெளியா யின. ஆனால் அவர் இப்போது நகரத்தினுள் வசித்திருந்து பிரசங்கங்கள் செய்யவில்லை. ரிஷி ஆச்ரமம் போன்ற ஓர் ஏகாந்தமான இடத்தில் அமர்ந்திருந்தார். பழைய சிஷ்யர் களும் நண்பர்களும் அவரது இருப்பிடம் தேடிச் சென்று, அருளுக்கும் அன்புக்கும் பாத்திரமாகி அவரோடு அளவளாவி யிருந்தனர். சுவாமிகள் இயற்றியிருந்த நூல்களைப் படித்த வர்களும், கேள்வியால் அவரைப்பற்றி அறிந்தவர்களும் அவ ரது ஆச்ரமத்தை நாடி வந்தனர். இவ்விதம் இப்பரம புரு

ஷரைப் பின்பற்றினவர்களது கூட்டம் அதிகரித்துக் கொண்டே போயிற்று. சுவாமிகளும் தம்மை நாடி வந்தவர்களுக்கு உபதேசங்கள் செய்தருளியும் சாஸ்திரத்தினின்று பாடங்கள் புகட்டியும் நன்மை விளைவித்து வருவாராயினர். வாரங்கள் ஆறு இங்ஙனம் கழிந்தன. பின்பு ஏற்கனவே நியூயார்க் நகருக்கு வந்திருந்த அபேதானந்த சுவாமிகளுடன் தாம் அழைத்து வந்திருந்த துரியானந்த சுவாமிகளை அமர்ந்திருக்கப் பண்ணிவிட்டுத் தாம் மட்டும் அமெரிக்காவின் மேற்குப் பிரதேசங்களுக்குப் புறப்பட்டார். கிழக்குக் கரையில் நியூயார்க் நகரில் இருந்த சுவாமிகள் இருவரும் அங்கு வேதாந்த சங்கத்தைச் செவ்வனே நடாத்தி வந்தார்கள்.

முதல் முறை சுவாமிகள் அமெரிக்காவுக்கு விஜயம் செய்திருந்தபோது, அந்த விஸ்தாரமான கண்டத்தின் மேற்றிசையில் வசித்திருந்த மக்களது விண்ணப்பத்துக்கு இணங்கி அங்குச் சென்று அறநெறி போதிப்பதற்குப் போதிய அளவு அவகாசம் இல்லாது போய்விட்டது. ஆதலால் அவர் அக்கடனாற்றும் பொறுப்பை இப்போது ஏற்றுக் கொண்டார். கலிபோர்னியா மாகாணத்தின் பற்பல ஊர்களிலும் நகரங்களிலும் சுமார் நூறு உபந்நியாசங்களுக்கு மேல் அவர் செய்தருளினார். புத்துயிரும் பரம சாந்தமும் அளிக்கவல்ல அவருடைய உயர்கருத்துக்கள் பௌதிக இருளில் உழன்றுகிடந்த மேல் நாட்டாரது உள்ளத்தில் ஒளி விளக்கு ஏற்றினாற் போல ஊடுருவிப் பாய்ந்தன. அப்பக்கங்களில் வெளிவந்த பத்திரிகைகளும் சுவாமிகள் ஆற்றிய திருத்தொண்டை மிகப் போற்றியும் பாராட்டியும் எழுதலாயின.

தம்மை வந்து அணுகினவர்களுள் பரிபக்குவம் அடைந்திருந்தவர்களுக்கு அவர் மந்திர தீக்ஷை முதலியன தந்தருளி

ஞர். ஈசுவர நாட்டத்திலும் சன்மார்க்க இயக்கத்திலும் ஊக்கமுடையவர்களை ஒன்று திரட்டி, ஸான்பிரான்ஸிஸ்கோ நகரில் வேதாந்த சங்கமொன்றை அவர் நிறுவிவைத்தார். சுவாமிகளின் சிஷ்யர்களுள் ஒருவர் கலிபோர்னியாவின் மலைப்பிரதேசத்தில், ஜனசஞ்சார மில்லாததும், வனப்புமிக வாய்ந்ததுமாகிய 160 ஏக்கரா விஸ்தீரணமுள்ள பூமியொன்றை அவர் வசம் ஒப்புவித்தார். வேதாந்திகள் யோக சாதனம் பயிலுவதற்காக அங்கு "சாந்தி ஆச்ரமம்" என்ற பெயர் தாங்கிய நிலையமொன்று நிறுவப்பட்டது. அமெரிக்காவுக்கு அது முற்றிலும் அவசியமானது. ஏனென்றால் அந்நாட்டு மக்களது மனது சர்வகாலமும் புறவுலக வியவகாரங்களிலேயே உழன்று வந்தது. புறவுலகை அடியோடு மறந்துவிட்டு மனதை முற்றிலும் அகவுலகில் இடையிடையே திருப்புவதால் பெருநன்மை உண்டாகும். அகமுகப்பட்ட அத்யாத்மிக வாழ்வை அமெரிக்கர் அறிந்திலர். அதை அவர்களுக்கு நல்குவது அரியதொரு அருள் விருந்தாகும். ஸான்பிரான்ஸிஸ்கோ நகரில் வேதாந்த சிரவணம் பண்ணிவைப்பதற்கும், சாந்தி ஆச்ரமத்தில் சாதகர்களுக்கு யோகம் பயிலுவிப்பதற்கும் தகுந்த பரம யோகீச்வரராகிய துரியானந்த சுவாமிகளை நியூயார்க் நகரினின்று அண்ணலானவர் ஈண்டு வரவழைத்தார். சில மாதங்களுக்குள் கலிபோர்னியாவிலும் தர்மம் ஸ்தாபிக்கப்பட்டுத் தழைத்து ஓங்கலாயிற்று. உத்தமர்கள் பலர் இருக்கும் பரியந்தம் அமெரிக்காவில் தமது வேதாந்த இயக்கத்துக்கு அழிவில்லை என்ற திடசித்தம் சுவாமிகளுக்கு ஏற்பட்டது. இப்புவியின்கண் தாம் பூத உடல் தாங்கியிருப்பது இன்னும் சொற்ப காலத்துக்கே என்பது அவருக்கு நன்கு தெரியும். அதற்குள்ளாக மற்ற இடங்களிலும் சத் காரியங்கள் பல அவர் ஆற்றவேண்டி

இருந்தது. ஆதலால் அவைகளை முன்னிட்டு அமெரிக்காவி னின்று அவர் விரைவில் புறப்பட வேண்டியது அவசியமா யிற்று. தமது பேரன்புக்குகந்த சிஷ்யர்களைச் சுவாமிகள் மனமார ஆசீர்வதித்தார்; நண்பர்களுக்கு ஆசிகூறினர். பிரிவு ஆற்ருத அப்புனிதர்களது உள்ளத்திலே தமது அருள் யாண்டும் ஒளிவீசுமென்று அவர்களுக்குத் தேறுதல் சொல்லி விட்டுச் சுவாமிகள் அக்கண்டத்தினின்று கிளம்பினர்கள்.

ஐரோப்பாக் கண்டத்திலே, பிரான்சு தேசத்திலே, பாரிஸ் என்னும் சீரிய நகரிலே உலகக் கண்காட்சியொன்று நிருமாணிக்கப்பட்டது. அந்தக் கண்காட்சியைச் சார்ந்து சர்வமதங்களின் உற்பத்தியை ஆராய்வதற்கென மகாநாடு ஒன்றை கூட்டினர்கள். சிகாகோ மகாசபையில் சர்வமதங் களின் கொள்கைகளையும் தத்துவங்களையும் ஆராய்ந்தது போன்று, அம்மதங்களின் ஆரம்பத்தையும் வளர்ச்சியையும் ஆராய வேண்டுமென்பதே இந்த மகாநாட்டின் நோக்கம். ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகளும் இவ்வைபவத்திலே கலந்துகொள்ளுமாறு அழைக்கப்பட்டிருந்தார். இவ்வாலறி ஞரும் அதற்கிணங்கி அமெரிக்காக் கண்டத்தினின்று அங் குப் போய்ச் சேர்ந்தார். சொற்பொழிவுகளெல்லாம் பிரெஞ்சு மொழியிலே நடைபெறுவதாயிருந்தன. ஆதலால் சுவாமி களும் அப்பாஷையைக் கண்ணுங்கருத்துமாகக் கற்று இரண்டே மாதத்தில் அதில் பிரசங்கம் பண்ணுவதற்கும் சம்வாதம் செய்வதற்கும் வல்லவரானர்.

அம் மகாநாட்டிலே சொற்பொழிவுகள் செய்தவர்களுள் சுவாமிகளே சிறப்புமிக உற்று விளங்கினர். ஹிந்து மதத் தின் பல சமயங்களின் வளர்ச்சியைப்பற்றி மேல்நாட்டு அறி ஞர்கள் பலர் பலவாறு எடுத்துக் கூறினர்கள். எனினும் சுவாமிகளது அபிப்பிராயந்தான் முடிவான கருத்தாக ஏற்

றுக் கொள்ளப்பட்டது. முன்பு அமெரிக்காவில் சிகாகோ நகரில் கூட்டிய சர்வமத மகாசபையில் கிறிஸ்தவ மதத்தின் சிறப்பை நிலைநாட்ட முடியுமென்று அம்மதவாதிகள் திட்டம் போட்டிருந்தனர். ஆனால் அவர்களது எண்ணம் நிறைவேற வில்லை. வேதாந்தமே சமயங்களுக்கெல்லாம் தலைசிறந்தது என்பது யுக்தி பூர்வமாக நிரூபிக்கப்பட்டது. இப்பொழுது மதங்களின் உற்பத்தியைப்பற்றி ஆராய்ச்சி பண்ண ஏற் பாடாயிருந்தது. பண்புடன் உருவெடுத்திருப்பதில் கிறிஸ் தவ மதத்துக்கு நிகரானது வேறு எதும் இல்லை யென்று நிரூபிக்க அவர்கள் முயன்றனர். ஹிந்து மதத்தின் பல அம் சங்கள் அநாகரிகமாகத் துவங்கியவைகள் என்று எடுத்துக் காட்டக் கிறிஸ்தவ நிபுணர்கள் முயன்றனர். ஆனால் விவே கானந்த சுவாமிகள் ஹிந்து மதத்தின் மகோன்னதமான வளர்ச்சியை சாஸ்திரபூர்வமாக விளக்கிக் காட்டியதை மறுக்க அவர்களுக்கு இயலவில்லை. எனவே இந்த மகா சபையிலும் ஹிந்துமத வளர்ச்சியே மேன்மையுற்று விளங்கு வதாயிற்று. மகாநாடும் முற்றுப்பெறுதற்கு மாதம் ஒன்று பிடித்தது. எனவே, மூன்றுமாத காலம் சுவாமிகள் பிரான்சு தேசத்திலே அமர்ந்திருந்தார்.

பின்பு மேல்நாட்டுச் சிஷ்யர்களிலும் நண்பர்களிலும் சிலரைத் தம்முடன் அழைத்துக்கொண்டு அவர் ஆஸ்திரியா, துருக்கி, எகிப்து முதலிய நாடுகளில் பிரயாணம் செய்தார். உலகத்திலுள்ள முக்கிய நாடு நகரங்களையும் சமுதாயங் களின் பழக்க வழக்கங்களையும் அப்போது சுவாமிகள் நேரே பார்த்து நன்கு அறிந்தவரானார். இவ்வுலகை மக்கள் பொருள்படுத்துவது ஒரே விதத்தில் அல்ல. அவரவர் மனப் பான்மைக்கு ஏற்ப இது காட்சி கொடுக்கிறது. சுயநலத்துக் காக இதைச் சூறையாடுகிறவர்களுக்கு இது வேட்டையாடு

தற்கான வனம் போன்றது; பிறரால் துன்புறுத்தப்படுபவர்களுக்கு இது பொல்லாத நரகம் போன்றது; இன்பம் துய்க்க விரும்புகிறவர்களுக்கு இது சொர்க்கம் போன்றது; வாழ்க்கைத் தத்துவங்களை அறிந்துகொள்ள விரும்புகிறவர்களுக்கு இது ஒரு கலாசாலை போன்றது. மெய்ப்பொருளைச் சுவானுபூதியில் அறிந்து அதிலேயே திளைத்திருந்த சுவாமிகளுக்கோ உலகப்போக்கும் நடைமுறையும் சிறுபிள்ளைகளின் ஒரு முடிவற்ற விளையாட்டெனக் காட்சி கொடுக்கலாயின. சுவாமிகள் வெளி நாடுகளில் விஜயம் செய்தது இத்துடன் முற்றுப்பெற்றது எனலாம். ஆதலால் அவர் தம்முடன் வந்தவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு எகிப்தில் கப்பல் ஏறி இந்தியாவுக்குப் பிரயாணமானுர். சொற்ப நாளில் பம்பாய்த் துறைமுகத்தில் வந்திறங்கின சுவாமிகள் அன்றைய தினமே ரயில் மார்க்கமாகக் கல்கத்தாவுக்குப் புறப்படலானுர்.

எதிர்பாராது ஓரிரவு திடீரென்று சுவாமிகள் பேலூர் மடத்தில் எழுந்தருளினுர். அங்கு வதிந்திருந்த சந்நியாசிகளுக்கும் பிரம்மசாரிகளுக்கும் அது நிமித்தம் உண்டான வியப்புக்கும் ஆனந்தத்துக்கும் ஓரளவில்லை. அன்றிரவெல்லாம் நித்திரை போகவும் அவர்களால் இயலவில்லை. அளவளாவி உரையாடியே காலங்கழிப்பாராயினர். பிறகு மடத்தினின்று சொற்ப நாளைக்குள் சுவாமிகள் இமயமலைக்குப் போகவேண்டியது அவசியமாயிற்று. அங்கு மாயாவதியில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த அத்வைத ஆச்ரமத்தை அவர் இன்னும் பார்க்கவில்லை. "பிரபுத்த பாரதம்" என்னும் பத்திரிகையும் அங்கிருந்துதான் பிரசுரிக்கப்பட்டது. ஆச்ரமத்தை ஆசீர்வதிக்கவும், அங்கு நடைபெற்றுவந்த அலுவல்கள் சம்பந்தமாக ஆலோசனைகள் சொல்லவும், சீரிய திட்டம் வகுக்கவும் அவர் கடிதில் அங்கு எழுந்தருள வேண்டுமென்று

அங்கு வசித்து வந்த ஆச்ரமவாசிகள் கோரி நின்ருர்கள். எனவே பனிக்காலம் என்பதையும் பொருட்படுத்தாது சுவாமிகள் அங்கே போய்ச் சேர்ந்தார். 1901ஆம் ஆண்டு அப்போதுதான் துவங்கியிருந்தது. அசாதாரணமான பனியும் குளிரும் அவ்வருஷம் இருந்ததெனினும் ஆனந்தமாகவே அவர் அங்குக் காலங்கழிப்பாராயினர். ஆசிரமம் நடாத்தப் பட்ட முறையும் அவருக்குத் திருப்திகரமாகவே இருந்தது. ஆனல் அதன் நாமகரணத்துக்கு ஏற்ப எவ்விதமான மூர்த்தி உபாசனையும் ஆங்கு இருக்கலாகாதென்றும், கேவலம் அத்வைத மார்க்கம் மட்டும் அனுஷ்டிக்கப்பட வேண்டுமென்றும் அவர் ஏற்பாடு செய்து வைத்தார். பாரமார்த்திக வாழ்வுக்கு முற்றும் தகுதியாயிருந்த அவ்வாசிரமத்தின்கண் சுவாமிகள் நெடிது அமர்ந்திருக்க விரும்பினர். ஆயினும் தாம் மீண்டும் இயற்றுதற்கிருந்த அலுவல்கள் பலவற்றை முன்னிட்டு ஒரு திங்கள் கழியுமுன்பே அவர் பேலூர் மடத்துக்குத் திரும்பி விட்டார்.

சுவாமிகள் தலைமை மடத்தில் வந்தமர்ந்து இரண்டு மூன்று மாதங்களாவதற்கு முன்பே அவர் கீழ் வங்காளத்துக்கு விஜயம் செய்ய வேண்டுமென்று அம்மாகாண வாசிகள் அவரைப் பன்முறை வணங்கி வேண்டினர்கள். வள்ளலாரும் அவர்களது விண்ணப்பத்துக்கு இணங்கினவராய்ச் சிஷ்யர்கள் புடைசூழ அந்நாட்டுக்குத் தலைமைப் பட்டணமாகிய டாக்காவுக்கு எழுந்தருளினர். ஹிந்துக்களது வைதிக வழக்கத்துக்கு ஒப்பச் சுவாமிகளுக்கு அங்கே சமர்ப்பிக்கப்பட்ட வந்தனோபசாரங்களை வர்ணிப்பதிலும் பாவிப்பதே மேலாகும். அதற்கு நிகரான திருவிழா எதையும் அந்நாட்டார் அதற்கு முன் எப்போதும் கண்டறிந்திலராம். உலகெங்கும் பிரசித்திபெற்றிருந்த பரமாசாரியரைக் கண்டு

தரிசித்துத் தங்கள் தாபத்தைப் போக்கிக்கொள்ள விரும்பின எண்ணிறந்தவர் நானு பக்கங்களினின்றும் அங்கு வந்து சூழ்ந்தனர். மத சம்பந்தமாக அவர்கள் கொண்டிருந்த ஐயங்களையெல்லாம் சம்பாஷணைகள் வாயிலாகவும் உபந்நியாசங்கள் வாயிலாகவும் சுவாமிகள் அறவே அகற்றி வந்தார். கற்றோர்கள் வீற்றிருந்த பெருங்குழாங்களின் முன்னிலையிலே அவர் வேதாந்தத்தின் மாண்பைப்பற்றி அரிய சொற்பொழிவுகள் இரண்டு நிகழ்த்தினர். பின்பு அத்தேசத்தின்கண் திகழா நின்ற புண்ணிய க்ஷேத்திரங்களாகிய காமாக்கியா, கோஹட்டி முதலிய ஸ்தலங்களுக்குத் தீர்த்த யாத்திரை போய்வந்தார். நல்லார்கள் பலர் சுவாமிகளோடு நெருங்கிப் பழகி அவரது அருளுக்குப் பாத்திரமானர்கள்.

சுவாமிகள் டாக்காவில் தங்கியிருந்தபொழுது நிகழ்ந்த சம்பவம் ஒன்று ஆராய்தற்குரியதாகும். விலைமாது ஒருத்தி ஆடம்பரமாக ஆடையாபரணங்கள் அணிந்துகொண்டு தன் அன்னையுடன் ஒரு வண்டியில் ஊர்ந்துவந்து சுவாமிகளது விடுதியில் இறங்கினள். தான் சுவாமிகளைத் தரிசிக்க வந்திருப்பதாகவும் அவள் தெரிவித்தாள். இது விஷயத்தை சுவாமிகள் காதில் போய்ப் போடுவதா அல்லது அவளை அப்படியே திருப்பியனுப்பிவிடுவதா என்ற ஐயம் அன்பர்களுக்கு உண்டாயிற்று. கடைசியாகத் தயக்கத்துடன் சுவாமிகளிடம் சென்று வந்திருப்பவளைப்பற்றி எடுத்துரைத்தார்கள். மாடியில் வதிந்திருந்த அண்ணல் கிருபைகூர்ந்து கீழே இறங்கிவந்து அன்புடன் அப்பெண்பாலர் இருவரையும் வரவேற்றார். தனக்கு உற்றிருந்த ஈளை நோயைப்பற்றி இளம்மாது ஆனவள் இளகிய நெஞ்சத்துடன் எடுத்துரைத்து அதை அகற்றுதற்கு ஏதாவது ஔஷதம் தரவேண்டுமென்று வருந்தி வேண்டினள். "அம்மா, உன்னை வாட்டுகிற ஈளை

நோய் இன்னும் அதிகமாக என்னை வாட்டி வருகிறது. மருந்து எதும் அதைக் குணப்படுத்தவில்லை. தீராத அந்த நோயில் நானே வருந்திக்கொண்டிருக்கிற பொழுது உனக்கு நான் எங்ஙனம் சிகிச்சை செய்ய முடியும்!" என்று ஒரு பாலகனுடைய பாங்கில் தம்மை வைத்துக்கொண்டு சுவாமிகள் மறுமொழி கூறினர். பரிகாரம் கேட்டவளுக்கும் சுவாமிகளது இனிய பேச்சைக் கேட்டவர்களுக்கும் உள்ளம் குளிர்ந்தது; மனதுக்கு ஆறுதல் உண்டாயிற்று. பெண் பாலர் இருவரும் சுவாமிகளுடைய ஆசியைப் பெற்றுக் கொண்டு புறப்பட்டுப் போயினர்.

சுவாமி விவேகானந்தரை இடையிடையே வாட்டி வந்த ஈளைநோய் அவர் டாக்காவிலிருந்தபோது அவரை இன்னும் அதிகமாக அல்லல்படுத்தியது. ஓர் இரவு சுவாசிக்க முடியாது அவர் திணறிக்கொண்டிருந்தபொழுது அவருக்கு அந்திய காலம் வந்துவிட்டதோவென்று அனைவரும் அஞ்சினர். சுவாசகாசத்துக்கிடையில் சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய கூற்று ஒன்று கருதுதற்குரியதாகும். "வேண்டுமானல் இந்த உடல் இப்பொழுதே வீழ்ந்து போகட்டும். உலகுக்குத் தேவையாயுள்ள அருள் விருந்தை நான் வழங்கியாய் விட்டது. ஆயிரத்து ஐந்நூறு வருஷங்களுக்கு அந்த அருள் விருந்தின் வலிவு நிலைத்திருக்கும்." இப்படிச் சுவாமிகள் பகர்ந்ததை அருகில் இருந்தவர்கள் வியப்புடன் கேட்டுக் கொண்டிருந்தனர்.

கீழ் வங்காளத்துக்குக் கீழ்ப்புறத்தில் அஸ்ஸாம் மாகாணம் இருக்கிறது. ஷிலாங் என்னும் ஊர் அம்மாகாணத்துக்குத் தலைமைப்பட்டிணமாகும். அவ்வூர் மலைப்பிரதேசத்தில் இருக்கிறது. ஆரோக்கியத்துக்கு அது பேர் பெற்றது. அங்குச் சென்றால் சுவாமிகளின் சுவாசகாசம் குண

மடையலாம் என்று பலர் கருதினர். அவ்வண்ணமே சுவாமி களும் அங்கே அழைத்துச் செல்லப்பட்டார். அவ்வூரை அண்ணல் மிகவும் மெச்சினுர். சில நாட்கள் அங்கே தங்கி யிருந்தார். ஆனல் ஈளைநோய்மட்டும் நீங்கியபாடில்லை. அஸ்ஸாம் மாகாணத்துக்கு அப்போது சர் எச். ஈ. ஏ. காட்டன் (Sir H.E.A. Cotton) என்பார் கவர்னராய் இருந்தார். இந்தியாவின் நலத்தில் அவர் கருத்து மிக வைத்தவர். சுவாமி விவேகானந்தரைப்பற்றி அவர் மிகவும் கேள்விப் பட்டிருந்தார். ஆதலால் இப்பொழுது அவரைச் சந்தித்து அவரோடு தொடர்வுகொள்ளும் வாய்ப்பைப் பெறலாயினர். ஷிலாங்கில் வசித்திருந்த ஐரோப்பியர்களையெல்லாம் வர வழைத்து அவர்களுக்கு ஒரு சொற்பொழிவு நிகழ்த்தும்படி சுவாமிகளைக் காட்டன்துரை வேண்டிக் கொண்டார். சுவாமிகள் பேச்சில் புதைந்திருந்த சீரிய கருத்துக்களை அவர்கள் எல்லாரும் மிகப் பாராட்டினர். ஷிலாங்கில் இருந்த அரசாங்க டாக்டரைக் கொண்டு காட்டன் துரை சுவாமிகளைப் பீடித்து வந்த சுவாசகாசத்தைக் குணப்படுத்த முயன்ருர். ஆனல் அவரது முயற்சியும் திருப்திகரமான பலனை அளிக்கவில்லை.

கீழ்வங்காளத்தைப்பற்றி சுவாமிகள் சொன்ன கருத் துக்கள் சில சிந்தனைக்குரியவைகளாகின்றன. மக்கள் மதப்பற்று மிக வைத்திருந்தனர். வாமாச்சாரம் அல்லது தந்த்ர சாதனம் அங்கு வழக்கத்தில் இருந்து வந்தது. அசா தாரணமான ஆத்ம சாதகர்களையெல்லாம் அவதார மூர்த்தி கள் என்று இயம்புவதில் அந்த மாகாணத்துக்கு விருப்பம் மிக இருந்தது. தீண்டாமை போன்ற கொடிய பழக்கத்தை அம்மாகாணமும் அளவுக்கு மீறி அனுஷ்டித்து வந்தது பாராட்டுக்குரியதாகாது. அப்பக்கத்து மக்கள் திடகாத் திரம் மிகப்படைத்தவர்களாக இருந்தார்கள்.

மக்கள் நலத்தை முன்னிட்டு விவேகானந்த சுவாமிகள் உலகில் பலப்பல இடங்களுக்குப் போகவேண்டுமென்று குருதேவர் பணித்திருந்தார். சுவாமிகளும் அந்த ஆணையைச் சிரமேற்கொண்டு கீழ்நாடுகளிலும் மேல்நாடுகளிலும் திக் விஜயம் செய்தார். அருள்பேறு அதனை மக்களுக்கிடையில் அவர் வேண்டியவாறு வழங்குவாராயினர். தர்மத்தை நிலை நாட்டுதல் என்னும் செயற்கரிய செயலையும் சீருடன் செய்து முடித்தார். கீழ் வங்காள யாத்திரையோடு அத்தகைய அருள்பணி பூர்த்தியாயிற்று எனலாம்.

17. கயையிலும் காசியிலும்

விவேகானந்த சுவாமிகள் கீழ்வங்காளத்துக்கு விஜயம் செய்துவிட்டுக் கல்கத்தாவில் தலைமை மடத்துக்குத் திரும்பி வந்ததுடன் அவருடைய திக்விஜயம் பூர்த்தியாயிற்று எனலாம். பண்டைக் காலத்துப் பரமாச்சாரியர்கள் பரத கண்டத்துக்குள்ளேயே திக்விஜயம் செய்து வந்தவர்கள் ஆயினர். ஆனால் இக்காலத்திலோ எந்த நாடும் தன்னள வில் தனித்திருந்து வாழ்வதில்லை. உலகிலுள்ள நாடுகள் அனைத்தும் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ ஒன்றோடு ஒன்று இணைக்கப்பெற்றிருக்கின்றன. மண்ணுலகம் முழு தும் ஒரே நாடுபோன்று நன்கு இணைக்கப்பெற்றிருக்கிறது. பௌதிக விக்ஞானம் உலகினுள் புகுத்தியுள்ள போக்கு வரத்துச் சாதனங்களே இதற்கு முக்கியமான காரணங்கள் ஆகின்றன. இத்தகைய சூழ்நிலையில் இந்தியாவானது தன்னளவில் தனித்திருந்து தன் தேசிய வாழ்க்கையை மட் டும் ஒழுங்காக நடாத்திக்கொண்டுபோக சூழ்நிலை இடந் தராது. பிற தேசத்தவர்கள் இந்தியாவைப் பார்க்க வரு கின்றனர். தங்கள் பண்புகளையும் இந்தியாவில் புகுத்த முற்படுகின்றனர். அவர்கள் செய்கிற சீரிய செயலை இந்தியாவும் செய்தாக வேண்டும். இந்திய மக்கள் வெளி நாடுகளைச் சென்று பார்க்கவேண்டும். வெளிநாட்டவர் களுக்கு இந்தியப் பெருமக்கள் தேடியெடுத்துள்ள அருள் பொக்கிஷங்களை வழங்கவேண்டும். அதற்கு ஏற்ற கால நிலை வந்துவிட்டதால் விவேகானந்த சுவாமிகள் வெளி நாடுகளிலும் அருள்விருந்தை வழங்குதல் பொருட்டுத் திக் விஜயம் செய்தாக வேண்டும் என்று பரமஹம்சதேவர் பணித்து அருளியிருந்தார். குருதேவரது ஆணைக்கு உட்

பட்டு சுவாமிகளும் அமெரிக்கா, ஐரோப்பா முதலிய கண்டங்களில் வேதாந்தப் பிரசாரத்தை மிக வெற்றிகரமாகத் துவக்கி வைத்தார். இந்தியாவின் அரிய கொடையாகிய பாரமார்த்திகப் பெருவாழ்வு இனி உலகெங்கும் படிப்படியாகப் பரவும் என்ற முழுநம்பிக்கை அவருக்கு வந்திருந்தது. எனவே இக்காலத்தில் அவர் புரிந்த திக்விஜயம் உலகம் முழுவதிலுமே பரவுவதாயிற்று. அத்தகைய அருட்பணியைத் தம் அண்ணலது ஆணைக்கு உட்பட்டு சுவாமிகளும் நன்கு நிறைவேற்றி வைத்தார்.

உலகிலே பாரமார்த்திகப் பேரியக்கத்தைத் துவக்கி வைப்பது செயல்கள் அனைத்திலும் செயற்கரிய செயலாகும். சுமார் ஒன்பது வருஷங்களுள் சுவாமிகள் அதை நன்கு இயக்கி வைத்துள்ளார். காட்டை அழித்து நல்ல சாகுபடி செய்வதற்கு நிகரானது அவர் புரிந்துள்ள அருட்பணி. பூமியைப் பண்படுத்தி, வேலிகட்டி, எரு இட்டு, நீர்ப்பாய்ச்சி, விதையை விதைத்தான பிறகு சாகுபடி செய்கிறவன் கவலையற்றிருக்கிறான். அவன் இயற்றிய செயலின் விளைவு பிறகு தானாக வந்து அமைந்தாகவேண்டும். அதேவிதத்தில் சுவாமிகள் உலகில் ஆங்காங்குள்ள அறிஞர்கள் உள்ளத்திலே பாரமார்த்திகப் பெருவாழ்வு என்னும் அரிய விதையை விதைத்து வைத்தாய்விட்டது. இனி அது நாளடைவில் பலன் கொடுக்க ஆரம்பித்துவிடும். தலைமை மடத்துக்குத் திரும்பி வந்தான பிறகு தமது பூலோக லீலையின் இறுதிப் பகுதியை இனிது முடிவுக்குக் கொண்டு வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அவர் செய்துகொண்டிருந்தார். மண்ணுலக வாழ்வில் கலந்திருந்தவர்போன்று தென்பட்ட சுவாமிகளின் மனதோ பாரமார்த்திகப் பெருநிலையிலேயே உலவிக்கொண்டிருந்தது. உலகக்கிருத்தியங்களை விளையாட்டுப்போன்று செய்து

வந்தார்; சிற்சில வேளைகளில் மடத்துக்குரிய நிலத்தில் உழைத்து வேலை செய்வார்; விதை விதைத்தல், செடிகள் நடுதல் ஆகிய செயல்களைச் சிறுபிள்ளைகள் கொள்கிற ஊக்கத்துடன் அவர் செய்து வருவார்; தோட்டத்தில் விதைத்த விதைகள் முளைத்து வளர்ந்து வருவதை ஊக்கத்துடன் பார்வையிட்டு வருவார். தாம் உலகில் ஒரு பரமாச்சாரியராகத் திகழ்ந்துள்ள எண்ணமெல்லாம் இப்பொழுது அவர் மனதைவிட்டுப் பறந்தோடிவிட்டது. ஜீவன் முக்தன் ஒருவன் உலகில் எப்படி வாழ்ந்திருக்கிறான் என்பதற்குச் சுவாமிகளுடைய நடை உடை பாவனை நல்ல எடுத்துக்காட்டு ஆயிற்று.

1901 ஆம் வருஷத்தின் இறுதியில் இந்திய தேசிய காங்கிரஸின் ஆண்டுக் கூட்டம் கல்கத்தாவில் நிகழ்வதாயிற்று. இந்தியாவில் உள்ள மாகாணங்கள் அனைத்தினின்றும் அதற்குப் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். அவர்கள் எல்லாரும் சிறந்த தேசாபிமானிகளாகவும் மேலான கல்விமான்களாகவும் ஆர்வம் படைத்திருந்த தேசத்தொண்டர்களாகவும் திகழ்ந்திருந்தார்கள் என்பது சொல்லாமலே விளங்கும். கிட்டத்தட்ட அவர்கள் எல்லாரும் சுவாமி விவேகானந்ரைப்பற்றி நன்கு அறிந்திருந்தனர். நேரில் அறிமுகமானவர்களும் அவர்களுள் பலர் இருந்தனர். ஆதலால் காங்கிரஸின் ஆண்டுக் கூட்டத்தில் கலந்துகொள்ளுதற்கு அடுத்தபடியாகச் சுவாமி விவேகானந்தரைச் சென்று தரிசித்து அவருடைய சீரிய தேசியத் திட்டங்களை ஏற்றுக் கொள்ளுவதும் அத்தேசாபிமானிகளின் திட்டமாயிற்று. பெரும்பாலும் மாலைநேரங்களில் அப்பெருமக்கள் சுவாமிகளிடம் வந்து சூழ்ந்துகொண்டேயிருந்தனர். திட்டம் வகுத்து நடந்த காங்கிரஸ் கூட்டம் கல்கத்தா நகரில் நிகழ்வ

தாயிற்று என்றால் திட்டம் போடாது அந்நியோந்நியமாக மேலாம் எண்ணங்களைப் பரிமாறிக்கொள்ளும் விதத்தில் சுவாமிகளின் முன்னிலையில் மற்றொரு சிறிய காங்கிரஸ் கூட்டம் நிகழ்வதாயிற்று எனலாம்.

தம்மிடம் வந்துசேர்ந்த தேசாபிமானிகளிடத்து சுவாமிகளும் தம்முடைய மேலாம் கருத்துக்கள் பலவற்றை ஆர்வத்துடன் எடுத்து வழங்குவாராயினர். நாட்டின் முன்னேற்றம் மக்களது உள்ளத்தினின்றே உதிக்கவேண்டும் என்றும், வெளிநாட்டவர்களிடமிருந்து உதவியை எதிர்பார்த்து செயலற்றுச் சும்மாயிருப்பது பொருந்தாது என்றும் சுவாமிகள் வற்புறுத்திக் கூறுவாராயினர். தனக்குத்தானே உதவி செய்யத் தெரிந்துகொள்ளாதவனுக்குப் பிறரிடமிருந்து எவ்வளவுதான் உதவி வந்தாலும் அது பயன்படாது என்பது சுவாமிகளது துணிபு. நாட்டு மக்களின் அடிமை மனப்பான்மை அறவே மாறவேண்டும் என்றும், பொதுமக்களுக்கிடையில் நல்ல விழிப்பு உண்டாகவேண்டும் என்றும், அவர்கள் முயற்சியே வடிவெடுத்தவர்களாக இருக்கவேண்டும் என்றும், ஆண்மையும் சுய நம்பிக்கையும் தேசாபிமானமும் நிறைந்துள்ள கல்வியையே மாணாக்கர்களுக்கு வழங்கி வரவேண்டும் என்றும் சுவாமிகள் எடுத்துரைத்தார். அவரைப் பார்க்க வந்தவர்கள் உள்ளத்தில் தேசப்பற்று புதிய முறையில் உருவெடுத்தது. வெறும் பேச்சுக்களும் கட்டுரைகளும் நாட்டைக் கைதூக்கி விடமாட்டா. சரியான முறையில் மக்களுக்கிடையில் உழைத்து அவர்களுடைய மனப்பான்மையையே மாற்றியமைப்பதில்தான் உண்மையான தேச முன்னேற்றம் அடங்கியிருக்கிறது என்பதையும் அவர்கள் நன்கு அறிந்துகொண்டனர். தம்முடைய மேலாம் கருத்துக்களை நல்ல இந்திய மக்களது உள்ளத்தில் புகுத்தி வைப்பதற்குச் சுவாமிகளுக்கு அது நல்ல சந்தர்ப்பமாயிற்று.

ஜப்பான் தேசம் எல்லாத்துறைகளிலும் முன்னேற்றம் அடைந்து வந்துகொண்டிருந்தது. ஆனல் சமயத்துறையில் அது போதிய அளவு கருத்தைச் செலுத்தவில்லை. அந்நாட்டிலே அனுஷ்டிக்கப்பட்டு வந்த மதங்களுள் மிக முக்கியமானது புத்தமதம். அது இந்தியாவினின்று ஆங்கு எடுத்துச் செல்லப்பட்டதென்பது உலகு அறிந்த விஷயமாகும். புத்த மதத்தின் சார்பில் ஜப்பானிலும் சர்வமதங்களின் மகாசபை ஒன்று கூட்டுதற்கு அந்நாட்டு மக்கள் முயற்சியெடுத்து வந்தனர். அதையொட்டி சுவாமி விவேகானந்தருடன் பல விஷயங்களைக் கலந்து பேசுதற்கும், கூடுமானல் அச்சபையிலே பங்கு எடுத்துக்கொள்ளுதற்கு அவரை ஆங்கு அழைத்துச் செல்லுதற்கும் எண்ணம்கொண்டு புத்தமதப் பெருமக்கள் இருவர் ஜப்பானிலிருந்து சுவாமிகளிடம் வந்து சேர்ந்தனர். அருள் திரு. ஓதா என்பதும் திரு. ஆகாகுரா என்பதும் அவ்விருவர்களின் நாமதேயங்களாகும். கல்கத்தாவுக்கு அருகிலுள்ள பேலூர் மடத்தில் சுவாமிகள் அதிதிகளாக அவர்கள் இருவரும் வந்து கொஞ்சகாலம் தங்கியிருந்தனர். அப்பொழுது புத்தமதத்தைப் பற்றியும் ஜப்பானிலே நிகழ்தற்கிருந்த சர்வமத மகாசபையைப் பற்றியும் விஸ்தாரமாக உரையாட அவர்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது. புத்தமதத்தின் நுட்பமான தத்துவங்கள் பலவற்றை அவ் அறிஞர்கள் இருவரும் சுவாமிகளிடமிருந்து கற்றுக்கொண்டனர். அவர் ஜப்பான் சென்று அங்கு நிகழ்தற்கிருந்த சர்மத மகாசபையில் தலைமை தாங்கினல் நன்மை மிக விளையுமென்று வந்திருந்தவர்கள் இருவரும் மிக வேண்டினர். ஆனல் அத்தகைய புதிய அலுவல் திட்டம் எதற்கும் திருவருள் சம்மதமில்லையென்று சுவாமிகள் அவர்களுக்கு எடுத்து இயம்பவேண்டியதாயிற்று. ஆயினும் அவர்களைத் திருப்திப்படுத்துதற்

பொருட்டு அவர்களுடன் புத்தகயைக்கும் காசிக்கும் தீர்த்த யாத்திரை போய்வரச் சுவாமிகள் மனமுவந்து சம்மதித்தார். புத்தர்பெம்மான் கயையிலே நிறைஞானம் அடையப் பெற்ருன பிறகு காசியில்தான் முதன் முதல் தமது பேர் அருள் செய்தியைப் பொதுமக்களுக்கெடுத்துப் புகட்டுவாராயினர். காசியை யொட்டியிருக்கும் சாரநாத் என்னும் இடம் இன்றைக்கும் புத்தமதத்துக்குரிய புண்ணிய க்ஷேத்திரமாய் இலங்கி வருகிறது. ஆசியாக் கண்டத்தின் பல பிரதேசங்களில் புத்தமதம் சிறப்புடன் இருந்து வருகிறது. ஆதலால் அப்பக்கங்களிலிருந்து இந்தியாவுக்குத் தீர்த்தயாத்திரை வருகிற பௌத்தர்கள் புத்த கயையையும் சாரநாத ஸ்தலத்தையும் சென்று தரிசித்து வருவது வழக்கமாய் இருந்து வருகிறது. சுவாமிகளுடன் அவ்விரு ஸ்தலங்களுக்கும் யாத்திரை சென்றது ஜப்பானிய பௌத்த பெரியார்களுக்குப் பரம திருப்தியை அளித்தது.

கயைக்கும் காசிக்கும் இறுதியாகத் தாம் தீர்த்த யாத்திரை போய்வர வேண்டும் என்று சுவாமிகள் மனதில் சங்கற்பித்திருந்தார். அதை ஊக்கத்துடன் நிறைவேற்றி வைப்பதற்கு ஜப்பானிலிருந்து வந்திருந்த அறிஞர் இருவரும் முகாமையாயினர். விவேகானந்த சுவாமிகள் தாம் மாணுக்கரா யிருந்தபொழுது துறவறம் பூண எண்ணம்கொண்டு பரமஹம்சதேவரோடு ஒட்டி உறவாடி வந்தார். அப்பொழுது யாரிடத்திலும் சொல்லிக்கொள்ளாது குருசகோதரர் இருவருடன் கயைக்குப் புறப்பட்டுப் போனர். ஆங்கு புத்தர் பெம்மான் போதிசத்துவம் அடையப்பெற்ற அரச மரத்தடியிலே துறவுக்குத் தம்மை ஆயத்தப்படுத்திக் கொண்டுவந்தவர் ஆழ்ந்து தியானம் புரிந்தார். புத்தரது துறவு வாழ்வு அவருடைய உள்ளத்தை முற்றிலும் கவர்வதாயிற்று. தாமும்

அதே விதத்தில் ஒரு துறவியாக வேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டார். ஆதலால் புத்தகயையானது அவருடைய உள்ளத்திலே அருள் கனிந்த அரிய இடம் பெற்றிருந்தது. இப்பொழுது இறுதியாக அந்த இடத்துக்கு மற்றுமொருமுறை யாத்திரைபோய் வரவேண்டும் என்று சுவாமிகள் முடிவு கட்டியிருந்தது முற்றிலும் பொருத்தமானது.

தாம் எண்ணியவாறு 1902ஆம் வருஷம் துவக்கத்தில் சுவாமிகள் புத்தகையைக்குச் சென்றூர். ஆங்கு மடாலயம் ஒன்றுக்கு அதிபராயிருந்தவர்க்குச் சுவாமிகளின் வருகை பரமானந்தத்தை அளித்தது. உலகப் பிரசித்திபெற்றிருந்த விவேகானந்த சுவாமிகளைத் தாம் நேரில் சந்திக்க வேண்டுமென்று அந்த மடாதிபதி எண்ணியிருந்தார். தமது எண்ணம் இருந்த இடத்திலேயே நிறைவேறியது திருவருள் செயல் என்று அவர் எண்ணுவாராயினர். புத்தகயையிலிருந்தபொழுது சுவாமிகளின் எண்ணம் முழுதும் புத்தரது பெருவாழ்விலேயே லயமாய் இருந்தது. புத்தமதத்தின் சிறப்புக்கள் பலவற்றை அப்பொழுது அவர் தம்முடன் வந்தவர்களோடு அல்லும் பகலும் உரையாடி வந்தார். ஆங்கு இருக்கும் அரசமரத்தடியில் அண்ணல் அடிக்கடி ஆழ்ந்து நிஷ்டையிலிருந்து வந்தார்.

புத்தகயைக்குப் பக்கத்தில் விஷ்ணுகயை என்னும் ஹிந்துமத ஸ்தலம் ஒன்று இருக்கிறது. விஷ்ணுவின் பாதம் அங்குப் பிரதிஷ்டை பண்ணப்பட்டிருக்கிறது. அதெல்லாம் புத்தமதத்துக்குப் பிறகு வந்தவைகளென்று பலர் அபிப்பிராயப்பட்டனர். ஆனல் அந்த அபிப்பிராயத்துக்குச் சுவாமிகள் சம்மதம் கொடுக்கவில்லை. கயையிலே பித்ருக்களுக்குப் பிண்டம் போடும் ஐதிகம் நெடுங்காலமாக இருந்து வந்திருக்கிறது என்றும், மகாவிஷ்ணுவின் திருவடிகளில்

பித்ருக்களைப் பரமசாந்தியடையச் செய்வது புத்த மதத்துக்கு நெடுநாளைக்கு முன்பே நடைபெற்று வந்த புராதன ஐதிகம் என்றும் பல ஆதாரங்களை எடுத்துக்காட்டி சுவாமிகள் பகர்வாராயினர்.

புத்தகயையில் சிலநாள் தங்கியிருந்து பரமானந்தம் அடைந்திருந்த சுவாமிகள் பிறகு காசிக்குப் புறப்பட்டுப் போனார். பரிவ்ராஜக பரமஹம்சராக சுமார் பத்து வருஷங்களுக்கு முன்பு அவர் காசிக்குச் சென்றிருந்தார். காசி க்ஷேத்திரம் இந்தியா முழுதுக்கும் அருள் துறையிலே ஹிருதயம் போன்று இலங்குகிறது என்பதை அன்று அவர் உணரலாயினர். அந்தப் புண்ணிய க்ஷேத்திரத்தில்தான் புத்தர் பெம்மானும், ஜகத்குரு சங்கரரும் இன்னும் பலப்பல பரமாச்சாரியர்களும் தங்களுடைய சீரிய தத்துவங்களையும் மதக்கோட்பாடுகளையும் மக்களுக்கு எடுத்துப் புகட்டுவாராயினர். அத்தகைய புண்ணிய க்ஷேத்திரத்தினின்று அன்று வெளியே கிளம்பும்பொழுது விவேகானந்த சுவாமிகள் தமக்குள் சீரிய தீர்மானம் ஒன்றைச் சங்கல்பிப்பாராயினர்: "ஏதோ அருள் சக்தி ஒன்று என்னை உந்தித்தள்ளிக்கொண்டிருக்கிறது. அந்த அருள் சக்தியின் வசப்பட்டு அதனிடத்துக் கருவியாயிருந்து அருள் துறையிலே அரும்பணியாற்றுவது எனது கடமை. உலக மக்களைத் தட்டியெழுப்பி அருள் நெறியிலே ஆழ்ந்து செல்லும்படி தூண்டுவது என் குருநாதர் எனக்கு இட்டிருக்கும் ஆணையாகிறது. அதை நிறைவேற்றி வைப்பதற்கு முன்பு நான் இப்புண்ணிய க்ஷேத்திரத்ினுள் மீண்டும் பாதம் வைக்கமாட்டேன்." அன்று இப்படி அவர் எண்ணியதை எண்ணியாங்கு நிறைவேற்றி வைத்தாய்விட்டது. இப்பொழுது இப்புண்ணிய க்ஷேத்திரத்துக்குள் அவர் மீண்டும் பிரவேசித்தது முற்றிலும் பொருத்தமானதே. காசி

யம்பதியிலே சுவாமிகளது மனது சர்வ சாதாரணமாக பார மார்த்திகப் பெருநிலையில் பூரித்திருந்தது; அதுவே முன்பு அவர் பெற்றுவந்த அனுபவமாகும். இன்றைக்கும் அதே பெருநிலை அவருக்கு இயல்பாக வாய்த்தது.

காசி க்ஷேத்திரத்தில் வசித்து வருகிற துறவியர்களும் ஏனைய வைதிகப் பெருமக்களும் சமய அனுஷ்டானத்தில் கட்டுப்பாடு மிக உடையவர்கள். வைதிக நெறி வழுவாது நன்மக்களது வாழ்வு நிகழ்ந்துவர வேண்டும் என்பது அவர் களது கொள்கை. அக்காலத்தில் அப்படி அவர்கள் கொண் டிருந்த கொள்கைகளுள் ஒன்று வைதிக தர்மத்தை அனுஷ் டிக்கும் நன்மகன் ஒருவன் கடல் கடந்து வெளிநாடுகளுக்குப் போகலாகாது; அப்படிப் போகிறவன் வைதிக மதப்பிரஷ் டன் ஆகின்றான்; வெளிநாட்டவர்கள் அளிக்கின்ற உணவை ஏற்று உண்பவன் மதப்பிரஷ்டன் ஆகின்றான்; அத்தகைய வனை மீண்டும் ஹிந்து சமுதாயத்துக்குள் ஏற்றுக்கொள்வது முறையன்று. அத்தகைய கண்டிப்பான விதி மக்கள்மீது சுமத்தப்பட்டிருந்தது. ஆனால் விவேகானந்த சுவாமிகள் கடல் கடந்து வெளிநாடுகளுக்குச் சென்றதும், அங்கே வேதாந்தக் கோட்பாடுகளை வேற்றார்களுக்குப் புகட்டியதும், வெளிநாட்டவர்களிடத்து வித்தியாசம் வைக்காது அவர்கள் படைத்த உணவை அருந்தியதும் ஆசாரத்துக்கு ஒவ்வாத செயல்களாகும். அப்படிச் செய்தவனை அறவே ஒதுக்கி வைப்பதே ஐதிகமாய் இருந்து வந்தது. ஆனால் என்ன அதிசயம்! அந்த ஐதிகங்களெல்லாம் சுவாமிகள் விஷயத் தில் சூரியனைக் கண்ட பனிபோன்று பறந்தோடிவிட்டன. அவரை ஒரு பிரஷ்டன் என்று புறக்கணிப்பதற்கு மாறாக இக்காலத்திய பரமாச்சாரியர் என்று பக்தி விசுவாசத் துடன் வரவேற்றது விந்தைக்குரிய செயலாம். ஹிந்துமதத்

தின் சிறப்பை இது விளக்குகிறது. கட்டுப்பாடுகள் பல வற்றை ஹிந்துமதம் மக்கள்மீது திணித்து வைத்திருந்தது தற்பாதுகாப்பின் பொருட்டேயாம். ஆனால் அக்கட்டுப் பாடுகளை யெல்லாம் உதறித்தள்ளிவிட்டு உலகெங்கும் சென்று ஆருயிர்களை அறநெறியிலே உய்வித்த பெருமகனது சிறப்பை அறிந்துகொண்டு அவரை ஆர்வத்துடன் வரவேற்க வல்லதாயிருப்பதும் ஹிந்துமதத்தின் சிறப்பேயாம். விவே கானந்த சுவாமிகளின் வாழ்க்கைச் செயலை காசி க்ஷேத்திர வாசிகள் அங்கீகரித்ததின் மூலம் ஹிந்துமதம் புதியதாகத் திருந்தியமைவதற்கு அவர்கள் சம்மதம் கொடுத்ததாகும். மதங்களுள் மிகப்பழையது ஹிந்துமதம். ஆனால் அது என் றைக்கும் புத்தம் புதியதாகவே இருந்து வருகிறது. ஏனென் றால் எந்தெந்த காலங்களில் என்னென்ன மாறுதல்கள் முற்றிலும் அவசியமானவைகள் எனத்தோன்றுகின்றனவோ அந்தந்த மாறுதல்களை யெல்லாம் ஹிந்துமதம் அமைதியாக ஏற்று அமைத்து வருகிறது. அவ் அரிய செயலை இன்று அது விவேகானந்தர் மூலம் அமைத்துள்ளது. காசி க்ஷேத் திரத்தில் இருந்த வைதிகப்பெருமக்கள் சுவாமி விவேகானந் தரை ஓர் அருள் வேந்தனை அங்கீகரித்துப் பக்தி பூர்வமாக வும் பணிவுடனும் அவருக்கு வரவேற்பு அளித்தனர்.

சுவாமிகளால் ஏற்கனவே காசிக்கு அனுப்பப்பட்டி ருந்த சிஷ்யர் கல்யாணனந்தர் அரிய முறையில் திக்கற்ற நோயாளிகளுக்கு மருத்துவப் பணிவிடை செய்து வந்தார். அவருடைய சேவையைக் கூர்ந்து கவனித்து வந்த மாணாக்கர் கள் பலர் அவருடன் ஒத்துழைக்க முன்வந்தனர். தயாள மனப்பான்மை படைத்திருந்த அன்பர்கள் சிலர் தேவை யான மருந்து வகைகளை வாங்கி உதவி செய்தனர். நோயாளி களுக்குப் பணிவிடை செய்வதற்கு இரண்டொரு இல்லங்கள்

இலவசமாக அளிக்கப்பட்டிருந்தன. குறிப்பிட்ட வேளைகளில் மாணாக்கர்கள் காசி நகரத்தின் பலப்பல பகுதிகளைச் சுற்றிப் பார்ப்பார்கள். அந்திய காலத்தில் காசியில் வசித்திருந்து அங்கேயே உடலை உகுத்துவிட வந்திருந்தவர்கள் நோய்வாய்ப்பட்டுக் கவனிப்பாரின்றித் தெருக்களிலோ, சத்திரங்களின் திண்ணைகளிலோ, கங்கைக் கரையோரத்திலோ படுத்துக் கிடப்பார்கள். அத்தகைய ஆதரவற்ற வயோதிகப் பிணியாளிகளைப் பணிவிடையாளர்களாகிய மாணாக்கர்கள் ஒரு கயிற்றுக் கட்டிலில் போட்டுச் சேவாச்ரமத்துக்குத் தூக்கிக் கொண்டு வந்து சேர்ப்பார்கள். பிறகு அவர்களுக்குக் கஞ்சி வழங்குவதும், மருந்து வகைகள் வழங்குவதும், பணிவிடைகள் செய்வதும் காசி விஸ்வநாதரது ஆராதனைக்கு ஒப்பானவை எனக் கருதி நிகழ்ந்து வந்தன. காசியில் வதிந்திருந்தபொழுது விவேகானந்த சுவாமிகள் தம் சிஷ்யர் செய்து வந்த இந்த அரிய நரசேவையை அன்பு கூர்ந்து ஆதரித்தார். துறவி ஒருவன் புரிகிற தபசுகளுக்குள்ளே இது சாலச் சிறந்தது என்று பாராட்டினர். காசியம்பதிக்கு அத்தகைய பணிவிடை முற்றிலும் அவசியமானது என்று அவர் அதை வற்புறுத்தினர். ஏனென்ருல் காசியில் முக்தியடையக் கருதி இந்தியாவின் பல பாகங்களிலிருந்து ஆங்கு வந்து இறுதிக்காலத்தில் அல்லல்பட்டுக் கிடப்பவர்களுக்கு அத்தகைய அரும்பணி செய்வது ஒன்றே உண்மையான சிவ ஆராதனையாகும். சுவாமி விவேகானந்தர் மனதில் கருதி வந்திருந்த மானுட சேவை நல்ல முறையில் உருவெடுத்து வந்தது அவருக்கு யட்டில்லா மகிழ்வை ஊட்டியது. அந்த சேவாச்ரமம் நல்லதொரு நரசேவை ஸ்தாபனமாக வடிவெடுக்கும் என்று மனப்பூர்வமாகச் சுவாமிகள் ஆசி கூறினர். அதை நடாத்திவர வேண்டிய முறைகளையும் அத்தொண்டர்

குழாத்தினர்க்குத் தெளிவுபட விளக்கியருளினர்; தொண்டர்களை முழுமனதுடன் ஆசீர்வதித்தார். அன்று எளிய முறையில் துவக்கப்பெற்ற அந்த சேவாச்ரமமானது இன்று காசி க்ஷேத்திரத்திலேயே தலைசிறந்த மருத்துவசாலையாக மிளிர்ந்து வருகிறது.

சுவாமிகள் காசியில் தங்கியிருந்தபொழுது அறிஞர்கள் பலர் அவரை அணுகி அப்புண்ணிய க்ஷேத்திரத்திலே ராமகிருஷ்ண மடாலயம் ஒன்று ஸ்தாபிப்பது அவசியமென்று வேண்டிக்கொண்டனர். காசியில் வசித்திருப்பவர்களுக்கும் காசிக்கு க்ஷேத்திர யாத்திரை வருகிறவர்களுக்கும் பரமஹம்சர் புகட்டியருளிய பெருநெறிகளையெல்லாம் எடுத்து வழங்குதற்கு அந்த மடாலயம் நன்கு உதவுமென்று சுவாமிகளும் உணர்ந்தார். அதற்குத் தேவையான நிதியும் மக்களிடமிருந்து வருவதாயிற்று. ஆதலால் சுவாமிகள் கல்கத்தாவில் பேலூர் மடத்துக்குத் திரும்பியான பிறகு தமது குரு சகோதரர் சுவாமி சிவானந்தரையும் அவருடன் இன்னும் இரண்டொரு சிஷ்யர்களையும் காசிக்கு அனுப்பி வைத்தார். சிவானந்த சுவாமிகள் காசிக்குச் சென்று 'ஸ்ரீராமகிருஷ்ண அத்வைத ஆச்ரமம்' என்னும் மடாலயத்தை ஸ்தாபித்து அதை நன்கு நிறுவி நடாத்தி வந்தார்.

புண்ணிய க்ஷேத்திரம் ஒன்றை ஆத்ம சாதகன் எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்னும் சீரிய கோட்பாடு விவேகானந்த சுவாமிகளின் காசி வாசத்தினின்று நன்கு விளங்குகிறது. கடவுள் எங்கும் நிறைபொருள் எனினும் அவருடைய சாந்நித்தியத்தைச் சிறப்பாகப் புண்ணிய க்ஷேத்திரங்களில் உணரலாம் என்று பரமஹம்சதேவர் புகட்டியருளியிருந்தார். சிஷ்யராகிய விவேகானந்த சுவாமிகள் அதைத் தமது வாழ்க்கையின் இறுதிப் பகுதியில் காசி

க்ஷேத்திரத்தில் வைத்து நன்கு விளக்கிக் காட்டினர். அதி காலையில் எழுந்திருத்தல், கங்கைக்குச் சென்று நீராடுதல், விஸ்வநாதர் கோயிலுக்கும் ஏனைய கோயில்களுக்கும் பக்தி பரவசத்துடன் போதல், ஆலயங்களில் எழுந்தருளியிருக்கும் இறைவனை ஆர்வத்தோடு ஆராதித்தல், ஜபம் பண்ணுதல், தியானம் பண்ணுதல், பாரமார்த்திகப் பெருவிஷயங்களை மற்ற ஆத்ம சாதகர்களோடு கலந்து பேசுதல் ஆகிய வற்றினுள் விவேகானந்த சுவாமிகள் முழு மனதைச் செலுத்தியிருந்தார். தாம் ஒரு தீர்க்கதரிசி எனினும், அவை போன்ற சாதனங்கள் தமக்குத் தேவையில்லை எனினும் அவையாவையும் அவர் சிரத்தையுடன் செய்துவந்தது உலக நன்மையின் பொருட்டேயாம். சான்ருேர் செல்லுகிற செந் நெறியிலே தாங்களும் செல்லுவது அறிவுடைய உலகத் தவர்களது செயலாகும். ஆதலால் அத்தகையவர்களுக்கு அருள் துறையிலே வழிகாட்டித் தருவது பெருமக்களது பணிவிடையாம். அதைத்தான் விவேகானந்த சுவாமிகளும் காசியில் செய்து வந்தார். கொஞ்சகாலம் ஆனந்த பரவச மடைந்தவராய் காசியம்பதியில் வசித்திருந்துவிட்டுச் சுவாமி கள் கல்கத்தாவில் பேலூர் மடத்துக்குத் திரும்பி வந்து சேர்ந்தார்.

18. திருவிழாக்கள் கொண்டாடுதல்

கல்கத்தாவுக்கு அருகில் பேலூர் என்னும் கிராமத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் புதியதாக நிறுவப்பெற்றிருந்தது பொதுமக்களுக்கு ஒரு புதுமையாகத் தென்பட்டது. ஐதிகமாக வந்துள்ள துறவியர்களைப் போன்று அந்த ஸ்தாபனத்தில் வசித்து வந்தவர்கள் வாழவில்லை என்பது பெரும்பாலரது அபிப்பிராயம். தொன்றுதொட்டு ஐதிகமாக வந்துள்ள மடாலயங்கள் போன்று அது அமையவில்லை என்பதும் அவர்கள் கருத்து. ஜாதி வித்தியாசம் எதையும் ஆங்குக் கூடியிருந்தவர்கள் அனுஷ்டிக்கவில்லை என்பதும், வெளிநாட்டவர்களைத் தங்குதடையின்றி அங்கு வரவழைத்துக்கொள்கின்றனர் என்பதும் அவர்கள் கூறிய குறைகளாகும். இன்னும் இதற்கெல்லாம் மேலாக என்னென்னவோ பொருந்தாத வதந்திகளையெல்லாம் பொதுமக்கள் அந்த ஸ்தாபனத்தின்மீது புகுத்தி வந்தனர். ஆங்கிருந்தவர்கள் நெறியான வாழ்க்கை வாழவில்லையென்றும், சுகபோகத்தில் வரம்பு கடந்து ஈடுபட்டு வந்தார்கள் என்றும் தாராளமாகப் பேச ஆரம்பித்தனர். காசியில் நிகழ்ந்து வந்த சேவாச்ரமத்தின் பணிவிடையைப் பற்றியும் ஆங்கு வசித்து வந்த துறவியர்கள் குறை கூறினர். அத்தகைய பணிவிடை கர்ம காண்டத்துக்குரியதென்றும், ஞானகாண்டத்தோடு ஒவ்வாது என்றும் அதன்மீது பழி சுமத்தப்பட்டது. இத்தகைய வதந்திகள் அனைத்தும் விவேகானந்த சுவாமிகளிடம் ஒன்றன்பின் ஒன்ருகத் தெரிவிக்கப்பட்டன. சுவாமிகளோ அக்கூற்றுகளையெல்லாம் 'புன்னகை' பூத்தவராக ஏற்றுக்கொண்டார். புதிய வாழ்க்கை முறையோ, புதிய மதக் கோட்பாடோ எதையும் சிரமப்படாது சமுதா

யத்தினுள் புகுத்த முடியாது என்று அவர் பகர்ந்தருளினர். பல தடவைகளில் மேலாம் புதிய ஏற்பாடுகளை உலகத்தவர்களுக்கு வழங்க முன் வரும்பொழுது 'அப்புதிய ஏற்பாடுகளின் பொருட்டு அவர்கள் உயிரையே கொடுக்கவேண்டியதாகிறது. உயிரைக்கொடுத்து ஒரு லட்சியத்துக்காக உழைக்க ஆயத்தமாயிருப்பவர்களே அந்த லட்சியத்தை மக்களுக்கிடையில் பரப்பமுடியும்' என்று அவர் இயம்பினர். 'நாளடைவில் உண்மையின் உயர்வு படிப்படியாக முன்னணிக்கு வந்தே தீரும்' என்று அவர் எடுத்துச் சொன்னர்.

வெறும் தத்துவபோதத்தைப் பொதுமக்களுக்கிடையில் எடுத்து வழங்கினல் அது அவர்களுக்கு ஏற்புடையதாகாது. விழாக்கள் மூலம் அவர்களுக்கு விளங்குகிற சாமானியமான வழிபாட்டு முறைகளையெல்லாம் கையாண்டால் அது பொதுமக்கள் கருத்துக்கு எட்டுகிறது. ஆதலால் நாட்டினுள் ஐதிகமாக வந்துள்ள விழாக்கள் சிலவற்றைக் கொண்டாடவேண்டும் என்று சுவாமிகள் முடிவுகட்டினர். அம்முடிவுக்கு ஏற்ப 1901 ஆம் ஆண்டு புரட்டாசி மாதத்தில் பேலூர் மடத்தில் துர்க்கைபூஜை கொண்டாடுதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அத்திருவிழாவில் வழிமுறை வழிமுறையாய் வந்துள்ள சீரிய பூஜா விதிகளே கையாளப்பட்டன. அக்கிரியைகளில் நிபுணர்களாயிருந்த புரோகிதர்களுடைய ஒத்துழைப்பு அதன்பொருட்டு நாடப்பட்டது. துர்க்காதேவியின் மிக அழகான 'மண்மூர்த்தி' ஒன்று புதியதாகச் செய்து அமைக்கப்பட்டது. அழகிய கொட்டகை ஒன்றிலே அவ்விக்ரகத்தின் மூலம் துர்க்காதேவி எழுந்தருளப் பண்ணப்பட்டாள். சப்தமி, அஷ்டமி, நவமி ஆகிய மூன்று நாட்களிலும் முறையாகவும் பக்தி பரவசத்துடனும் அப்பூஜை கொண்டாடப்பட்டது. பெருமக்கள் பலர்

அதற்கு அழைக்கப்பட்டிருந்தனர். ஐதிகம் வழுவாது நிகழ்த்தி வந்த அப்பூஜையில் கலந்துகொள்ள அவர்களும் முழுமனதோடு முன் வந்தனர். ஆயிரக்கணக்கானபேர் அன்னப்பிரசாதம் ஏற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அவ்வளவு ஒழுங்காகவும் சாஸ்திரக் கோட்பாடுகளுக்கு உட்பட்ட விதத்திலும் துர்க்கை பூஜை நிகழ்வதைப் பொதுமக்கள் வேறு எங்கும் காணவில்லை. ஆதலால் ஆங்குக் கொண்டாடப்பட்ட அத்திருவிழாவானது பொதுமக்களது புல்லிய அபிப்பிராயத்தை முற்றிலும் மாற்றியமைப்பதற்குப் பெரிதும் பயன்பட்டது. தாங்கள் எண்ணி வந்தபடி 'பேலூர் மடத்தில் வசித்து வந்த துறவியர்கள் சாமானியமானவர்கள் அல்லர் என்றும், கல்வியிலும், ஒழுக்கத்திலும், சாஸ்திர ஆராய்ச்சியிலும், மத அனுஷ்டானத்திலும் அவர்கள் தலைசிறந்தவர்கள்' என்றும் அவர்கள் அறிந்துகொள்ளுதற்கு அத்திருவிழா அரியதொரு சந்தர்ப்பத்தை அளித்தது. அதன் பிறகு கற்றவர்களும் மற்றவர்களும் அம் மடத்தோடு நெருங்கிய தொடர்வு வைக்க ஆரம்பித்தனர்.

துர்க்காபூஜையைத் தொடர்ந்து லக்ஷ்மி பூஜையும் அதன் பின் வந்த பௌர்ணமியன்று ஒரு விக்ரகத்தின் வாயிலாகப் ப்ரந்த முறையில் பூஜையும் கொண்டாடப்பட்டது. அதைத் தொடர்ந்து அடுத்து வந்த அமாவாசையன்று காளி பூஜையும் ஐதிகமாகவும் மிக விமரிசையாகவும் கொண்டாடப்பட்டது. இவ்விழாக்களை யெல்லாம் பார்த்த பிறகு பொதுமக்கள் பேலூர் மடத்தினிடத்து இன்னும் அதிகமாக நெருங்கித் தொடர்வு வைக்க ஆரம்பித்தனர். சரியான மத அனுஷ்டானமும் மதப்பிரசாரமும் இப்புதிய ஸ்தாபனத்தில் தெள்ளியெடுத்தமுறையில் நடைபெற்று வருவது அறிஞர்களுக்கு அளவில்லாத அகமகிழ்வை உண்டுபண்ணுவனவாயின.

இது காலை மற்றொரு நூதனமான சமயச் சடங்குக்குச் சுவாமிகள் தம்மை உட்படுத்தியது வியக்கத்தக்க விஷயமாகும். ஒருவர் துறவியர் ஆனபிறகும் பூர்வ ஆச்ரமத்தில் தமது தாயாயிருந்தவரது விருப்பத்தை நிறைவேற்றி வைக்கக் கடமைப்பட்டிருக்கிறார். ஆனால் அப்படித் தாய் கொள்ளும் கோரிக்கை சந்நியாச ஆச்ரமத்துக்கு முரண்படாததாக இருக்கவேண்டும். சந்நியாச ஆச்ரமத்துக்கு முரண்படுகிற விருப்பம் பெற்றெடுத்த தாயிடத்திருந்து வந்தாலும், துறவியர் ஒருவர் அதை முற்றிலும் புறக்கணித்துவிட வேண்டும். ஆனால் விவேகானந்த சுவாமிகளின் அன்னை புவனேசுவரிமாதா வேண்டிக்கொண்டது முற்றிலும் கடவுள் வழிபாட்டோடு சம்பந்தப்பட்ட சடங்கு ஆகும். தமது 'குமாரன் சின்னஞ்சிறுவனாயிருந்தபோது ஏதோ ஒரு சாமானியமான நோய்க்கு ஆளாயிருந்தான். அப்பொழுது புவனேசுவரி மாதா கல்கத்தாவில் எழுந்தருளியிருக்கும் காளிகாதேவிக்குக் கோரிக்கையொன்று செய்திருந்தார். தமது மகன் முற்றிலும் சொஸ்தமான பிறகு அவனை ஆதி கங்கையில் நீராட்டி ஈரவஸ்திரத்துடன் காளி கோவிலுக்கு அழைத்து வந்து, மும்முறை அக்கோயிலைச் சுற்றி அங்கப் பிரதட்சணம் பண்ணிவைப்பது அக்கோரிக்கையாகும். ஆனால் மகன் குணமடைந்த பிறகு தாய் எப்படியோ தாம் செய்த கோரிக்கையை முற்றிலும் மறந்துவிட்டார். பல ஆண்டுகளுக்குப் பிறகு இது போழ்து அது அவர் ஞாபகத்துக்கு வந்தது. அன்றைக்கு அவர் அக்கோரிக்கையை நிறைவேற்றிவைக்காதது ஒருவேளை இன்றைக்குத் தமது திருக்குமாரர் ஈளை நோய்க்கு உட்பட்டிருப்பதற்குக் காரணம் ஆகுமென்று யூகித்தார். ஆதலால் தமது குமாரரிடம் வந்து நிறைவேற்றி வைக்காதிருக்கும் பழைய கோரிக்கையைப் பற்றி எடுத்

துரைத்தார். அதை இப்பொழுதாவது நிறைவேற்றி வைக்க வேண்டுமென்றும் தெரிவித்தார். விவேகானந்த சுவாமிகளும் அதற்கு மகிழ்வுடன் சம்மதம் கொடுத்தார். நாள் ஒன்று அதற்காகவென்று குறிப்பிடப்பட்டது. அன்று சுவாமிகள் காளி கோயிலுக்கு அருகில் ஓடிக்கொண்டிருந்த ஆதிக்கங்கையில் சென்று நீராடிவிட்டு ஈரவஸ்திரத்துடன் கோயிலுக்கு வந்து மும்முறை படுத்துப் புரண்டு அங்கப்பிரதட்சணம் செய்தார். உலகப் பிரசித்திபெற்ற ஞானச்சாரியர் ஒருவர் இவ்வாறு பாமரன் போன்று சாமானியச் சடங்கு ஒன்றுக்கு உட்பட்டு நடந்து கொண்டது பார்த்தவர்களுக்கெல்லாம் பெருவியப்பூட்டியது. அதற்குமேல் மற்றொரு விந்தை! சுவாமிகள் கடல் கடந்து வெளிநாடு சென்று வந்தவர். ஆதலால் கோயிலில் மூர்த்திக்கு அருகில் செல்ல அத்தகையவர்க்கு அனுமதி கொடுப்பது ஐதிகமன்று. ஆனால் சுவாமிகளின் விஷயத்தில் அந்த ஐதிகமெல்லாம் அறவே ஒதுக்கி வைக்கப்பட்டது. கோயில் உள்ளே சென்று மூர்த்திக்குத் தாமே ஆராதனை செய்வதற்கு அர்ச்சகர்கள் அனுமதி கொடுத்தார்கள். சுவாமிகளும் தாயார் கோரிக்கைப்படி அச்சடங்கை பக்தி விசுவாசத்துடன் செய்து நிறைவேற்றி வைத்தார்.

விவேகானந்த சுவாமிகள் திருமேனி தாங்கியிருந்த பொழுது நேரில் கலந்துகொண்ட திருவிழாக்களில் இறுதியில் நிகழ்ந்தது ஸ்ரீ ராமகிருஷ்ண ஜயந்தியாகும். அது 1902ஆம் வருஷம் மார்ச் மாதத்தில் பேலூர் மடத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்ட மக்கள் அனைவர்க்கும் அன்னப்பிரசாதம் ஏராளமாக வழங்கப்பட்டது. பஜனைக் கோஷ்டியினர் கணக்கற்றபேர் ஆங்குக் குழுமினர். பொது மக்கள் ஆயிரக்கணக்கில் கூடி ஸ்ரீராமகிருஷ்ண ஜயந்தியைக் கொண்டாடியது விவேகானந்த சுவாமிகளுக்குப் பரமானந்

தத்தை ஊட்டியது. ஆனால் அத்தருணத்தில் அவர் முக்கியமான கருத்து ஒன்றைத் தெரிவித்தார். பரமஹம்சரின் பெயரால் பல்லாயிரம்பேர் ஒருதினம் ஓரிடத்தில் கூடி ஆடியும் பாடியும் ஓலமிட்டு விட்டுப் பிரிந்து போவதில் அதிக நன்மை விளையாது. அத்தகைய விழாவுக்கு ஒருவிதத்தில் இடமுண்டு எனினும் அதற்குமேல் இன்னும் சிறந்த திட்டங்கள் சில அதனோடு இணைக்கப்படவேண்டும். அத்திட்டங்களெல்லாம் மேலாம் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளத் தகுதி வாய்ந்த அறிஞர்களுக்காகவென்று அமையப் பெறவேண்டும். அமைதியாக ச்சாஸ்திர ஆராய்ச்சி பண்ணுதல், பாரமார்த்திகத் தத்துவங்களை விரித்து விளக்குதல், தியானம் பயிலுதல், மௌனம் சாதித்தல் போன்ற சீரிய சாதன வகைகளைச் சில நாட்களுக்குத் தொடர்ந்து அனுஷ்டிக்க வேண்டும். பரமஹம்சதேவர் புகட்டியருளியிருக்கும் பாரமார்த்திகப் பெருநெறிகளையெல்லாம் துருவியாராய்தற்கும் அவைகளை அனுஷ்டிப்பதற்கும் அப்பொழுது சந்தர்ப்பங்கள் அளிக்கவேண்டும். நாளடைவில் ஸ்ரீ ராமகிருஷ்ண ஜயந்தி இம்முறையில் மாறியமைய வேண்டும் என்று சுவாமிகள் தமது குருசகோதரர்களுக்கும், சிஷ்யர்களுக்கும் எடுத்துரைப்பாராயினர்.

19. பாரமார்த்திகப் பெற்றி

நிலவுலகுக்கு நலனை வழங்குவது மழை. இனி, பருவங்களில் பெய்கின்ற மழையில் இரண்டுவிதங்கள் உண்டு. கார்மேகம் திரண்டு கூடி, பளீரென்று மின்னல் மின்னி, தடதடவென்று இடியிடித்து, மழைத் தாரையைச் சொரேலென்று சொரிந்து மண்ணுலகைக் குளிரச்செய்வது ஒரு முறை. நீர் நிரம்பிய மேகம் விண்ணுலகெங்கும் நிறைந்திருந்துகொண்டு இடைவிடாது மண்ணுலகில் துளிகளாக விழுந்து அதைச் செழிப்புறச் செய்வது மற்றொரு முறை. இந்த இரண்டாம் முறையில் பருவக்காற்றும் மழையுடன் கூடியிருந்து மரம் செடி கொடிகளை அசையச் செய்கிறது. அப்படி அசைவதால் அவைகளின் வேர் உறுதி பெறுகிறது. கிளைகளுக்கு வலிவு உண்டாகிறது. விவேகானந்த சுவாமிகள் உலகுக்கு நல்கிய அருள்பேறு இந்த இரண்டுவித மாரிகளுக்கு ஒப்பாகும். மேகமானது மின்னி, இடித்து, பொழிந்தது போன்று அவர் பாருலகெங்கும் பாரமார்த்திகத்தைப் பண்புடன் வழங்குவாராயினர். பெரு வாழ்வுக்கு உரியவன் மனிதன் என்னும் பேருணர்வை மக்கள் உள்ளத்தில் அவர் ஊட்டுவாராயினர். பின்பு, தமது வாழ்வின் கடைசிப் பகுதியில் தம்மை வந்து சரணடைந்திருந்த சிஷ்யர்களுக்கும் தம்மிடம் குருதேவரால் ஒப்படைக்கப்பட்டிருந்த குரு சகோதரர்களுக்கும் ஆழ்ந்த முறையில் பாரமார்த்திகப் பெற்றியை எடுத்து வழங்குவாராயினர். காற்றும் மழையும் ஒன்றுகூடி நிலத்திணையை நிலைபெறச் செய்வது போன்று சுவாமிகள் அன்பு கனிந்த பராமரிப்பின் மூலமாகவும் ஆர்வம் ததும்பும் கண்டிப்பு முறைகள் வாயிலாகவும் அத்துறவியர்களை ஆத்மிக வாழ்வுக்குத் தகுதியுடையவர்களாகத்

திருத்தியமைத்து வருவாராயினர். பேரியக்கம் ஒன்று தொடர்ந்து வலிவு பெற்று வருவது அதற்கென்றே தங்கள் வாழ்வை ஒப்படைத்திருக்கிறவர்களது கைவசத்திலிருக் கிறது. அத்தகைய நன்மக்கள் நலன் மிகப் பெறுமளவு அவர்கள் மூலம் அருள் இயக்கமும் உறுதி மிகப் பெறுவ தாகும். இதை நன்கு உணர்ந்திருந்த விவேகானந்த சுவாமி கள் இறுதிக் காலத்தில் தமது கருத்து முழுதையும் அத் துறவியர்கள்பால் செலுத்தி வந்தார்.

வாழ்க்கை முறையில் மக்களுக்கிடையில் வேற்றுமை மிகவுண்டு. ஏனோ தானோவென்று வெறுமனே வாழ்ந்திருப் பவர்கள் பெருங்காரியம் எதற்கும் உதவமாட்டார்கள். ஏதேனும் ஒரு விதத்தில் பொழுதைப் போக்கி வாழ்வை முடித்துக்கொள்ளும் அன்னவர்கள் வெறும் கயவர்கள் ஆகின்றார்கள். பின்பு ஆர்வம் ததும்பும் வாழ்வு வாழ்கின்ற வர்களே அரும்பெரும் காரியங்களைச் சாதிக்க வல்லவர்களா கிறார்கள். உள்ளத்திலே கிளம்பி வருகிற ஆர்வத்துக்கோ வரையறை ஒன்றும் கிடையாது. ஆர்வம் ஓங்குமளவு வாழ்வு பெருவாழ்வு ஆகிறது. ஆர்வம் ஒன்றே மனிதனை அதிவிரை வில் இறைவனது சான்னித்தியத்துக்கு எடுத்துச் செல்லு கிறது. அத்தகைய ஆர்வம் ததும்பியவராகப் பரமஹம்ச தேவர் வாழ்ந்திருந்தார். அவரைப் பின்பற்றிய அவருடைய சீடர்களும் அதே முறையில் பாரமார்த்திக வாழ்விலே ஆர் வம் மிக நிறைந்தவர்களாக இருந்தார்கள். இனி, அடுத்த தலைமுறையாக வருகின்ற சிஷ்யர்கள் உள்ளத்திலும் அதே ஆர்வத்தை ஊட்டும் பொறுப்பு விவேகானந்த சுவாமி களுடையதாயிருந்தது. அத்தகைய பேரூக்கம் வெறும் வாய்ப்பேச்சின் மூலமாகப் பிறரிடம் உண்டுபண்ணப்படுவ தன்று. பேரூக்கம் படைத்திருக்கிறவனே பிறர் உள்ளத்தில்

அதை ஓதாது புகுத்துகிறான். தமது வாழ்க்கை முறையின் மூலமாக இப்பொழுது விவேகானந்த சுவாமிகள் வாழையடி வாழையெனத் தம்மிடம் வந்து சேர்ந்திருந்த சிஷ்யர்கள் உள்ளத்தில் பாரமார்த்திகப் பெருவாழ்வுக்குரிய ஆர்வத்தையும் ஊக்கத்தையும் ஊட்டி வந்தார்.

இயற்கையின் நடைமுறையில் எங்கு திரும்பிப் பார்த்தாலும் கிரமம் என்பது ஒன்று உண்டு. கிரகங்கள் சுழல்வதிலும் பருவங்கள் மாறியமைவதிலும் ஒழுங்குப்பாட்டைக் காண்கிறோம். வாழ்க்கையிலே மேலாம் காரியங்களை நன்கு சாதிக்க முயலுகிறவர்களிடத்து அதற்கேற்ற காரியக்கிரமம் அமைவது முற்றிலும் அவசியமாகிறது. தமது மடாலயத்திலே விவேகானந்த சுவாமிகள் அதை ஒழுங்குபட அமைத்து வைத்தார். அதிகாலையில் துயிலெழுந்திருத்தல் முதற்கொண்டு இரவில் படுக்கப்போகும் வரையில் இன்னின்ன வேளைகளிலே இன்னின்ன கிருத்தியங்கள் சரிவர நடைபெற்றாக வேண்டும் என்னும் திட்டத்தை அவர் பாங்குடன் அமைத்து வைத்தார். அந்தந்த வேளைகளில் அதற்கேற்றபடி மணியடிக்கப்படும்; நித்திய கர்மங்களெல்லாம் செவ்வனே நடைபெற்று வரவேண்டும். அப்படி அவர் வகுத்துவைத்த ஏற்பாடு ஒழுங்காக நிகழ்ந்து வருவதாயிற்று. காலமும்நன்குபயன்படுத்தப்படுவதாயிற்று. அதன்வாயிலாகத் துறவியர்கள் அருள் துறையிலே 'நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும்' என்னும் பழமொழிக்கு ஒப்ப அருள் செல்வர்களாக வளர்ந்து வந்தனர்.

குறிப்பிட்ட வேளைகளில் தியானம் பயிலுவது துறவியர்களுக்கு இன்றியமையாத கடமையாகிறது. பேலூர் மடத்திலே வதிந்து வந்த துறவியர்கள் காலை மாலை வேளைகளில் தியான அறையிலே கூடுவார்கள். அமைதியாக

அமர்ந்து கொண்டு தங்கள் மனதை அகமுகப்படுத்துவார்கள். அவர்களுக்கெல்லாம் தலைவராக சுவாமி விவேகானந்தரும் அவருக்குரிய ஓரிடத்தில் தியானத்தில் அமருவார். பொதுவாக அவர் தியானத்தில் உட்காரும் பொழுது அதற்காக வென்று தொடர்ந்து இரண்டு மணி நேரம் எடுத்துக் கொள்ளுவார். அந்த இரண்டு மணிநேரத்துக்கு அவர் அசைவற்று வார்த்தெடுத்த விக்ரகம் போன்று அமர்ந்திருப்பார். அவருடன் கூடியிருந்து தியானம் பண்ணுவது மிக எளிதாயிருந்ததென்று அவருடைய குரு சகோதரர்களும் சிஷ்யர்களும் ஏகோபித்து இயம்பியிருக்கின்றனர். அவர் முன்னிலையில் மற்றவர்களுக்கு மனம் குவிந்ததில் வியப்பொன்றுமில்லை. ஏனென்றால் மனதோடு மனது சம்பந்தப்பட்டிருக்கிறது. நாம் அதை அறியாதிருந்தாலும் அதுவே உண்மையாகும். நல்லார் இணக்கத்தின் மூலம் மற்றவர்கள் மனது எளிதில் பண்படுகிறது. அவ்வுண்மையை பேலூர் மடத்துவாசிகள் உள்ளங்கை நெல்லிக்கனி போன்று விவேகானந்தர் சன்னிதியில் உணர்வாராயினர். தியானத்தை முடித்தான பிறகு விவேகானந்த சுவாமிகள் 'சிவ சிவ' என்று ஓதிக் கொண்டு எழுந்திருப்பார். குருதேவரது திருவுருவப் படத்தின் முன் சென்று வீழ்ந்து வணங்குவார். பிறகு முற்றத்துக்குச் சென்று அமைதியாக இங்குமங்கும் உலாவிக் கொண்டிருப்பார். அவ்வேளையில் பரமனது புகழ் இனிய, அடங்கிய, கம்பீரமான குரலிலே அவரது திருவாயினின்று வெளியே கிளம்பிக்கொண்டிருக்கும்.

திருவுருவப் படத்தின் வாயிலாகப் பரமஹம்சதேவருக்குத் துறவியர்கள் புரிந்து வந்த ஆராதனையானது மிகவும் எளிதாக இருக்கவேண்டுமென்று சுவாமிகள் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார். மாலைகள் தொடுப்பதிலும் ஆடம்

பரமாக அலங்காரங்கள் செய்வதிலும், ஆராதனையிலே கிரியா விசேஷங்களைப் பெருக்கிக்கொண்டு போவதிலும் பயனொன்றுமில்லை யென்று அவர் வற்புறுத்திக் கூறி இருக்கிறார். கிரியைகளைப் பெருக்குவதை விட சாலச் சிறந்தது மனதைப் பண்படுத்துவது. மனதின் பண்பாடோ மேலாம் கருத்துக்களை ஏற்பதிலும், அக்கருத்துக்களை முறையாக ஆராய்ச்சி செய்வதிலும், அவைகளைப் பற்றி ஆழ்ந்து சம் வாதம் செய்வதிலும் நலன் மிகவுண்டு என்று அவர் இயம்பி யிருக்கிறார். எங்கெல்லாம் வெறும் ஆடம்பரமான பூஜை கள் நிகழுகின்றனவோ அங்கெல்லாம் பண்பாடு மிகக் குறைந்திருக்கும் என்பது அவருடைய கருத்து. துறவியர் களோ பண்பாடு ஒன்றிலேயே தங்களது கவனத்தைப் பெரிதும் செலுத்தவேண்டும். ஆடம்பரமான ஆராதனை முறைகள் பாமரர்களுக்கு ஒத்ததாயிருக்கலாம். பின்பு, பண்பாடுடையவர்களோ மனபரிபாகத்திலேயே தங்கள் எண்ணத்தைச் செலுத்தவேண்டும் என்பது சுவாமிகளது சித்தாந்தம்.

நாள்தோறும் குறிப்பிட்ட வேளைகளில் சாஸ்திர ஆராய்ச்சி நடைபெற்று வருவதற்கு வேண்டிய ஏற்பாடு களையெல்லாம் சுவாமிகள் நன்கு அமைத்து வைத்திருந்தார். உபநிஷதம், பிரம்ம சூத்திரம், பகவத்கீதை, பாகவதம், புராணங்கள் ஆகிய சாஸ்திரங்கள் அவர்களுடைய ஆராய்ச் சியில் முறையாக இடம் பெற்று இருந்தன. அவைகளைக் கிரமமாக வாசித்தல், கேட்டல், விவாதித்தல் வாயிலாக அந்நூல்களில் அடங்கியுள்ள மேலாம் கருத்துக்கள் ஆத்ம சாதகனுக்குச் சொந்தமாகின்றன. உணவை உண்டு செமித்து அதை உடல் மயம் ஆக்குவது உயிர் வாழ்ந்திருப்பவைகளின் இயல்பு. மேலாம் நூல்களிலே அடங்கியுள்ள சீரிய கருத்

துக்களைக் கேட்டு, ஓர்ந்து, தெளிதல் சான்றோர்களின் செயல்களாகும். வேதாந்த சிரவணம் சிரத்தையுடன் நடைபெற்று வரவேண்டும் என்பது விவேகானந்த சுவாமிகள் வகுத்துள்ள மேலாம் திட்டங்களில் ஒன்று ஆகும்.

ஆத்ம சாதனங்களில் ஈடுபடுகிறவர்களுக்கு என்னென்னவோ சந்தேகங்கள் வருவதுண்டு. அந்த ஐயங்களை அகற்றிக்கொள்ளுதற்கு ஏட்டுக் கல்வி பயன்படாது. ஆனால் சாதனத்தில் முதிர்ச்சியடைந்துள்ள சான்றோர் ஒருவர் சாதகர்களுக்கு உற்ற ஐயங்களை எளிதில் அகற்றி வைக்க இயலும். இருட்டறைக்குள் எரிந்துகொண்டிருக்கிற தீபத்தைக் கொண்டு வருவதற்கு நிகரானது சான்றோர் கொடுக்கிற விளக்கம். சுவாமிகளிடம் சாதகர்கள் பலர் வந்து தங்கள் சந்தேகங்களைத் தெரிவிப்பதுண்டு. சுவாமிகளும் அவர்களுடைய மனநிலையை முற்றிலும் அறிந்துகொள்வார். குழந்தை ஒன்றுடன் உறவாடுகிறவன் தானே குழந்தை மயம் ஆய்விடவேண்டும். அதே விதத்தில் நல்லாசிரியன் ஒருவன் தன்னிடம் வந்துள்ள மாணக்கன் எந்த மனநிலையில் இருக்கின்றானோ அந்த நிலைக்குத் தானும் இறங்கி வரவேண்டும். சுவாமிகளும் அதைத்தான் கிருபை கூர்ந்து செய்து வந்தார். சந்தேகம் கேட்பவனுடைய நிலையில் தம்மை முற்றிலும் வைத்துக்கொண்டு அவனோடு சேர்ந்து சந்தேகத்துக்குரிய விஷயத்தை அவர் துருவி ஆராய்ச்சி பண்ணுவார். அதன் மூலம் கேள்வி கேட்பவனது மனது படிப்படியாக மேல் நிலைக்குக் கொண்டு வரப்படும். சில வேளைகளில் சந்தேகக்காரர்களுடைய போக்கு விபரீதமானதாயிருக்கும். அதையெல்லாம் தொல்லையென்று கருதாது சுவாமிகள் அமைதியாகவும் அனுதாபத்துடனும் ஐயங்களையெல்லாம் அலசி அலசி ஆராய்ந்து கேட்பவர்களுடைய உள்ளத்தில்

விவேக விளக்கேற்றி வைப்பார். இத்தகைய அறப்பணி கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் நடைபெற்று வந்தது.

சுவாமிகளைத் தரிசிப்பதற்காகவும் அவரிடமிருந்து சத் விஷயங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்வதற்காகவும் அன்பர்கள் வெவ்வேறு மாகாணங்களிலிருந்து சிரமப்பட்டு வந்து சேர்வார்கள். அப்படி வந்தவர்களை ஆதர்வுடன் வரவேற்று அவர்களுக்குத் தக்க வசதிகளைச் செய்து கொடுத்து அவர்கள் நாடிவந்த எண்ணத்தைச் சுவாமிகள் முற்றிலும் நிறைவேற்றி வைப்பார். வேளை தவறி வந்தவர்களைச் சிறிது காத்திருக்கச் செய்ய வேண்டியதாகும். ஆனல் வந்தவர்களுக்குப் பேட்டி கொடுக்காது அனுப்பி வைப்பதற்கும் சுவாமிகள் ஒருபொழுதும் ஒருப்படார். காண வருகிறவர்களைச் சரியாகக் கவனிப்பதே ஒரு கருணைகரச் செயலாகும். கருணைகரராகிய சுவாமிகளும் அச்செயலைச் செவ்வனே செய்து வந்தார்.

தமது பாரமார்த்திக இயக்கத்தின் மேலாம் கருத்துக்களை உலக மக்களுக்கிடையில் பரப்புதற்பொருட்டு ஆங்கிலத்தில் 'பிரபுத்த பாரதம்' என்னும் மாதாந்தரப் பத்திரிகையும் வங்காளத்தில் 'உத்போதனம்' என்னும் மாதாந்தரப் பத்திரிகையும் துவக்கப்பெற்றிருப்பது ஏற்கனவே இயம்பப்பட்டுள்ளது. அப்பத்திரிகைகளைச் செவ்வனே நடாத்துதற்குச் சுவாமிகளின் அபிப்பிராயங்கள் இன்றியமையாதவைகளாயிருந்தன. அவைகளையெல்லாம் அப்போதைக்கப்போது அறிந்துகொள்ளுதற்கு அப்பத்திரிகை ஆசிரியர்களும் நிர்வாகிகளும் இடையிடையே சுவாமிகளிடம் வருவார்கள். அவர்கள் நாடிவந்த விஷயங்களைச் சுவாமிகள் கையாண்டதில் அலாதிச் சிறப்பு ஒன்று இருந்தது. அவர்கள் தாங்களே தீர்மானித்துக் கொள்ளவேண்டிய சின்னஞ்சிறு விஷ

யங்களைப்பற்றி சுவாமிகள் வாய்திறந்து ஒன்றும் பேச மாட்டார். நிர்வாகிகளுக்குத் தோன்றியபடி கார்ியங்களைச் செய்து முடிக்கும்படி விட்டுவிடுவார். ஆனால் அப்பத்திரிகை களின் சீரிய கொள்கைகள் போன்ற விஷயங்களை சுவாமி கள் வேண்டியவாறு அவர்களுக்கு எடுத்துப் புகட்டுவார். மேலாம் உடன்பாட்டுக் கருத்துக்களையே அப்பத்திரிகை களில் வெளியிட வேண்டும் என்று சுவாமிகள் எடுத்துரைப் பார். பிறரை எழுத்தின் மூலம் தாக்குதல் அல்லது முகஸ் துதி பண்ணுவது பொருந்தாது என்று அவர் சொல்லி வைத் தார். கட்டுரைகளெல்லாம் கண்ணியமான முறையில் உண்மையைத் தெளிவுபடுத்துதல் பொருட்டு அமைந்திருக்க வேண்டுமென்றும் அவர் வற்புறுத்தினர். அப்பத்திரிகை களின் ஒழுங்கான நடைமுறையும் அண்ணலது உள்ளத்தில் இடம்பெறுவதாயிற்று.

உலகின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து சுவாமிகளுக்குக் கடிதங்கள் வந்து குவிந்து கொண்டிருக்கும். அக்கடிதங் களில் விசாரணைக்குரிய விஷயங்கள் பலப்பல புதைந்து கிடக்கும். அவையாவுக்கும் தக்க முறையில் விடையெழுதி அனுப்புவது சுவாமிகளுடைய பொறுப்பாயிற்று. அப் பொறுப்பையும் அவர் செவ்வனே நிறைவேற்றி வந்தார். அவர் எழுதியுள்ள கடிதங்களில் பெரும்பகுதி சேகரிக்கப் பட்டு இன்று ஒரு சிறந்த நூலாக வெளிவந்திருக்கிறது. அதை ஆராய்ந்து பார்ப்பதே ஒரு ஞானக் களஞ்சியத்தை ஆராய்தற்கு ஒப்பாகும். எத்தனையெத்தனையோ பாங் குடைய மாந்தர்க்கு எத்தனையெத்தனையோ விஷயங்களை எத்தனை யெத்தனையோ விதங்களில் எழுதியனுப்ப வேண் டிய பொறுப்பு அப்பரமாச்சாரியருடையதாய் இருந்தது.

மடத்திலே வசித்துவந்த துறவியர்களின் ஆகார நியதி களிலும் சுவாமிகள் கருத்து மிகச் செலுத்தி வந்தார்.

ஆகாரத்துக்கும் ஆத்மசாதனத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. பொருந்தியதும் சத்துடையதுமான உணவையே கால நியதிக்கொப்ப அருந்த வேண்டும் என்பது சுவாமிகளது கோட்பாடு. காலையிலும் இரவிலும் பெருமித உணவு ஏற்கலாகாது. நண்பகலில் மட்டும் சாதகன் ஒருவன் பேருண்டி உண்ணலாம். இப்படியெல்லாம் ஆகார நியதிகளை அவர் ஏற்படுத்தி வைத்தார்.

வேலைக்காரன் வராததை முன்னிட்டோ, அல்லது வேறு எக்காரணத்தை முன்னிட்டோ மடாலயத்தின் எப்பகுதியாவது குப்பைக் கூளம் நிறைந்ததாயிருக்குமாயின், அதையெல்லாம் கூட்டிப் பெருக்கிச் சுத்தம் செய்யும் செயலைச் சுவாமிகள் தாமே எடுத்துக்கொள்ளுவார். சில வேளைகளில் துறவியர்களுள் சிலர் தங்களுடைய துணி வகைகளையும் படுக்கைகளையும் புத்தகங்களையும் தாறுமாருகப் போட்டு விடுவார்கள். அத்தகைய ஒழுங்குப்பாடற்ற காட்சியைக் காணும் பொழுதெல்லாம் சுவாமிகளிடத்துத் தாயின் உள்ளம் முன்னணியில் வந்து நிற்கும். தன் குழந்தைகளின் உடைமைகளையெல்லாம் ஒழுங்காக எடுத்துப் பாதுகாத்து வைப்பது அன்னையின் அன்புச் செயலாகும். சுவாமிகளும் அதைத்தான் மனமுவந்து செய்து வந்தார். அப்படி அவர் புரிந்து வந்த அன்புச் செயல், ஏனையவர்களுக்கு அரியதொரு பாடத்தைப் புகட்டியது. பேச்சின்மூலம் புகட்டுவதைவிடப் பன்மடங்கு உயர்ந்தது பணிவிடையின் மூலம் புகட்டுவது. சுவாமிகளும் உள்ளன்போடு தமது சிஷ்யர்களுக்கு அன் பார்ந்த பணிவிடைகளைச் செய்து வந்தார். அப்பணிவிடைகளின் வாயிலாகச் சிஷ்யர்கள் பன்மடங்கு அதிகமாகத் தங்கள் குருநாதரிடம் கவர்ந்து இழுக்கப்படுபவர் ஆயினர். இத்தனை விதமான அலுவல்களுக்கிடையில் சுவாமிகளது மனது

அடிக்கடி அதீத நிலேக்குப் போய்விடும். உடலானது ஒரு யந்திரம் போன்று செயல்களேப் புரிந்து வந்ததற்கிடையில் அவருடைய உள்ளம் பாரமார்த்திகப் பெருநிலேயில் தோய்ந்துவிடும். வேறு சில வேளேகளில் அவர் ஆழ்ந்து அரிய சிந்தனேகளில் மூழ்கியிருப்பார். அவ்வேளேகளில் அவர் அருகில் செல்லுதற்குக்கூட அனேவரும் தயங்கி நிற்பர். இங்ஙனம் சுவாமிகளது பேரியல்பு பாரமார்த்திகப் பெற்றி யில் யாண்டும் புதைந்திருந்தது.

20. அஸ்தமனத்தின் அறிகுறிகள்

சில ஆண்டுகளுக்கு முன்பு காஷ்மீரத்திலிருக்கும் அமரநாதத்துக்குச் சுவாமிகள் யாத்திரை போயிருந்தார் என்பது ஏற்கனவே இயம்பப்பட்டிருக்கிறது. சிவனுருடைய நாமங்கள் பலவற்றுள் அமரநாதன் என்பது ஒன்று. மரணத்தை வென்றவன் என்பது அதன் பொருள். அமரநாதனுடைய அனுக்கிரகத்தைப் பெற்ற சுவாமிகள் தாமும் அவனருளால் மரணத்தை வெல்லும் பாங்கைப் பெற்றிருந்ததாகப் பகர்ந்தார். அதாவது அவர் அனுமதித்தாலொழிய மரணம் அவரை அணுகாது. அத்தகைய பெருநிலேயைப் பண்டு ஒரு காலத்தில் பீஷ்மர் பெற்றிருந்தார். இக்காலத்தில் விவேகானந்தருக்கும் அப்பெருநிலே வாய்த்திருந்தது. 1902ஆம் வருஷம், ஜூன் மாதம் முழுதிலும் அவர் உடலே உகுப்பதற்கு ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்தார். ஆனல் அச்செயல்கள் மற்றவர்கள் மனதில் படவில்லே. தான் சாசுவதமாக வாழ்ந்திருக்கப் போவதாகவே ஒவ்வொரு மனிதனும் எண்ணிக்கொள்கிருன். ஆதலால் மரணத்துக்கு ஆயத்தப்படுத்துதல் என்னும் செயல் அசாதாரணமானது. அச்செயலே விவேகானந்த சுவாமிகள் விரைந்து செய்து வந்தது மற்றவர்கள் கருத்தில் படவில்லே. ஓராண்டுக்கு முன்பு அவர் கீழ் வங்காளத்துக்குப் போயிருந்தபொழுது 'நான் இவ்வுலகில் இன்னும் ஓராண்டுதான் உடல் தாங்கியிருக்கப்போகிறேன்' என்று பல பேச்சுக்களுக்கிடையில் அவர் பகர்ந்ததைக் கேட்டவர்கள் அது வெறும் பேச்சென ஒதுக்கித் தள்ளிவிட்டனர். இப்பொழுது ஜூன் மாதத்தில் சிலர்க்கு எழுதிய கடிதங்களில் 'ஈண்டு என் அலுவல்களெல்லாம் முடிந்துவிட்டன. கிளம்புதற்கு நான் ஆயத்தப்படுத்திகொண்டி

ருக்கிறேன்' என்று அவர் எழுதியதின் உட்கருத்தும் அப்பொழுது யாருக்கும் விளங்கவில்லை.

காசியினின்று திரும்பி வந்தான பிறகு தமது சந்நியாசி சிஷ்யர்களை ஒருவர் பின் ஒருவராகச் சந்திக்க சுவாமிகள் விரும்பினர். தமது கருத்தைத் தெரிவித்து அன்னவர்களுக்குக் கடிதங்கள் எழுதினர். சுவாமிகளுடைய விருப்பத்துக்கு இணங்கிப் பலர் அவரை வந்து சந்தித்தனர். வேறு சிலர் தங்களுக்கு ஏற்பட்டிருந்த அவசரமான அலுவல்களை முன்னிட்டு உடனடியாக வந்துசெல்ல இயலவில்லையென்று மறுமொழி எழுதித் தெரிவித்தார்கள். அவர்கள் எதிர்பாராத முறையில் திடீரென்று சுவாமிகள் உடலை உகுத்தான பிறகே தங்களுடைய அசம்பாவிதச் செயல்களைக் குறித்து சிஷ்யர்கள் வாழ்நாளெல்லாம் வருந்தியிருந்தனர். தங்கள் குருநாதர் இறுதிக் காலத்தில் அவர்களை ஒரு தடவை சந்திக்க விருப்பங்கொண்டிருந்தார் என்பதை அறிந்திருப்பார்களாகில் தங்கள் அவசரமான அலுவல்களையெல்லாம் அப்படியே போட்டுவைத்துவிட்டு அண்ணலைக் காணப் பறந்தோடி வந்திருப்பார்கள். தம்மைக் காண வந்தவர்களிடம் சுவாமிகள் இறுதியாகப் பேசியபொருள் பொதிந்த பேச்சுக்களும் அவர்களைத் தத்தம் ஸ்தாபனங்களுக்குத் திருப்பியனுப்பிய பொழுது விடைபெற்றுக் கொண்ட விதமும் அலாதியான போக்கில் அமைந்திருந்தன என்பதைப் பிறகுதான் அவர்கள் அறிந்துகொண்டார்கள். ஓரூரினின்று மற்றோர் ஊருக்குப் போகின்றவர் விடைபெறுவது போன்றும், வேலைத் திட்டங்களை வகுத்துச் சொல்லுவது போன்றும் தாம் இவ்வுலகை விட்டு வெளியேகுதற்கு முன்பு தமது சிஷ்யர்களுக்குச் சுவாமிகள் பகர்ந்தருளினர்.

முக்கியமான விஷயங்கள் எனக் கருதப்பட்டவைகளைப்பற்றி சிஷ்யர்கள் அவரிடம் அபிப்பிராயம்

கேட்டபொழுது அவர் மறுமொழி இயம்ப மறுத்து விட்டார். 'நான் இப்பொழுது இவ்வுலகில் இல்லையென்று நீங்கள் வைத்துக்கொள்ளுங்கள்' என்று அவர் கொடுத்த விடை சிஷ்யர்களுக்கு வேதனையை உண்டுபண்ணியது. அப்பொழுது தமது எண்ணத்தை அவர் மேலும் விளக்கி யெடுத்துரைத்தார். 'சர்வகாலமும் ஊட்டி வளர்க்கப்படுகிற பிள்ளை உருப்படியாகான். குஞ்சுக்கு இரைதேடத் தாய்க் கோழி கற்பித்துக் கொடுக்கிறது. இரைதேட அது கற்றுக் கொண்டான பிறகு குஞ்சை அது பிரித்தோட்டி விடுகிறது. தலைவன் ஒருவன் தன்னைப் பின்பற்றுகிறவர்களை சர்வ காலமும் தனது ஆதரவிலேயே வைத்திருப்பானாகில் அப்படிப் பின்பற்றுபவர்கள் பெருநிலையெய்தமாட்டார்கள். ஒரு படித்தரத்தில் குரு ஒருவர் தமது சிஷ்யர்களை விட்டு விலகிக் கொள்ளவேண்டும். அப்படிச் செய்யாவிடில் சிஷ்யர்களுக்கு சுய நம்பிக்கையும் சுயப் பிரயத்தனமும் உண்டாக மாட்டா.' இப்படியெல்லாம் இயம்பித் தமது சிஷ்யர்களைத் தம் போக்கில் முயன்று முன்னணிக்கு வரும்படி சுவாமிகள் கற்பித்து வந்தார்.

விவேகானந்த சுவாமிகளைப் பற்றி அவருடைய குரு தேவர் அந்நாளில் நவின்றதெல்லாம் இப்பொழுது நிறைவேறி வருவதாயிற்று. அன்று நிர்விகல்ப சமாதியை நரேந்திரருக்கு நல்கிய பரமஹம்சதேவர் அதை அவரிடமிருந்தெடுத்து மறைத்து வைத்துவிட்டார். உலகுக்கு அவர் இயற்றுதற்கிருந்த அரிய அருட்பணியை நிறைவேற்றியான பின்பே நிர்விகல்ப சமாதி மீண்டும் அவருக்கு வாய்க்கும் என்று அண்ணல் இயம்பியிருந்தார். 'தான் யார் என்பதை நரேந்திரன் என்று அறிந்துகொள்ளுகின்றானோ அன்று அவன் உடலை உதறித் தள்ளிவிட்டுப் பாரமார்த்திக நிலையெய்து

வான்' என்று அவர் கூறியிருந்தார். அதை மற்றக் குரு சகோதரர்களும் நன்கு அறிந்திருந்தனர், இப்பொழுது ஏதோ சில பேச்சுகளுக்கிடையில் 'நீங்கள் யார் என்பதை அறிந்துள்ளீர்களா?' என்னும் கேள்வி வந்தது. 'ஆம், நான் யார் என்பதை இப்பொழுது அறிகிறேன்.' என்று விவேகானந்தர் விடைவிடுத்தார். அப்பேச்சை அத்துடன் மற்றவர்கள் நிறுத்தினர்கள். அதுமட்டுமல்ல, அவர்கள் சிறிது மனக்கலக்கமும் கொண்டனர். ஏனென்ருல் தம்மை இன்னுரென்று அறிந்துகொண்ட விவேகானந்தர் மேலும் தரணியிலே நெடுநாள் தங்கியிருக்கமாட்டார் என்று குழம்பிய உள்ளத்துடன் அவர்கள் உணரலாயினர். இனி, இவ்வுலக வாழ்க்கையை இவர் என்றைக்கு முடிவுக்குக் கொண்டு வரப் போகிருரோ என்று அவர்கள் அஞ்சியிருந்தனர். ஆனல் விவேகானந்த சுவாமிகளோ உடலே உகுப்பதற்கான ஏற்பாடுகளைத் திட்டப்படி முறையாகச் செய்து வந்தார்.

உலகிலே அப்போதைக்கப்போது ஆராய்ச்சிக்குரிய நிகழ்ச்சிகள் பல சதா நிகழ்ந்து வருகின்றன. அந்நிகழ்ச்சிகளைக் குறித்துச் சுவாமிகள் முன்பெல்லாம் தமது சீரிய கருத்துக்களைக் கேட்கின்றவர்களுக்குத் தெளிவுற விளக்கியருள்வார். ஆனல் இப்பொழுதோ அத்தகைய மனநிலே அவரிடமிருந்து அடியோடு அகன்று போய்விட்டது. உலக நிகழ்ச்சிகளைப் பற்றிய கேள்விகளைப் பெரும்பாலும் அவர் கருத்தில் வாங்கிக் கொள்வதில்லை. கேள்விகளை யாராவது வற்புறுத்திக் கேட்டால் 'அதெல்லாம் உனக்கே நன்கு தெரியும். நான் எடுத்துரைப்பதற்கு ஒன்றுமில்லை' என்று சுவாமிகள் அப்பேச்சை முடிவுக்குக் கொண்டு வந்துவிடுவார். இவ்வையக வாழ்வு அவர் மனதினின்று விரைவில் மறைந்து வந்தது. ஏதோ சிற்சில பகுதிகள் மட்டும் மங்கிய கனவுகள்

போன்று அவர் உள்ளத்தில் ஊடாடிக்கொண்டிருந்தன. அவைகளையும் அதிவிரைவில் ஒதுக்கி வைத்தாகவேண்டும் என்று அவர் திருவுளம் கொண்டிருந்தார்.

ஒருநாள் மாலையில் சுவாமிகள் கங்கைக் கரையோரம் உலாவிக்கொண்டிருந்தார். ஆனால் அப்பொழுது அவருடைய உள்ளமோ அதீதநிலையில் திளைத்திருந்தது. இடையிடையே அவருடைய குரு சகோதரராகிய பிரேமானந்த சுவாமிகள், சுவாமிகளின் எதிரே தென்படுபவர் ஆயினர். ஏனென்றால் அதே வேளையில் அவரும் ஆங்குத் தம் போக்கில் உலாவிக் கொண்டிருந்தார். இங்கும் அங்கும் சிங்கம் போன்று நடமாடிய விவேகானந்தர் திடீரென்று அசையாது நின்றார். அரிய கருத்துஒன்றை அப்பொழுது அவர் வாய்விட்டுத் தமக்குத் தாமே பேசிக்கொண்டார். 'விவேகானந்தரை விவேகானந்தப் பண்புடையவர்களே அறிந்துகொள்வார்கள். காலக்கிரமத்தில் அவர் அருளால் எண்ணிறந்த விவேகானந்தர்கள் தோன்றுவார்கள்.' இப்படி அவர் இயம்பியது பிரேமானந்த சுவாமிகள் காதுக்கும் எட்டியது.

தமது உடலை உகுப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு பஞ்சாங்கம் ஒன்றைத் தம்மிடம் கொண்டு வரும்படி தமது சிஷ்யராகிய சுத்தானந்த சுவாமிகளிடம் அவர் பணித்தருளினார். அதுபோன்று பஞ்சாங்கத்தைப் பற்றிய விஷயம் முன்பு ஒரு தடவை பரமஹம்சதேவரின் இறுதிக் காலத்தில் நிகழ்வதாயிற்று. நாட்களின் சிறப்புக்களைப் பற்றி பஞ்சாங்கத்தில் படிக்கும்படி சிஷ்யர் ஒருவரிடம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஆக்ஞாபித்தார். அவர் அதைப் படித்துக்கொண்டு போனபொழுது அவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் 16ஆம் தேதியைப் பற்றிய விவரத்தை வாசித்தார். அதை மற்றுமொருமுறை வாசிக்கும்படி பரமஹம்சர் பகர்ந்தார். அத்துடன் அந்த வாசிப்பை

நிறுத்தும்படியும் அவர் கட்டளையிட்டார். பரமஹம்சதேவர் அவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் 16ஆம் தேதி அதிகாலையில் உடலை உகுத்தார். இப்பொழுது விவேகானந்த சுவாமிகள் தாமே பஞ்சாங்கத்தைப் புரட்டிப் பார்த்தார். நல்ல நாளை இன்னும் நிச்சயப்படுத்தாதவர் போன்று அப்பஞ்சாங்கத்தை இரண்டு மூன்று நாட்களாகத் தம்மோடு வைத்திருந்தார். அச்செயலின் உட்கருத்து யாருக்கும் அப்பொழுது விளங்கவில்லை.

தாம் உடலை உகுப்பதற்கு இன்னும் மூன்று நாட்கள் பாக்கியிருந்த பொழுது சுவாமிகள் கங்கைக்கரையோரம் உலாவிக்கொண்டிருந்தார். நிழல் போன்று அவர்பின் இரண்டு மூன்று பேர் போய்க்கொண்டிருந்தனர். சுவாமிகளின் எண்ணம் அதீதத்தில் இருந்ததினால் அவரோடு உரையாட யாரும் துணியவில்லை. ஆயினும் அவர்பின் சென்றுகொண்டிருந்தது அவர்களுக்கு அமிர்தபானம் பண்ணியது போன்று ஆனந்தத்தை ஊட்டியது. நடந்துகொண்டிருந்த சுவாமிகள் திடீரென்று நின்றார். மடத்து நிலத்தின் தென்கிழக்குப் பக்கத்தில் வில்வமரம் ஒன்று இருந்தது. அவ்வில்வ மரத்தடியில் அமர்ந்திருந்து அடிக்கடி தியானம் பண்ணுவது சுவாமிகளது வழக்கமாக இருந்து வந்தது. இப்பொழுது அந்த வில்வமரத்தைச் சுட்டிக்காட்டி தாம் தேகத்தை உகுத்தான பிறகு அதை அம்மரத்துக்கு அருகில் வைத்துத் தகனம் செய்துவிடும்படி சுவாமிகள் உத்தரவிட்டார். அவர் பேச்சைக் கேட்டவர்கள் வாய் பொத்திச் சும்மாவிருந்தனர். அதற்கு என்ன விடை விடுப்பது என்று அவர்களுக்கு விளங்கவில்லை.

சடலத்தைத் துடைப்பதற்கு இரண்டு நாளைக்கு முன்பு அரியதொரு நிகழ்ச்சி நேர்வதாயிற்று. சுவாமிகள் தாமே

அமுது ஆக்கி அதைத் தமது சிஷ்யர்களுக்கு வழங்க விரும்பினர். அதன்படியே அவர் அமுது சமைத்தார். சிஷ்யர்களுக்குத் தம் கைப்படப் பரிமாறினர். அப்படிச் செய்வதில் அவருக்குத் பரமானந்தம் உண்டாயிற்று. அவர்கள் உணவு அருந்தியான பிறகு கையலம்புதற்குத் தாமே நீர் வார்த்தார். அச்செயலேச் சுவாமிகள் செய்யலாகாதென்று சிஷ்யர்கள் பணிவுடன் ஆட்சேபித்தார்கள். 'ஏன், ஏசுநாதர் அப்படிச் செய்யவில்லேயா?' என்று சுவாமிகள் கேட்டார். ஆனால் ஏசுநாதர் செய்தது அவரது கடைசி நாளன்றேயாம். அப்பகுதி சுவாமிகள் வாயினின்று வெளியில் வரவில்லே. அது அவர் மனதுக்குள்ளேயே தொக்கி நின்று விட்டது. இப்படியெல்லாம் தமது மகாசமாதியின் பொருட்டுச் சுவாமிகள் தம்மை ஆயத்தப்படுத்தி வந்தார்.

21. மகா சமாதி

நான்கு ஆண்டுகளுக்கு முன்பே காஷ்மீரத்தில் தமது அமெரிக்க சிஷ்யர்களோடு சுவாமி விவேகானந்தர் வதிந்திருந்த பொழுது தாம் ஜூலை மாதம் நாலாம் தேதி தமது மேனியினின்று விடுதலை பெறப் போவதாகவும், தமது பூலோகக் கிருத்தியங்களை முற்றிலும் நிறைவேற்றி வைப்பதற்கு இன்னும் நான்கு ஆண்டுகள்தான் பாக்கி இருக்கின்றனவென்றும் அவர் பகர்ந்தருளியிருந்தார். அப்படி அவர் பகர்ந்த நாள் ஆனது அவ்வாண்டு ஜூலை மாதம் நாலாம் தேதியாம். அது அமெரிக்கர்கள் விடுதலை பெற்ற நன்னாளாம். அப்படி அன்று அவர் இயம்பிய நாள் இப்பொழுது வந்து வாய்த்தது. பஞ்சாங்கத்தையும் பார்த்து 1902ஆம் வருஷம், ஜூலை மாதம், நாலாம் தேதியை அவர் தமது விடுதலைக்கு உரிய நாளாகக் குறிப்பிட்டு வைத்திருந்தார். அன்று மாசிய சிவராத்திரி. அந்த விதத்திலும் அவருக்கு அது முற்றிலும் பொருத்தமான நன்னாளாயிருந்தது.

தமது வழக்கத்துக்கு மாறாக அன்று அவர் காலையில் எட்டு மணியிலிருந்து பதினொரு மணி வரையில் குருதேவரது பூஜையறையை மூடித் தாளிட்டுக்கொண்டு அதனுள் தியானம் பண்ணினார். ஜன்னல்களையும் அப்பொழுது அவர் மூடி வைத்துக் கொண்டார். பொதுவாகத் திறந்து வைக்கப்பட்டு நல்ல காற்றோட்டமிருக்கும் அறையிலே தியானம் பண்ணுவது அவருடைய வழக்கம். ஆனால் இன்றைக்கு அது அப்படி நிகழவில்லை. ஸ்ரீ ராமகிருஷ்ணர் பதினாறு ஆண்டுகளுக்கு முன்பு—தமது உடலை உகுப்பதற்கு முன்பு தமது பிரதம சிஷ்யராகிய விவேகானந்தருடன் அறையைத் தாளிட்டுக் கொண்டு தியானத்திலிருந்தார். அப்படி அவர்

கள் இருவரும் நிஷ்டை புரிந்தபொழுது தமக்குள்ளே அளப் பரிய ஆத்ம சக்தி பிரவேசிப்பதாக சிஷ்யர் உணர்ந்தார். தியானத்துக்குப் பிறகு குருவானவர் தாம் அடையப்பெற் றிருந்த தபோபலன்களையெல்லாம் தரணியிலுள்ளோர் நலத்தின் பொருட்டுத் தமது சிஷ்யரிடம் ஒப்படைத்துவிட்ட தாக விளம்பினர். இன்று மறுபடியும் குருதேவர் சந்நிதியில் சிஷ்யர் தனியாகத் தியானம் பண்ணியபொழுது தாம் இது காறும் புரிந்து அருட்பணியையெல்லாம் பரமஹம்சதேவ ரிடம் பணிவுடன் எடுத்துச் சமர்ப்பித்து விட்டார் போலும். ஏன் அன்று காலை அவர் அவ்வரிய செயலைச் செய்தார் என் பது அப்பொழுது யாருக்குமே விளங்கவில்லை.

தமது இறுதி காலத்தில் விவேகானந்த சுவாமிகள் அல்ப ஆகாரத்தைப் பத்தியமுறையில் அருந்தி வந்தார். அந்த வழக்கத்துக்கு மாறாக இன்று நண்பகலிலே தமது குரு சகோதரர்களுடனும் சிஷ்யர்களுடனும், பந்தியில் சேர்ந்து அமர்ந்திருந்து கொண்டு ஆகாரம் ஏற்கலானர். அவ்வேளை யில் குதூகலமாக அனைவருடனும் உரையாடி வந்தது பந்தி யில் இருந்தவர்களுக்கெல்லாம் பரமானந்தத்தை ஊட்டியது. அது ஒரு அசாதாரணமான செயல் என்பதை அப்பொழுது யாரும் எண்ணிப் பார்க்கவில்லை.

நண்பகல் ஆகாரம் ஏற்ற சிறிது நேரத்துக்குள்ளாகத் தமது சிஷ்யர்களை யெல்லாம் திரட்டி வைத்துக்கொண்டு சம்ஸ்கிருத வியாகரணத்தைப் பற்றி சுவாமிகள் பாடம் நடத்த ஆரம்பித்தார். வியாகரணம் என்பது இலக்கண மாகும். எந்த மொழியிலும் இலக்கியத்தைப் படிப்பதை விடக் கடினமானது இலக்கணமாகும். அதிலும் சம்ஸ் கிருத இலக்கணமென்ருல் யாருக்குமே அதைக் கற்பதில் உற்சாகம் உண்டாகாது. மருந்தை அருந்துவது போன்று

சிறிது சிரமப்பட்டுக்கொண்டே அதைக் கற்ருகவேண்டும். ஆயினும் மருந்து உடலுக்கு நலம் தருவதுபோன்று சம்ஸ்கிருத வியாகரணம் உள்ளத்தினுள் அம்மொழியின் அருமையைப்பற்றிய தெளிவை உண்டுபண்ணுகிறது. ஆனல் கற்கும் பொழுதெல்லாம் அது மாணக்கனைக் கஷ்டத்துக்கு ஆளாக்கும். அன்று பிற்பகலில் மூன்றுமணி நேரத்துக்குச் சுவாமி விவேகானந்தர் வியாகரணத்தில் வித்தியார்த்திகளுக்குப் பாடம்புகட்டியது அரியதோர் அருள்விருந்தாய் இருந்தது. மூன்று மணி நேரம் கடந்துபோனது யாருடைய கருத்திலும் படவில்லை. இடையிடையே நகைச்சுவை பொருந்திய ஏதேதோ உபமானங்களை எடுத்தோதிக் கேட்பவர்கள் உள்ளத்தில் உற்சாகத்தையும் இலக்கணத்தைக் கற்பதில் ஆர்வத்தையும் அவர் ஊட்டி வந்தார். அப்பொழுது கேட்ட விஷயங்களை வித்தியார்த்திகள் எப்பொழுதும் மறக்கமுடியாத பாங்கில் புகட்டியவர் உபமானங்களையும் உட்செருகல்களையும் எடுத்து வழங்கி வந்தார். ஒருவேளை, எதிர்கால இந்தியா சம்ஸ்கிருத வியாகரணத்தை எத்தகைய ஊக்கத்துடன் எடுத்துக் கற்று வரவேண்டும் என்பதற்கு அது முன்மாதிரியாயிருந்தது போலும்!.

அன்று மாலை தமது குரு சகோதரராகிய பிரேமானந்த சுவாமிகளைத் தம்முடன் அழைத்துக்கொண்டு சுவாமி விவேகானந்தர் இரண்டுமைல் தூரம் வெளியில் சென்று உலாவி வந்தார். அப்படி அவர்கள் இருவரும் உலாவச் சென்றிருந்தபொழுது அருள் துறையிலே தங்களது மடாலயம் எம்முறையில் பணியாற்றி வரவேண்டும் என்னும் ஒரு விஷயத்தைப் பற்றியே சுவாமிகள் சதா பேசிவந்தார். அப்பேச்சுக்கிடையில் நூல்களிலெல்லாம் மிகப்பழைய நூலாகிய வேதத்தை நவீன முறையில் ஆராய்ச்சி செய்து மக்களுக்

கிடையில் அதன் உட்கருத்துக்களையெல்லாம் எடுத்து வழங்கவேண்டும் என்று இயம்பினர். அதையெல்லாம் கேட்டுவந்த சுவாமி பிரேமானந்தர் 'அதினின்று வரும் பயன் யாது?' என்று வினவினர். சுவாமிகளோ சிறிது நேரம் மௌனமுற்று இருந்துவிட்டு, 'முறையான வேத ஆராய்ச்சி மௌட்டியத்தையும் குருட்டு நம்பிக்கையையும் அறவே ஒழிக்கிறது' என விடை விடுத்தார். இது நாட்டு மக்கள் அனைவரும் கருத்தில் ஏற்றுச் சிந்திப்பதற்குரிய விஷயமாம். எதிர்கால இந்தியா தனது பழம்பெருமையை மீண்டும் முன்னணிக்குக் கொண்டு வருவதற்கு இச்செயலைச் செய்தே ஆகவேண்டும்.

வெளியில் சென்று உலாவிவிட்டு மடத்துக்குத் திரும்பி வந்த சுவாமிகள் கங்கைக் கரையோரம் அமர்ந்துகொண்டு அனைவருடனும் ஆனந்தமாக உரையாடினர். குரு சகோதரர் களுக்கும் தமதுசிஷ்யர்களுக்கும் தனித்தனியாக இரண் டொரு இனிய வார்த்தைகளைப் பகர்ந்தருளினர். அன்பு கனிந்த அருளுரைகளாக அவருடைய சொற்கள் யாவும் விளங்குவனவாயின. சந்தியாவேளை வந்தது. குருதேவர் ஆலயத்தில் ஆராதனைக்காக மணியடிக்கப்பட்டது. எல்லா ரும் அதில் சென்று கலந்து கொள்ளும்படி சுவாமிகள் தம்மு டன் கூடியிருந்தவர்களுக்குப் பணித்தருளினர். தாம் மட்டும் தனியாகத் தியானம் பண்ணுவதற்குத் தமது அறைக்குத் திரும்பிச் சென்றார். அவருக்குக் குற்றேவல் புரிந்து வந்த பிரம்மச்சாரி ஒருவர் அவரைப் பின்தொடர்ந்து சென்றார். அறையினுள் தரையிலே ஆசனம் விரித்துக் கிழக்கு முகமாகக் கங்கையை நோக்கிய விதத்தில் சுவாமிகள் தியானத்தில் அமர்ந்தார். குற்றேவல் புரிந்துவந்த பிரம்மச்சாரி அறையில் வாயிலுக்குப் பக்கத்தில் திண்ணையில் அமர்ந்து கொண்டு

தியானம் பண்ணினர். சுமார் எட்டு மணிக்கு அந்த பிரம்மச்சாரியை அருகில் அழைத்துத் தமது தலைக்கு மேலே விசிறி வீசும்படி வேண்டினர். குண்டலினி சக்தி மூலா தாரத்தினின்று விழித்தெழுந்து உச்சந்தலையை நோக்கிப் போகும்பொழுது உச்சந்தலையில் வெப்பம் மிக உண்டாகும் என்பது யோகக் கோட்பாடு. அவ்வேளையில் அந் நிகழ்ச்சி நேர்வதாயிற்று என்பது சுவாமிகள் ஒருவரைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. சிறிது நேரத்திற்குப் பிறகு 'தியானம் செய்துகொண்டு வாயிலில் காத்திரு' என்று சுவாமிகள் தமக்குப் பணிவிடை செய்து வந்த பிரம்மச்சாரிக்கு இனிது பகர்ந்தருளினர். அதுதான் அத் திருமேனிகொண்டு அவர் பகர்ந்த அருள் உரைகளுள் இறுதியானது. உலகத்தவர் அனைவர்க்குமே அவர் விடுத் துள்ள இறுதிச் செயல் அதுவேயாம். இரவு ஒன்பது மணி பத்து நிமிடத்துக்குச் சுவாமிகள் அகண்ட சச்சிதானந்தத்தில் நிர்விகல்ப சமாதி யெய்திவிட்டார். அவரை உலகுக்கு உரிய பரமாச்சாரியராகப் பரமஹம்சதேவர் ஆயத்தப்படுத் தியபொழுது 'மாம்பழத்தைத் தனியாக அருந்த நீ இந்த நிலவுலகினுள் வரவில்லை. உலகில் உள்ளவர்களுக்கு அருள் விருந்தை வழங்கியான பின்பே நிர்விகல்ப சமாதியென்னும் மாம்பழத்தை மீண்டும் அருந்தி அகண்டாகாரத்தில் கலந் திருப்பாய்' என்றார். அத்தகைய காலம் இப்பொழுது வந்து விட்டது. சாய்ந்து கிடந்த சரீரத்துக்கு என்னென் னவோ சிகிச்சை முறைகளை டாக்டர்களும் மற்றவர்களும் கையாண்டு பார்த்தார்கள். ஆனால் அம்மேனியோ மேலும் மேலும் சீதம் நிறைந்ததாக மாறியமைந்தது. நாசித்துவா ரத்திலும் நாவிலும் இரண்டொரு துளி ரத்தம் கட்டியிருந்த தாகத் தென்பட்டது. குண்டலினி சக்தி பிரம்மரந்திரத்

தைத் துளைத்துக்கொண்டு மேல் நோக்கிச் சென்றதின் புற அடையாளமாக ஒருவேளை அது நிகழ்ந்திருக்கலாம். தாம் திட்டம் போட்டு வைத்தபடி சுவாமிகள் பர ஆகாசத்தில் அன்று இரவு கலந்து விட்டார்.

இதைப் பற்றிய செய்தி தந்தி வாயிலாக உலகில் பலப் பல இடங்களுக்குப் பறந்தது. கணக்கற்றபேர் அடுத்த நாள் காலையில் கல்கத்தாவினின்று வந்து கூடினர். ஒரு கட்டிலில் வைக்கப்பட்டிருந்த திருமேனியை ஆயிரக்கணக் கானபேர் வந்து தரிசித்து வணங்கி நின்றனர். அன்று மாலை கங்கைக் கரையோரம் வில்வமரத்தடியில் அம்மேனியானது அக்னி பகவானுக்கு அர்ப்பிக்கப்பட்டது. "நான் விரைவில் உடலை உகுத்து விட்டு உருவமற்ற ஓசையாக இலங்கு வேன்– I Shall be a voice without form" என சுவாமி கள் சில நாளைக்கு முன்பு பகர்ந்தருளியிருந்தார். அன்றும் இன்றும் என்றுமே இனி, அவர் உருவமற்ற அருள் ஓசையாக இருந்து வருவார்.